ஓம் தத் சத் பரப் பிரஹ்மணே நம:

# பக்தி (வைராக்ய) சதகம்,

## பத உரை - பொழிப் புரை.

அயம் ஆத்மா பிரஹ்மம்.

பிரஜ்ஞானம் பிரஹ்மம்.



தத் த்வமஸி.

அஹம் பிரஹ்மாஸ்மி.

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள்

வேதாந்த மடம், திருப்பூவணம்.

3073

T03073
R001G07

1953. [விலை ரூபா 1-8-0




பிரஹ்ம சத்யம் ஜகத் மித்யா இதி வேதாந்த டிண்டிம:.

உ சிவமயம்.

பேரை யூர்

ஸ்ரீ சாந்த லிங்க சுவாமிகள் இயற்றிய

# ஓ (வைராக்ய) சதக மூலமும்,

திருப் போ ரூர்

ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் இயற்றிய

# பொழிப் புரையும்,

திருப் பூவண மடம், சத சாஸ்திர கர்த்தா,

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள் இயற்றிய

# பத உரையும்.

சர்வ ஜித்ஷு ஆவணிமீ 25உ புதன் கிழமை

(10—9—1947) முற்றுப் பெற்றது.

இது

சிதம்பரம், கோ. சித. மடம்

ஸ்ரீ சித. நீலகண்ட சுவாமிகளாலும்,

மேற்படி மடம்

சங்கத்து ஸ்ரீ சித. நாராயண ஸ்வாமிகளாலும்,

பரிசோதிக்கப் பெற்றது.

மதுரை இந்துஸ்தாந் பிரிண்டிங் ஆபீஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

ல ரூபா ஒன் றரை.] 1953 [காபிரைட்

# பக்தி (வைராக்ய) சதகம் கவி 100. முதற் குறிப்பு அகராதி.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அகலுமிவ்வுடன் | 50 | என்றும் வீட | 101 | தாயுமாகி | 111 | பிரானேதிருத் | 147 |
| அறியாமையிற் க | 181 | என்னுயக | 148 | தானேயேதா | 6 | பிறவா நெறி | 164 |
| அறியாமையிற் கி | 159 | என்னை கண்டு | 119 | தானை சூழ | 17 | புகலரும் | 71 |
| அன்றெனக்கு | 31 | ஏலக் குழலார் | 153 | தில்லைப்பதி | 162 | பூசைசெய்து | 35 |
| அன்றேதமி | 156 | ஏனை நூல்பல | 113 | தீராதவோ | 149 | பெறுவ தென்னை | 121 |
| ஆதரித்தனை | 124 | ஒழித்திடும் | 134 | துணையதா | 11 | பேதைக்கொரு | 172 |
| ஆமுன்னிச்சையே | 58 | ஒன்றுநஞ் | 94 | தெளிவுயிர்க் | 89 | பொய்யற்றவர் | 160 |
| ஆமையாறுருப் | 109 | ஓரினுள்ளமே | 29 | தேரினிவ்வுடல் | 83 | பொல்லாதவெ | 143 |
| ஆலநீழலி | 117 | கண்டவைம்புலக் | 69 | தேர்கிலா | 23 | போற்றிநீ | 131 |
| ஆனேறிவர்ந் | 151 | கண்டேன் களி | 174 | தேவேயுனை | 158 | மதித்தென் | 168 |
| இகழும்பொரு | 170 | கண்ணார் நுத | 154 | தொடக்கா | 174 | மறைத்தலு | 92 |
| இனையின் ஞான | 98 | கண்ணன் மதனைப் | 175 | தோன்றாத்துணை | 163 | மாறாயவோ | 156 |
| இருந்தோரு | 167 | காணுத பங்கட | 172 | தோன்றாமல் | 163 | மாற்றாயெனக் | 183 |
| இருப்பைநா | 106 | காணியீதெம | 20 | நயவாதுதில் | 186 | யானுருடற் | 177 |
| இன்றுசூழ்தரு | 128 | காரார் மிடற் | 178 | நவிலினிம் | 9 | வந்தித்திடு | 146 |
| இன்றென்னை | 179 | கெடுவதாம் | 14 | நாமற்கருச்சனை | 61 | வழங்கெற் | 161 |
| உயது நெஞ்சமே | 79 | கொள்ளேனெனி | 184 | நாலுவேதமு | 41 | வாயினுற்பல | 38 |
| உரையேநனி | 150 | சதுர்மறை | 115 | நினைப்பினுங் | 126 | வாய்மை | 53 |
| உவந்தாயென | 180 | சார்ந்தாய் | 163 | நின்றாய்திருத் | 145 | வாழலாமான் | 133 |
| உன்னுகின்றனை | 26 | சாற்றார்திருத் | 155 | நின்றுறுதலை | 66 | வாழிநெஞ்ச | 1 |
| உன்னும் முணர் | 166 | செய்யாய் கரியான் | 171 | நீமெய்ஞ்ஞான | 63 | வாழ்த்தேனுணை | 176 |
| எண்ணும்வடி | 165 | செய்யுநந் | 86 | நீயே யருள் | 144 | விருப்பமா | 136 |
| எல்லாமறி | 152 | செய்விப்பான் | 183 | நெஞ்சமேயினி | 75 | விளங்குமெழிற் | 145 |
| எற்கோவுன | 157 | தடுத்துமேலுமிவ் | 47 | நெஞ்சமேயுட | 44 | விளம்பற்கருஞ் | 188 |
| ஏனக்கீந்தினி | 188 | தருவதீமையு | 55 | பாவாற்பெரி | 186 | வீடுகூட்டு | 104 |

உ

சிவமயம்.

# வைராக்கிய சதக முக வுரை.

அம்புயாசநன் அமைத்த அம்புவிதனில் "பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம். பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்" என்பது எத்தற் குரிய பே ரறிஞரின் பெரு வாக்கு. ஆகலின், அறிவு செறிந்த ஆன்றோர்கள் அறுத்தற் கரிய பிறவித் தளை அறுத்து, இறவாப் பெரும் பேற்றினை எய்த விரும்புகின்றனர்.

'சலந மநச் சங்கற்பத்தினாலேயே இம் மாணுப் பிறவி வந் தியைந்தது' என்பது வேத முடிபு. ஆகவே, அம் மநத்தினை அவசியம் அடக்கல் வேண்டும். அஃதே பிரஹ்ம ஞாநம் அடை தற்கும், இறவா வீடு எய்தற்கும், ஏற்ற ஏது வாம். அம் மந வடக்கமோ, அப்பியாசம் வைராக்கியம் எனும் இரண்டினானேயே எய்தத் தக்க தாம். மற் றெவ் வாற்றானும் அதனை மருவல் இயலாது. இவ் வுண்மையினை, யோக சூத்திரம் :- "அப்யாச வைராக்யாப்யாம் தந்நிரோத:" என ஓதுகின்றது. பகவற் கீதையும் :- "அப்யாசேந து கௌந்தேய வைராக்யேண ச கிருஹ்யதே" எனப் பகர்கின்றது.

அப்பியாசம் வைராக்கியம் என்னும் இரண்டனுள், உலக போகங்களிலும், உடலிலும், வைராக்கியம் உறாதோர்க்கு அப்பியாசம் யா தொரு பயனையும் அளிக்காது. வைராக்கியத்தில் வள முற் றோரே சுபேச்சையாதி ஞாந பூமிகளைச் சுலப மாய் நண்ணுவர். சீர் பெறு சீவன் முக்தி நிலை சீக்கிரத்தில் சேர்வர். அவ் வைராக்கிய மில்லாதோர் அள வறு பல முயற்சிகள் செய்யினும், அரிய அப் பே ரின்பத்தினை எவ்வாற்றானும் எய்தற்கு இயலாதவரே யாவர்.

இது பற்றியே, அரிய சீவரிடத்து அருள், சீரிய சிவ பக்தி, திருந்தி துறவு, மெய்ஞ் ஞானம் ஆயவைகளே ஒரு வடி வான திவ்விய திருப் போ ரூர் ஸ்ரீமத்-சாந்த லிங்க சுவாமிகள், தாம் கொண் டுள்ள இந் நான்கினையும் அருள் கொண்டு ஏனையோரும் அடைந் துய்வான் விழைந்தனர். அதனால், முறையே கொலை மறுத்தல் (ஜீவ காருண்ணியம்), வைராக்கிய சதகம் (சிவ பக்தி), வைராக்கிய தீபம் (துறவு), அவிரோத வுந்தியார் (ஞானம்) என்னும் நான்கு நூல்களையும் இயற்றி யருளினர். அவற்றுள் வைராக்கிய சதகம் என்பது அதனைக் கற்போர்க்கு வைராக்கியத்தை உண்டு பண்ணுவதில் ஒப் புயர் வற்றது. இது பெரும்பாலும் வைராக்கியத் தைக் கூறும் நூறு விருத்தப் பாக்களை உடைமையின், "வைராக்கிய சதகம்" எனப் பெயர் பெற் றுள்ளது.

இந் நூல், மனத்தி லுள்ள பற்றுக்க ளனைத்தையும் பாழாக்க வேண்டி; மூட மனத்தினை முன்னிலை யாக்கி, விவேகங் கூறலாக விளம்பப் பெற்றது. இது, மனத்திற்கு எவ் வெவ் விடயங்களில் பற் றுண்டாமோ, அவ் வவ் விடயங்களால் நன்மை இன்மையையும், தீமை உண்மையையும், தெளி வுறுத்தி, வரு பொருள் ஒவ் வொன் றிலும் வைராக்கியத்தினை வருவிக்கின்றது. மேலும், மன மானது வே றொன்றைப் பற்றினு லன்றி, முன் பற்றிய பற்றினை முற்றாய் விடாது. ஆதலின், உய்யு நெறி யாய உயர் சாதனங்களில், இன்ன இன்னவற்றைப் பற்றி, இன்ன இன்னவற்றை விடல் வேண்டும் என்று கூறுகின்றது.

ஒவ் வொரு விதச் சாதனங்களிலும் மிக உயர்ந்தது இது வாகலின், இதனையே செய்தல் வேண்டும். இது இயலாதாயின், மற் றொன் றாய இதனைச் செய்தல் வேண்டும். இதுவும் இயலாதாயின், அடுத்த இதனைச் செய்தல் வேண்டும் என்று படிப் படியாகக் கீ முள்ள எல்லாச் சாதனங்களையும் இயம்புகின்றது.

உதாரண மாக:- 26-வது பாட்டில் "ஒன்றனையும் சுட்டிப் பாவியாது பாவநாதீத மாய் நில். அதற்கு வலி யின்றேல், பூரண பாவனை செய். இஃதும் முடியாதாயின், யாவும் இறைவன் திரு மேனி என்று ஓர்ந்து நில். இன்றேல், குருவின் திரு வுருவத்தை யாவது தியானஞ் செய்" என்று கூறுகின்றது.

இவ் விதம் அதில், முன் ஐம்பது பாக்கள் அமைந் துள்ளன. விவேக மானது, மநம் தானு மன்று, பற் றறுப்பான் தன் வயத் தது மன்று என் றறிந்து, அதனை விடுத்துத், தன்னையும் அதனை யும் கூட்டவும் பிரிக்கவும் வல்ல சிவத்தினை நோக்கிப்,

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்,
பற்றுக பற்று விடற்கு" எனப் (குறள்) பொய்யா

மொழிப் புலவர் புகன்ற வாறே, மநத்தினை நிறுத்திப் பற் றனைத் தையும் போக்கி முழு வைராக்கிய முற்று, முக்தி யெய்தற்கு முன்னே னும் இறைவனைப் பற்ற வேண்டு மாகலானும், இறையரு ளின்றி இவ் வைராக்கியாதிகளை எய்துதல் இயலா தாகலானும், அவ் விறைவனைப் பற்றித் துதித்து, அவ னருள் பெற்று உய்வான் வேண்டி, அவனைத் துதிக்கின்றது. இங்ஙன் இறுதி ஐம்பது பாக்கள் ஸ்ரீமந் நடராஜப் பெருமானின் தோத்திர ரூப மாய் அமைந் துள்ளன. இத் தகை அரிய நூலா மிதனைப் பக்தி சிரத்தையோடு ஒருவன் பயில்வா னுயின், மிக்க வைராக்கியத்தை மேவித், தீவிர முமுட்சுவாய்ச், சற் குருவைத் தேடி யடைந்து, சிரவண மநநாதி கள் செய்து சிறந்த சீவந் முக்த னுவது திண்ணம்.

இந் நூ லாசிரியரின் சீடர் ஏர் பெறு விருத்தாசலம், ஸ்ரீமத் குமார தேவ சுவாமிகள். அப் பெரியாரின் சீடர் அழகிய திருப் போரூர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள். சாற்றும் இப் பெரியார் சற் குண சம்பன்னர். சீரிய சீலர். கவினிய கவிஞர். பண் பார் பண்டிதர். அகன்ற அறிவினர். புகழுறு புனிதர். இத் தகைப் பெரியார் இந் நூற்கு இனி தியற்றிய பொழிப் புரை ஒன்று பொற்

புற் றௌளிர்கின்றது. எவரும் பத வுரை இயற்றினு ரில்லை. அஃ தொன் றிருப்பின் அனைவர்க்கும் பயன்படும். இதனை உணர்ந்தனர் உயர் திரு காசிகாநந்த ஞாநாசார்ய சுவாமிகள். இப் பெரியாரோ, குலவு கோயி லூர்க் குல குரு விமல ராம் ஸ்ரீமத் வீரசேகர ஞாந தேசிக சுவாமிகளின் சீடர். மன்னு திருப் பூவண மடாதிபதி. மதிப்புறு தென் மொழி வட மொழி வல்லுனர். நுவலுறு நூறு நூலின் கர்த்தா. பகர்திரி பாஷாப் பண்டித மணி. குன்றெனக் குலவு பரசமய் கோளரி. விளம்பற் கரிய வேதாந்த வித்தகர். இத்தகை யாதி இயம்புதற் குரிய பட்டங்கள் பல படைத்துள பண்பினர். கருத்தொடு இந் நூலினைக் கற்றிடு வோர்க்குப் பயன் படு மாறு பத வுரை ஒன்று இனி துறப் பற் பல இலக்கணக் குறிப் பொடு ஆற்றி அழகுற அச்சிட்டருளினர். இதனை வாங்கி இச்சை யாய்க் கற்போர்க்கு ஐயம் திரிபுகள் அனைத்து மின்றி, அர்த்த மனைத்தும் அதிசுலப மாக விளங்கும் என்பது வெள் ளிடை மலையே. ஆகவே, முக்தி யடையும் அவாவினர் அனைவரும் இதனை வாங்கி ஆர்வமொடு கற்கின் உய்வார்கள் என்பது உறுதி உறுதி. சுபம்.

**S. நீலகண்டன்,**

ஆநந்தாச்ரமம்,

சென்னை.

# பக்தி சதகம்.

முதல் நினைப்புக் கவி 50. உதாரண நினைப்புக் கவி 99.
ஆகக் கவி 149.

## பன் னிரு சீர்க் கழி நெடி லடி ஆசிரிய விருத்தம்.

ஆதியே வாழிஎறி, உறபெறுதற் தாளேஇய அடுத்தார நவிலின் உடலே — அகாதுணே ஆர்பெரியர் கெடுஇன்ன யாத செல் வதானேயா னேயெருத்த, ஒதியே மெத்அண்ணல் காணிமண் ணினுபுக்கில் தேர்கிநா யேறிஓடும் — உன்னுநாம் பெரியஒ ரினுநீய வசுதேவின் அன்றெனக்(கு) என்றென்றெணி, மோதியே அங்கிகரு பரணவந் திடுகருவி ஆடுகின் றிலேபூசை செய் — முத்தவலி வாயினுல் ஓதியுண விரிந்தநல் நாலுசின சமயாசார, போதியே நெஞ்சமே வில்வேண்டு தடுமந்திர சையினுல் அகலுகாய — பூத்தாரும் வாய்மைஒரு உண்பதரு இல்லின்ப ஆமுன்அவா இச்சையாம். (1)

வாடிநா மரற்(கு)எப்பொ நீமெய்ஞ்ஞா செம்மான்ம மிகமுயன் நின்றுறுத — வாங்கிமந் திரகண்ட வினவிபுக லரும்பார்த்த எங்குஞ்சி நெஞ்சமேயி, பூடியோ அறிவெனும் அண்டநில உள்ளத்து உய்துயா காபுறந்தாய் — பொய்விரும் வெறுப்தேரின் செவ்வேயு உடற்(கு)அறிவி பொத்தையூன் செய்யுநந்தொ, மாடியே அந்நமய ஊசுமுட தனக்குஇண சேருஞ்சு தெளிவுயிர்க்க — நாயிமறைத் தலும்அராப் பத்திதற் போதஒன் தானலா இணே அமைத்த, ஆடிதே னேஎன்றும் இறுமற்று வீடுநன் கடஇருப் பைதொடங்கி — ஆமைபுல னடபரக தாயுமா தந்தைதா யாஆடு கின்றில்லேயே. (2)

ஏரிலா ஏனேஆ தாபிறவி சதுர்மறைமெய் ஆலவாழ் கின்வீடொழி — என்னேகுட பெறுஅரு ஆதரிநல் நினேஊனு முரைஇன்று சூழ்தருவனி, வேரிலாப் பெண்தீர்த்த போற்றிநீ வாழலாம் இல்லேஒ ழித்திஇருள்சேர் — விருப்பமா சங்கநிதி தூயசதக கவிமுதல் எளிதின்மந திற்றேன்றுமே.

ஆக விருத்தம் 2½க்கு நினேவுக் கவி 149.

உ சிவமயம்.

# பக்தி (வைராக்ய) சதகம்.

## பாயிரம்

1. பொருள்வைநன் னகர்வா ழுகந்தலிங் கேச புனிதனைக் கோவிலூர் மேவும், அருடரு முக்தி ராமலிங் கேச விமலனைத் திருக்கள ரமர்ந்து, தெருளுறு மடியர் பவங்கெட வருளிச் சின்மய சொரூபமாய்ச் செய்த, இருளிரி வீர சேகர விறையை யேத்திநின் றநுதினம் பணிவாம்.

2. களரினி விலங்கும் வலம்புரிக் களிற்றைக் கறைமிடற் றண்ணலா சானை, அளவறப் பிறங்கு மமுதவல் லியினை யண்ணல்பா ரிஜாதக்காட் டிறையை, உளமிகத் தெளிந்தோங் குபாதி யுடைய வுத்தம சீடனுக் கருளும், வளமமர் வீர சேகர விறையின் வானடி களைத்தினம் பணிவாம்.

3. அருளினை யருள வைகைநற் கரையி லமர்ந்திடு மானைமா முகனைத், தெருளொடு பத்தி மேவுறக் கருணை செய்திடுஞ் சண்முக விறையை, மருளடு பூவ ணத்துறை யிறையை மாசௌந் தரியநா யகியைக், கருணைநன் கமைந்த வீரசே கரனைக் காதலாய்க் கருத்தினில் வைப்பாம்.

4. தேர்தலிற் சிவமுஞ் சத்தியு மொன்றாய்த் திகழ்தலாற் பொருளொன்றே யென்று, பேர்தலிற் பத்தி சதகமென் னூலிற் பிறங்கவே கூறியும் பின்ன, ரார்தலை யொழிவை ராகதீ பத்து மவ்வித மறைந்தபே ரருளாஞ், சோர்தலிற் சாந்த லிங்கதே சிகனற் றூயதா மரையடி தொழுவாம்.

5. பேரையூர்ச் சாந்த லிங்கதே சிகனுற் பெரும்பத்தி சதகமென் னூலுக், கார்திருப் போரூர்ச் சிதம்பரா சானன் களித்தனன் பொழிப்புரை பின்னர்க், கார்பொழில் சூழும் பூவண முறையுங் காசிகா நந்தனுந் துறவோன், பார்புக ழுறவோர் பதவுரை தந்தான் பத்திமே லீட்டினன் மாதோ.

# கோவி லூர் மடத்தில், பாடம் நடக்கும் 16 நூன் முறை.

## ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சாரிய ஸ்வாமிகள் இயற்றியது

நாக்துநுகா நாஜீவ வாதக்கட் டளைகீ — தாசாரத் தாலாட்டுச் சசிவக்ந போதம், வாக்துமகா ராஜத்துற வுபத்திசத கம்நல் — வைராக்ய தீபமிலக் கணுவிருத்தி யரிய, வாஃகஞ்ஞ வதைப்பாணி வேதாந்த சூடா — மணிவிவே கசூடா மணிபஞ்ச தசியும், பாஃஙமழ்கை வல்யநவ நீதமீ சுரகீதை — பகவற்கீ தைபிரம கீதைவா சிட்டமே.

### பதி ஞறு நூற்கட்குப் பன் னிருவர் கர்த்த ராவர்.

1. நாநா ஜீவ வாதக் கட்டளை, சேஷாத்திரி சிவன்.
2. கீதா சாரத் தாலாட்டு, திரு வேங்கட நாதர்.
3. சசி வக்ந போதம், அஞ்ஞ வதைப் பரணி, ஈசுவர கீதை, பிரஹ்ம கீதை, (நான்கும்) தத்துவ ராய சுவாமிகள்.
4. மகா ராஜத் துறவு, குமார தேவர்.
5. பக்தி (வைராக்ய) சதகம், வைராக்ய தீபம், (இரண்டும்) சாந்த லிங்க சுவாமிகள்.
6. வேதாந்த சூடாமணி, சிவப் பிரகாச சுவாமிகள்.
7. விவேக சூடாமணி, உலக நாத சுவாமிகள்.
8. இலக்ஷணுவிருத்தி, சிதம்பர சுவாமிகள்.
9. பஞ்ச தசி, நித்தியாநந்த சுவாமிகள்.
10. பகவற் கீதை, சேம நகர் பட்டர்.
11. வாசிட்டம், ஆளவந்தான்.
12. கைவல்ய நவநீதம், தாண்டவ ராய சுவாமிகள்.

எட்டு நூல் தமிழ், எட்டு நூல் மொழி பெயர்ப்பு.

### எட்டு நூல், சக்தி விசிஷ்ட அத்வைதம்.

1. நாநா ஜீவ வாதக் கட்டளை. 2. சசி வக்ந போதம். 3. மகா ராஜத் துறவு. 4. பக்தி சதகம். 5. வைராக்ய தீபம். 6. அஞ்ஞ வதைப் பரணி. 7. இலக்ஷணுவிருத்தி. 8. ஈசுவர கீதை என்னும் இவ் வெட்டு மாம்.

### எட்டு நூல், சுத்த அத்வைதம், கேவல அத்வைதம்.

1. கீதா சாரத் தாலாட்டு. 2. வேதாந்த சூடாமணி. 3. விவேக சூடாமணி. 4. பஞ்ச தசி. 5. பகவற் கீதை. 6. கைவல்ய நவநீதம். 7. வாசிட்டம் (கீடா பிரமர வாதம்) 8. பிரஹ்ம கீதை. என்னும் இவ் வெட்டு மாம்.

# நூன் முகம்

எழுவகைத் தோற்றத்துள் மாநுட வாக்கைத் தோற்றமே உயர்வு உடைய தாம். அதன்கண்ணே மோக்ஷ மடைதற்குச் சாதநங்கள் உண்டாகின்றமையால், ஏனை அறு வகைத் தோற்றங் களும் போகத்தினை மாத்திரம் அடையத் தகுதி உடையன ஆம். மோக்ஷ சாதநம், கர்மம் பக்தி ஞாநம் என முத் திறப்படும். அவற்றுள், பக்தியும், ஞாநமும், சுத்த அந்தக் கரண முடையவர் களால், எழிதில் அடையப்படும் என்பதனை உணர்ந்து, திருப் பேரை யூரில் சமாதியுற் றிலங்கும் சாந்த லிங்க சுவாமிகள் முன் னூறு வருஷங்கட்கு முன்னர் பக்தியினைப் பிரதாந மாகவும், ஞாநத்தினைக் கௌண மாகவும், கொண்டு **பக்தி சதகம்** என நூறு செய்யுட்களால் ஒரு நூல் செய்தார்கள். அதற்குத் திருப் போரூர் சிதம்பர சுவாமிகள் ஓர் பொழிப் புரை இயற்றினார்கள். அதற்கு மேற்கோ ளாக நூறு செய்யுட்கள் கொடுத்து அலங்கரித்திருக்கின் றார்கள். "பொழிப் புரை கொண்டு பதப் பொருளைக் காண்பது அரிதாக இருக்கிறது" என்று பல அடியார் குளாங்கள் "**பத** உரை ஒன்று செய்ய வேண்டும்" என்று பல முறை விரும்பிக் கேட்டுக் கொண்டதனால், திருப் போரூர், சிதம்பர சுவாமிகள் பொழிப் புரையை ஆதார மாகக் கொண்டு பத உரை, இலக்கணக் குறிப்பு முதலிய வற்றோடு எழுதி முடித்தோம்.

பத வுரை, பொழிப் புரை இரண்டும் சேர்த்து அச்சிட்டிருந் தால், படிப்பவர்களுக்கு உரையின் அருமை நன்கு விளங்கு மெனக் கருதி, இரண்டையும் ஒன்றாக அச்சிட்டிருக்கின்றோம். விஷய அட்டவணை உதாரண நூற் குறிப்பு, உதாரணச் செய்யுள் முதற் குறிப்பு, முதலியவற்றோடு அலங்கரிக்கப்பெற்றிருக்கிறது.

செய்யுள் முதற் குறிப்பு, உதாரணச் செய்யுள் முதற் குறிப்பு, உபாசனை பிரதீகம் எனவும், அகங்கிரகம் எனவும், இரு வகைப் படும். அவ் விரண்டினுள் இதில், பிரதீக உபாசனை விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றது.

இது, ஐக்கிய வாத வீர சைவக் கொள்கையைக் கொண்ட சக்தி விசிஷ்ட சுத்த அத்வைத நூ லாகும். நூலின் இறுதியில், "ஓங்கு அறி வாகி, காண்பவன், காட்சியும் அற்ற அபேத வாழ்வு எனக்கு ஈந்திடல் வேண்டும்" என்று கூறுகின்றமையின், திரி புடி நீங்கிப் பிரஹ்ம மாக இருப்பதே தங்கருத் தாக விளக்கிக் காட்டுகின் றூர்கள் என்பதை உணர வேண்டும்.

அதனுல், கோவிலூர் மடத்தில் சாந்தி பாடம் நடக்கும் முறை யில் இதனை ஐந் தாவது பாட மாகப் பெரியோர்கள் ஏற்படுத்தி யிருக் கின்றூர்கள்.

**காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள்,**
திருப் பூ வணம்.



## பக்தி சதக உதாரண நூல் 37 கவி 102.

| தொடர் எண் | நூல் பெயர் | கவி | தொடர் எண் | நூல் பெயர் | கவி | தொடர் எண் | நூல் பெயர் | கவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அருணகிரி அந்தாதி | 1 | 13. | சிவாநந்த மாலை | 4 | 25. | நல் வழி | 1 |
| 2. | அறிவாநந்த சித்தியார் | 6 | 14. | சிவாநுபூதி விளக்கம் | 1 | 26. | நாலடியார் | 2 |
| 3. | ஆநந்தத் திரட்டு | 3 | 15. | சுந்தர மூர்த்தி தேவாரம் | 1 | 27. | நீதி வெண்பா | 1 |
| 4. | ஒழிவில் ஒடுக்கம் | 2 | 16. | ஞாந சூரியன் [முறை | 1 | 28. | பகவற் கீதை | 1 |
| 5. | கந்தர் அநுபூதி | 3 | 17. | தத்துவ ராயர் அடங்கன் | 3 | 29. | பட்டினத்தார் பாடல் | 2 |
| 6. | கந்தர் அலங்காரம் | 1 | 18. | மேற்படி பாடு துறை | 1 | 30. | பிரபு லிங்க லீலை | 1 |
| 7. | காசி காண்டம் | 1 | 19. | திரு அம்மானை | 2 | 31. | பெருந் திரட்டு | 6 |
| 8. | சம்பந்தர் தேவாரம் | 1 | 20. | திரு அருட் பயன் | 2 | 32. | பொன் வண்ணத் தந்தாதி | 1 |
| 9. | சிவ ஞாந தீபம் | 1 | 21. | திருக் குறள் | 15 | 33. | மெய்ஞ் ஞாந விளக்கம் | 2 |
| 10. | சிவ ஞாந வள்ளலார் | 2 | 22. | திரு நாவுக் கரசர் தேவாரம் | 4 | 34. | மெய்ம் மொழி | 1 |
| 11. | சிவ தரு மோத்தரம் | 4 | 23. | திரு வாசகம் | 10 | 35. | வாசிட்டம் | 8 |
| 12. | சிவ போக சாரம் | 3 | 24. | தேவி காலோத்தரம் | 2 | 36. | வீர ஆகமம் | 1 |
| | | | | | | 37. | தொல் காப்பியம் | 1 |

ஆக நூல் 37க்குக் கவி 102.

## வைராக்ய சதக உதாரண சாஸ்திரம் 37க்குக் கவி 102க்கு அட்டவணை.

| தொடர் எண் | நூல் பெயர் | கவி | தொடர் எண் | நூல் பெயர் | கவி |
|---|---|---|---|---|---|
| | 1. வாசிட்டம் 8 | | 3 | கையிஞ லறையுண்ணு | 4-4-30 |
| 1 | மிகமுயன்று | 210 4 | 4 | தாரதந மிகுமென் | 4-4-44 |
| 2 | இயற்கைகுணஞ் | 4-4-12 | 5 | அறிவெ னும்விதை சங் | 4-4-104 |

6 மெத்தென்ற 5-1-6
7 இச்சையாம் விறகு 5-3-4
8 எறியுங் கடலி 6 இதோ 9

2. பகவற் கீதை 1

9 வாங்கி ஐம்பொறி 6-1

3. தத்துவ ராயர் அடங்கன் முறை 3
(அமிர்த சாரம்)

10 செவ்வே யுடலுஞ் 111
11 உள்ளத்தி ருந்து 183

மோக வதைப் பரணி - சசி வந்த போதம்.

12 வினவிற்ப ரத்தையறி 81

4. பாடு துறை 1

13 தந்தைதா யாவானுஞ்

5. பட்டினத்தார் பாடல் 2

14 சினந்தனை யற்று (கைலாயம்) 3
15 அண்றன் வீதி (பொது) 27

6. ஒழிவில் ஒடுக்கம் 2

16 உடற்குயிர் போற் 1-15
17 நாயேறி 1-56

7. திரு வாசகம் 10

18 ஆடுகின்றிலை (ஆத்ம சுத்தி) 1
19 மேற்படி மேற்படி ஷை
20 முத்தனே முதல்வா (அருட் பத்து) 8
21 பூத்தாரும் பொய்கை (தோணோக்ககம் 1
22 நிலநீர் நெருப்புயிர் (மேற்படி) 5
23 நாயிற் கடையாம் (குழைத்த பத்து) 8
24 பொத்தை யூன் (அதிசயப் பத்து) 7
25 மெய்தா னரும்பி (திருச் சதகம்) 1
26 வாழ்கின்றாய் (மேற்படி) 20
27 பத்தி வலையிற் படு (அண்டப் பகுதி) 42

8. சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம் 1

28 தேனைக் காவல் (ஊர்த் தொகை) 7

9. திரு நாவுக் கரசர் தேவாரம் 4

29 இறுமாந்தி ருப்பன் (அங்க மாலை) 11
30 நங்க டம்பனை (கடம்பூர்) 9
31 அருப்புப் போல் (அரிசில் கரை புத்தூர்) 5
32 சங்கநிதி பதுமநிதி (தாண்டகம்) 10

10. சம்பந்தர் தேவாரம் 1

33 செல்வ நெடுமாடஞ் (கோயில்) 5

11. கந்தர் அநுபூதி 3

34 செம்மான் மகளை 12
35 ஆதா ரமிலேன் 26
36 இல்லே யெனு 29

12. கந்தர் அலங்காரம் 1

37 அராப்புனை வேணியன் 74

13. அருணை கிரி அந்தாதி 1

38 பாகதிக்கு வித்தா 58

14. பிரபு லிங்க லீலை 1

39 ஓடும் பொன்னும் 18-19

15. திருக் குறள் 15

40 வேண்டுதல் வேண்டாமை 1-4
41 இருள்சே ரிருவினையுஞ் 1-5
42 பிறவிப் பெருங்கடல் 1-10
43 யாகாவா ராயினு 13-7
44 வலியினி லைமையான் 28-3
45 பொய்மையும் 30-2
46 புறந் தூய்மை 30-8
47 அறிவினுகுவ துண்டோ 32-5
48 ஒருபொழுதும் வாழ்வ 34-7
49 உறங்குவது போலுஞ் 34-9
50 புக்கில்மைந் தின்று 34-10
51 யாதனின் யாதனி 35-1
52 மற்றுந்தொ டர்ப்பாடெ 35-5
53 அவாவென்ப 37-1
54 ஓதியுணர்ந்தும் 84-4

16. பெருந் திரட்டு 6

55 காயநீர்க் குமிழி
56 இல்லின்ப மிகழ்ந்து
57 அண்டமெண்டி

குறுந் திரட்டு

58 தீய வசுரர்
59 பாண மாகிய
60 வில் விளங்கிய

17. தேவி காலோத்தரம் 2

61 மந்திரஞ் செபந்தி யாகம்
62 சமயாசார சங்கற்ப

18. நா லடியார் 2

63 யானையெ ருத்தம் 9-3
64 குடருங் கொழுவும் 5-5

19 நீதி வெண்பா 1

65 இன்னறரும் 46

20. சிவ தருமோத்தரம் 4

66 என்றென் றெண்ணி 8-21
67 அங்கி யதனிற் 8-22
68 கருப்பா சயமே 8-23
69 மண்ணினுந் 8-90

21. சிவாநந்த மாலை 4

70 எங்குஞ்சி வமொழிய
71 வீடொழியப்
72 நல்ல வறுசுவை
73 ஊனுமு ரையு

22 சிவ போக சாரம் 3

74 ஆர்பெரிய சார் 96

75 நாம்பெரிய ரெ 84
76 அமைத்த வினைக் 98

23. சிவானுபூதி விளக்கம் 1

77 விருப்பு வெறுப்

24. சிவ ஞாந தீபம் 1

78 விரும்புற்ற

25. ஞாந சூரியன் 1

79 உடலை யொண்

26. மெய்ஞ் ஞாந விளக்கம் 2

80 தேவின்மா னுட
81 வந்திடு மரணத்

27. ஆநந்தத் திரட்டு 3

82 பெறுதற் கரிய
83 மந்திரவாட்
84 எப்பொருள் களுக்க்

28. காசி காண்டம் 1

85 கருவிடை

29. மெய்ம் மொழி 1

86 தானலா தொன்று

30. அறிவாநந்த சித்தியார் 6

87 விரிந்தநல் வேத 24
88 அங்நம யங்கொண் 73
89 ஊசமு டலினு 75
90 [illegible]ணக்குய நது 77
91 இணங்குந வகுண 79
92 சேருஞ்சு கம்பொ 81

31. திரு அம்மானை 2

93 தற்போதமற்றி
94 பார்த்த விட

32. வீர ஆகமம் 1

95 அடுத்ததின் றன்மை

33. திரு அருட் பயன் 2

96 அகர வுயிர் 1
97 புலனடக்கி 94

34. பொன் வண்ணத் தந்தாதி 1

98 தொடங்கிய 64

35. நல் வழி 1

99 உண்பது நாழி 28

36. சிவ ஞாந வள்ளலார் 2

100 தீர்த்தம் பிரசாதம் 23
101 பொண்ணுடை 24

37. தொல் காப்பியம் 1

102 இயற்பெயர் முன்னர் 754
(சொல் லதிகாரம் இடை யியல் 23)

# பக்தி சதக விஷய அட்டவணை.

1 மநத்தை உடன் படுத்துதல் கூறல்.

2 இனித் திரு வடியை அடையக் கடவம் என மநஞ் சம்மதித்தல் கூறல்.

3 மனைவியாதியருக்குத் துணை யாக இருக்க நினைத்தல் தவறு, சிவனே மனைவியாதியருக்குத் துணை, ஜீவர்கள் துணை யல்லர் எனக் கூறல்.

4 (1) உறவுப் பற்று. சிவ திரு வடியே துணை யாம், அஞ்ஞாநம் பகை யாம். அன்றி, வினை வழியே வந்த ஜீவர்களைப் பகைவர் என்றும், உறவர் என்றும் கருதல் கூடாது எனக் கூறல்.

5 (2) பொருட் பற்று. பொருள் செல்வம் அன்று. சிவன் அருளே பொருள். அதுவே அரிய செல்வம் எனக் கூறல்.

6 (3) சுகப் பற்று. கண்ட சுகம் அநித்தியம் எனக் கூறல்.

7 (4) இடப் பற்றுக் கூறல்.

8 (5) புகழ்ப் பற்றுக் கூறல்.

9 தவத்தால் பெரியன் எனக் கூறல்.

10 சுவர்க்க இன்பம் கூறல்.

11 பிரபஞ்சத்தில் உவர்ப்புப் பிறவாமைக்குக் காரணம் கூறல்.

12 மநத்தினை வெறுத்தல் கூறல்.

13 மநத்தின் தவறுகளைக் கூறல்.

14 நாலு வேதமும் ஒரு சம நிலை கூற, அதை விடுத்து, அறு சமயப் படுகுழியில் வீழ்ந்து பிரமனது உறவையும், காலனார் தொடர்பையும், தொடரல் கூறல்.

15 காலனுக்குத் தப்பிச் செல்லும் நெறி கூறல்.

16 இந்தச் சரீரத்தின்கண்ணே இருந்து, சிவ திரு வடியை உறுதியாகப் பிடித்தல் வேண்டும் எனக் கூறல்.

17 பிரதியக்ஷத்தாலும், சப்தத்தாலும், இக் காயம் இனிக் கிடைக்காமையான், திரு வடியை அடைதற்கு தாமதம் பண்ணுமல் விரைதல் கூறல்.

18 ஞாந சமாதி. எதிர் காலம் பற்றி நினையேல், உடல் இருப்பது அரிது. இறந்த காலம் பற்றி நினையேல், அதனல், பயன் இலை. நிகழ் காலச் சுக துக்கம் பற்றி நினையேல், சிவன் வினை வழி யாகச் சுக துக்கங்களைத் தருதலால் எனக் கூறல்.

19 இஷ்ட விஷயங்கள் கிடைத்தல் வேண்டும் என்னும் விருப்பம் வராம லிருத்தலும், கிடைத்த விஷயங்களில் ஆசை செல் லா திருத்தலும், திரு வடியை மறவாதிருத்தலும் கூறல்.

20 சிவ திரு வடியை மறவாதிருத்தலும், நிராசையும், கூறல்.

21 அபராதமும், சிவ பூசையும், இவை இவை எனக் கூறல்.

22 ஞாந நிஷ்டை கூடுதல் அரியது என்பதையும், தியாக ஆதிகள் எளியது என்பதையும் மறுத்து, ஞாந நிஷ்டை எளிது எனவும், தியாக ஆதிகள் வலியன எனவும் கூறல்.

23 அசை வற நிற்றல் வீடு அடைதற்கு ஏது. சிவன் திரு சியப் பொருள் அன்று என்று கூறல்.

24 அசை வற நிற்றற்கு உபாயமும், வீடு வரு மாறும் கூறல்.

25 ஐம் புலக் காட்சி நீங்குதற்கு உபாயம், "யாவும் பிரஹ்மம்" என ஏக பாவனை செய்து, துவித பாவனை நீக்குதல் கூறல்.

26 நினைப்பு மறப்பு நீங்கிச் சம நிலை நிற்றற்கு நாநா உபாயம் கூறல்.

27 ஞாநாச்சாரம்- வாக்கு மௌநம் - உண்மை கூறல் - நன்மை யின்றிய இடத்து உண்மையும் பொய் - "யான் செய்தேன் பிறர் செய்தார்" எனின், நன்மை பயக்கு மிடத்தும் பொய்யாம்.

"சிவ சொரூபம் அன்று" என்று ஒன்றையாவது கருதினாலும் பொய்யாம் எனக் கூறல்.

28 உடலை சமாதியில் அசை வற நிறுத்தல் - ஆசாரியாருக்குப் பணிவிடை செய்தல், எல்லாச் சீவர்கட்கும் ஹிதம் செய்தல் - உடலுக்கு ஹிதம் செய்யாதிருத்தல் என்பவற்றைக் கூறல்.

29 நமது தொழில் சிவனது பஞ்ச கிருத்ய மாம். நாமும் சிவ சொரூபம், பஞ்ச கோசங்களும் நாம் அல்ல என்று உள்ளங் கை நெல்லிக் கனி போல அநுபவ ரூபப் பிரத்தியக்ஷ மாகக் கூறல்.

30 சிவ பஞ்ச கிருத்தியத்தினை, "தெளிவு - விளக்குதல் (அநுக்கிரகம்), மயக்கு - திரோபவிக்குதல், விளிவையுறல் - சங்காரம், இத அகிதம் - திதி, தோற்றம் - சிருஷ்டி" எனக் கூறி, உன்னையும், பிறரையும், கருதிப் பூரிப்பு வாட்டங்களைப் பொருந்திச் சம்புவை மறந்தாய் எனக் கூறல்.

31 ஆணவமும், மாயையும், பந்தம் - அவற்றை விடுதல் வீடு. விடுதல் - பர பக்தி பர ஞாநங்களா லாகும். நம் செயல் அறுவது பர பக்தி யாம். நாம் அறுவது பர ஞாந மாம் எனக் கூறல்.

32 நம் செயல் ஒன்றும் இல்லை. ஒரு மயக்கத்தினால் பவ சாகரத்து அமிழ்ந்தோம். "இரு வினைகளையும் நான் செய்தேன்" என்னும் அபிமாநம் மயக்க மாம். இதனை விடுதல் கூறல்.

33 சர்வஞ்ஞ பரமேசுவரன் ஜீவர்கள் செய்த கர்மங்களை உணர்ந்து, அதற்குத் தக்க வாறு பலன் தருவன். அவனே, துக்கத்தினைத் தரின் ஒருவராலும் தடுக்க முடியாது. தாவரங்கள் உடம்பில் அபிமாநம் இல்லாமையினால் உடம்புகளோடு கூடியிருக்கவில்லையா? "பிராரப்த கருமப்படி நடக்கும்" எனக் கருதி மந வருத்தம் இன்றித் தேக அபிமாநத்தினை விடுக எனக் கூறல்.

34 வீட்டினை அடைந்தவர் இருமாப்புறுதலும், வீட்டினை அடையாமல் இருப்பவர் வணங்கித் தலை வளைத்தலும், தேக அபிமாநம் விடுதலும் கூறல்,

35 மோக்ஷம் அடைதற் பொருட்டு நம்மிடத்து வந்து பொருந்துகின்ற மாயா காரியங்களை "எனது யான்" என அபிமானித்து பயமும் ஆசையும் கொள்ளுதலும், உடலை சுழுத்தியில் காத்த கடவுளே, நநவு கனவுகளில் உடலைக் காப்பன் எனக் கருதித் தேக அபிமானத்தை விடக் கூறல்.

36 சுக ஆகார துக்காகாரமா யிருத்தலையும், கடவுள் திருவடியில் விருப்பம் வைத்தல் எவ் வினையை அநுபவிக்குங் காலத்தில் என்றும், கருப்பத்தில் வந்து நீர்க் குமிழி போல் அழியும் இந்தக் காயம் உள் காலத்திலேயே குரு திரு வடிக்கு அன்பு செய்தல் நன்மையாம் என்றும் கூறல்.

37 பஞ்ச இந்திரியங்களை நிக்கிரகிக்க வேண்டும், சந்திர சேகரனது சரணமே அடைக்கலம் எனத் தொழ வேண்டும், கடவுளது நாமத்தினை நாவால் செபிக்க வேண்டும். நாட்களை நன் றுளாகச் செய்யாமல், வீண் நா ளாகக் கழித்தல் கூடாது எனக் கூறல்.

38 மாதா வாகவும், பிதா வாகவும், வந்து திரு வடி தந்த குரு மூர்த்தியின் அருளை விரும்ப வேண்டும். "காயம் மாயம்" என்று அறிந்த பின்னரும், மாதர்கள் தருகிற கலவியை விரும்பக் கூடாது, விரும்புதல் குற்றம் எனக் கூறல்.

39 நூல்களில் கூறியிருப்பது கடவுள் கிருபை யல்லாதார் பவ சாகரத்தைக் கடவார், வேறு உபாயமும் இல்லை. கடவுள் அருளை விரைந்து அடைய வேண்டும். இது வரை மகளிர் போகத்தை விரும்பினது தவறு, நன்மை யன்று எனக் கூறல்.

40 கடவுளைத் தொழுது, அன்பன் ஆய், தேகம் நடுநடுங்கி உரோமம் சிலிர்ப்புற வேண்டும். ஆநந்த நடநம் செய்ய வேண்டும். கநக சபையை அடைய வேண்டும். மகளிரிடத்துப் போதலை நீக்கியிருக்கவேண்டும், இவற்றைச் செய்யாதிருக்கில், உடல் நீங்கும் காலத்தில் மிகுந்த துன்பம் அநுபவிக்க வேண்டும் எனக் கூறல்.

41 ஆல விருக்ஷத்தின் கீழ் நான்கு முனிவருக்கு ஞான உபதேசஞ் செய்த கால காலனாகிய சிவப்பிரகாசக் குரு மூர்த்தியினைத் தியானிக்க வேண்டும். அங்ஙனம் செய்யாது மகளிர் மயக்கம் கொண்டு சுழன்று திரிவது மிகவும் குற்ற மாம் எனக் கூறல்.

42 பெண்கள் சரீரத்தில் அசுத்தங்கள் நிறைந்திருப்பதால், அதில் ஆசை வைத்து உழலக் கூடாது

43 மகளிர் கூட்டுறவால் பயன் இல்லை, இந்திரியங் கழிந்து போவதால் தபோ பலம் எல்லாம் குறையும். உடலுக்கும் அழிவாம். நாம் அறிவு ரூப மாம். அறியாமையைப் பொருந்தி உடல் அரிப்பைச் சுகம் எனக் கருதல் தவறு. சிவனை ஆதரித்தால் ஞானாநந்தத்தினை இனி யடைய லாம் எனக் கூறல்.

44 கிருத குள பாயச அறு சுவை அடிசிலை விரும்புதல் கூடாது, கூழ் காடி முதலியவற்றைப் புசித்தாலும், பசி போதலும், சீரணித்து அடங்கினல், வேறுபாடு இன்றி மல மாய்ப் போதலும் சமமே யாம். ஆனதால், நிமலனை நினைக்காது, அறு சுவை அடிசிலை விரும்புவது கூடாது எனக் கூறல்

45 மகளிரை நினைக்கினும், ஆண் குறி லேபநமும், அறு சுவை அடிசிலை நினைக்கினும், நா நீர் ஊறலும் ஆகிய அடையாளங்களை உண்டாக்குகின்றது. இது போல் ஜீவர்கட்குத் துன்பம் செய்கின்ற சத்துரு வேறு இல்லை. அருந்தல் பொருந்தல்களை விரும்பாது ஒழித்துவிட்டால் சிவ திருவடியை அடைய லாம். வேறு விக்கிநம் இன்று எனக் கூறல்

46 தேகத்தில் ஒரு வியாதி வந்து பொருந்தினல், மனைவி முதலிய பல போகங்களும் அந்நிய மாய்ப் போகும். உயிர் போனாலும் விபூதியை நன்மை என்று கருதி உறவினரால் அணியப் பெறும், கடவுள் நாமத்தைக் கூறுவர். மரண காலத்துக்கு உபயோக மாக விபூதி முதலியவற்றை விரும்ப வேண்டும் எனக் கூறல்.

47 விபூதியை அணிந்து, உருத்திராக்ஷங்களைப் புனைந்து, பஞ்சாக்ஷரத்தை உச்சரிக்க வேண்டும். குரு லிங்க சங்கமம் மூன்றையும் வணங்க வேண்டும். இவற்றால், பிறப்பு இறப்பினை நீக்கலாம். கனக சபைக் கடவுள் திரு வடியும் உள் ஒளிக்கும் ஒளி யாய்த் தோன்றும். அதைத் தொழுது வாழ லாம் எனக் கூறல்.

48 திரு வடியை அடைந்து வாழ லாம். சிவனது புகழ்க் கூட்ட மாகிய மலர்களால் பா மாலைகளை வனைந்து, திரு அடிமீது, பொருந்து மாறு கொன்றை மாலை பொருந்திய புஜங்களின் மீது தரித்து வணங்கல் வேண்டும். விஷ்ணுவாலும் வராக ரூப மாகத் தேடப்பட்ட திரு வடியே புக லிடம் என்று கருதி, இஃது தன்றி பா ழாகக் கருங் காக்கை போல் கதறிப் பல நாளைக் கழித்து நாச மாகக் கூடாது எனக் கூறல்.

49 பேரறிவினை யுடையோர் முன் னாளிலே தோத்திரம் பண்ணிய பாடலைத் தோத்திரம் பண்ணினால், பிறவி யாகிய பகை ஒழிந்துபோம். விட புருஷனுக்கு இளம் பெண்டீர் வாக்கியம் போலும் கடவுளுக்கு அவ் வாக்கியங்கள். உபசாரம் என்று கருதித் தள்ளல் கூடாது. உறுதி மொழி எனக் கொள்ளல் வேண்டும். மன்மதனை நெற்றிக் கண் விழித்து எரித்த கடவுள் அருளைப் பெறுவார் விருப்பமும் இதுவே யாம் எனக் கூறல்

50 இதனை விருப்ப மாய்க் கேட்க வேண்டும். விமலனுக்கு அடிமை அல்லாதவர் மகா மேரு போன்ற பணத்தைச் சொரிந்தா ராயினும், அவர்களிடம் புல் நுனி அளவு அன்பு கூட வைத்தல் கூடாது. சிவ னடியாருக்கும் அடியா ராய்த் திரிந்து, அவர்கட்குப் பணி விடை செய்து இருத்தல் வேண்டும். இச் சொல்லை நம்பல் வேண்டும், நம்பாவிட்டால் கெடுதல் வரும் எனக் கூறல்.

காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள் இயற்றிய

# பக்தி சதகச் செய்யுட் கிரமக் கருத்து விஷய அட்டவணை.

1 மாநுட யாக்கை அநந்த புண்ணியத்தினுல் கிடைத்தது. அது நீண்ட நாளிராது. ஆதலினுல், அவ்வுடல் உள்ள காலத்திலேயே அரன் துணைத் தாளைத் தொழுது எழுவகைப் பிறவிகளைப் போக்கல் வேண்டும். நீ அங்ஙனம் செய்யாத காரணம் என்னை என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

2 திருவடியினைத் தரம் பாராது தந்த சிவப் பிரகாச சுவாமிகளின் அடிமை நாம் என்று யாரும் கூறத் திரிந்து அவருக்கு பணிவிடை செய்து அரிய வீட்டை அடைந்தாயில்லை. மனை முதலிய அளற்றில் கிடந்து வருந்தினை. நாளை நமன் ஓலையும், எமதூதரும் வரும் போது இந்த மனைவி முதலியோர் துணை ஆவார்களா? என மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

3 மனைவி முதலியோருக்கு நம்மைத் தவிர வேறு துணைவர் இல்லை என்று கருதி அரன் தாளை மறந்தாய். உன்னை நமன் பிடித்துக்கொண்டு போவானுயில் நீ குவலயத்து வந்து மனைவி முதலியோரைக் காக்கக் கூடுமா? ஜீவர்கட்குச் சிவன் துணையன்றிச் சீவர்கள் துணைவர் ஆகார் என மநதைப் பார்த்து வ்வேகங் கூறல்.

4 எம்மைத் துணையதாய்த் தொடர்தரு தொடர் பரனது திருவடிகளே நமக்குத் துணையாம் என்றும், உள்ளத்தை வருத்தி நாசம் பண்ணுகின்ற பகையாவது, அஞ்ஞாநமாம் என்றும் உள்ளபடி அறிந்தாயில்லை. வினை வழி வந் தணைந்த ஜீவர்களை, இவர் பகைவர் இவர் உறவர் எனக் கருதி வெறுப்பு விருப்பு உற்று எனையும் கெடுத்தாய் என மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

5 கெடுவ தாகிய பொருள் செல்வம் ஆகுமா? ஆகாது, பல வேறு வகையாய் துன்பம் தருவது ஆகும். பொருளை விடுதலே சுக மாம். முன்னர்ப் பொருளை விட்டவர்கட்கு உன்னைப் போன்ற கூர்மையான புத்தி யில்லையோ? இனிப் பொருள் மேல் வைத்த பற்றை விட்டு, சிவனது அருளையே பொருளென அடைவோம். அது தானே நமக்கு அரிய செல்வம் ஆம் என மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

6 சதுரங்க சேனைகள் சூழ மண் ணுலகை ஆண்டு அழியும் அரசர்கள் வாழ்வு இனிதன்றென்றும், பரிபூரண நிமல ஞானத்தினை அடைந்தால் அப்படி அடைந்தவர் தாளை வா னுலகத்தாரும், மண் ணுலகத்தாரும், வந்து வணங்குவார்கள் என்றும், இந்த உண்மை வாழ்வைக் கண்டவுடன் முன் வீ ணாகப் போன நாளைக் குறித்து இரங்கும்படியாகவும் வரும் என்று பெரியோர்கள் கூறிய வாக்கியங்களை உணர வில்லையோ என்றும், மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

7 "ஈது எமது காணி" என்றும், "ஈது எமது இடம்" என்றும், மண்ணைத் "தனது என்று கருதி மண் ணாகின்றாய்" என்றும், இந்த உலகமே நமக்கு இடம் அன்று என்று கூறப்படு மானால், இந்த உடம்புக்கு இடமா யுள்ள பிருதிவியை இடமாகக் கருதல் தகுமா என்றும், உயிர்கட் கெல்லாம் புக லிடம் நாகாபரண னுடைய திரு வடிகளே என்றும் மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

8 புகழினை விரும்புகின்றனை என்றும், புகழினது தன்மை யினை விசாரித்து அறிய வில்லை என்றும், வேறு தேகத்தினை அடைந்தால், இதில் உள்ள புகழ் அந்தத் தேகத்தில் வந்து பொருந் துமா என்றும், அன்றி, நீ யாவது அறியக் கூடுமா என்றும், முன் ஜந்மத்தில் நமது பெயர் யாது, நாம் யார் என்றும், முன் ஜந்மத்து இகழ்ச்சி பெறினும் இவ் வாறே யாகும் என்றும், சமாந மின்றிய வீட்டை யடைதல் புகழ் என்றும், பிறப்பை அடைதல் இகழ்ச்சி என்றும், மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

9 மண்ணோர் உன்னை பெரியன் என்று உணரும் ஆறு கருதுகின்றனை, உன்னுடைய இருதயத்தில் அந்தர், யாமி யாகப் பொருந்தியிருக் கின்ற ஈசுவரனே பந்தமும், வீடும், கொடுப் பவன். பிறர் உன்னை தவத்தால் பெரியன் என்று உணருவதால் என்ன பிரயோஜநம் ஆம், சிவ திரு அடி சாக்ஷி யாக அரிய தவம் செய். அப்படிச் செய்த பின் ஈசன், உலகத்தார் உன்னை அறிந்து வணங்கும்படி யான பெருமையினைச் செய்வான். என மநதைப் பார்த்து விவேகம் கூறல்.

10 விசாரித்துப் பார்க்கு மிடத்து பூமியில் மநுடப் பிறப்பு முத லாக உள்ள அறு வகைப் பிறப்பினிடத்தும் இன்பம் அற்பமே னும் இல்லை என்பது பிரத்தியக்ஷ மாக நீ அறியச் சாமர்த்திய முடையாய், இமையவர் போர்கள் ஆதி துன்பங்களை அடைவது நூல் கூறக் கேட்டிருக்கின்றாய், அரன் கழலே மிகுந்த சுக ரூபம் ஆம். வேறு ஒன்று இல்லை. என்று மநதைப் பார்த்து விவேகம் கூறல்.

11 பிறப்பு இறப்பில் துயரமும்,கேடும்,அருந்தல் பொருந்தல் களாலும், வியாதி முதலியவற்றாலும், வந்து பொருந்துகின்ற துன்பத்தினையும் விசாரித்து விசாரித்து, எப் பொழுதும் எழு வகைப் பிறவிக்கும் பயந்தாய் இல்லை. சிவ னடியார் திரு வடிகளைப் பூசித்து, அவர் சந்நிதியில் நின்று அழுதாய் இல்லை. வணங்கினுல் இல்லை என்று மநதைப் பார்த்து விவேகம் கூறல்.

12 பூசை செய்து தோத்திரம் சொல்லி தன்னை நினைக்கின்ற புண்ணியவான்களிடத்துப் பொருந்தியிருக்க விரும்புகின்ற கநக சபைக் கடவுளை அடைந்தாய் இல்லை. அடைந்தவரைப் போலப் பேசுகின்றாய். துறவறத்தார் போல விளங்கு கின்றாய். அந்நியரது மனைவியை விரும்புகின்றாய. சீ சீ இங் கிருந்து என்ன காரியம் செய்தாய். நீ சாவாய். கெடுவாய். என்று மநதைப் பார்த்து விவேகம் கூறல்.

**13.** வாயினால் பல நூலை படித்து அறிந்து, பிறர்க்கு நல்ல வழிகளை உபதேசித்தும், நீ லோக ஆசாரத்தை கொஞ்சமேனும் விட்டாய் இல்லை. பிறர் கொள்ளுவதற் காகக் குங்குமப் பொதியினைச் சுமந்து செல்கின்ற கழுதை உன்னைப் பார்க்கிலும் உயர்வு உடைய தாம். எதனால் எனின், அதற்கு மா நுட சரீரமும் இல்லை. அன்றியும், மநதில் வஞ்சகமும் இன்மையினால், அது உன்னிலும் உயர்வு உடைய தாம் என மநதைப் பார்த்து விவேகம் கூறல்.

**14.** நாலு வேதமும் ஒரு சம மான நிலைமையைக் கூற, புதுமையினைச் செய்கின்ற சகல கேவல அவஸ்தைகட் குட்பட்டு, அவ ரவர் மநோ கற்பனையினால் செய்யப்பட்ட அறு வகைச் சமய மாகிய படு குழியில் வீழ்ந்து தத்தளிக்கின்றாய். இதுவே வேலை யாக உனக்கு உடலைத் தருகின்ற பிரமனது உறவையும், அந்த உடலை விடுவிக்கின்றதே வேலை யாக விடுவிக்கின்ற நமனது உறவையும், இன்னமும் தொடருகின்றனை போலும் என மநதைப் பார்த்து விவேகம் (பரிகாச மாகக்) கூறல்.

**15.** தேக அந்தத்தில் முதல்வ னாகிய கடவுளை விடாது பற்றியவர் நிற்க, மற்றையோர் கொடிய நமனைக் கடந்து போதல் அரிய தாம். இவற்றிற்கு மிருகண்டு மகரிஷியின் புதல்வ ராகிய மார்க்கண்டேயரே சாக்ஷி யாம். இந்த உடலுக்கு அழிவு இந்தக் காலம் என்று அறியக் கூடாமையினால், 'எப்பொழுதும் அரன் சரணமே தஞ்சம்' என்று கருதி, சரணை விட்டு நீங்காதிருப்போ மாயின், நாமும் அந்த நமனது சாமர்த்தியத்தைத் தடுக்க லாம் என மநதைப் பார்த்து விவேகம் கூறல்.

**16.** பின் ஒரு ஜந்மத்தில், இந்த மாநுட சரீரத்தை யாவது பெறுதல் எளி தன்று, வேத கிரியின்கண் பெருந் தவத்தினை உடைய சம்பாதி சம்பாதி என்னும் இரு தவத்தர் கழுகு உடல்

பெற்று இருத்தல் சாக்ஷி யாகும். ஆனதால், அரி தாகக் கிடைத்த விவேகமும், அரி தாகக் கிடைத்த மா நுட தேகமும் இருக்கும் போதே, கைலையங் கிரி வாசனை பல கவலைகளைக் கெடுத்து, ஒப் பற்ற உணர் வுடையவ னாகி, நீங்காது நிற்பாய் என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

17. இந்த உடலம் மின்னைப் பார்க்கிலும் விரைந்து நீங்கு மாயின், விரைந்து அரனைத் தொழ வேண்டும். அங்ஙனம் இன்றி, இவ் வுலகத்தில் சகலமும் செய்ய நினைக்குதல், சூரிய கிரணத்தி னால் விரிகின்ற கானலை 'இது தடாக ஜல மாம்' எனக் கருதி, சாமர்த்தியத்தினால், நெற் பயிர் முதலியவற்றைச் செய்ய நினைப் பவர் நினைவுக்குச் சமானம் ஆம் எனக் கருதி விடுவாய் என மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

18. இந்த (முக் கால) உண்மையையும் உணர்வா யாக. எதிர் காலம் பற்றி எதையும் நினைக்காதே, ஏன் எனின், அவ் வளவு காலம் வரை உடல் இருப்பது நிச்சயம் இல்லை. சென்ற காலச் செயல் ஒன்றையும் கருதாதே, ஏன் எனின், அதனால் பிரயோசநம் இல்லை. நிகழ் காலம் குறித்து தீமை நன்மை ஏதேனும் ஒன்றை நினையற்க, சிவன் வினை வழி யாகத் தருதலால் என (முக் காலம் குறித்து) மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

18A. நல்ல நெஞ்சமே! உண்மை யாகிய இதனையும் நீ அறிவா யாக. (நீ ஞாந நிஷ்டை கூடுமிடத்து ஒரு கணப் போதாயினும் அந் நிஷ்டையில் நீங்காது இருக்கவேண்டு மாகலின்) வருங் காலங் களில் கணப் போதாயினும் ஒன்றனையும் கருதிச் செல்லற்க. அக் கணப் போதளவும் இவ் வுடல் இருத்தற்கு நிச்சயம் பண்ணக் கூடாது. அதனால், சென்ற காலத்து ஒரு கணப் போதாயினும் "இன்னது செய்யாது விடுத்தேன்" என்று கருதற்க. அதனால்,

பயன் (ஒன்றும்) இல்லை. நிகழ் காலத்தில் கணப் போதாயினும் நீ சுக துக்கங்களை நினைவது எதற்கு? "நமது நல் வினை தீ வினைகளின்படியே சிவன் அறிந்து நமக்குச் சுக துக்கங்களைத் தருதலால்" என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

19. பழவினை தானே துன்பத்தினைத் தருதல் போல, சுகத்தை (நன்மை)யும் பழவினை தானே காலம் கருதிக் கொடுக்கும் (என உணர்ந்து எதிர் காலத்து ஒன்றையும் கருதாது விடுத்து), உயர்ந்த கம்பத்தினின்று (அந் நிலைக்குத் தவறு வாராது, அதன் கண் கருத்தை வைத்துத் தியாகியைப்) புகழ்தல் முதலிய நோக்கு வித்தைகளைப் பழக்கத்தால் காயத்தில் காட்டுதல் செய்யுங் கூத்தரைப் போலவும், பர புருஷனை நச்சிய ஒரு நாரி, அவன் மேல் கருத்தை வைத்துத் தன் புருஷனுக்குப் பழக்கத்தால் இவனது ஏவற்றொழிலைச் செய்தல் போலவும், நீ ஐந்து இந்திரியங்களினாலும் ஐந்து விஷயங்களைப் பிடித்தாலும் சொல்லாநின்ற (அவ் விஷயங்களை இன்பம் என்று கருதி அவற்றின்கண்) ஆசை வையாமல், (திரு வடிக்கண் ஆசையை வைத்து அதனை) இராக் காலத்திலும், பகற் காலத்திலும் விட்டு நீங்காதே, வீட் டின்பம் எளிதில் உண்டாம் என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

20. "உனது ஆசையே மேன் மேலும் பிறப்பினை உண்டாக்கும் வித் தாம்" என்று நீ கருதி, அந்த அவாவை தடுத்தல் செய்வாய். தடுத்தால், ஆசை யாகிய கடல் வற்றும். வற்றவே, நினை வாகிய திரை நாச மாம். நாச மாகவே, (விஷய வாசனை) நினைவு எல்லாம் (ஒருங்கே) இறந்து போகும். எப் பொழுது அந் நினை வெல்லாம் இறந்தனவோ, அப் பொழுது தானே சந்திர சூட னாகிய எமது தந்தையினது பரிபூர்ண மாகிய திரு வடியையும் தொழுதற்கு ஐயம் இன்று என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

21. யாம் இன்றைக்கு சிவனது திரு வடிக்குத் (திரு மஞ்சன பத்திர புஷ்பங்களாற் செய்யும்) அருச்சனை முதலிய உபசாரங்களைக் கொண்டு நன்மை செய்தேம் எனவும், இன்றைக்கு அவை செய்குதல் இன்மையால் தீமை செய்தேம் எனவும், உனது நிலை சிறிது ஓர் அசைவு பொருந்திற்றாயினும், அத் திரு வடிக்குச் செய்யும் அபராதம் அதுவே யாம் என்றும், அஃது எங்ஙனம் அபராதம் ஆம் எனவும், ஓர் அணு அளவாயினும் ஒன்றைச் சுட்டி யெழுந்து செல்கின்ற நினைவும் இன்றி, அசையாது நிற்றி யெனின், இதுவே 'சிவ திரு வடிக்கு இன்பம் மிகுந் துறச் செய்யும் பூசை' என நெஞ்சமே நீ நிச்சயித்து அறிதி என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

22. மநமே! நீ 'உண்மை ஞான மாகிய நல்ல நிஷ்டை கூடுதல் அரியது' எனவும், 'அணு அளவாயினும் நினைவு ஒழியாது செய்யாநின்ற தியாந செப சிவ பூஜை முதலிய செய்குதல் எளியது' எனவும் கருதாநின்றனை. சிறு பிள்ளைகளது கூட்டத்தினை யுடையையோ நீயும், (தியாநம் முதலியவற்றை மந மொழி மெய் களினால் செய்யாது சும்மா இரு நீ என்று யான் கூற, அங்ஙனம்) சும்மா இருக்குதல், செய்தற் கரிதாய் (அவற்றைச் செய்குவல் என்று) சென்று வருந்தும் வருத்தம் உனக்கு எளிதாய் இருந்த இப் புதுமை என்னையோ? (இதனை நீ) நின்று சொல்லுவாயாக என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

23. நெஞ்சமே! உனக்கு அசை வற நில்லாது தியாந மாதிகளைக் கருதி அசைகுதல் நல்ல விருப்பம். எனக்கு அவ் வசைவை விட்டுச் சும்மா இருக்குதல் நல்ல விருப்பம். இவ் விடத்துச் சும்மா இருக்குதல் குற்றம். மே லாகிய வீட்டினை (தியாநம் முதலிய நன் மார்க்கத்தில்) சென்று அறிவேன் என்று கருதி அலைகின்றனையோ, வீடு காட்சிப் பொருள் அன்று.

ஒன்றையும் நினையாது இருப்பதே அவ் வீட்டை அடைதற்கு உபாய மாம் என்று அறிவாய் என மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

**24.** ஐம் பொறிகளால் காணப்பட்ட சப்தாதி விஷயக் காக்ஷிகளும் போய், அவ் விஷயக் காக்ஷியால் கரணத்தில் ஏறி யிருந்த வாசனைகள் அனைத்தும் விட்டு நீங்கி, (இவ் வாசனை முடிவில் தோன்றும்) மறைப்பும் அற்று, நிர்த் தாங்க சமுத்திரம் போல், நீ விளங்காநின்றனை யானல், மநமே! பிறவித் துன்பங் களுள் ஒரு துன்ப மாயினும் நமக்கு உண்டாமோ, அவ் விடத்து வீடு உள்ளங் கை நெல்லிப் பழம் போல உண்டாம். முன்னர் பொருந்தியிருந்த பிறவித் துன்பத்திற்குப் பயந்த பயம் அனைத்தும் நீங்கும். குரு துரியத்தையும் யாம் அடைய லாம் என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

**25.** வாக்கு மநோதீத மாயிருக்கின்ற (மாற்ற மனங் கழிய நின்ற) பரப் பிரம மாகிய கடலின்கண், விட்டு நீங்காத பரை யாகிய திரையானது, "ஈசுவரனும், (நாத தத்துவ முதல் பிருதிவி தத்துவம் ஈ றாகிய) சகங்களும், சராசரங்களா யுள்ள உயிர்களும், என்று சொல்லப்பட்ட நுரை திவலை குமிழிகளைத் தோன்றச் செய்து ஒடுக்கும்" என்று நான்கு வேதங்களும் சொல்லும் எனின், அக் கடல் திரையில் தோன்றிய இப் பிரபஞ்சத்தினுள், எதனை எமது என்று பிடிப்பம், எதனை எமது அன்று என்று விடுப்பம். எல்லாவற்றையும் ஆநந்த சொரூபம் என்று கருதி, இந் நிச்சய ஞாநத்தால் நெஞ்சமே "அது இது" என்று பகுக்குந் துவித பாவனை யை நீ நீக்குதி என்று மநதைப் பார்த்து விவேகங் கூறல்.

**26.** மநமே! இனி ஒன்றையும் சுட்டிப் பாவியாது பாவநா அதீதம் ஆகி நிற்குதலைச் செய். அங்ஙனம் நிற்றற்கு வலி இல்லை எனின், அணு திரண காஷ்டம் முதலியவற்றினும்) குறைவுபடாத

யக்ஷம்' என்னும் வட மொழி விகாரம். பிரத்தியக்க மா - 'பிரத்தியக்க மாக' என்பதன் கடைக் குறை. வல்லாய் - முன்னிலைக் குறிப்பு வினை முற்று. அடைவதும் - உம் - இறந்தது தழீஇய வெச்சம். உணர்ந்தாயே - ஏ - அசை நிலை. இலா - 'இல்லாத' என்னும் குறிப்புப் பெய ரெச்சத்தின் விகாரம். அலால், இலை - இவை இடைக் குறைகள். அன்று, ஏ - அசை நிலைகள்.

(சிது-ரை) ஓரி னுள்ளமே பாரின் மானுடர் முத லுள வறு பிறப்பூடுஞ் சேரு மின்பமொன் றில்லை யென்பது பிரத்தியக்க மா நீ வல்லாய் எ-து,—நெஞ்சமே உண்மை யாக விசாரிக்கு மிடத்து இப் பூமிக்கண் மக்கண் முதல் தாவர மீறாயுள்ள அறு வகைப்பிறப் பினுள்ளும் பொருந்தாநின்ற சுகம் ஓ ரணு வள வாயினும் இன் றென்பது காட்சிப் பிரமாண மாக நீயே அறிய வல்லாய்,

போர்க ளாதி துன் பிமையவ ரடைவதும் புகல் நூ லுணர்ந் தாயே எ-து,—அஃ தன்றிச் சத்துருக்களோடு அமர் செய்தல் முத லியவற்றால் வருந் துன்பங்களைத் தேவர்கள் பொருந்துவதும் வேதாகம சாஸ்திரங்கள் கூற அதைச் சத்தப் பிரமாணத்தால் அறிந்தனை யென்று விவேகங் கூற, அதற்கு மக்கண் முதலிய அறு வகைப் பிறப்பிற்கும் மே லாய தேவப் பிறப்பின்கண்ணும் இன்பம் இன் றென்றீர், இனித் தான் சுக மாவது யா தென்று மனங் கேட்ப,

நேரிலா அரன் கழலலான் மிகு சுக நிலை பிறி திலை யன்றே எ-து,—அதற்கு ஒரு வாற்றானும் உவமை கூறற் கரிய சிவனது திரு வடியே யல்லது மிகுந்த பே ரின்ப நிலை வேறு இன் றென்று விவேகங் கூறிற்று, எ-று.

பிறப்பும், இறப்பும், காமமும், நோயும், பயமும், முதலிய துன் பங்களைத் தேவர்க ளடைதலிற் போர்க ளாதி துன் பென்று கூறப் பட்டது. அன் றென்றது - அசை நிலை. இதற்கு உதாரணம்: பெருந் திரட்டு. "தீய வசுரர் பகையுண்டு செற்ற மார்வ மிக

வுண்டு, நோயுண் டநங்க ளுருண்டு நோய்கட் கெல்லாந் தாயான, காய மூண்டு கைதொழவேண்டினரு முண்டு கற்பத்தே, மாயுந் தன்மை யுண்டானல் வானோர்க் கென்னை வளனுண்டே.'' ஆநந்தத் திரட்டு. ''தேவின்மா னுடத்திற் றுன்பந் திகழ்வதிப் பரிசே யென்று, லாவகீழ் விலங்கு பக்கி யாதிதா வரமற் றெல்லா, மோவிய துன்ப வெள்ளத் துழைத்தலோ ரளவு முண்டோ, பாவமா நிரயந் தன்னிற் படுதுயர் பகரல் வேண்டா.'' மற்றும் வருவன வற்றுற் காண்க. (10)

[ இங்ஙனம் கூறிய உபதேச மொழிகளை அர்த்த அங்கீகார மாக உட் கொண்டு பிரபஞ்சத்தில் மிகவும் உவர்ப்புப் பிறவாமல் நின்ற மநத்தைப் பார்த்து மேற் கூறுகின்றது. ]

11\. அன்றே னக்குநீ யொருதுணை பிறப்பிறப் பதிற்றுய ரமுங்கேடுந், தின்ற லோன்றலால் வியாதியா திகளினுற் செறிதுய ரமுமோர்ந் தோர்ந், தென்று மேழ்பவக் கஞ்சிலை நெஞ்சமே யின்பவீ டேதுவென்றே, நின்று நின்றழு திலை தொழு திலைசிவ னேசர்தாள் பூசித்தே.

(பத உரை) எனக்கு — (பிறப்புத் துன்பம் என்றும், வீடு இன்பம் என்றும், உனக்கு நாநா உபாயங்களினாலும், யான் அறிவித்தும், நீ அப் பிறப்பினை நீக்கி, வீட்டினை அடைதற்கு ஏது வாய தவத்தினை விரைந்து செய்யாது, தாமசம் பண்ணு கின்றனை யாகலின்,) எனக்கு, ஒரு—ஒப் பற்ற, துணை—துணை, நீ அன்று—நீ அன்று (என்று விவேகம் கூற, அதற்கு, நீர் விடுக்கச் சொன்ன பற்றுக்கள் யாவும் விடுத்தேன். தவமும் செய்கின்றேன். நீர் இன்னும் கூறிய வாறும் கேட்க நிற்கின்றேன். இங்ஙனம் இருந்த என்னை அங்ஙனம் கூறியது என்னை என்று மநம் கேட்ப,), பிறப்பு—பிறப்பில் (கருப்பாசயப் பை உறுத்துதல் முதலிய ஜந்தி னால் வருகின்ற துன்பத்தையும்), இறப்பதில்—இறப்பில் (அத்

துன்பத்தின் எண் மடங் காகிய,) துயரமும் — துன்பத்தோடு, கேடும்—(வருகிற) நாசத்தையும், தின்றல்—(இவற்றிற் கிடையா யுள்ள திதிக்கண்) அருந்தல், ஒன்றலால்—பொருந்தல்களாலும், வியாதி — நோய், ஆதிகளினல் — முதலியவற்ருலும், செறி — அடையாநின்ற, துயரமும்—துன்பங்களையும், என்றும்—(இடை விடாது) எக் காலமும், ஓர்ந்து—ஓர்ந்து—ஆராய்து (ஆராய்ந்து), எழ்—(அவ்) வெழு வகை, பவக்கு—பிறப்பிற்கும், நெஞ்சமே—நெஞ்சமே; அஞ்சிலை—(நீ) பயந்தா யில்லை, சிவன்—(அஃது அன்றி அப் பிறப்புத் துன்பங்களை நீக்குதல் செய்யும்) சிவனது, நேசர்—(திரு வடிக்கு) நேய ராகிய அடியாரின், தாள்—திரு வடிகளை, பூசித்து—அருச்சித்து, தொழு திலை—வணங்கினை யில்லை, இன்ப—இன்ப, வீடு—வீ டாவது, எது—யாது, என்று—என்று, நின்று—(அவர்களைக் கேட்டு) நின்று, நின்று—நின்று, அழு திலை—அழுதா யில்லை (ஆகலின், யாம் கூறிய வாறு நீ கேட்டது என்னை என்று விவேகம் கூறிற்று.) எ-று.

கருப்பாசயப் பை யுறுத்துதல் முதலியன :— 1. கருப்ப ஆசயப் பை உறுத்துதல். 2. அதில் ஜலம் பூரித்தல். 3. உதர அக்கினியால் வேவுதல். 4. பிரசூத வாயு முரித்துத் தள்ளுதல். 5. யோனித் துவாரத்தில் நெருக் குண்டல் என்னும் ஐந்து மாம்.

(இ-பு) பிறப்பிறப்பு, தின்ற லொன்றல் - இவை யிரண்டும் உம்மைத் தொகைகள். இறப்பதில் - அது - பகுதிப் பொருள் விகுதி. இல் - எழ னுருபு. துயரமுங் கேடும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. ஒன்றலால், ஆதிகளினல் - இவற்றி னிறுதி யில் எண் ணும்மைகள் தொக்கன. துயரமும் - உம் - இறந்தது தழீஇய வெச்சம். ஓர்ந்து ஓர்ந்து, நின்று நின்று - இவ் வடுக்குக ளிரண்டும் தொழிற் பயில்வுப் பொருளன. எழ் - 'எழு' என்னு மெண்ணுப் பெயரின் விகாரம். என்றும் - உம் - முற்று. பவக்கு - 'பவத்துக்கு' என்பதன் விகாரம். நெஞ்சமே - விளி. என்றே - ஏ - அசை நிலை. பூசித்தே - ஏ - ஈற் றசை.

(சித-ரை) அன் றெனக்கு நீ யொரு துணை எ-து,— பிறப்புத் துன்ப மென்றும் வீடு இன்ப மென்றும் உனக்கு நாநா வுபாயங் களினாலும் யாம் அறிவித்தும் நீ அப் பிறப்பினை நீக்கி வீட்டினை அடைதற்கு ஏது வாய தவத்தினை விரைந்து செய்யாது தர்மசம் பண்ணுகின்றனை யாகலின் எனக்கு நீ ஒப் பற்ற துணை யன் றென்று விவேகங் கூற, அதற்கு நீர் விடுக்கச் சொன்ன பற்றுக்கள் யாவும் விடுத்தேன், தவமுஞ் செய்கின்றேன், நீர் இன்னுங் கூறிய வாறுங் கேட்க நிற்கின்றேன், இங்ஙனம் இருந்த என்னை அங்ஙனங் கூறி யது என்னை யென்று மநங் கேட்ப,

பிறப் பிறப்பதிற் றுயரமுங் கேடுந் தின்ற லொன்றலால் வியாதியாதிகளினால் செறி துயரமு மோர்ந் தோர்ந் தென்று மேழ் பவக் கஞ்சிலை நெஞ்சமே எ-து,— பிறப்பிற் கருப்பாசயப் பை உறுத்தல் முதலிய வைகளினால் வருகின்ற துன்பத்தையும், இறப் பில் அத் துன்பத்தி னெண் மடங் காகிய துன்பத்தோடு வருகிற நாசத்தையும், இவற்றிற்கு இடையா யுள்ள ஸ்திதிக்கண் அருந்தல் பொருந்தல்களாலும் நோய் முதலியவற்றாலும் அடையாநின்ற துன்பங்களையும் இடைவிடாது எக் காலமும் ஆராய்ந்து அவ் வெழு வகைப் பிறப்பிற்கும் நெஞ்சமே நீ பயந்தா யில்லை,

இன்ப வீ டெது வென்றே நின்று நின் றழு தில தொழு தில சிவ னேசர் தாள் பூசித்தே எ-து,— அஃ தன்றி அப் பிறப்புத் துன்பங்களை நீக்குதல் செய்யுஞ் சிவனது திரு வடிக்கு நேய ராகிய அடியாரது திரு வடிகளை அருச்சித்து வணங்கினை யில்லை, இன்ப வீ டாவது யா தென்று அவர்களைக் கேட்டு நின்று நின்று அழுதா யில்லை, ஆகலின், யாம் கூறிய வாறு நீ கேட்டது என்னை யென்று விவேகங் கூறிற்று, எ-று.

"வியாதிகளினாற் செறிதுயரம்" என்றமையால் அருந்தல் பொருந்தற்கு ஏது வாகிய திரவியந் தேடுதல் அதனைப் பாதுகாத்தல்

நரை திரை மூப்பு முதலியவற்றால் வருந் துன்பமும் கொள்க. கருப்பாசயப் பை யுறுத்தல் முதலிய வைந்து துன்ப மென்றது— கருப்பாசயப் பை யுறுத்தல், அதிற் சலம் பூரித்தல், உதராக்கினியால் வேவுதல், பிரசூத வாயு முரித்துத் தள்ளுதல், யோநித் துவாரத்தில் நெருக் குண்டல் ஆகிய இவ் வைந்து மென் றறிக. இவற்றிற்கு உதாரணம்: சிவ தருமோத்தரம். "என்றென் றெண்ணியிருக்குமுயி ரிடர்ப்பட் டழியுமெ ழில்வரைக்கீ, ழொன்று மொருவன் றனைப்போலக் கருப்பா சயப்பை யுறுத்துதலான், மன்ற வுததி மறிந்தாழ்வான் வருத்த மென்ன வருந்தியிடு, நின்ற கருப்பா சயவுதக வெள்ளங் கொள்ள நிறையழிந்தே." (8-21) என்றும், "அங்கியதனிற் றங்கியிடு மயோ மயத்த கும்பத்திற், றங்கு மொருவன் றபனம்போற் றபன மெய்துந் தாயுதரத், தங்கி சுடவே யழலனைய சூசி யதனு லாகத்தைப், பங்கித் திடவே படும்டரி னிருநாற் குணிதம் பட்டழுங்கும்." (8-22) என்றும், "கருப்பா சயமே கட்டமதா மதனி லதிகங் கடுங்காலு, முரிக்க மிகவு மோகமுற முன்னை யுணர்வு மங்கிலேயே, மரிக்க வாலைக் கரும்பெனவே யோநி வழியின் வலிதொலைய, நெருக்கப் பட்டு நிலமிசையே தோன்று முயிரு னிலையுடனே." (8-23) என்றும், இப் பிறப்பி னெண்மடங்காய துன்பத்தோடு வரு நாசத்திற்கு உதாரணம்: பெருந் திரட்டு. "பரண மாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங் கையிற்றந்த, விரண மானவை கொண்டிட் டிவரைவிட் டியம்பிடா திவணேகு, மரண வேதனை யாவரா லறியலா மயங்கியைம் புலனந்தக், கரணமியாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்பான்." என்றும், மெய்ஞ் ஞான விளக்கம். "வந்திடு மரணத் துன்ப மறித்துரை செய்யப் போமோ, வுந்திமே லெய்யும் பித்து முணர்வொடு பொறிகலங்கி, நந்திடா விருளே மூடி நாவுலர்ந் தலமந் தென்னே, யிந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண்ம டங்கே." என்றும், ஆநந்தத் திரட்டு. "கருவிடை யழுந்துந் துன்பமு நிலத்தின் கண்ணுதிற் கொடியவெந் நோயான், மருவுவெந் துயரு நரைதிரை யெய்தி வருந்திடுந் துன்பமுங் கூற்று, லுருவினை யொருவுந் துன்பமு

மீட்டுங் கருக்குழி யொன்றுறு தயரும், வெருவா வெண்ணி யின்பவீ டதனை மேவநன் குணர்தலே வேண்டும்." என்றும், "நின்று நின் றழு திலை" யென்பதற்கு உதாரணம்: திரு வாசகம். "ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப், பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர், சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே, தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே." (ஆத்ம சுத்தி 1) என்றும் மற்றும் வருவனவற் காண்க. (11)

[ நீர் கூறிய வாறே பிறவித் துன்பத்திற்குப் பயமும், இதனை நீக்கி விட்டு இன்பத்தினை அடைவதற்கு ஏது வாகிய அடியவ ரிடத்து அன்பும், எனக்கு இன்றியது உண்மை. இனிப் பாய பத்தி களோடும் கூடி வீட்டினை அடைதற்கு ஏது செய்கின்றேன் என்று மநம் கூற, அதற்கு, நீ என்னை அங்ஙனம் செய்கின்றாய் என்று பின்னும் அதனை வெறுத்து மேற் கூறுகின்றது ]

12. பூசை செய்துதோத் திரஞ்சொலித் தனைநினை புண்ணியர் பானண்ணற், காசை செய்திடு மம்பலக் கூத்தனை யடைகிலை யடைந்தாரிற், பேசு கின்றனை யறவரின் விளங் கினை பிறர்மனை நயக்கின்றாய், சீசி யிங்கிருந் தென்செய்தாய் நெஞ்சமே செத்திலாய் கெடுவாயே.

(பத உரை) *தனை — தனது, பூசை செய்து — (திரு வடியைக் காயத்தால்) அர்ச்சித்து வணங்கி, தோத்திரம் — (வாக்கால்) தோத் திரம், சொலி — பண்ணி, நினை — (மநத்தால்) தியாநித்து வழிபடும், புண்ணியர்பால் — (பத்தி) புண்ணியங்களை யுடைய அடியாரிடத்து, நண்ணற்கு — எழுந்தருளுவதற்கு, ஆசை — (திரு வுளத்து) இச்சை, செய்திடும் — செய்யாநின்ற, அம்பலம் — (கநக) சபைக்கண், கூத்தனை — நடநம் புரிவோனை, அடைகிலை — (மந மொழி மெய் களால் வணங்கி) அடைந்தா யில்லை, அடைந்தாரில் — (அவனது திரு*

வடிவை) அடைந்த அடியார் போல், பேசுகின்றனை — (வார்த்தை மாத்திரம்) சொல்லுகின்றனை, அறவரின் — (பசு புலித் தோல் போர்த்தது போல், உள்ளத்தில் வஞ்சம் வைத்துக் கொண்டு புறத்துத்) துற வறத்தார் போல், விளங்கினை — (அவரது வேடத்தால்) விளங்காநின்றனை, பிறர் — (எனக் குரிய மனைவியைத் துறந்து தவம் செய்கின்றேன் என்று தொடங்கிப்) பிறர்க் குரிய, மனை — மனைவியை, நயக்கின்றாய் — இச்சிக்கின்றாய், சீசி — சீசி, நெஞ்சமே — (முன் இருந்த இல் லறமும் அன்றி, அதனை விட்டுப் பின்னர் அடைந்த துற வறமும் அன்றி, இவற்றின் நடுவண் நின்று கூடா வொழுக்கம் செய்கின்றனை) நெஞ்சமே, இங்கு — (நீ) இவ் விடத்தில், இருந்து — இருந்து, என் — என்ன (காரியம்), செய்தாய் — செய்து கொண்டனை, செத்திலாய் — (இனி நீ இருந்தால் இக் கூடா வொழுக்கத்தால் என்னைப் பவத் துன்பத்திலே தள்ளுவாய் ஆகலின் நீ) சாவாய், கெடுவாய் — கெடுவாய் (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) சொலி, தனை - இவை இடைக் குறைகள். தனை - முத லாகு பெயர். புண்ணியர் பால் - பால் . ஏழ னுருபு. புண்ணியர், கூத்தன், அறவர் - இவை மூன்றும் குறிப்பு வினையா லணையும் பெயர்கள். செய்திடும் - இடு - பகுதிப் பொருள் விகுதி. அடைந்தாரில், அறவரின் - இல், இன் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்த னுருபுகள். அடைந்தார் - இறந்த காலத் தெரி நிலை வினையா லணையும் பெயர். மனை - இட வாகு பெயர். சீசி - அருவருப்பைக் குறிக்கு மோ ரிடைச் சொல். என் - 'என்ன' என்பதன் விகாரம். நெஞ்சமே - விளி. செத்திலாய் - முன் னிலை யொருமை எதிர் மறை இறந்த காலத் தெரி நிலை வினை முற்று. முன்னரே செத்தா யில்லை என்பது பத வுரை, இனி யாவது சாவாய் என்பது தாற்பரிய அர்த்தம். இத் தாற்பரியமே உரையிற் கூறப்பட்டுள்ளது. அது பத வுரையாகாது. இவ் எதிர் மறை வினைக்கு - சா - பகுதி, த் - இறந்த கால விடை நிலை. இல் - எதிர் மறை யிடை நிலை. ஆய் - முன் னிலை விகுதி. இவ் வா றன்றி, இதனை உடன்பாட்டு வினை

யாகக் கொள்ளின் - சா - பகுதி. த் - எழுத்துப் பேறு. இல் - சாரியை. ஆய் - முன்னிலை யேவல் விகுதி யாகக் கோடல் நேரும். அது வலிந்து கொள்வ தாதலின் நேரிய தன்று. கெடுவாயே - ஏ - ஈற்றசை.

(சிற-ரை) பூசை செய்து தோத்திரஞ் சொலித் தனை நினை புண்ணியர்பா னண்ணற காசை செய்திடு மம்பலக் கூத்தனை யடைகிலை எ-து,—தனது திரு வடியைக் காயத்தால் அருச்சித்து வணங்கி வாக்கால் தோத்திரம் பண்ணி மநத்தால் தியானித்து இங்ஙனம் வழிபடும் பக்தி புண்ணியங்களை யுடைய அடியாரிடத்து எழுந்தருளுவதற்குத் திருவுளத்து இச்சை செய்யாநின்ற கநக சபைக்கண் நடம் புரிவோனை மந மொழி மெய்களால் வணங்கி அடைந்தாயில்லை,

அடைந்தாரிற் பேசுகின்றனை யறவரின் விளங்கினை பிறர் மனை நயக்கின்றாய் எ-து,—அவனது திரு வடியை யடைந்த அடியார் போல் வார்த்தை மாத்திரஞ் சொல்லுகின்றனை, பசு புலித் தோல் போர்த்தது போல் உள்ளத்தில் வஞ்சகம் வைத்துக் கொண்டு புறத்துத் துற வறத்தார் போல் அவரது வேடத்தால் விளங்காநின்றனை, எனக்கு உரிய மனைவியைத் துறந்து தவஞ் செய்கின்றேனென்று தொடங்கிப் பிறர்க் குரிய மனைவியை இச்சிக்கின்றாய்.

சீசி யிங் கிருந் தென் செய்தாய் நெஞ்சமே செத்திலாய் கெடுவாயே எ-து,— சீசி முன் னிருந்த இல்லறமு மன்றி அதனை விட்டுப் பின்னர் அடைந்த துற வறமு மன்றி நடுவ ணின்று கூடா வொழுக்கஞ் செய்கின்றனை, நெஞ்சமே நீ இவ் விடத்தில் இருந்து என்ன காரியஞ் செய்துகொண்டனை, இவ்வாறு நீ இருந்தால் இக் கூடா வொழுக்கத்தால் என்னைப் பவத் துன்பத்திலே தள்ளுவாயாகலின் நீ சாவாய் கெடுவாய் என்று விவேகங் கூறிற்று, எ-று.

"தனைநினை புண்ணியர்பா ணணைந் காசைசெய்திடும்" என்பதற்கு உதாரணம்: திரு வாசகம். "முத்தனே முதல்வா முக்கணா முனிவா மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப், பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யுஞ், சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற் செழுமலர்க் குருந்தமே வியசீ, ரத்தனே யடியே னுதரித் தழைத்தா லதெந்துவே யென்றரு ளாயே." (அருட் பத்து - 8) "பிறர் மனை நயக்கின்றாய்" என்பதற்கு உதாரணம்: திரு வள்ளுவ நாயனார். "வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம், புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று." (28-3) மற்றும் வருவனவற்றாற் காண்க. (12)

[ நீர் கூறிய முறையே செய்கின்றது அன்றி, என் மேல் தவறு ஒன்றும் கண்டிலேன். இங்ஙனம் இருப்பச் "சேத்திலாய் கெடுவாய்" என்று என்னை வெறுத்துக் கூறினீர். என்பால் தவறு தான் யாது? என்று மநம் கேட்ப, அதற்கு, விவேகம் மேற் கூறுகின்றது. ]

13. வாயி னுற்பல நூல்படித் துணர்ந்துநல் வழிபிறர்க் குரைசெய்து, நீயு லோகவா சாரமோ ரணுத்துணை யானுநீங் கிலைநெஞ்சே, தூய தாமிவண் பிறர்கொளக் குங்குமஞ் சுமந்துசெல் கரமுன்னிற், காய மாநுடத் தின்றதற் கன்றியுட் களவுமின் மையினாலே.

(பத உரை) பல — பல, நூல் — (ஞாந) சாஸ்திரங்களை, வாயினல்—வாயினால், படித்து—படித்தும், உணர்ந்தும்—(அவற்றினது பொருள்களை ஆராய்ந்து) அறிந்தும், பிறர்க்கு—பிறர்க்கு, நல் வழி—நன் நெறி (யாவும்), உரை செய்தும்—(அவர் சம்மதிப்பச்) சொல்லியும், நீ—நீ, உலோக ஆசாரம்—(முன் னிருந்த) உலோகாசார (வழக்க)த்தில், ஓர்—ஒரு, அணு—சிறிது, துணை யானும்—அள வாயினும், நீங்கிலை—(உள்ளே) துறந்தனை யில்லை

(இங்ஙனம் பிறப் பிறப்பிற் கேது வாய உலோகாசாரம் துறத்த லின்மையால், வீட்டிற் கேது வாய ஞானாசாரம் பற்றிய தின் றென்பது நன்று அறிந்தேன்), நெஞ்சே—நெஞ்சமே, இவண் – இவ் விடத்து. பிறர்—மற்றையர், கொள—கொள்ளுதற்காக, குங்குமம்—குங்குமப் பொதி, சுமந்து—தாங்கி, செல்—செல்கின்ற, கரம்—கர்த்தபம், உன்னில்—உன்னிலும், ஆயது ஆம்—நின்மல மாம் (என்று விவேகம் கூற, அதற்கு, பல நூல்களைக் கற்று அறிந்து பிறர்க்கு உரைக்கச் சிவ பூசை தோத்திரம் பண்ண, இவற்றால் யாவரும் மதிப்ப இருந்த என்னை, மிருக சண்டாளம் ஆகிய கர்த்தபத்திற் குங் கீழ்ப் படுத்திக் கூறனீர். இஃது என்னை என்று மநம் கேட்ப,), அதற்கு—(அதற்கு, நீ மக்கள் யாக்கையைப் பெற்று நூற் பொருள் உணர்ந்தும், வீட் டின்ப மாய பயனைப் பெறாது, அப் பயன் பெற்றோன் போல், நெஞ்சில் வஞ்சகம் வைத்துக் கொண்டு அந் நூற் பொருளைப் பிறர் பயன் கொளக் கூறுகின்றாய்.) அக் கர்த்தபத் திற்கு, மானுடத்து—மக்களிடத்து, காயம்—ஆக்கையும், இன்று—இல்லை, அன்றி — அஃ தல்லாமலும், களவும் — (யான் சுமந்த குங்குமம் பிறர் பயன் கொளக் கொடுத்தேன் என்ற) வஞ்சமும், உள்—உள்ளத்து, இன்மையினால்—இன்றாகலின், (உன்னை அதனினும் கீழ்ப் படுத்திக் கூறியதால் தோஷம் என்னை என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) உணர்ந்தும், உரை செய்தும் - உம் - இரண்டும் உயர்வு சிறப்புப் பொருளன. அணுத் துணையானும் - உம் - முற்றும்மை. நெஞ்சே - விளி. கொள - கொள்ள என்பதன் இடைக் குறை. செல்கரம் - வினைத் தொகை. உன்னில் - இல் - எல்லைப் பொருள தாய ஐந்த னுருபு. களவும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். இன்மையினாலே - ஏ - ஈற் றசை. உள் - உளம் என்பதன் விகாரம். குங்குமம் - ஆகு பெய ராய்ப் பொதியை யுணர்த்திற்று. கரம் - களவு மின்மையினால் உனனிற் றாய தாம், எனக் கூட்டுக.

(சிந-ரை) வாயினுற் பல நூல் படித் துணர்ந்து நல் வழி பிறர்க் குரை செய்து நீ உலோக வாசார மோ ரணுத் துணையானு நீங்கிலை நெஞ்சே எ-து,—பல ஞாந சாஸ்திரங்களை வாயினுற் படித் தும் அவற்றினது பொருள்களை ஆராய்ந் தறிந்தும் பிறர்க்கு நன் னெறி யாவும் அவர் சம்மதிப்பச் சொல்லியும் நீ முன்னிருந்த உலோகாசார வழக்கத்தில் ஓ ரணுவள வாயினும் உள்ளே துறந்தனை யில்லை, இங்ஙனம் பிறப்பிற் கேது வாய உலோகாசாரம் துறத்த லின்மையால் வீட்டிற் கேது வாய ஞாநாசாரம் பற்றிய தின் றென்பது நன் றறிந்தேன் நெஞ்சமே.

தூயதா மிவண் பிறர் கொளக் குங்குமஞ் சுமந்து செல்கர முன்னில் எ-து,—குங்குமப் பொதி சுமந்து செல்கின்ற கர்த்தபம் உன்னிலும் நின்மல மா மென்று விவேகங் கூற, அதற்குப் பல நூல் களைக் கற் றறிந்து பிறர்க்கு உரைக்கச் சிவ பூசை தோத்திரம் பண்ண இவற்று லியாவரும் மதிப்ப விருந்த என்னை மிருக சண்டாள மாகிய கர்த்தபத் திற்குங் கீழ்ப்படுத்திக் கூறினீர், இஃ தென்னை யென்று மநங் கேட்ப,

காய மானுடத் தின் றதற் கன்றி யுட் களவு மின்மையினுலே எ-து,—அதற்கு நீ மக்க ளியாக்கையைப் பெற்று நூற் பொரு ளுணர்ந்தும் அந் நூற் பொருளால் வீட் டின்ப மாய பயனைப் பெறு து அப் பயன் பெற்றேன் போல் நெஞ்சில் வஞ்சம் வைத்துக் கொண்டு அந்நூற் பொருளைப் பிறர் பயன் கொளக் கூறுகின்றாய், கர்த்தபத் திற்கு மக்களிடத் தாக்கையு மின்று, அஃ தன்றியும் யான் சுமந்த குங்குமம் பிறர் பயன் கொளக் கொடுத்தே னென்று வஞ்சமும் உளத் தின்றாகலின் உன்னை அதனினுங் கீழ்ப்படுத்திக் கூறியதால் தோஷம் என்னை யென்று விவேகங் கூறிற்று, எ-று.

உலோகாசார நீங்கிலை யென்றமையால் ஞாநாசாரம் பற்றிய தின் றென்பது வருவிக்கப்பட்டது. குங்குமம் — ஆகு பெயர்.

வாயிஞற் பல நூல் படித் தென்பதற்கு உதாரணம்: திருவள்ளுவ நாயஞர். "ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத் துந் தானடங்காப், பேதையிற் பேதையா ரில்." (84-4) "பிறர் கொளக் குங்குமஞ் சுமந்து செல்" என்பதற்கு உதாரணம்: அறிவாநந்த சித்தியார். "விரிந்தநல் வேத புராணங்க ளாகம மிக்ககலை, தெரிந்து படித்துப் பொருள்செப்பித் தாநிலை சேர்ந்துமில்லா, திருந்தசண் டாளரி னேற்றங் கழுதை யெழிற்குங்குமம், பரிந்து சுமந்தும்பின் வஞ்சம் பண் ணுதப யனெழிலே." மற்றும் வருவனவற்ருற் காண்க. (13)

[என் னுள்ளத்தின்கண் வஞ்சம் இருந்தமையால் நீர் இகழ்ந்து கூறினீர். பற்றுக்கள் யாவும் விடுத்த எனக்கு இது விடுதல் அரிதோ, இதனையும் விடுத்தேன். இனி ஒரு மார்க்கத் திலே நின்று தவத்தைப் பண்ணி வீட்டை அடைவதற்கு அறு வகைச் சமயங்களுள் ஒரு மே லாய சமயம் எனக்கு நீர் கூறுக என்று மநம் கேட்ப, அதற்கு, விவேகம் மேற் கூறுகின்றது.]

14. நாலு வேதமு மொருசம நிலைசொல நவைசெயீ ரவத்தைப்பாற், கோலு மூவிரு சமயமா கியபடு குழியினூ டிழிகின்ருய், வேலை யாவுனக் குடறரு விதியுற வையுமதை விடுவிக்கும், கால ஞர்தொடர் பையுமினந் தொடருதி போலு நீ கடைநெஞ்சே.

(பத உரை) நாலு—(இருக்கு முதலிய) நான்கு, வேதமும்—வேதங்களும், ஒரு—ஒப்பற்ற, சம—(சகல கேவலங்களுக்கு மத்திய மாகிய) சுத்த, நிலை—அவஸ்தையே, சொல—(வீடு அடைதற்கு ஏது என்று) சொல்ல, நவை—(காமம் வெகுளி மயக்கம் என்னும் மூக்) குற்றங்களையும், செய்—(உண்டாக்குதல்) செய்கின்ற, ஈர்—(சகல கேவலங்கள் என்கிற) இரண்டு, அவத்தை—அவஸ்தைகளின், பால்—பகுதி யாக, கோலும்—(சமயிகள் தங்கள் சித்த விகற்பத் தாற்) கோலிய, மூ இரு—அறு வகை, சமயம் ஆகிய—மதம் ஆகிய,

படு குழியினூடு—(பிறவிப்) படு குழியிலே, இழிகின்றாய் — (நீ) இறங்காநின்றாய் (என்று விவேகம் கூற, அதற்கு, இவ் வறு சமயங் களையும் படு குழி என்றீர். இது என்னை என்று மநம் கேட்ப, அதற்கு, இங்ஙனம் கேட்டமையாற், சமயங்களின் மேலே பற்றுக் கள் நீ இன்னம் விடுத்திலையாகலின்,), வேலை (ஆக)—(இதுவே) வேலை யாக, உனக்கு—உனக்கு, உடல்—உடல், தரு—கொடுக் கின்ற, விதி—பிரமனது, உறவையும்—உறவினையும், அதை— (அவனாற் கொடுக்கப்பட்ட) உடல்களை, விடுவிக்கும்—(விடுவித் தலே வேலை யாக) விடுவிக்கிற, காலனார்—கூற்றனாரது, தொடர்பை யும்—நட்பினையும், இனம்—(எவ் வகைப் பட்ட பற்றுக்களையும் விடுத்துப் பிறப் பிறப்பை நீக்குவதற்கு ஏது வாய் வந்தும்) இன்ன மும்; நீ—நீ, தொடருதி—தொடர்கின்றனை, போலும்—போலும், கடை—(யாவைக்குங்) கீழாய, நெஞ்சே—நெஞ்சமே (என்று விவே கம் கூறிற்று.) எ-று.

(இ-பு) வேதமுங் - உம் - முற்று. ஒரு, ஈர், மூ விரு - இவை விகார எண்ணுப் பெயர்கள். அவத்தைப்பால் - பால் - ஏழ னுருபு, பகுதி என்னும் இடப் பொருள் குறித்தது. படு குழி, தரு விதி - இவை வினைத் தொகைகள். குழியினூடு - இன் - சாரியை. ஊடு - ஏழ னுருபு. வேலையா - ஆ - ஆக என்பதன் கடைக் குறை. உறவையும், தொடர்பையும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. விதி யுறவு, காலனார் தொடர்பு - இவை ஆறாம் வேற்றுமைத் தொகைகள். இனம் - இன்னம் என்னும் கால வெல்லை குறிக்கு மிடைச் சொல்லின் இடைக் குறை. போலும் - ஒப்பில் போலி. நெஞ்சே - விளி.

(சித-ரை) நாலு வேதமு மொரு சம நிலை சொல நவை செ யீ ரவத்தைப்பாற் கோலு மூ விரு சமய மாகிய படுகுழியினூ டிழிகின் றாய் எ-து,—இருக்கு முதலிய நான்கு வேதங்களும் சகல கேவலங் களுக்கு மத்திய மாகிய சுத்தாவஸ்தையே வீ டடைதற்கு ஏது

வென்று சொல்லக் காம வெகுளி மயக்க மென்னு முக் குற்றங்களை யும் உண்டாக்குதல் செய்கிற சகல கேவலங்க ளென்கிற இரண் டவஸ்தைகளின் பகுதி யாகச் சமயிகள் தங்கள் சித்த விகற்பத்தாற் கோலிய அறு வகைச் சமய மாகிய பிறவிப் படு குழியிலே நீ இராங் காநின்ற யென்று விவேகங் கூற, அதற்கு இவ் வறு சமயங்களையும் படுகுழி யென்றீர் இது என்னை யென்று மநங் கேட்ப, அதற்கு இங்ஙனம் கேட்டமையாற் சமயங்களின் மேலே பற்றுக்கள் நீ இன்னம் விடுத்திலையாகலின்,

வேலையா வுனக் குட றரு விதி யுறவையு மதை விடுவிக்குங் காலனார் தொடர்பையு மினத் தொடருதி போலு நீ கடை நெஞ்சே எ-து,—இதுவே வேலை யாக உனக்கு உடல் கொடுக்கின்ற பிரம னாகிய உறவினையும், அவனாற் கொடுக்கப்பட்ட உடல்களை விடுவித்தலே வேலை யாக விடுவிக்கிற கூற்ற னாகிய நட்பினையும், எவ் வகைப்பட்ட பற்றுக்களையும் விடுத்துப் பிறப் பிறப்பை நீக்கு தற்கு ஏது வாய் வந்தும் இன்னமும் தொடர்கின்றனை போலும் நீ யாவைக்குங் கீ ழாய நெஞ்சமே யென்று விவேகங் கூறிற்று, எ-று.

வேதாகமங்கள் கூறிய நெறி செல்வோர்க்குப் பிறப் பிறப்பு நீங்குதலே யன்றி மற்றைச் சமய நூல்கள் கூறிய நெறி செல் வோர்க்கு அவை நீங்கா வென்பது இதனாற் காண்க. "நாலு வேதமு மொரு சம நிலை" யென்பதற்கு உதாரணம்: பட்டணத்துப் பிள்ளை நாயனார். "சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கை யற்று, நினைந்தது மற்று நினையா ததுமற்று நின்மலமாய்த், தனந் தனி யேயிருந் தாநந்த நித்திரை தங்குகின்ற, வனந்தலி லென் றிருப் பேனத்த னேகயி லாயத்தானே."(கைலாயம் 3) "சமய மாகிய படு குழியின்" என்பதற்கு உதாரணம்: தேவிகாலோத்தரம். "சமயா சாரசங் கற்பவி கற்பமு, மமையா தாங்குல வாசார மானது, மமையா தாரும்வி டாதவில் வாழ்க்கையு, மமையார் தோளாய் விடுதலா சாரமே." மற்றும் வருவனவற்றாற் காண்க. (14)

[ இனி இந்த வுயிரைக் கொண்டு போகின்ற காலனுக்குத் தப்பிச் செல்லும் நெறி எனக்கு நீர் கூறுக என்று மநம் கேட்ப, அதற்கு, விவேகம் மேற் கூறுகின்றது. ]

15. நெஞ்ச மேயுட லந்தமா தியைவிடார் நிற்கமற் றையர்க்கெல்லாம், வெஞ்ச மற்குதிப் பரிதிவைக் கொருமிரு கண்டுபுத் திரன்சான்றால், அஞ்ச லிவ்வுடற் கிறுதியிப் பொழுதென வறியோறு மையினுளுந், தஞ்ச மென்றரன் சரண்விடே லியாமுமச் சமன்வலி தடுப்பாமே.

(பத உரை) *நெஞ்சமே — நெஞ்சமே, உடல் அந்தம் — தேகாந்தத்தில், ஆதியை — (யாவர்க்கும் முதல்வ னாகிய) சிவனது திரு வடியை, விடார் — மறவாத பெரியோர்கள், நிற்க — நிற்க, மற்றையர்க்கு — மற்றைச் (சரியை கிரியைகளைச் செய்கின்ற) சீவர் கட்கு, எல்லாம் — எலலாம், வெம் — கொடிது (ஆகிய), சமன் — கூற்றை, குதிப்பு — கடந்து போதல், அரிது — அரிது (என்று விவே கம் கூற, அதற்கு, அவ் வடியை மந மொழி மெய்களினால் வழிபடு வோர்க்கும் கூற்றைக் கடத்தல் அரிது என்று கூறினர். இதற்குப் பிரமாணம் உண்டோ என்று மநம் கேட்ப,), இவைக்கு —(அதற்கு, சிவனது திரு வடியைத் தேகாந்தத்தின் மறவாது பிடித்துக் கூற் றைக் கடப்பது முடியும் என்பதும், அத் திரு வடியை மந மாதியால் வழிபட்டும் அவனைக் கடத்தல் அரிது என்பது மாய) இவைகளுக்கு ஒரு — ஒப்பற்ற, மிருகண்டு புத்திரன் — மிரு கண்டு மா முநி புதல்வ ராகிய (மார்க்கண் டேயரே,) சான்று — சாக்ஷி (என்று விவேகம் கூற, அது எங்ஙனம் என்று மநம் கேட்ப, அதற்கு, அவர் மந மாதிகள்நல் வழி பட்டும் கூற்றன் வந்து பிடித்தான். அங்ஙனம் அவன் பிடித்த போது பயத்தால் மறவாது சிவனது திரு வடியை அவர் பிடித்தமையால், அந்தக் கூற்றனையும் கடந்தா ராக லின், அவற்றிற்கு அவரே சாக்ஷி என்பது அறிதி என்று விவேகம் கூற, அதற்கு, திரு வடியை வழி படுதலால் யான் கூற்றைக் கடக்க*

லாம் என்று இருந்தேன். நீர் கூறியவாற்றால், அவனை இவ் வழி பாட்டால் கடக்கக் கூடாது என்பது அறிந்து அச்ச முற்றேன். இனி அவனைக் கடத்தற்கு ஏது வாகிய திரு வடியைப் பிடிப்பதற்கு உபாயம் நீர் கூறுக என்று மநம் கேட்ப,), அஞ்சல்—(அதற்கு, நீ) அஞ்சற்க, இவ் உடற்கு—இத் தேகத்திற்கு, இறுதி—அந்தம், இப் பொழுது-இன்ன காலம், என — என்று, அறிய — (நம்மால்) உணர, ஒணுமையின் — கூடாமையால், நாளும் — (எந்) நாளும், அரன் — (மற்றைய, நினை வெல்லாம் ஒழித்துச்) சிவனது, சரண் — திரு வடி, தஞ்சம்—துணை, என்று—என, விடேல்—(அதனையே) விடாது பற்றுதி, அச் சமன்—(இங்ஙனம் செய்தி எனின்) அக் கூற்றன், வலி-(நம்மைப் பிடிக்க வரும்) சாமர்த்தியத்தை, யாமும் — நாமும், தடுப்பாம் — தடுத்துக்கொள்வாம் (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) நெஞ்சமே-விளி. ஆதி-ஆகு பெயர். விடார்—எதிர் மறைத் தெரி நிலை வினையா லணையும் பெயர். சமற் குதிப்பு—இரண்டாம் வேற்றுமைத் தொகை. சான்றால்—ஆல்—அசை. அஞ்சல்—முன் னிலை யேவல் எதிர் மறைத் தெரி நிலை வினை முற்று. என—என்ன என்பதன் இடைக் குறை. அறியோணுமையின் என் புழி அறி—அறிய என்னும் வினை யெச்சத் திறு தொக்கது. ஒணுமையின்—ஒண்ணுமையின் என்னும் எதிர் மறை வினை யெச் சத் திடைக் குறை. நாளும்—உம் — முற்று. விடேல்—முன் னிலை யேவல் எதிர் மறைத் தெரி நிலை வினை முற்று. விடேலியாமும்— இ—சாரியை. உம்—இறந்தது தழீஇய வெச்சம். தடுப்பாமே—ஏ— ஈற் றசை.

(சித-ரை) நெஞ்சமே யுட லந்த மாதியை விடார் நிற்க மற்றையர்க் கெல்லாம் வெஞ்சமற் குதிப் பரிது எ-து,—நெஞ்சமே தேகாந்தத் தில் யாவருக்கு முதல்வ னுகிய சிவனது திரு வடியை மறவாத பெரியோர்கள் நிற்க மற்றைச் சரியை கிரியைகளைச் செய்

கின்ற சீவர்கட் கெல்லாம் கொடி தாகிய கூற்றைக் கடந்து போதல் அரிது என்று விவேகங் கூற, அதற்கு அவ் வடியை மந மொழி மெய்களினுல் வழி படுவோர்க்கும் கூற்றைக் கடத்தல் அரிது என்று கூறினீர், இதற்குப் பிரமாண முண்டோ வென்று மநங் கேட்ப,

இவைக் கொரு மிரு கண்டு புத்திரன் சான்றுல் எ-து,—அதற்குச் சிவனது திரு வடியைத் தேகாந்தத்தின் மறவாது பிடித்துக் கூற்றைக் கடப்பதற்கும், அத் திரு வடியை மநமாதியால் வழிபட்டும் அவனைக் கடத்தல் அரி தென்பதற்கும், ஒப் பற்ற மிருகண்டு மா முனி புதல்வ ராகிய மார்க்கண்டேயரே சாக்ஷி யென்று விவேகங் கூற, அது எங்ஙன மென்று மநங் கேட்ப, அதற்கு அவர் மநமாதிகளால் வழி பட்டும் கூற்றன் வந்து பிடித்தான் அங்ஙனம் அவன் பிடித்த போது பயத்தால் மறவாது சிவனது திரு வடியை அவர் பிடித்தமையால் அந்தக் கூற்றனையும் கடந்தா ராதலின் அவரே சாக்ஷி யென்பது அறிதி யென்று விவேகங் கூற, அதற்குத் திரு வடியை வழிபடுதலால் யான் கூற்றைக் கடக்கலா மென்று இருந்தேன், நீர் கூறியவாற்றுல் அவனை இவ் வழிபாட்டாற் கடக்கக் கூடா தென்பது அறிந்து அச்ச முற்றேன், இனி அவனைக் கடத்தற்கு ஏது வாகிய திரு வடியைப் பிடித்தற்கு உபாயம் நீர் கூறுக வென்று மநங் கேட்ப,

அஞ்ச லிவ் வுடற் கிறுதி யிப்பொழு தென வறியொணு மையி னுளுந் தஞ்ச மென் றரன் சரண் விடே லியாமு மச்சமன் வலி தடுப்பாமே, எ-து,—அதற்கு நீ அஞ்சற்க, இத் தேகத்திற்கு அந்தம் இந்தக் கணப்போ தென்று நம்மால் அறியக் கூடாமையால் எந் நாளும் மற்றை நினை வெல்லா மொழித்துச் சிவனது திரு வடி தஞ்ச மென்று அதனையே விடாது பற்றுதி, இங்ஙனஞ் செய்தி யெனின் அந்தக் கூற்றன் நம்மைப் பிடிக்க வருஞ் சாமார்த்தியத்தை நாமும் தடுத்துக் கொள்வா மென்று விவேகங் கூறிற்று, எ-று.

தஞ்சம்-பற்றுக்கோடு. இதற்கு உதாரணம்: பெருந் திரட்டு. ''வில்வி ளங்கிய விண்ணவர் மிகுத்தவாழ் நாளு, மல்வி ரும்பக லென்னுமீர் வாளினு லரிந்து, கொல்லும் வெங்கொடுங் கூற்றை யார் குலேவுறூர் குறுகி, னல்வி ருந்தென வுவந்தெதிர் கொள்ளு வான் ஞானி'' என்றும், திரு வள்ளுவர். ''வேண்டுதல் வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க், கியாண்டு மிடும்பை யில'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க. (15)

**[ இப் போது பெற்ற இக் காயத்தின்கண் நின்று ஒரு தலை யாகத் திரு வடியை மறவாது பிடிக்க வேண்டும் என்று இன்னும் வற்புறுத்துதல் மேற் கூறுகின்றது. ]**

**16.** **தடுத்து மேலுமிங் வுருவமாயி னும்பெறல் சற்றல மறைநாகத், திடத்தின் மாதவ ரிருவர்கங் கேனவடைந் திருத்தல்சான் றரிதாகிக், கிடைத்த தேகமும் விவேகமு மிருக்குஞான் றேகீர் சனேநெஞ்சே, யடுத்தி லாய்பல கவலை மாய்த் தோருணர் வாகிநின் றகலாதே.**

(பத உரை) தடுத்து —(இத் தேகத்தை) விட்டு, மேலும் — இனியும், இவ் உருவம்—இம் மானுட தேகம், ஆயினும்—ஆயினும், பெறல்—பெறுதல், சற்று—எளிது, அல—அன்று (என்று விவேகம் கூற, அதற்கு, இம் மானுட தேகமா யினும் பெறல் அரிது என்று மிகவும் அருமைப் படுத்திக் கூறுகின்றீர். இது கிடைப்பது அரிது என்பதற்கு ஒரு காக்ஷிப் பிரமாணம் உண்டோ? என்று மநம் கேட்ப,) இருவர் மாதவர்—(அதற்கு, சம்பரன் சம்பாதி என்னும்) இரண்டு முனிவரும் (புத்தியை விரும்பி மே லாகிய தவத்தினைப் பண்ண, அதனுற் சிவன் வந்து தோன்றி, ''உமக்கு என்னை வேண் டியது'' என்று கேட்ப, அதற்கு, தாம் கருதிய அதனை மறைத்து, ''முத்தி வேண்டும்'' என்று கேட்ப, அதற்கு, ''நீர் கருதியது ஒன்றும், நம்மைக் கேட்பது மற் றென்றுமோ'' என்று திரு வுள்

ளத்தின் முனிவு செய்து சாபம் கொடுத்தருள, அதனால், அவ் விருவோரும்) மறை நாகத் திடத்தின்—வேத கிரியின்கண்ணே, கங்கு—கழுகு, என—என்று சொல்லும்படி, அடைந்து இருத்தல்—(கிருத யுக முதல் இந்தக் கலியுக மளவும் இத் தேகம் கிடையாது இன்றும்) பொருந்தி இருத்தலே, சான்று—சாக்ஷி (என்று விவே கம் கூற, அதற்கு, வினை வேறு இன்றி மநம் சும்மா இருப்ப), அரிது ஆகி—(ஆகலின், மிகவும்) அரி தாய், கிடைத்த—கிடைக்கப் பெற்ற, தேகமும்—(இந்த மானுட) சரீரமும், விவேகமும்—(இத னால், தன்னைத் தலைவனை அறிய வருகிற அரிது ஆகிய) ஆராய்வும், இருக்கும்—இருக்கிற, ஞான்றே—இக் காலத்திற் றானே, பல—(தேக போகங்களைக் கருதுகின்ற) பல (வேறு வகைப்பட்ட), கவலை—கவலைகளையும், மாய்த்து—கெடுத்து, ஓர்—ஏக, உணர்வு—அறிவு, ஆகி—ஆய், நின்று—நிலைத்து, கிரி ஈசனை—கைலயங்கிரி வாச னாகிய சிவனது திரு வடியை, அகலாது—(விட்டு) நீங்காது, அடுத்திலாய்—(நீ) அடைந்தா யில்லை, நெஞ்சே—நெஞ்சமே (நின் கருத்து இருந் தது என்னை? என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) மேலும் - உம் - இறந்தது தழீஇயது. உருவாயி னும் - உம் - உயர்வு சிறப்பு. சற்றல - அல - அஃறிணைப் பலவின் பால் எதிர் மறைக் குறிப்பு வினை முற்று. அது ஈண்டு ஒருமை யிற் பன்மை மயக்கம். தேகமும் விவேகமும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. ஞான்றே - ஏ - பிரி நிலை. நெஞ்சே - விளி. அடுத்திலாய் - முன் னிலை யேவல் எதிர் மறைத் தெரி நிலை வினை முற்று. அகலாது அடுத்திலாய்.

(சிந-ரை) தடுத்து மேலு மிவ் வுருவ மாயினும் பெறல் சற் றல எ-து,—இத் தேகத்தை விட்டு இனி மேல் இம் மாநுட தேக மாயினும் பெறல் எளி தன் றென்று விவேகங் கூற, அதற்கு இம் மாநுட தேக மாயினும் பெறுதல் அரி தென்று மிகவும் அருமைப் படுத்திக் கூறுகின்றீர், இது கிடைப்பது அரி தென்

பதற்கு ஓர் காட்சிப் பிரமாண முண்டோ வென்று மநங் கேட்ப,

மறை நாகத் திடத்தின் மாதவ ரிருவர் கங் கெனவடைந் திருத்தல் சான்று எ-து,—அதற்குச் சம்பரன் சம்பாதி யென்னு மிரண்டு முனிவரும் புத்தியை விரும்பி மேலாகிய தவத்தினைப் பண்ண, அதனாற் சிவன் வந்து தோன்றி உமக்கு என்னை வேண் டிய தென்று கேட்ப, அதற்குத் தாம் கருதிய அதனை மறைத்து முத்தி வேண்டும் என்று கேட்ப, அதற்கு நீர் கருதிய தொன்றும் நம்மைக் கேட்பது மற் றொன்றுமோ வென்று திரு வுளத்தின் முனிவு செய்து சாபங் கொடுத்தருள, அதனால் அவ் விருவோரும் வேத கிரியின்கண்ணே கழு கெனக் கிருத யுக முதல் இந்தக் கலியுக மளவும் இத் தேகங் கிடையாது, இன்றும் இருத்தலே சாக்ஷி யென்று விவேகங் கூற, அதற்கு வினா வேறு இன்றி மநஞ் சும்மா விருப்ப,

அரி தாகிக் கிடைத்த தேகமும் விவேகமு மிருக்கு ஞான்றே கிரீசனை நெஞ்சே யடுத்திலாய் பல கவலை மாய்த் தோ ருணர் வாகி நின் றகலாதே எ-து,—ஆகலின் மிகவும் அரி தாகக் கிடைத்த இந்த மாநுட தேகமும், இதனில் தன்னைத் தலைவனை அறிய வருகிற அரி தாகிய விவேகமு மிருக்கிற இக் காலத்திற் றானே தேக போகங்களைக் கருதுகின்ற பல வேறு வகைப்பட்ட கவலை களையும் கெடுத்து ஏக வறி வாய் நின்று கைலையங்கிரி வாச னாகிய சிவனது திரு வடியை விட்டு நீங்காது நீ அடைந்தா யில்லை, நெஞ் சமே நின் கருத் திருந்தது என்னை யென்று விவேகங் கூறிற்று, எ-று.

அரி தாகி யென்பது விவேகத்தோடும் பிரித்துக் கூட்டப்பட் டது. "தடுத்து மேலு மிவ் வுருவமாயினும்" என்பதற்கு உதா ரணம்: ஆநந்தத் திரட்டு. "மந்திரவாட் பெற்றும் பகைவெல்

*லான் மற்றதுகொண், டங்கோதன் மெய்யை யரிந்தான்போன் - றிந்தவுடல், கொண்டுமுத்தி செல்லுங்கு றிப்பின்றிச் சிற்றின்பங், கண்டுவினைக் காளாங்க ணக்கு.", "விவேகமு மிருக்கு ஞான்றே" என்பதற்கு உதாரணம்: ஞான வாசிட்டம். "கையினு லறையுண் ணும் பந்துபோலக் காலனு லறையுண்டு கணக்கிலாத, மெய் யிலே புகுந்தலுத்து விவேகம்பெற்றும் விரகிலார் சிலர்பிறப்பின் மீண்டும்வீழ்ந்தார், மையினுன் மூன்றுலகாம் பணதிசெய்து வருநிற்கும் போமாகி வளர்ந்துவாளா, பொய்யினுன் மிகவிரியும் வேலையூடே பொருதிரைபோற் பரபதத்தே புரிந்தமாயை."* (4-4-30) *மற்றும் வருவனவற்றுற் காண்க.* (16)

**[ இங்ஙனம் சத்தப் பிரமாணத்தாலும், காக்ஷிப் பிரமாணத் தாலும், இக் காயம் கிடைத்தற்கு அரிது என்று அறிவிக்க, அறிந்து மநம் சம்மதிப்ப, இனித் திரு வடியைத் தாமதம் பண்ணு மல் விரைந்து நினைத்தற்கு மேற் கூறுகின்றது. ]**

17. அகலு மிவ்வுடன் மினின்விரைந் தெனின்விரைந் தரற்றொழீ தலதிங்கே, சகல முஞ்செய நினைகுத றனையினித் தடப்புன லிதுவென்றே, பகலி னல்விரி கானலை நெஞ்சமே கருதிநெற் பயிராதீ, இகலி னற்செய நினைபவர் நினைவை யொத் திடுமென விடுவாயே.

(பத உரை) *மினின் — (மேகத்தின்கண் தோன்றி அழியும்) மின்னல் போல, விரைந்து—அதி சீக்கிர மாக, அகலும் — (மாயையின் கண் தோன்றிக் கண காலத்து) அழியும், இவ் வுடல்—இந்த உடலம், எனின்—என்றால், விரைந்து—(இஃது உள்ள போதே) அதி சீக்கிர மாக, அரன்—சிவனது (திரு வடியை), தொழு—வணங்குதி, ஈது— (இத் திரு வடியை இடைவிடாது) வணங்குதல், அலது—அன்றிப் (பொய் யாகிய பிரபஞ்சத்தை மெய் யாகக் கருதிக் கொண்டு), இங்கு—இப் பிரபஞ்சத் துள்ள, சகலமும்—அறு வகைத் தொழிலையும்,*

செய—செய்ய, நினைகுதல்தனை—(தொடங்க) எண்ணுவதை, பகலினுல்—சூரிய கிரணத்தினுல், விரி—(பொய் யாய்) விரிகின்ற, கானலை—கானல் சலத்தை, தட புனல்—(மெய் யான) தடாக சலம், இது—ஈது, என்று—என்ப தாக, கருதி—எண்ணி, நெல் ஆதி—நெல் முதலிய, பயிர்—பைங் கூழினை, இகலினுல்—(தமது) சாமர்த்தியத்தால், செய—(உண்டாக்குதல்) செய்ய, நினைபவர்—(அறியாமையாற்) கருதுவாரது, நினைவை—கருத்தை, ஒத்திடும்—போலும், என—(என் கருத்தும்) என (அறிந்து), நெஞ்சமே—மநமே, இனி விடுவாய்—இனி விடுப்பாயாக (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) மினின், எனின், அலது, செய - இவை முறையே மின்னின், என்னின், அல்லது, செய்ய என்பவற்றின் இடைக் குறைகள். மினின் - இன் - உவம உருபு. எனின் - இன் - வினை எச்ச விகுதி. அரன் - ஈண்டு ஆகு பெயர். ஈது - நீண்ட சுட்டு. சகலமும் - உம் - முற்று. நினைகுதல்தனை - கு - தன் - சாரியைகள். என்றே - ஏ - அசை நிலை. நெஞ்சமே - விளி. நினைபவர் - தெரி நிலை வினையா லணையும் பெயர். ஒத்திடும் - இடு - பகுதிப் பொருள் விகுதி. விடுவாயே - ஏ - ஈற் றசை. சகலமுஞ் செய நினைகுதல் தனை இனி விடுவாய் எனக் கூட்டுக.

(சிந-ரை) அகலு மிவ் வுடன் மினின் விரைந் தெனின் விரைந் தாற் றொழு எ-து,— மேகத்தின்கண் தோன்றி நின்று அழியும் மின்னல் போல மாயையின்கண் தோன்றிக் கண காலத்து அழியும் இந்த உடல மென்றால் இஃது உள்ள போதே அதிசீக்கிரமாகச் சிவனது திரு வடியை வணங்குதி,

ஈ தல திங்கே சகலமுஞ் செய நினைகுத றனை எ-து,—இத் திரு வடியை இடைவிடாது வணங்குத லன்றிப் பொய் யாகிய பிரபஞ்சத்தை மெய் யாகக் கருதிக்கொண்டு இப் பிரபஞ்சத் துள்ள அறு வகைத் தொழிலையுஞ் செய்யத் தொடங்குவதை,

இனி தடப் புன லிது என்றே பகலினல் விரி கானலை நெஞ்சமே கருதி நெற் பயி ராதி யிகலினுற் செய நினைபவர் நினைவை யொத்திடு மென விடுவாயே எ-து,—சூரிய கிரணத்தாற் பொய்யாய் விரிகின்ற கானற் சலத்தை மெய் யான தடாக சலம் ஈதென்று கருதி நெற் பயிர் முதலிய பைங் கூழினைத் தமது சாமர்த்தியத்தால் உண்டாக்குதல் செய்ய அறியாமையாற் கருதுவாரது கருத்தைப் போலும், என் கருத்து மென அறிந்து நெஞ்சமே இனி விடுப்பா யாக வென்று விவேகங் கூறிற்று, எ-று.

சூரிய கிரணத்தாற் பொய்யாத் தோன்றுங் கானற் சலம் போலச், சிவத்தை விட்டு நீங்காத அபிந்நா சக்தியாற் பிந்நா சத்தி பொய் யாய்த் தோன்றுதலின், இப் பிந்நா சத்தி காரிய மாகிய பிரபஞ்சம் கானற் சலத்தி னிழல் போலப் பொய் யெனக் கூறப் பட்டது. கானற் சலத்தைப் பொய் யென்று அறிந்தவன் பைங் கூழ் செய்ய நினையாமை போலப், பிரபஞ்சத்தைப் பொய் யென்று அறிந்தவன் இப் பிரபஞ்சத் தொழில்களின் முயலான் என்பது அறிக. "அகலு மிவ்வுடல்" என்பதற்கு உதாரணம்: குறுந் திரட்டு "காயநீர்க் குமிழி யதிலுறு மின்பங் கானலிற் புனலிது தனக்கிங், காயவித் துயர மளவிலை யிதைநீ யாய்வுறு மையிலழிந் தற்றாய், நீயினிக் கவலை நினைவெலா மொழித்து நெஞ்சமே வந்தெனக் குடன்பட், டாயநற் சொரூபர்க் கன்பதே யிசைந்தா லரியதே தார் நமக் கெதிரே.", "பிரபஞ்சம் பொய்" யென்பதற்கு உதாரணம்: திரு வாசகம். "பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப், பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே, தீர்த்தாய் திகழ் தில்லை யம்பலத்தே திருநடஞ்செய், கூத்தாவுன் சேவடி கூடும் வண்ணந் தோணோக்கம்" (தோணோக்கம் 11) மற்றும் வருவன வற்றாற் காண்க. (17)

[ பிரபஞ்சம் பொய் என்பதும், திருவடி மெய் என்பதும், இங்ஙனம் நீர் அறிவிக்க ஐயம் இன்றி நன்று உணர்ந்தேன்.

"உமது கிருபையை என் என்று உரைப்பேன்" என்று மநம் கூற, அதற்கு, ஞாந சமாதி கூடுதற்கு மநத்தை உடன்படுத்தி மேற் கூறுகின்றது. ]

18. வாய்மை யீதுணர்ந் திடுதிநன் னெஞ்சமே வரு கணத் தேதேனு, நீநி னைந்திடே லவ்வள வுடலுற னிச்சயிப் பரிதத்தாற், போய தோர்கணச் செயலுனேல் பயனிலை புகனி கழ் கணத்தேனுந், தீமை நன்மைநீ நினைவதேன் வினை வழிச் சிவன்றரு குதலாலே.

(பத உரை) *நல்*—(*யான் கூறிய நன் மார்க்க நெறியே சென்று எனக்கு நன்மை தருகின்ற*) *நல்ல, நெஞ்சமே—மநமே, வாய்மை—உண்மை* (*யாகிய*), *ஈது—இதனையும், உணர்ந்திடுதி—*(*நீ*) *அறிவாய், நீ—நீ, வரு—*(*ஞாந நிட்டை கூடும்இடத்து ஒரு கணப் போதாயினும் அந் நிட்டையில் நீங்காது இருக்கவேண்டும் ஆகவின்*) *வரும், கணத்து—*(*காலங்களில்*) *கணப் போ தாயினும், ஏதேனும்—யா தொன்றனையும், நினைந்திடேல்—கருதிச் செல்லற்க, அவ் வளவு—அக் கணப் போ தளவும், உடல்—*(*இவ்*) *வுடம்பு, உறல்—*(*உயிரோடு*) *இருத்தலை, நிச்சயிப்பது—நிச்சயம் பண்ணல், அரிது—கூடாது, அத்தால்—அதனல், போயது—சென்ற காலத்து, செயல்—*(*நிகழ்ந்த*) *செய்கைகளை, ஓர் — ஒரு, கணம் — கணப் போ தாயினும், உனேல்—கருதற்க, பயன்—*(*அதனல்*) *பயன், இலை—*(*ஒன்றும்*) *இல்லை* (*என்று விவேகம் கூற, அதற்கு வருங் காலம் சென்ற காலங்களில் "ஒன்றையும் நினையேல்" என்று கூறி னீர். இஃது உண்மை. நிகழ் காலத்து, "அந்ந பாநாதிகளைக் குறித்தாயினும் நினைக்கலாகாதோ" என்று மநம் கேட்ப*)*, புகல்—*(*அதற்கு,*) *உன்னல் சொல்லப்பட்ட, நிகழ்—நிகழ்* (*காலத்தில்*)*, கணத்தேனும் — கணப் போ தாயினும், நீ — நீ, நன்மை — சுக, தீமை—துக்கங்களை, நினைவது—கருதுவது, என்—என்னை, வினை—*(*நமது*) *நல் வினை தீ வினைகளை* (*அறிந்து அவற்றின்*)*, வழி—படியே,*

சிவன்—சிவ பெருமான் (பல மாகிய சுக துக்கங் களை), தருகுதலால் — (நமக்கு) அருத்துவித்தலால் (என்று விவேகம் கூறிற்று.) எ.று.

(இ-பு) ஈது - நீண்ட சுட்டு. உணர்ந்திடுதி - இடு - பகுதிப் பொருள் விகுதி. நெஞ்சமே - விளி. ஏதேனும் - உம் - முற்று. நினைந்திடேல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஏல் - எதிர் மறை ஏவல் வினை விகுதி. அவ் வளவு - அத் துணைக் காலத்தைக் குறித்தது, உறல், நிச்சயிப்பது - இவை தொழிற் பெயர்கள். அத்தால் - அத்து - அது என்னும் சுட்டுப் பெயர் இடையில் ஒற்று இரட்டித்தது. போயது - தெரி நிலை வினையா லணையும் பெயர். உனேல் - உன்னேல் என்னும் எதிர் மறைத் தெரி நிலை ஏவல் வினை முற்றின் இடைக் குறை. இலை - 'இல்லை' என்னும் எதிர் மறைக் குறிப்பு வினை முற்றின் இடைக் குறை. புகல் - 'புகலப்பட்ட' என்னும் செயப்பாட்டு வினை ஈற் றுருப்புக்கள் தொகப் பெற்று முதனிலை மாத்திர மாக நின்றது. கணத்தேனும் - உம் - இறந்தது தழீஇயது. நினைவது - தொழிற் பெயர். நன்மை தீமைகள் - ஆகு பெய ராய், அவற்றின் காரிய மாகிய சுக துக்கங்களைக் குறிக்தன. என் - 'என்ன' என்னும் வினா வினைக் குறிப்பு முற்றின் விகாரம். தருகுதலாலே - கு - சாரியை. ஏ - ஈற் றசை.

(சிந-ரை) வாய்மை யீ துணர்ந் திடுதி நன் னெஞ்சமே எ-து,—யான் கூறிய நன் மார்க்க நெறியே சென்று எனக்கு நன்மை தருகின்ற நல்ல நெஞ்சமே உண்மை யாகிய இதனையும் நீ அறிவாய்,

வரு கணத் தேதேனு நீ நினைந்திடே லவ்வள வுட லுறனிச்சயிப் பரி தத்தால், எ-து,—நீ ஞாந நிட்டை கூடுமிடத்து ஓர் கணப் போ தாயினும் அந் நிட்டையின் நீங்காது இருக்க வேண்டு மாகலின் வருங் காலங்களிற் கணப் போ தாயினும் யா தொன்றனையுங் கருதிச் செல்லற்க, அக் கணப் போ தளவும் இவ் வுடல் இருத்தற்கு நிச்சயம் பண்ணக்கூடாது அதனல்,

*போய தோர் கணச் செய லுனேல் பய னிலே எ-து,— சென்ற காலத்து ஓர் கணப் போ தாயினும் இன்னது செய்யாது விடுத்தேன் என்று கருதற்க, அதனுற் பயன் ஒன்று மில்லை யென்று விவேகங் கூற, அதற்கு வருங் காலஞ் சென்ற காலங்களில் ஒன்றையும் நினையே லென்று கூறினீர், இஃ துண்மை; நிகழ காலத்து அந்த பானாதிகளைக் குறித் தாயினும் நினைக்கலாகாதோ வென்று மநங் கேட்ப,*

*புக னிகழ் கணத்தேனுந் தீமை நன்மை நீ நினைவ தென் வினை வழிச் சிவன் றருகுதலாலே எ-து,— அதற்குச் சொல்லப் பட்ட நிகழ் காலத்திற் கணப் போ தாயினும் நீ சுக துக்கங்களை நினைவது என்னை, நமது நல் வினை தீ வினைகளின்படியே சிவன் அறிந்து சுக துக்கங்களை நமக்கு அருத்துதலால் என்று விவேகங் கூறிற்று, எ-று.*

*இதற்கு உதாரணம் : திருவள்ளுவ நாயனுர்; "ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப, கோடியு மல்லப ல." (34-7) என்றும், ஔவையார் நல் வழி, "உண்பது நாழி யுடுப்பது நான்குமுழ, மென்பது கோடிநினைந் தெண்ணுவன - கண்புதைந்த, மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம்போலச், சாந்துணையுஞ் சஞ்சலமே தான்" (28) என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.* (18)

**[ பிரிய விடயங்கள் வர வேண்டும் என்று கருதாது இருத் தற்கும், வந்த விடயங்களின் மேல் ஆசை செல்லாது திரு வடியை மறவாது இருத்தற்கும், மேல் உபாயம் கூறுகின்றது. ]**

19. தருவ தீமையி னன்மையு முழடுத் தனையுயர் கழைமேனின், றுரைக ளாதிசெய் கூத்தரிற் பிறனைநச் சோருமக டவனேவல், புரித றன்னினைம் பொறிகளாற் பற்றி னும் புகனிரா சையைநீயுற், றிரவி னும்பக லினும்விடே னெஞ்சமே யின்பவீ டௌிதாமே.

(பத உரை) நெஞ்சமே—மனமே (நீ), அடுத்ததை—(உனக்கு எக் காலத்து எவ் வினைப் பயன், அநுபவிக்கப்) பொருந்தியது அதனை (கொடுக்கும் ஆகலின், பழ வினைப்படியே வரும் என்று அறிந்து, எதிர் காலத்து ஒன்றையும் கருதாது விடுத்து), ஊழ்—பிராரத்த வினை, தருவ(து)—(தவறாது) கொடுப்பதாம் (ஆகவே), தீமையின்—(உனக்கு வெறுப் பாகிய) துன்பத்தை (நீ விரும்பாதிருக்கவும் அதற்குரிய பழ வினை தானே கொடுப்பது) போல, நன்மையும்—(உனக்கு விருப்ப மாகிய) சுகத்தையும் (நீ விரும்பா திருக்க அதற்குரிய அவ் வினை தானே கொடுக்கு மாகலின்), உயர்—உயர்ந்த, கழை மேல் — கம்பத்தின்கண், நின்று — நின்று, உரைகள் — (அந் நிலைக்குத் தவறு வாராது அதன்கட் கருத்தை வைத்துத் தியாகியைப்) புகழ்தல், ஆதி—முதலிய நோக்கு வித்தைகளை, செய்—(பழக்கத்தாற் காயத்திற் காட்டுதல்) செய்யும், கூத்தரின்—கூத்தரைப் போலவும், பிறனை—பர புருஷனை, நச்சு—விரும்பிய ஒரு—ஒரு, மகள்—நாரி, தவன்—(அவன் மேல் கருத்தை வைத்துத் தன்) புருஷ னுடைய, ஏவல்—ஏவற் றொழில்களை, புரிதல் தன்னின்—(பழக்கத்தால்) செய்தல் போலவும், ஐந்து—ஐந்து, பொறிகளால் — இந்திரியங்களால், பற்றினும்—(நீ) ஐந்து விஷயங்களைப் பொருந்தினும், புகல்—சொல்லாநின்ற, நிராசையை—(அவ் விஷயங்களை இன்பம் என்று கருதி வைக்கும்) ஆசையி னின்மையை, நீ உற்று—நீ பொருந்தி (திரு வடிக்கண் ஆசையை வைத்து), இரவினும்—(இதனை) இராக் காலத்திலும், பகலினும்—பகற் காலத்திலும், விடேல்—(அத் திரு வடியை) விட்டு நீங்காதே, (இங்ஙன் செய்வையேல்) வீடு இன்பம் — (யாவர்க்கும் அரி தாகிய) வீட்டின்பம், எளிது—(உனக்கு) எளிதில், ஆம் — உண்டாம் (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ- பு) தருவ - 'தருவது' என்பதன் கடைக் குறை. தீமையின் - இன் - உவம வுருபு. நன்மையும் - உம் - இறந்தது தழீஇய வெச்சம். அடுத்தது - வினையா லணையும் பெயர். ஆதி - என்பத

குஞல் நோக்கு வித்தை முதலியன கொள்க. கூத்தரின், புரிதல் தன்னின் — இன் - இரண்டும் உவம உருபுகள். தன் - சாரியை. ஐந்து + பொறி = ஐம் பொறி - 'ஐந்து' என்னும் குற்றிய லுகர வீற்று எண்ணுப் பெயர். "ஆறே ழல்லவற்றீ னீற்றுயிர் மெய்யே கும்" என்ற விதிப்படி, "து" என்னு முயிர் மெய் நீங்கப் பெற்று, "ஐந்" என நின்று, பின் "ஐந்த னொற் றடைவ தினமுங் கேடும்" என்ற விதிப்படி, வரு மொழிப் பகரத்திற் கின மாகிய, "ம்" ஆகத் திரிந்து, "ஐம் பொறி" என நின்றது. பற்றினும் - உம் - இழிவு சிறப்போடு, பற்றல் கூடாது என்னும் எதிர் மறைப் பொருள் குறித்து நின்றது. இரவினும் பகலினும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. நெஞ்சமே - விளி. எளிதாமே - ஏ - ஈற் றசை. அடுத்ததை ஊழ் தருவது எனக் கூட்டுக.

(சித-ரை) தருவ தீமையி னன்மையு மூ ழடுத்ததை எ-து,— உனக்கு வெறுப் பாகிய துன்பத்தை நீ விரும்பாதிருக்கவும், பழ வினை தானே கொடுப்பது போல், உனக்கு விருப்ப மாகிய சுகத்தை யும் நீ விரும்பாதிருக்க அவ் வினை தானே கொடுக்கும்; உனக்கு எக் காலத்து எவ் வினைப் பயன் அநுபவிக்கப் பொருந்தியது அதனை யாகலிற் பழ வினைப் படியே வரு மென்று அறிந்து எதிர் காலத்து ஒன்றையும் கருதாது விடுத்து,

உயர் கழைமே னின் றுரைக ளாதி செய் கூத்தரிற் பிறனை நச் சொருமக டவனேவல் புரித றன்னின் எ-து,—உயர்ந்த கம்பத் தின்க ணின்று அந் நிலைக்குத் தவறு வராது அதன்கட் கருத்தை வைத்துத் தியாகியைப் புகழ்தன் முதலிய நோக்கு வித்தைகளைப் பழக்கத்தாற் காயத்திற் காட்டுதல் செய்யுங் கூத்தரைப் போலவும், பரபுருஷனை நச்சிய ஓர் நாரி அவன் மேற் கருத்தை வைத்துத் தன் புருஷனுக்குப் பழக்கத்தால் இவனது ஏவற் றொழில்களைச் செய்தல் போலவும்,

ஐம் பொறிகளாற் பற்றினும் புக னிராசையை நீ யுற் றிவிர னும் பகலுனும் வீடே னெஞ்சமே யின்ப வீ டெளிதாமே எ-து,— ஐந் திந்திரியங்களாலும், ஐந்து விஷயங்களைப் பிடித்தாலுஞ், சொல்லாநின்ற அவ் விஷயங்களை இன்ப மென்று கருதி அவற்றின் கண் ஆசை யுறாது, திரு வடிக்கண் ஆசையை வைத்து இதனை இராக் காலத்திலும், பகற் காலத்திலும் விட்டு நீங்காதே, யாவர்க்கும் அரி தாகிய வீட் டின்பம் உனக்கு எளிதில் உண்டா மென்று விவேகங் கூறிற்று, எ-று.

தவன் - புருஷன். இதற்கு உதாரணம்: பெருந் திரட்டு. "இல்லின்ப மிகழ்ந்து பேரின்பம் வேண்டி யெழிற்குரு வருடனின் மேலா, நல்லுணர் வதனைப் பெற்றொரே காந்த நண்ணியே சமாதி யிற் றொடங்கி, யல்பக லேனக்க னரவமாட் டிடுவோ னறைதரு பணிக்கன்மீ காமன், வல்கரிப் பாகன் போலநோக் குவர்க்கு மனை யின்மீட் டிச்சையு மெழுமோ." எனவும், மற்றும் வருவனவற்றாற் காண்க. (19)

[ எக் காலமும் இடை விடாது திரு வடியை மறவாது இருத்தல் பிரதானம், ஈது அன்றி நிராசையுடனும் இருக்க வேண் டும் என்று கூறினீர். இது என்னை என்று மநம் கேட்ப, அதற்கு, மேற் கூறுகின்றது. ]

20. ஆமு னிச்சையே மேலுமே லும்பிறப் பளிக்கும் வித் தெனநெஞ்சே, நீம றித்திடா சைக்கடல் சுவறுமே நினை வேனுந் திரைமாயும், போமி றந்தேலா நினைவுமேப் பொழு திலப் பொழுதுபூ ரணமாய, சோம சேகரத் தெந்தைபொற் கழலையுந் தொழலைய மிகோநாமே.

(பத உரை) நெஞ்சே—மநமே, உன்—உனது, இச்சையே— அவாவே, மேலும் மேலும்—மேன் மேலும், பிறப்பு—(பல) பிறப்பினை,

அளிக்கும்—உண்டாக்கும், வித்து ஆம்—(ஒரு) விதை யாம், என—என்று (கருதி), நீ மறித்திடு—நீ அந்த அவா மநத்தின்கண் முளைக்கும் தோறும் அதனை விவேகத்தாலே பார்த்து நீ தடுக்குதல் செய், ஆசை—(அங்ஙனம் செய்தியேற் கண்ட விஷயங்களை யிச்சிக்கும்) ஆசை யாகிய, கடல்—சமுத்திரம், சுவறும்—வற்றும், நினைவு—(அக் கடல் வற்றவே பிற விஷயங்களிற் செல்லும்) எண்ணம், எனும்—என்கின்ற, திரை—அலை, மாயும்—நாச மாம், நினைவும்—(அந் நினைவு எனும் திரை நாச மாகவே, முன்னர் இந்திரியங்களாற் கண்டு மநத்தின்கண் ஏறியிருந்த விஷய வாசனை அதனு லாம்) நினைவு, எல்லாம்—எல்லாம், இறந்து போம்—(ஒருங்கே) இறந்து போம், எப்பொழுதில்—(அந் நினைவு எல்லாம்) எப்பொழுது இறந்தனவோ, அப் பொழுது—அப் பொழுது தானே, சோம சேகரத்து—சந்திர சூடன் ஆகிய, எந்தை—எமது தந்தையினது, பூரணம் ஆய—பரிபூரண மாகிய, பொன்—பொன் போன்ற, கழலையும்-திரு வடியையும், நாம்—யாம், தொழல்—தொழுதற்கு, ஐயம்—சந்தேகம், இலை—இன்று (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

உடல் விட்டு உயிர் நீங்குங்கால் யாது ஓர் அவாத் தோன்றிற்று, அவ் வவாவின் வழித் தாய்ச் சென்று உயிர் பிறத்தலின், அவாப் பிறப்பிற்கு வித்து எனப்பட்டது. பகவற்கீதை எட்டாவது அத்யாயம் எழு வகை வினு வுரைத்தல்-6வது பாட்டு, "இந்த வுடலம் விடும்பொழுது யாவன் யாதொன் றினைநினைந்தான், அந்த வளவே வந்தப்பா வனையா லதனை யடையுமால், எந்த னியல்பே யெப்பொழுது மிதயத் திடைகொண் டென்பாலாஞ், சிந்தை யொடும்வா ளமர்தொடங்கி லதனு லெனையே சேருதியால்". (8-6) என்னும் பகவற் கீதைப் பிரமாணத்தால் உணர்க.

(இ-பு) இச்சையே - எ - பிரிநிலையும், தேற்றமு மாம். மேலும் மேலும்-இவ் வடுக்கு, பிறப்பின் தொடர்ச்சியைக் குறித்து நின்றது. உம் - இரண்டும் இறந்தது தழீஇயன. நெஞ்சே - விளி. மறித்திடு -

இடு - பகுதிப் பொருள் விகுதி. சுவறுமே - ஏ - அசை நிலை. எலா நினைவும் - உம் முற்று. எந்தை - 'எம் தந்தை' என்பதன் மரூஉ. எனும், எலாம், இலை - இவை இடைக் குறைகள். கழலையும் - உம் - இறந்தது தழீஇயது. தொழல் - தொழிற் பெயர். அத னீற்றில் குவ் வுருபு தொக்கது. நாமே - ஏ - ஈற் றசை.

(சிற-உரை) ஆ மு னிச்சையே மேலு மேலும் பிறப் பளிக் கும் வித் தென நெஞ்சமே நீ மறித்திடு எ-து,—உனது அவாவே மேன் மேலும் பல பிறப்பினை உண்டாக்கும் ஓர் வித் தென்று நீ கருதி அந்த அவா மனத்தின்கண் முளைக்குந் தோறும் விவேகத் தாலே பார்த்துத் தடுக்குதல் செய்,

ஆசைக் கடல் சுவறுமே நினை வெனுந் திரை மாயும் எ-து,— அங்ஙனஞ் செய்தியேற் கண்ட விடயங்களை இச்சிக்கும் ஆசை யாகிய கடல் வற்றும், அக் கடல் வற்றவே புற விஷயங்களிற் செல்லு நினை வாகிய திரை நாச மாம்,

போ யிறந் தெலா நினைவும் எ-து,—அந் நினை வெனுந் திரை நாச மாகவே முன்னர் இந்திரியங்களாற் கண்டு மனத்தின்கண் ஏறி யிருந்த விஷய வாசனை நினை வெல்லாம் ஒருங்கே இறந்து போகும்,

எப் பொழுதி லப் பொழுது பூரண மாய சோம சேகரத் தெந்தை பொற் கழலையுந் தொழ லையமிலை நாமே எ-து,—அந் நினை வெல்லாம் எப் பொழுது இறந்தது, அப் பொழுது தானே சந்திர சூட னாகிய எமது தந்தையினது பரி பூரண மாகிய திரு வடி யையுந் தொழுதற்கு ஐய மின் றென்று விவேகங் கூறிற்று, எ-று.

உடல் விட்டு உயிர் நீங்குங்கால் யா தோர் அவாத் தோன்றிற்று அவ் வவாவின் வழித் தாய்ச் சென்று உயிர் பிறத்தலின் அவாப் பிறப்பிற்கு வித் தெனப்பட்டது. இதற்கு உதாரணம்: திரு வள்ளுவ நாயனார். "அவா வென்பவெல் லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந்,

தவா அப் பிறப்பீனும் வித்து." (73-1) எனவும், "ஆசைக் கடல் சுவறுமே நினை வெனுந் திரை மாயும்" என்பதற்கு உதாரணம்: ஞாந வாசிட்டம். "இச்சையாம் விறகு மாண்டா லெண்ணமாம் வன்னி மாளு, நிச்சய மாகுந் தேயத் தியாகமாம் நெடுந்தே ரேறி, மெச்சிய வுதாரக் கண்ணல் வேட்கையான் மிகவும் வாடுங், கொச்சைஞா லத்தை நோக்கிக் குறைவற விருப்பாய் தீரா." (5-3-4) எனவும், மற்றும் வருவன வற்றுற் காண்க. (20)

[நினைவுகள் யாவும் இறந்து போக வேண்டும் என்று கூறினீர். சிவ பூசை முதலிய சற் கருமங்க ளாயினும் செய்ய வேண்டாவோ என்று மநம் கேட்ப, அதற்கு, மேற் கூறுகின்றது.]

21. நாம ரற்கருச் சனைமுத லியகொடு நலஞ்செய்தே மவையின்றித், தீமை செய்துளே மெனவுமுன் னிலையொரு சிறிதசை வடைந்தாலும், யாமி யற்றப ராதமேன் னினைவுமற் றசைகிலை யெனினெஞ்சே, யேம மிக்குறச் செய்யுநன் கிறை கழற் கெனத்துணிந் திடுநீயே.

(பத உரை) நாம்—யாம், அரற்கு—(இன்றைக்குச்) சிவனது திரு வடிக்கு, அருச்சனை—(திரு மஞ்சந பத்திர புஷ்பங்களாற் செய்யும்) அருச்சனை, முதலிய—முதலிய (உபசாரங்களை), கொடு—கொண்டு, நலம்—நன்மை, செய்தேம்—செய்தேம் (என்றும்), அவை—(இன்றைக்கு) அவை, இன்றி—(செய்குதல்) இன்மையால், தீமை—தீமை, செய்துளேம்—செய்தேம், எனவும் — என்றும், உன்—(இங்ஙனம் கருதுதலைப் பற்றி) உனது, நிலை—நிலையானது, ஒரு சிறிது—கொஞ்சம், அசைவு—சலநத்தை, அடைந்தாலும்—பொருந்திற்றாயினும், யாம்—நாம், இயற்று—(அத் திரு வடிக்குச்) செய்யும், அபராதம்—குற்றம் (அதுவே யாம் என்று விவேகம் கூற), என்—(அதற்கு, பூசை செய்தேன் செய்கின்றிலேன் என்னு நினைவு சிவனுக்கு அபராதம் செய்தல்) என்னை (என்று மநம்

கேட்ப, அதற்கு) ஈது என்று சுட்டி யறியக் கூடாத சிவத்தைச் சுட்டி யறிதலே அபராதம் செய்தல் என்று விவேகம் கூற, அதற்கு, அங்ஙனம் சுட்டாமற் சிவத்தை அறிதற்கு உபாயம் எங்ஙனம் என்று மநம் கேட்ப,), நினைவும் அற்று—(அதற்கு, ஓர் அணு வளவாயினும் ஒன்றைச் சுட்டி) எழுகின்ற கருத்து மொழிந்து, அசை நிலை—(ஒரு சிறிதும்) அசை வின்றி நிற்பை, எனின்—ஆயின், இறை—(இதுவே) சிவனது, கழற்கு—திரு வடிக்கு, ஏமம்—இன்பம், மிக்குற—மிகுந்துற, நன்கு—நன் றாக, செய்யும்—செய்யும், என—(பூசை) என்று, நெஞ்சமே—நெஞ்சமே!, நீ—நீ, துணிந்திடு—நிச்சயித்து அறிதி (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) அரற்கு-என்பது ஆகு பெயராய் அரனது திரு வடியைக் குறித்தது. முதலிய-குறிப்பு வினையா லணையும் பெயர். கொடு-'கொண்டு' என்பத னிடைக் குறை. எனவும்-உம்-இறந் தது தழீஇயது. ஒரு சிறிது-என்பது ஒரு சொன் னீர் மைத் தாய், அற்பம் என்னும் பொருள் தந்தது. அடைந்தாலும்-உம்-அடை தல் கூடாது எனப் பொருள் தருதலின் எதிர் மறை. என்-'என்ன' என்னும் வினு வினைக் குறிப்பு முற்றின் விகாரம். நினைவும்-உம்-இறந்தது தழீஇயது. நெஞ்சே-விளி. நீயே-ஏ-ஈற் றசை.

(சிந-ரை) நா மாற் கருச்சனை முதலிய கொடு நலஞ் செய்தே மவை யின்றித் தீமை செய்துளே மெனவு முன் னிலை யொரு சிறி தசை வடைந்தாலும் யா மியற் றபராதம், எ-து,— யாம் இன்றைக் குச் சிவனது திரு வடிக்குத் திரு மஞ்சந பத்திர புஷ்பக்களாற் செய்யும் அருச்சனை முதலிய உபசாரங்களைக் கொண்டு நன்மை செய்தே மெனவும், இன்றைக்கு அவை செய்குதல் யின்மையால் தீமை செய்தே மெனவும், இங்ஙனங் கருதுதலைப் பற்றி உனது நிலை சிறிதோ ரசைவு பொருந்திற்றாயினும் அத் திரு வடிக்குச் செய்யும் அபராதம் அதுவேயா மென்று விவேகங் கூற,

என் எ-து,—அதற்குப் பூசை செய்தேன் செய்கின்றிலே னென்னு நினைவு சிவனுக்கு அபராதஞ் செய்தல் என்னை யென்று மநங் கேட்ப, அதற்கு ஈ தென்று சுட்டி யறியக் கூடாத சிவத்தைச் சுட்டி யறிதலே அபராதஞ் செய்தல் என்று விவேகங் கூற, அதற்கு அங்ஙனஞ் சுட்டாமற் சிவத்தை யறிதற்கு உபாயம் எங்ஙன மென்று மநங் கேட்ப,

நினைவு மற் றசைகிலை யெனி னெஞ்சே யேம மிக்குறச் செய்யு நன் கிறை கழற் கெனத் துணிந்திடு நீயே எ-து,—அதற்கு ஒ ரணு வளவாயினும் ஒன்றைச் சுட்டி யெழுந்து அசையாது நிற்றி யெனின், இதுவே திரு வடிக்கு இன்ப மிகுந்துறச் செய்யும் பூசை யென நீ நெஞ்சமே நிச்சயித்து அறிதி யென்று விவேகங் கூறிற்று, எ-று.

தானு முருவமா யிருந்து கொண்டு சிவனையும் ஓ ருரு வாகக் கண்டு அருச்சனை பண்ணுதல் கற்பனை யாகலின் இது அபராத மென்றும், தான் அறி வாய் நின்று அறிவிற்கு அறி வாகிய சிவத்தின் கண் அசைவற நிற்றல் உண்மையாகலின் இதுவே பூசை யென்றுங் கூறப்பட்டன. இதற்கு உதாரணம்: ஆநந்தத் திரட்டு. "எப் பொருள் களுந்தா ளுகி யிலங்கிடப் படுவா னீச, னப்படி விளங்கு கின்ற தறிதலே யவன்ற னக்கு, மெய்ப்படு பூசை வேறோர் செயலினு லன்று மெய்யே, யிப்படி ஞாநந் தன்னு லிறைஞ்சிடப் படுவா னீசன்." எனவும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

[இங்ஙனம் அசைவற நிற்றல் எனக்குக் கூடாது, சிவன் இங்ஙனம் இருப்பான் என்று தியாநம் செய்கின்றேன் என்று கூறிய மநத்தைப் பார்த்து மேற் கூறுகின்றது.]

22. நீமெய்ஞ் ஞாநநன் னிட்டைசா ருதலரி தேனவு நெஞ் சகமேசற், றேய்வி லாதுசெய் தியாநமா திகளேளி

தேனவுமுன் ஞநின்ருய், சேய்க டம்மினத் தாய்கோல்சும்
மாவிருக் குதல்சேயற் கரிதாகிப், போயு ழைப்புனக் கேளி
யதா யிருந்தவிப் புதுமையேன் புகனின்றே.

(பத உரை) நெஞ்சகமே—மநமே! நீ—நீ, மெய்—(அது என்றும் இது என்றும் ஒன்றனையும் சுட்டி நினையாது சும்மா இருக்கின்ற) உண்மை, ஞாந—(சொரூப) ஞாந (நிலை யாகிய), நல்—நல்ல, நிட்டை—நிஷ்டையினை, சாருதல்—கூடுதல், அரிது—அரியது, எனவும் — என்றும், சற்று — (ஓர்) அணு வளவாயினும், ஒய்வு இலாது—(நினைவு) ஒழியாது, செய்—செய்யாநின்ற, தியாநம்—தியாந, ஆதிகள்—செப சிவ பூசை முதலிய (செய்குதல்), எளிது—எளியது, எனவும் — என்றும், உன்ஞநின்ருய் — கருதாநின்றனை, சேய்கள்—(ஆகலின், அன்னை நீ ராட்டல் முதலிய உபசாரங்களைச் செய்து மல ரணையில் இருத்தவும், அவ் விடத்திற் சுகத்திற் சும்மா இராது, புறத்து எழுந்து ஓடி வருந்தும்) சிறு பிள்ளைகளது, இனத் தாய்—கூட்டத்தினை யுடையையோ (நீயும்), சும்மா—(தியாநம் ஆதி களை மந மொழி மெய்களினல் செய்யாது) சும்மா (இரு என்று யான் கூற,), இருக்குதல்—(அங்ஙனம்) இருத்தல், செயற்கு—செய்தற்கு, அரிது ஆகி—அரிய தாய், போய்—(அவற்றைச் செய்குவல் என்று) சென்று, உழைப்பு — வருந்தி யீட்டுகை, உனக்கு — உனக்கு, எளியது ஆய்—எளி தாய், இருந்த—உள்ள, இப் புதுமை—இவ் வற்புதம், என்—என்னையோ, நின்று—(யாவர்க்கும் சும்மா இருத் தல் எளிது, ஓடித் திரிதல் அரிது, அவர்களுக்கு அங்ஙனம் இருப்ப, உனக்கு இங்ஙனம் இருந்த இதனை நீ எங்குஞ் செல்லாது) நின்று, புகல்—(எனக்குச்) சொல்லுக (என்று விவேகம் கூறிற்று). எ-று.

(இ-பு) அரி தெனவும், எளி தெனவும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. நெஞ்சமே - விளி. இலாது - இல்லாது என்பதன் இடைக் குறை. சேய்கள் தம் - தம் - சாரியை. இனத் தாய் கொல் - கொல் - விஞப் பொருளது. புதுமை - பண்புப் பெயர்.

என் - 'என்ன' என்னும் வினா வினைக் குறிப்பின் விகாரம். நின்றே- ஏ - ஈற் றசை.

(சித-ரை) நீ மெய்ஞ் ஞாந நன் னிட்டை சாருத லரி தெனவு நெஞ்சகமே சற் றேய்விலாது செய் தியாந மாதிக ளெளி தெனவு- முன்னுநின்றாய் எ-து,—நெஞ்சமே நீ அது வென்றும், இது வென் றும், ஒன் றனையுஞ் சுட்டி நினையாது சும்மா விருக்கின்ற உண்மை ஞாந மாகிய நல்ல நிஷ்டை கூடுதல் அரிய தெனவும், ஓ ரணுவள வாயினும் நினைவு ஒழியாது செய்யாநின்ற தியாந செப சிவ பூசை முதலிய செய்குதல் எளிய தெனவும் கருதாநின் றனை,

சேய்க டம் மினத்தாய் கொல் எ-து,— ஆகலின் அன்னை நீ ராட்டல் முதலிய உபசாரங்களைச் செய்து மல ரணையில் இருத்த வும் அவ் விடத்திற் சுகத்திற் சும்மா விராது புறத்து எழுந்து ஓடி வருந்துஞ் சிறு பிள்ளைகளது கூட்டத்தினை யுடையையோ நீயும்,

சும்மா விருக்குதல் செயற் கரி தாகிப் போ யுழைப் புனக் கெளியதா யிருந்த விப் புதுமை யென் புக னின்றே எ-து,—தியாந மாதிகளை மந மொழி மெய்களினாற் செய்யாது சும்மா விரு நீ யென்று யான் கூற, அங்ஙனம் இருக்குதல் செய்தற்கு அரி தாய் அவற்றைச் செய்குவ லென்று சென்று வருந்தும் வருத்தம் உனக்கு எளியதா யிருந்த இப் புதுமை யென்னையோ? யாவர்க்குஞ் சும்மா விருத்தல் எளிது, ஓடித் திரிதல் அரிது, அவர்களுக்கு அங்ஙன மிருப்ப, உனக்கு இங்ஙனம் இருந்த இதனை நீ நின்று எனக்குச் சொல்லுக வென்று விவேகங் கூறிற்று, எ-று.

மந மாதி முக் கரணங்களும் அசையாது நின்ற விடம் மெய்ஞ் ஞாந நிஷ்டை யென்பதும், அவை யசைந்து செய்யுந் தியாந சமாதி கள் அந் நிஷ்டை வருதற்கு ஏது வென்பதும் அறிக. "மெய்ஞ் ஞாந நிஷ்டை" யென்பதற்கு உதாரணம்: கந்த ரநுபூதி.

*"செம்மான் மகளைத் திருடுந் திருடன், பெம்மான் முருகன் பிறவா னிறவான், சும்மா விருசொல் லறவென் றலுமற், றம்மா பொரு ளொன் றுமறிந் திலனே."* (12) *"சேய்கடம் மினத்தாய் கொல்" என்பதற்கு உதாரணம்: ஞாந வாசிட்டம். "மிகமுயன்று வருந் தாமற் சமமா கின்ற வேண்டுகோளாற் றன்முயல்வால் விநோதந் தன்னுற், பகர்மநமாஞ் சிறுமகவை நிறுத்தல் வேண்டும் பலபிறப் பிற் பரிசயங்க ளகலப் பண்ணி, யகல்சுபவா தனையுதித்தான் முயற்சி பேறு மையுறினுஞ் சுபமுயல்வை யதுநீ. தல்ல, திகழ் மநம்போய்த் தற்பதத்தைத் தெளியு மட்டுந் தேசிகனால் சொல் வழியிற் செல்லு வாயே."* (2-0-4) *மற்றும் வருவனவற்றுற் காண்க.* (22)

[அசை வற நிற்றல் நேரே வீட்டை அடைதற்கு ஏது வாத லின், அதனையே இன்னும் வற்புறுத்தி மேற் கூறுகின்றது]

**23.** நின்று ருதலே குதல்விருப் புனக்கதை நீத்திருக் குதனெஞ்சே, யென்ற னக்குநல் விருப்புவா ளாவிவ ணிருத் தறீ துயர்வீடு, சென்று காண்குவ லெனநினைந் தலேதியோ சிவந்திரு சியமன்று, லொன்று நீயுஞ திருப்பதே யதைத் தோட ருபாயமேன் றறிகண்டாய்.

(பத உரை) *நின்றுருது*—(அசை வற) *நில்லாது, அலே குதல்*—(தியாகம் ஆதிகளைக் கருதி) *அசைகுதல், உனக்கு*—*நினக்கு, விருப்பு*—(நல்ல) *விருப்பம், அதை*—*அவ் வசைவை, நீத்து*—*விட்டு, இருக்குதல்*—(சும்மா) *இருத்தல், நெஞ்சே*—*மநமே, என்தனக்கு*—*எனக்கு, நல்*—*நல்ல, விருப்பு*—*விருப்பம்* (என்று விவேகம் கூற, அதற்கு, இங்ஙனம் சும்மா இருந்தால் எங்ஙனம் வீடு அடைகுதும் என்று மநம் கேட்ப,), *வாளா*—*சும்மா, இவண்*—*இவ் விடத்தில், இருத்தல்*—*இருக்குதல், தீது*—*குற்றம், உயர்*—*மே லாகிய, வீடு*—*வீட்டினை, சென்று*—(தியாகம் முதலிய நன் மார்க்கத்திற்) *சென்று,*

காண்குவல்—அறிவேன், என—என்று, நினைந்து—கருதி, அலை தியோ—அலைகின்றனையோ (நீ என்று விவேகம் கேட்ப, அதற்கு, "யான் அங்ஙனம் தான் கருதுகின்றேன்" என்று மநம் கூற, அதற்கு, "நம் மிருவர்க்கும் வீட்டை அடைவதே கருத் தாகலின், நீ செல்லும் நெறியால் அதனை அடைய லாம் எனின், நீ கூறிய வாறு யான் கேட்கின்றேன். யான் செல்லும் நெறியால் அதனை அடைய லாம் எனின், யான் கூறிய வாறு நீ கேட்குதியா?" என்று விவேகம் கூற, அதற்கு, "நன்று கூறினீர்" என்று மநம் சம்மதிப்ப,), சிவம்—(அதற்கு, நீ கருதிய தியாநாதிகளால் வீட்டினை அடைய லாம் எனின், அச் சிவ ரூப) வீடு, திருசியம்—(மநாதிகளால் அறியும்) காக்ஷிப் பொருள், அன்று—அல்லாதது (என்று விவேகம் கூற, அதற்கு, நீர் இங்ஙனம் கூறியவற்றால் எனது உபாயத்தால் அதனை அடைதற்கு அரிது என்பது தாயிற்று. இனி, அதனை அடைதற்கு எனக்கு ஓர் உபாயம் நீர் கூறுக என்று மநம் கேட்ப,), ஒன்றும்—(அதற்கு, அணு வள வேனும்) ஒன்றையும், நீ—நீ, உன்னாது—நினை யாது, இருப்பதே — (அசை வற) இருத்தலே, அதை—அவ் வீட்டை, தொடர்—அடைதற்கு, உபாயம்—(நேரே) உபாய மாம், என்று—என, அறி—அறிவா யாக (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) நின்றாருது-உறு-துணை வினை. ஆ-எதிர் மறை யிடை நிலை. நெஞ்சே-விளி. என் றனக்கு-தன்-சாரியை. அன்றால்-ஆல்-அசை நிலை. ஒன்றும்-உம்-முற்று. உன்னது-உன்னு என்பதன் இடைக் குறை. இருப்பதே-ஏ-பிரி நிலையும், தேற்றமு மாம். கண்டாய்-முன் னிலை யசை.

(சித-ரை) நின்றாரு தலைகுதல் விருப் புனக் கதை நீத்திருக் குத நெஞ்சே யென் றனக்கு நல் விருப்பு எ-து,—அசை வற நில் லாது தியாந மாதிகளைக் கருதி அசைகுதல் உனக்கு நல் விருப்பம் அவ் வசைவை விட்டுச் சும்மா விருக்குதல் நெஞ்சமே எனக்கு நல்

விருப்ப மென்று விவேகங் கூற, அதற்கு இங்ஙனஞ் சும்மா விருந் தால் எங்ஙனம் வீடு அடைகுது மென்று மநங் கேட்ப,

வாளா விவ ணிருக்த நீ துயர் வீடு சென்று காண்குவ லென நினைந் தலேதியோ, எ-து,—சும்மா வில் விடத்தில் இருக்குதல் குற்றம், மே லாகிய வீட்டினைத் தியாக முதலிய நன் மார்க்கதிற் சென்று அறிவே னென்று கருதி அலேகின்றனையோ நீ யென்று விவேகங் கேட்ப, அதற்கு 'யான் அங்ஙனந் தான் கருதுகின்றே' னென்று மநங் கூற, அதற்கு "நம் மிருவர்க்கும் வீட்டை அடைகுவதே கருத் தாகலின் நீ செல்லு நெறியால் அதனை அடையலா மெனின், நீ கூறிய வாறு யான் கேட்கின்றேன், யான் செல்லு நெறியால் அதனை அடையலா மெனின், யான் கூறிய வாறு நீ கேட்குதியா" வென்று விவேகங் கூற, அதற்கு 'நன்று கூறினீ' ரென்று மநஞ் சம்மதிப்ப,

சிவன் றிரிசய மன்றால், எ-து,—அதற்கு நீ கருதிய தியாகாதி களால் வீட்டினை அடையலா மெனின், அவ் வீடு மநாதிகளால் அறியுங் காட்சிப் பொருள் அன் றென்று விவேகங் கூற, அதற்கு "நீர் இங்ஙனங் கூறியவற்றால் எனது உபாயத்தால் அதனை அடை தற்கு அரிது, அதனை அடைதற்கு எனக்கு ஓ ருபாயம் நீர் கூறுக" வென்று மநங் கேட்ப,

ஒன்று நீ யுஞ திருப்பதே யதைத் தொட ருபாய மென் றறி கண்டாய் எ-து,—அதற்கு அணு வளவேனும் ஒன்றையும் நினையாது அசை வற விருத்தலே அவ் வீட்டை அடைதற்கு நேரே உபாயமா மென்று அறிவாயாக வென்று விவேகங் கூறிற்று, எ-று.

சிவ மென்பது வீடு. இதற்கு உதாரணம்: பகவற் கீதை. "வாங்கி யைம்பொறி நின்றம நத்தினை, நீங்கி டாவகை நின்னுளி ருத்தியே, தீங்கி யாவையுஞ் சிந்தைசெ யாமையாம், பாங்கி யாதது வேபயில் வாயரோ." (6-19) என்றும், தேவிகாலோத்தரம். "மந்

திரஞ் செபந்தி யாநம் பூசனை வணக்கம் வேண்டா, வந்தமி லாத முத்திக் குபாயமே யறியல் வேண்டுஞ், சிந்தனை புறனே செல்விற் றுயரமே திரிய மீட்கிற், பந்தமாந் துன்ப நீங்கிப் பரமான வின்பஞ் சேர்வார்'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க. (23)

[வீட்டை அடைதற்கு உபாயம் அசை வற நிற்றல் என்று கூறினீர். இனி அசை வற நிற்றற்கு உபாயமும், அங்ஙனம் நின்றல் வீடு வரும் ஆறும் எங்ஙனம் என்று மாணாக்கர் கேட்ப, அதற்கு, மேற் கூறுகின்றது.]

24. கண்ட வைம்புலக் காட்சிபோய்க் காட்சியாற் கலந்தவா தனையாவும், விண்டு மூடமற் றலையிலாக் கடலென விளங்கினை யெனினெஞ்சே, யுண்டு கொன்னமக் கொருதுய ராங்குவீ டுளங்கையிற் கனியேயாம், பண்டை மேவிய பய மெலா மறுங்குரு பதத்திலும் புகலாமே.

(பத உரை) கண்ட—(ஐம் பொறிகளாற்) காணப்பட்ட, ஐ புலம் — சப்தாதி விஷயங்களின், காட்சி — பிரத்தியக்ஷங்களும், போய் — நீங்கி, காட்சியால் — (அவ் விஷயப்) பிரத்தியக்ஷத்தால் கலந்த — (காரணத்தில்) சேர்ந்திருந்த, வாதனை — வாசனைகள், யாவும்—அனைத்தும், விண்டு—(விட்டு) நீங்கி, மூடம்—(இவ் வாசனை முடிவில் தோன்றும்) மறைப்பும், அற்று—ஒழிந்து, அலை இலா— நிர்த்தரங்க, கடல் — சமுத்திரம், என—போல, விளங்கினை எனின்—விளங்குவையானல்; நெஞ்சமே—மனமே, ஒரு—(பிறவித் துன்பங்களுள்) ஒரு, துயர்—துயர் (ஆயினும்), நமக்கு—எமக்கு, உண்டு கொல்—உண்டாமோ, ஆங்கு—அவ் விடத்து, வீடு — வீடு, உளம்—உள்ளம், கையிற்—கையின்கண்(ணுள்ள), கனி—(நெல்லிப்) பழம் (போல), ஆம்—உண்டாம், பண்டை—முன்னர், மேவிய— பொருந்தியிருந்த, பயம்—(பிறவித் துன்பத்திற்கு அஞ்சிய) அச்சம்,

எலாம்—அனைத்தும், அறும்—நீங்கும், குரு—குரு, பதத்திலும்—துரிய நிலையையும், புக லாம் — (யாம்) அடைய லாம் (என்று விவேகங் கூறிற்று.) எ-று.

(இ-பு) யாவும் - உம் - முற்று. இலா, என, எனின், உளம், எலாம் - இவை இடைக் குறைகள். நெஞ்சமே - விளி. உண்டு கொல் - கொல் - வினைப் பொருளது. கனியே - ஏ - அசை நிலை. இத னிறுதியில் உவம வுருபு தொக்கது. பண்டை - ஐ - சாரியை. பதத்திலும் - உம் - இறந்தது தழீஇயது. இல் - ஏழ னுருபு, அது இரண்ட னுருபு நிற்க வேண்டிய விடத்து வந்து மயங்கிற்று. புகலாமே - ஏ - ஈற் றசை.

(சித-ரை) கண்ட வைம் புலக் காட்சி போய்க் காட்சியாற் கலந்த வாதனை யாவும் விண்டு மூட மற் றலையிலாக் கட லென விளங்கினை யெனி னெஞ்சே எ-து,—ஐம் பொறிகளாற் காணப் பட்ட சத்தாதி விஷயக் காட்சிகளும் போய் அவ் விஷயக் காட்சி யாற் காரணத்தில் ஏறியிருந்த வாசனைகள் அனைத்தும் விட்டு நீங்கி, இவ் வாசனை முடிவில் தோன்று மறைப்பும் அற்று, நிர்த் தரங்க சமுத்திரம் போல விளங்காநின் றனையானால் நெஞ்சமே,

உண்டு கொன் னமக் கொரு துய ராங்கு வீ டுளங் கையிற் கனி யேயாம் எ-து,—பிறவித் துன்பங்களுள் ஒரு துன்ப மாயினும் நமக்கு உண்டாமோ அவ் விடத்து வீடு உள்ளங் கை நெல்லிப் பழம் போல வுண்டாம்,

பண்டை மேவிய பய மெலா மறுங் குரு பதத்திலும் புகலாமே எ-து,— முன்னர்ப் பொருந்தியிருந்த பிறவித் துன்பத்திற்குப் பயந்த பய மனைத்தும் நீங்கும் குரு துரியத்தையும் யாம் அடையலா மென்று விவேகங் கூறிற்று, எ-று.

கேவல சகலங்களி னன்றிச் சுத்த நிலையில் துன்பம் இன்மை யால் ஒரு துய ருண்டு கொள் னமக் கென்றும், அச் சுத்த நிலை பெற்றோர் குரு துரியமும் அடைவ ராகலிற் குரு பதத்திலும் புக லாமே யென்றுங் கூறப்பட்டன. இதற்கு உதாரணம்: சசி வர்ந போதம். "வினவிற்ப ரத்தையறி வுறுதற்க வத்தைபுலன் வினை மாறியே, நனவிற்சு ழுத்திநிலை வரினப்பொ ருட்டிகழு நல மாகவே." மற்றும் வருவனவற்றாற் காண்க. (24)

[அசை வற நிற்றற்கு உபாயம், ஐம் புலக் காட்சியும், கரண வாசனையும், மறைப்பும், நீங்குதல் என்று கூறினீர். அக் கரண வாசனையும், மறைப்பும், நீங்குதற்கு முன்னர், ஐம் புலக் காட்சி நீங்க வேண்டுமாகலின், இக் காட்சி நீங்குதற்கு உபாயம் எங்ஙனம் என்று மநம் கேட்ப, அதற்கு, மேற் கூறுகின்றது.]

25. புகல ரும்பரப் பிரமமாங் கடறனிற் புணர்பரைத் திரையீசன், சகமோ டாருயி ரெனுநுரை யாதிக டந்துமாற் றிடுமென்றே, பகரு நான்மறை யெனினதி லேதையேதைப் பற்றுவாம் விடுகிற்பாஞ், சுகசோ ரூபமே யனைத்துமென் றகற்றுதி துவிதபா வனைநெஞ்சே.

(பத உரை) புகல்—சொல்லுதற்கு, அரும்—அரிய (வாக்கு மநங்கட் கதீத மான என்பது தாற்பரியம்), பரப் பிரமம் ஆம்—பரப் பிரஹ்மம் ஆகிய, கடல்தனில்—கடலின்கண், புணர் (விட்டு நீங்கா மல்) பொருந்திய, பரை — பரை ஆகிய, திரை — அலை (ஆனது), ஈசன் — ஈசுரனும், சகம் — (நாத தத்துவ முதல் பிருதிவி தத்து வம் ஈறாகிய) உலகங்களும், ஆர் — (சராசரங்களாய்ப்) பொருந்திய, உயிர்—சீவர்களும், எனும்—என்று (சொல்லப் பட்ட) நுரை—நுரை, ஆதிகள் — (திவலை குமிழிகள்) முதலியவற்றை, தந்து — தோன்றச் செய்து, மாற்றிடும் — ஒடுக்கும், என்று — என்ப தாக, நான் — நான்கு, மறை — வேதங்களும், பகரும் — சொல்லும், எனின் —

என்றால், அதில்—அக் கடற் றிரையிற் றோன்றிய இப் பிரபஞ்சத்தினுள், எதை—எதனை, பற்றுவாம்—(எமது என்று) பிடிப்பம், எதை—எதனை, விடுகிற்பாம்—(எமது அன்று என்று) விடுப்பம் (இங்ஙனம் பற்றுதற்கும், விடுப்பதற்கும், அப் பிரமத்தை விட வேறின்மையால்,)), அனைத்தும்—எல்லாவற்றையும், சுக—ஆநந்த, சொரூபம்—வடிவம், என்று—என்பதாக (நிச்சயிக்கும் இந் நிச்சய ஞானத்தால்) நெஞ்சமே—மநமே! துவித—(அது இது என்று பகுக்கும்) பேத, பாவனை—எண்ணத்தை, அகற்றுதி—(நீ) நீக்குதி (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

பரை திரை ஆனமையின், ஈசன் ஜகம் ஜீவன், நுரை திவலை குமிழிக ளாயின.

துவித பாவனை அகற்றுதலை—சிவாநு பூதி விளக்கம்—"வெறுப்பு விருப்பென்று வேறுபொருள் தோடலிறை, உறுப்பிற் குறையாதோ வுணர்வுடையோர் சொல்லுவாரோ." என்பதாலும், ஈசுராதிகள் அலை என்பதை விசார சாகரம் முதல் ஸ்தோத்திரம், "இந்து ஞாயிறு மகபதி யீசன் விண்டொடு நான்முகன், அந்தகன்றந பதியருட் சத்தி யைந்துக ரத்தினன், சந்த வாநவர் நாகர் கந் தருவர் தாநவர் தரையுளோர், சிந்து ரூபவ பாரமாய்த் திகழு மென்னுடை யலைகளே." என்று, "அபார மான எனது ஸ்வரூப சமுத்திரத்தில், விஷ்ணு - மகேசன் - பிரஹ்மா - சூரியன் - சந்திரன் - வருணன் - இயமன் - சத்தி - தநேசன் - கணேசன் என்னும் பதின்மரும் அலைக ளாக இருக்கின்றார்கள்." என்பதாலும் அறிக.

ஜீவ ஈசுவரர்கட்கு, மாயையால், தோற்றம் ஒடுக்கம் கூறியது, விசேஷிய பாக மாகிய, ஜீவ ஈசுவர சேதநங்கட்கு அன்று என உணர்க. சேதநங்கள், உத்பத்தி நாசம் இன்றி நித்திய மாகலின், அதிஷ்டாநம் - ஆபாசம் - ஆசிரயம் - மூன்றும் சேர்ந்து, ஜீவ ஈசுவரர் கட்கு ஸ்வரூப மாகும். அம் மூன்றனுள், அதிஷ்டாந-சேதந பாகம்,

உத்பத்தி - நாசம் உடையதாமேல், பரிணாமியாய் - சாவயவ மாய் - நீணாளில் - தேய்ந்து - தேய்ந்து - இறந்து, ஸ்வரூபம் இல்லாமல், சூநிய மாய்ப் போகும். அங்ஙனம், சீவ ஈசுவரர்கள், ஸ்வரூபம் இல்லாமற் போவார்களே யாயின், 'தத்வமசி' என்னும் மஹா வாக்கியத்தால் சீவேசர்கட்கு ஐக்கியம் கூறுவது முரணாம், ஆகலின், விசேஷிய பாக மாகிய, அதிஷ்டாநம் - உத்பத்தி - நாசம் இன்றிய தாம். இனி விசேஷண பாக மாகிய, ஆபாச சகித மாயை அவித்தைகட்கு, உத்பத்தி நாசங்கள் கொள்ளிறோ, அவைகள் அநாதி யாகலின் அவைகட்கு உத்பத்தி கூடா தாம். தத்துவ ஞாநத்தினா லன்றி இடையில் அவைகட்கு நாசமுங் கூற லடா தாம். பின்னரோ, ஈசுர பாவமும், சீவ பாவமும், மாயாவித்தை களி னதீந மாம். அவித்தை மாயைகள் சித்தியாத போது சீவேசுர வடிவங்களுஞ் சித்தியா வாம். சிருட்டி காலத்து அவித்தை மாயை கள் விளங்கலின சீவேசுர விளக்கமு முண்டு. பிரளயத்தில் அவித்தை மாயைகள் ஒடுங்கலின் சீவேசுர ஒடுக்கமு மாம். இத் தோற்ற வொடுக்கத்தையே ஆசிரியர், "தந்து மாற்றிடும்" என்னும் வாக்கியத்தாற் கூறின ரென அறிக. அபிந்நா சத்தி பரை. பிந்நா சக்தி மாயை. பிந்நா சக்தியால், ஜக ஜீவ பரம் மூன்றும் தோன்றி ஒடுங்குகின்றன. அபிந்நா சக்தி யாகிய பரை, பிரஹ்ம சேதநத்தில், லீநம் ஆகி விடுதலின், சக்தி யின்மையின், ஜீவ ஈசுவரத் தோற்றம் இன்மையால், பொருள் ஒன்றே என்பதும், அதுவே நித்தியம் என்பதும், அம் முப் பொருள்கள் அநித்தியம் என்பதும், அவை கற்பித மாதலால் அக் கற்பிதத்தி னபாவம் அதிஷ்டாந சொரூபமே என்பதும் பெற்றாம்.

அற்றேல், கைவல்லியம் விருத்திப் பிரபாகரம் முதலிய கிரந்தங் கள், சீவேசுரனை அஞ்ஞாந காரிய மெனக் கூறுகின்றனவே எனின், மேற் கூறிய அதீந மாதலையே காரிய மென உபசரித்தார். அல்லது, காரியம், உற்பத்தி காரியத்துவ கற்பித காரியத்வங்களால் இரு திறப் படும், அவித்தை மாயைகள் அநாதியாதலின் அவைகட்கு உற்பத்தி

காரியத்துவம் பொருந்தாது. பின்னரோ, அவை அநாதியாயினும் அதிஷ்டானத்திற் கற்பிதங்களாதலின், கற்பித காரியத்துவங் கொண்டு அங்ஙன் கூறப்பட்டன என அறிக. இக் காரிய பேதம் ஆத்ம புராணம் சாந்தோக்கிய உபநிடதத்தின் தாற்பரிய வர்ணனத்திற் கூறப்பட்டுளது.

(இ—பு) கடறனில்—தன்—சாரியை. இல்—எழனுருபு' சகமொடு-ஒடு-எண்ணுப் பொருளில் வந்த இடைச் சொல். என்றே-ஏ-அசை நிலை. விடுகிற்பாம்-கில்-ஆற்றல் இடை நிலை. சொரூபமே-ஏ-தேற்றம், அனைத்தும்-உம்-முற்று. நெஞ்சே விளி.

(சித-ரை) புகலரும் பரப்பிரமமாங் கடறனிற் புணர் பரைத்திரை யீசன் சகமொ டாருயி ரெனு நுரையாதிக டந்து மாற்றிடு மென்றே பகரு நான் மறை யெனின் எ—து,—வாக்கு மனோதீதமாயிருக்கின்ற பரப் பிரம மாகிய கடலின்கண் விட்டு நீங்காத பரை யாகிய திரையானது, ஈசுரனும் நாதத்துவ முதற் பிருதிவிதத்துவம் ஈறுகிய சகங்களுஞ், சராசரங்களா யுள்ள உயிர்களு மென்று சொல்லப்பட்ட நுரை திவலை குமிழிகளைத் தோன்றச் செய்து ஒடுக்கு மென்று நான்கு வேதங்களுஞ் சொல்லு மெனின்,

அதி லெதை யெதைப் பற்றுவாம் விடுகிற்பாம் எ—து, அக் கடற் றிரையில் தோன்றிய இப் பிரபஞ்சத்தினுள் எதனை யெமதென்று பிடிப்பம், எதனை எமது அன் றென்று விடுப்பம், இங்ஙனம் பற்றுதற்கும், விடுப்பதற்கும், அப் பிரமத்தைவிட வேறின்மையால்,

சுக சொருபமே யனைத்து மென் றகற்றுதி துவித பாவனை நெஞ்சே எ-து,—எல்லாவற்றையும் ஆநந்த சொரூப மென்று இந் நிச்சய ஞானத்தால் நெஞ்சமே அது இது வென்று பகுக்குந் துவித பாவனையை நீ நீக்குதி யென்று விவேகங் கூறிற்று, எ-று.

பிரமத்திற்கு அபிந்நமா யிருக்கின்ற பரை யசைவான மாயையிற் பிரபஞ்சந் தோன்றி யொடுங்குதலின், அப் பரை திரை யென்று கூறப்பட்டது. உயி ரென்பது-தானி யாகு பெயர்.. ஆகம 'நெறி கூறி வேத நெறி கூறுதன் மற்றொன்று விரித்த லென்னுங் குற்ற மாகாதோ வெனின், இந் நூல் சமரச நெறியாகலாலும், ஆகமத்திற் சோகம் பாவனை கூறலானுங் குற்ற மாகா தென்பது அறிக. இதற்கு உதாரணம்: திரு வம்மானை, "பார்த்த விடமெல்லாம் பரமன்கா ணம்மானை, பாராம விந்நாளும் பாழ்பட்டே னம்மானை"- என்றும், சிவாநந்த மாலை, "எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னுணை' யங்கத் திரள்கருவி யாணவமாம் - பொங்குமிருண், மைசெய்த மாமாயை மாயைவினை மற்றனைத்தும், பொய்பொய்பொய் பொய் பொய்பொய் பொய்-" என்றும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (25)

[ஐம் புலக் காட்சி நீங்குதற்கு உபாயங் கூறினீர். இனி நினைப்பும் மறப்பும் அற்றுச் சம நிலையி னிற்றற்கு நாநா வுபாயமும் நீர் கூறல் வேண்டு மென்று மநங் கேட்ப; அதற்கு மேற் கூறுகின்றது.]

26. நெஞ்ச மேயினிப் பாவநா தீதமாய் நின்றிடின் றெனினிற்பா,யெஞ்சு றுதகல் புரணபா வனையையோர்ந் திலை யெனி னுலகெல்லாம், அஞ்ச நக்களன் மேனியென் றோர்ந் திலை யெனினருள் சுரந்தெம்பால், வஞ்ச மற்றிடும் படிக்கிவ ணடைந்ததோர் வடிவையோர்ந் துய்வாயே.

(பத உரை) நெஞ்சமே-மநமே! இனி இதன் மேல், பாவநா- (ஒன்றையுஞ் சுட்டிப் பாவியாது) பாவனைகள், அதீதம் ஆய்- கடந்த (இறந்த) நிலையை யுடையவ னாகி. நின்றிடு-நிற்குதலைச் செய், இன்று-(அங்ஙன் நிற்றற்கு வலி) இல்லை, எனின்-என்றால், எஞ்சுறுது-(அணு திரண காஷ்ட முதலியவற்றி

னும்)குறைவு படாது, அகல்-விரிந்த, புரண(-பரி) பூரண, பாவனையை-பாவனையையாயினும், ஓர்ந்து-கருதி, நிற்பாய்-அந் நிலையில் நிற்கக் கடவாய், இலை-(அதற்கு மேல் ஆற்றல்) இன்று, எனின் என்றால், உலகு-(சட சித் தாய் விளங்காநின்ற இப்)பிரபஞ்சம், எல்லாம்-அனைத்தும், அஞ்சநக் களன்-காள கண்டத்தினை யுடைய சிவனது, மேனி-(அஷ்ட மங்கள) மூர்த்தம், என்று-என்ப தாக, ஓர்ந்து நிற்பாய்-உணர்ந்து (ஏக பாவானை பண்ணி) நிற்றி, இலை-(அதற்கும் ஆற்றல்)இன்று, எனின்-என்றால், அருள்-அச் சிவம் தானே)கிருபை சுரந்து-நிரம்பி, எம்பால்-எம்மிடத்துள்ள, வஞ்சம்—(மூம்) மலங்களும், அற்றிடும்படிக்கு-அறும்படிக்கு, இவண்-இந் நிலத்தின்கண், அடைந்து, (கருணையால் மாநுடச் சட்டை சாத்தி) எழுந்தருளி வந்ததாய-ஓர்-ஒப் பற்ற, வடிவை-(குரு)மூர்த்தத்தை, ஓர்ந்து நிற்பாய்-(அவற்றை நீக்கு முபாய மெனஅறிந்து (இடைவிடாது தியானித்து) நிற்றி, உய்வாய்-(அங்ஙன் செய்தியேல்) பிழைப்பை (என்று விவேகம் கூறிற்று.) எ—று.

'உய்வாய், என்பதனை கடை நிலைத் தீப மாகக்கொண்டு நான் கிடத்தும் கூட்டுக. ஆணவம்-கார்மீகம்-மாயீயம் என்னும் மூம் மலங்களும் தாம் வெளிப்படாமல் நின்று உயிரை மறைத்து வஞ்சித்தலின் மூம் மலங்களும் வஞ்சம் எனக் கூறப்பட்டன.

(இ-பு) நெஞ்சமே-விளி, இனி-எதிர் காலங் காட்டு மிடைச் சொல், பாவநா + அதீதம் = பாவநாதீதம்-வட மொழி தீர்க்க சந்தி, நின்றிடு என்னும் முன் னிலை யேவல் ஒருமை வினை முற்றில், இடு. பகுதிப் பொருள் விகுதி, ஓர்ந்து என்னும் இறந்த கால வினை யெச்சம், நீற்பாய் என்னும் முன் னிலை யேவல் வினை முற்றுக் கொண்டது இலை என்பது இல்லை என்பதன் இடைக் குறை. எம்பால்-பால், ஏழ னுருபு. அற்றிடும்-இடு-பகுதிப் பொருள் விகுதி. உம்-பெயரெச்ச விகுதி. படிக்கு-கு-சாரியை, இவண்-அண்மை இடச் சுட்டு. நிற்பாய் என்பது முத னிலைத் தீவகம். அதனைப் பின் னுள்ள ஓர்ந்து என்னு

மிரண்டிடங்களிலும் இயைத்துக் கொள்க. உய்வாய் என்பதைக் கடைநிலைத் தீவக மாக்கொண்டு முன்னுள்ள ஏவல் முற்றுக்களோடு இயைத்துக் கொள்ள லாம். அடைந்து-வினையா லணையும் பெயர். அடைந்தது(ஓர் வடிவு)-அடைந் ததாகிய ஒரு வடிவு என, "வினை முற்றே வினை யெச்ச மாகலும் குறிப்பு முற் றீரெச்சமாகலு முளவே" என்ற நன்னூல் சூத்திரப்படி, "அடைந்ததோர் வடிவை" என் புழி "அடைந்தது" என்பதை வினை முற்றாகக் கொண்டால், அது தெரி நிலை வினை முற்றே யாகும். தெரிநிலை வினை முற்று வினை யெச்ச மாகுமே தவிரப் பெய ரெச்ச மாகாது. குறிப்பு முற்றுத் தான் ஈ ரெச்ச மாகும். இங்கே வினை யெச்சமானால் வினையைக் கொண்டு முடிய வேண்டும். "ஓர் வடிவு" என்னும் பெயர் கொள்ளாது, குறிப்பு முற்றுத் தான் பெய ரெச்ச மாகும் போது பெயர் கொள்ளும். "அடைந்தது" ஒரு போதும் குறிப்பு முற்றாகாது, இறந்த காலங் காட்டலின், இரு பெய ரொட்டுப் பண்புத் தொகை யாகக் கொள்க. உய்வாயே-ஏ -ஈற றசை.

(சிந-ரை) நெஞ்சமே யினிப் பாவநா தீதமாய் நின்றிடு எ-து,- நெஞ்சமே இனி ஒன்றையும் சுட்டிப் பாவியாது பாவநாதீத மாகி நிற்குதலைச் செய்,

இன் றெனி னிற்பா யெஞ்சுறு தக்ல் புரண பாவனையை யோர்ந்து எ-து,—அங்ஙனம் நிற்றற்கு வலி யில்லை யெனின் அணு திரண காஷ்ட முதலியவற்றினுங் குறைவுபடாது விரிந்த பரிபூரண பாவனையாயினுங் கருதி நிற்பாய்,

இலை யெனி னுல கெல்லாம் அஞ்சகக் களன் மேனி யென் றோர்ந்து எ-து,—அஃதும் இன் றெனின் சட சித்தாய் விளங்கா நின்ற இப் பிரபஞ்ச மெல்லாம் காள கண்டத்தினை யுடைய சிவனது அஷ்ட மூர்த்த மென்ற ஏக பாவனை பண்ணி நிற்றி,

இலை யெனி னருள் சுரந் தெம்பால் வஞ்ச மற்றிடும் படிக்கிவ ணடைந்த தோர் வடிவை யோர்ந் துய்வாயே எ-து,— அஃதும் இன் றெனின் அச் சிவந் தானே கிருபை நிரம்பி எம் மிடத் துள்ள மும் மலங்களும் அறும்படிக்கு இந் நிலத்தின்கண் மா நுடச் சட்டை சாத்தி எழுந்தருளி வந்த ஒப்பற்ற குரு மூர்த்தத்தை இடை விடாது தியாநித்து நிற்றி பிழைப்பை யென்று விவேகங் கூறிற்று, எ-று.

நிற்பாய் என்பதனை மற் றிரண்டிடத்திலுங் கூட்டிக் கொள்க. உய்வாய் என்பதனைக் கடை நிலைத் தீப மாகக் கொண்டு எல்லாவற் றோடுங் கூட்டுக. தன்னைக் காட்டாது உயிரை மறைத்து நின்று வஞ்சித்தலின், ஆணவம் வஞ்சம் எனப்பட்டது. ''பாவநாதீதமாய் என்பதற்கு உதாரணம்: ஞாந வாசிட்டம். ''அறிவெனும் விதைசங் கற்பமா முளையா மனையசங் கற்பமாந் தன்னைப், பிறிவுறத் தானே செய்துதான் பிறக்கும் பெரிதுற வளர்ந்திடுந் தானே, செறிதுய ரொழிய வின்பமொன் றில்லை யாதலாற் செப்புசங் கற்ப, நெறியுற நினையே னிற்புறு நிலையி னிமிடமும் பாவனை நீனையேல்'', ''பூரண பாவனை'' யென்பதற்கு உதாரணம்: குறுந் திரட்டு. ''அண்டமெண் டிக்கெங் கண்ணு மடங்கச்சூ நியம தாகக், கண்டுகொண் டிருக்கக் கண்ட கருத்தையு மறவே விட்டா, லண்டமெண் டிக்கெங் கண்ணு மாய்நின்ற வாநக் தத்தைக், கண்டுகொண் டிருக்கும் வண்ணங் கணத்தில்வந் துதிக்கு மன்றே.'', ''உல கெல்லா மஞ்சனக் களன் மேனி'' யென்பதற்கு உதாரணம்: திரு வாசகம். ''நிலநீர் நெருப் புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனய மைந்தனோ டெண் வகையாய்ப் புணர்ந்துநின்று, னுலகே ழெனத் திசை பத்தெனத் தா னொருவனுமே, பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.' (தோணோக்கம் 5) ''வஞ்சமற்றிடும் படிக்கிவ ணடைந்த தோர் வடிவை யோர்ந்து'' என்பதற்கு உதாரணம்: தத்து வராயர் அடங்கண் முறை, ''உள்ளத்தி ருந்துமொ ளித்தான்ப ரன்குரவன், கள்ளந்த னைத்

தவிர்த்துக் காட்டினன்-வள்ள, லருவான கோலமோ வக்கோலங் காட்டுங், குருவான கோலமோ கூறு." (அமிர்த சாரம் 83), மற்றும் வருவனவற்றுற் காண்க. 26

[''உன்னுகின்றனை' என்னும் (9வது) பாட்டு முதலிய பதின் எண் பாட்டாலும் ஞானத்திற்கு விலக்காய் உள்ள துர்க்குணங்கள் எல்லாம் விடுவித்து, மெய்ஞ் ஞானம் கூறி, நிஷ்டை கூடி, மேல் ஞானாசாரம் கூறுகின்றது.]

27 உய்து நெஞ்சமே வாக்கினை மௌனமாக் கிலையெனி னுளதேசொன், மெய்த ருஞ்சொலும் பொய்நயம் பயக்கிலா விடத்தின துடைத்தேனும், பொய்த ருஞ்சொலி யான்செய் தேன் பிறர்செய்தா ரெனினவை போனுலு, மெய்த ருஞ்சிவ மன்றிதென் றென்றைநீ யிசைத்தல்போய் யெனத்தேரோ.

(ப-ரை) நெஞ்சமே-மனமே!, உய்தும்-(ஞான நிஷ்டையை இடை விடாது கூடி அஞ்ஞானத்தின் வசப்படாது திருவடியை அடைந்து யாம்) பிழைப்போம், வாக்கினை-நீ(ஓர் உரையும் கூறாது) வாக் கிந்திரியத்தை, மௌனம்-பேசாதபடி, ஆக்கு-செய், இலை-(அதற்கு சக்தி)இன்று, எனின்-என்றால், உளது-(விநோதத் தாலாயி னும் ஒரு பொய்ம்மையும் கூறாது) உண்மையே, சொல்-சொல்லுக, மெய்-(அங்ஙனம் கூறும்) உண்மை, தரும்-பயக்கும், சொலும்-மொழியும், பொய்-பொய்மை ஆம் (என்று விவேகம் கூற, அதற்கு, ''விநோதத்தாலாயினும் ஒரு பொய்மமையும் கூறறக'' என்று முன்னர்க் கூறினீர். இப் போது ''அம் மெய்ம்மை கூறலும் பொய்ம்மை'' என்றீர். இது என்ன என்று மனம் கேட்ப) நயம்-(அதற்கு அம் மெய்ம்மையாற் சீவ கருணை யாய) நன்மை, பயக்கிலா விடத்தின்-உண்டாகாத விடத்து (அது பொய்ம்மையாம் என்று விவேகம் கூற, அதற்கு, இது உண்மை என்று மனம் சம்மதிப்ப,) அது-(அதற்கு, சீவ கருணையைக் குறித்துக் கூறும்)

அம் மெய்ம்மை, உடைத்தேனும்-உளதாயினும், பொய்-(அம்மெய்ம்மையும்) பொய்ம்மை, தரும்-பயக்கும், சொல்-மொழி ஆம்(என்று விவேகம் கூற, அதற்கு, முன்னே மெய்ம்மை கூறினும் சீவ கருணையின்றிய விடத்துப் பொய்ம்மை என்றீர். இப்போது அச் சீவ கருணையைக் குறித்துக் கூறும் மெய்ம்மை உளதாயினும், இஃதும் பொய்ம்மை என்றீர், இது என்னை என்று மநம் கேட்ப,) யான்-(அதற்கு இரு வினைக் கீடாகத் திருவுள நடத்துதலை மறந்து, உன்னால் ஓர் உயிர் காக்கப்பட்ட விடத்து, அதனைப் பிறர் கொலை செய்ய வந்தார் யான் காத்தேன் என்று இங்ஙனம்) நான், செய்தேன்-இயற்றினேன், பிறர்-அந்நியர், செய்தார்-இயற்றினார், எனின்—என்று சொல்லுவாயாயின் (என்று விவேகம் கூற, அதற்கு, இதுவும் உண்மை என்று மநம் சம்மதிப்ப), நீ—நீ, அவை—(யான் செய்தேன் பிறர் செய்தார் என்று சொல்லும்) இப் பொய்ம்மைகள், போனாலும்-(சொல்லாது) ஒழியினும், எய்த—பெறுதற்கு, அரும்-அரிய, சிவம்-சிவ வஸ்து, அன்று-அல்லாதது, இது-ஈது, என்று-என்பதாக, ஒன்றை—ஓர் (அணு திரணங்களையாயினும்), இசைத்தல்-(வேறு பிரித்துச்) சொல்லுதலும், பொய்-பொய்ம்மை ஆம், என-என்பதாக, தேர்-அறிதி (என்று விவேகம் கூறிற்று) எ—று.

(இ.பு) நெஞ்சமே-விளி. உளதே-ஏ பிரிநிலை. இலை, எனின், உளது, இலா, என இவை இடைக் குறைகள். சொலும்-உம்-உயர்வு சிறப்பு.பயக்கிலா-ஈறு குறைந்த எதிர் மறைப் பெயரெச்சம். கு, ஆ, சாரியைகள். இடத்தின்-ன்-சாரியை. இடத்து என்பது, ஈண்டுக் காலப் பொருட்டாய் நின்றது. உடைத்தேனும்-உம் உயர்வு சிறப்பு. உடையது என்பது உடைத்தென விகாரமாயிற்று. போனாலும்-உம் இங்கே எதிர் மறையால் அருமை குறித்து நின்றது. புரந்தவன் வினையாலணையும் பெயர். நந வாதி யூடும்-உம் இறந்தது தழீஇய வெச்சம். உள்ளமே-விளி. இருப்பாயே-ஏ ஈற்றசை.

(சிந்-ரை) உய்து நெஞ்சமே வாக்கினை மௌந மாக்கு எ—று,— நெஞ்சமே ஞாந நிஷ்டையை இடைவிடாது கூடி

அஞ்ஞானத்தின் வசப்படாது திருவடியை அடைந்து யாம் பிழைப்போம் நீ ஒருணையும் கூறாது வாக்கினை மௌநம் பண்ணுதல் செய்,

இலை யெனி னுளதே சொல் எ-து,— அஃது இன்றெனி னும் விநோதத்தானுயினும் ஒருபொய்ம்மையும் கூறாது உண்மை யே சொல்லுக,

மெய் தருஞ் சொலும் பொய் எ-து,— அங்ஙனம் மெய்ம் மையா யுள்ள சொல்லும் பொய்ம்மை யென்று விவேகங் கூற, அதற்கு விநோதத்தாலாயினும் ஒரு பொய்ம்மையுங் கூறற்க வென்று முன்னர்க் கூறினீர்; இப் போது அம் மெய்ம்மை கூறலும் பொய்ம்மை என்றீர், இது என்னை யென்று மநங் கேட்ப,

நயம் பயக்கிலா விடத்தின் எ-து,—அதற்கு அம் மெய்ம் மையாற் சீவ கருணை யாய நன்மை உண்டாகாத விடத்து அது பொய்ம்மையா மென்று விவேகங் கூற, அதற்கு இது உண்மை யென்று மநஞ் சம்மதிப்ப,

அ துடைத்தேனும் பொய் தருஞ் சொல் எ-து,— அதற் குச் சீவ கருணையைக் குறித்துப் பொய்ம்மை போன்ற மெய்ம்மை கூறுவது உளதாயினும் அம் மெய்ம்மையும் பொய்ம்மை யுடைய சொல் லென்று விவேகங் கூற, அதற்கு முன்னே மெய்ம்மை கூறினுஞ் சீவ கருணை யின்றிய விடத்துப் பொய்ம்மை யென்றீர்; இப் போது பொய்ம்மை போன்ற மெய்ம்மை கூறுவது உளதாயினும் இஃதும் பொய்ம்மை யென்றீர்; இது என்னை என்று மநங் கேட்ப,

யான் செய்தேன் பிறர் செய்தா ரெனின் எ-து—, அதற்கு இரு வினைக் கீடாகத் திரு வுள நடத்துதலை மறந்து

உன்னால் ஒ ருயிர் காக்கப்பட்ட விடத்து அதனைப் பிறர் கொலை செய்ய வந்தார் யான் காத்தே னென்று இங்ஙனம் யான் செய்தேன் பிறர் செய்தா ரென்று சொல்லுவா யெனி னென்று விவேகங் கூற, அதற்கு இதுவும் உண்மை யென்று மனஞ் சம்மதிப்ப,

அவை போனாலு மெய் தருஞ் சிவ மன்றி தென் றொன் றை நீ யிசைத்தல் பொய் யெனத் தேரே எ-து,— நீ யான் செய்தேன் பிறர் செய்தார் என்று சொல்லும் இப் பொய்ம்மை கள் சொல்லா தொழியினும் பெறுதற் கரிய சிவ மன்று ஈ தென்ன ஒ ரணு திரணங்களையாயினும் வேறு பிரித்துச் சொல்லுதலும் பொய்ம்மை யென அறிதி யென்று விவேகங் கூறிற்று, எ-று.

மெய்ம்மை கூறுதல்—பாச வைராக்கியம்; சீவர்களைப் பாது காத்தற் பொருட்டுப் பொய்ம்மை கூறல்—சீவ கருணை; யான் செய்தேன் பிறர் செய்தா ரென்று சொல்லா தொழிதல்—ஈசுர பத்தி; எல்லாஞ் சிவ மெனச் சொல்லுதல்—பிரம ஞானம்; ஆகிய விந் நான்கும் இதனுட் காண்க. "வாக்கினை மௌன மாக்கு" என்பதற்கு உதாரணம்: திரு வள்ளுவ நாயனார். "யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல் லிழுக்குப் பட்டு". (13–7) "உளதே சொல்" என்பதற்கு உதாரணம்: திருக் குறள். "புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய் மை, வாய்மையாற் காணப்ப டும்." (30–8) "மெய்தருஞ் சொலும் பொய்ம்மை" என்பதற்கு உதாரணம்: திருக் குறள். "பொய்மை யும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மைப யக்குமெ னின்". (30–2) "யான் செய்தேன் பிறர் செய்தார்" என்பதற்கு உதார ணம்: சிவ ஞாந தீபம். "விரும்புற்ற தவம்விரதஞ் சீல மெல்லா மேல்வினைவென் றறிந்தெவையும் விமலன் கூத்தென்,

திரும்புற்ற மநமழலின் மெழுகா யென்று ம்யான்செய்தேன் பிறர்செய்தா றெனுங்கோ ணீக்கி, யரும்புற்றங் கென்னதியா னென்னும் பாசத் தவாமருவும் புறப்பற்றோ டகப்பற் றுன, பெரும்பற்றை யகன்றருளைப் பெறுவோர் ஞாநப் பெரும்பற்றப் புலியூரைப் பிரியார் தா.'', ''எய்தருஞ் சிவமே மன்றி தென் றொன்றை'' நீ என்பதற்கு உதாரணம்: சிவாநுபூதி விளக்கம். ''விருப்பு வெறுப்பென்று வேறுபொருள் கோடலிறை, யுறுப்பிற் குறையாதோ வுணர்வுடையோர் சொல்லுவரோ.'' மற்றும் வருவனவற்றுற் காண்க. எ—ம், இப் பாட்டான் வாக்காற் றீமை அடையாது அடக்குதற்கு உபாயங் கூறிய வாறு காண்க. (27)

28. தேரி னிவ்வுடல் சமாதியி லசைவறச் சித்திர தீபம்போற், சார வைத்திடஃ தில்லையேற் குருபரன்-றனதரும் பணிமேற்கோண், ணேரு மூழ்வழி தோழில்பிறி த்டையினு நெஞ்சமே யுயிர்க்கெல்லாம், பேரி தஞ்செய்வித் திடுமுடை கெழுமலப் பிணக்கிதஞ் செய்யேலே.

(பத உரை) தேரின்-(செய் தொழிலை) விசாரிக்குமிடத்து, இவ் வுடல்-இவ் வுடம்பினை, சித்திர-ஓவிய மாக எழுதப்பட்ட, தீபம்-விளக்கு, போல்-ஒப்ப, சமாதியில்-(ஞாந) நிஷ்டையில், அசைவு-சலநம், அற-இன்றி, சார வைத்திடு-(ஆதநம் கட்டும் இலக்கணத்தோடும்) பொருந்த வைக்குதலைச் செய், அஃது—(அங்ஙன்) அதனைச் (செய்யும் ஆற்றல்), இலையேல்-இன்றாயின்; குரு-ஆசிரியன் (ஆகிய), பரன் தனது-(ஞாந) இறைவனது, அரும்-அரிய, பணி-(ஏவ லாதி)பணிவிடைகளை, மேல்-(சிரசின்)மேல், கொள் (வகித்துக்)கொள்ளுதி, ஊழ்-(அஃது இன்றிப்)பழ வினை, வழி-படியே, நேரும்-வந்து பொருந்துகின்ற, பிறிது-(உனக்கு இன்றி யமையாத) வேறு, தொழில்-(சத்) கருமங்கள், அடையினும்-செய்ய நேரினும், நெஞ்சமே-மநமே! எல்லா உயிர்க்கும்-(அக் கருமங்களால்

கொலை வராமல் சராசரமா யுள்ள)உயிர்கள் அனைத்திற்கும், பேர்-பெரிது (ஆகிய), இதம்-இனிமையை, செய்வித்திடு-(இவ் வுடம்பாற்) செய்வி, முடை-(அங்ஙனம் செய்தல் அன்றி) துர் நாற்றம், கெழும்-பொருந்திய, மலம்-மலங்கள் (நிறைந் துள்ள), பிணக்கு-(இவ் வுடம் பாகிய) பிணத்துக்கு, இதம்-இனிமை, செய்யேல்-செய்யற்க(நீ என்று விவேகம் கூறிற்று) எ-று.
கெழுமல்-பொருந்துதல்.

(இ-பு.) வைத்திடு, செய்வித்திடு, இடு-இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். பரன் றனது-தன்-சாரியை. அடையினும்-உம்-எதிர்-மறை. நெஞ்சமே-விளி. பிணக்கு-பிணத்துக்கு என்பதன் அத்துச் சாரியை குறைந்து நின்றது. செய்யேலே-ஏ-ஈற் றசை.

(சிந்-ரை) தேரி னிவ் வுடல் சமாதியி லசைவறச் சித்திர தீபம் போற் சார வைத்திடு எ-து,— செய் தொழிலை விசாரிக்கு மிடத்து இவ் வுடம்பினைச் சித்திரத்தில் எழுதி வைக்கப்பட்ட தீபம் போல ஞான சமாதியில் அசை வின்றி ஆதநங் கட்டு மிலக்கணத் தோடும் பொருந்த வைக்குதலைச் செய்,

அஃ தில்லையேற் குரு பரன் றன தரும் பணி மேற்கொள் எ-து,— அஃது இன்றாயிற் குரு வாகிய ஞான பரனது அரிய வேவற் பணி விடைகளைச் சிரசில் வகித்துக் கொள்ளுதி,

நேரு மூழ் வழி தொழில் பிறி தடையினு நெஞ்சமே யுயிர்க் கெல்லாம் பே ரிதஞ் செய்வித்திடு எ.து,—அஃ தின்றி வந்து பொருந்துகின்ற பழ வினைப்படியே உனக்கு இன்றியமையாத வேறு சற் கருமங்களைச் செய்தி யெனினும் நெஞ்சமே அக் கருமங்களாற் கொலை வாராது சராசரமா யுள்ள உயிர்களுக் கெல்லாம் பெரி தாய இனிமையை இவ் வுடம்பாற் செய்விக்குதலைச் செய்,

முடை கெழு மலப் பிணக் கிதஞ் செய்யேலே எ-து,—அங்ஙனம் செய்த லன்றி முடை நாற்றம் பொருந்திய மலங்கள் நிறைந் துள்ள இவ் வுடம் பாகிய பிணத்திற்கு இனிமை செய்யற்க நீ யென்று விவேகங் கூறிற்று, எ-று.

ஏவற் பணிவிடையைச் சிரசிற் கொள்ளுதல் பணிவிடை அருமை தோன்றக் கூறியது. உயிர்க் கெல்லா மென்ற பொதுமையால் அசர வுயிருஞ் சொல்லப்பட்டது. சமாதியில் அசைவற விருக்குதல்—பிரம ஞானம், குருபரன் பணி செய்தல்—ஈசுர பக்தி, சீவர்களுக்கு இதஞ் செய்வித்தல்—சீவ கருணை, உடம்பிற்கு இதஞ் செய்யா தொழிதல்—பாச வைராக்கியம், ஆய இந் நான்கும் இதனுட் காண்க. "இவ் வுடல் சமாதியி லசைவற" என்பதற்கு உதாரணம்: தத்துவ ராயர் அடங்கன் முறை, "செவ்வே யுடலுஞ் சிரமுங் க ழுத்துமுற, வெவ்வா தகத்திலி ருந்தவர்க்குங்-கைவந்தால், வாத முதலேய் நலியா மதியுடையோ, ராதர மென்பத து." (அமிர்த சாரம்),"குரபரன் றனதரும் பணிசெய்"என்பதற்குஉதாரணம்:ஒழிவி லொடுக்கம், "உடற்குயிர்போற் கட்கிமைபோ லூசிநூ லொத்து, விடிற்புலிதீ பாம்பினில்வீழ் வார்க்காஞ்-சுடர்ச்சுடினும், வாழைக்கா காவேதி மட்கலத்துக் காகாவா, றேழைக்கா காததி து.", (1-15) "உயிர்க் கெல்லாம் பேரிதஞ் செய்" என்பதற்கு உதாரணம்: திரு வள்ளுவ நாயனர், "அறிவின லாகுவ துண்டோ—பிறிதினேய், தன்னேய்போற் போற்ருக்க டை."(32-5), "முடை கெழுமலப் பிணிக்கிதஞ் செய்யேல்" என்பதற்கு உதாரணம்: திரு வாசகம், "பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய பொய்க்கூரை, யித்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்த லைப் படுவேனை, முத்து மாமணி மாணிக்க வைரத்த பவளத்தின் முழுச்சோதி, யத்த னண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே." (அதிசயப் பத்து 17) மற்றும் வருவனவற்ருற் காண்க.

(28)

29. செய்யு நந்தொழி லைந்தொழி லியாமுமச் சிவனது வடிவென்றே, யைய மற்றுண ராதியா னெனுஞ்செருக் கடைந்துநா டோறுநேஞ்சே, நைவ தென்னைநீ பஞ்சகோ சங்களு நாமல வெனுவுண்மை, கையி லாமல கம்மென வுனக்கியான் கழறியுந் தெளியாயே.

(பத உரை) செய்யும்-செய்யாநின்ற, நம்-நம் முடைய, தொழில்-தொழில்கள் (யாவும்), ஐந்து-(சிவனது சிருஷ்டி முதலிய) பஞ்ச, தொழில்-கிருத்யங்களேயாம்(என்று விவேகம் கூற, அதற்கு, யாம் செய்யும் தொழில்கள் அவன் செய்யும் தொழில்கள் எங்ஙன மாம் என்று மநம் கேட்ப), யாமும்-(அதற்கு, சிவனது அஷ்ட மூர்த்தத்தில் யாம் ஒன்றாதலின்)யாமும், அச் சிவனது-அச் சிவனது, வடிவு-அங்கம் (தானே), என்று-என, ஐயம்-சந்தேக (விபரீதங்)கள், அற்று-இன்றி, உணராது-நிச்சயம் பண்ணிக்கொள்ளாது, யான்-(அச் சிவனை விடவே றான அகங்காரம்) யான், எனும்-என்கின்ற, செருக்கு-மயக்கத்தை, அடைந்து-மருவி, நாள் தோறும்-எப் போதும், நெஞ்சே-மநமே!, நீ-நீ, நைவது—மெலிவது, என்னை—என், பஞ்ச-(மாயா காரிய மாகிய அந்ந மய முதல் ஆநந்த மயம் ஈறாகச் சொல்லப்பட்ட) ஐந்து, கோசங்களும்-கோசங்களும் (உறைகளும்), நாம்-(இவற்றைக் கடந்திருக்கின்ற அறி வாகிய,) யாம், அல-அல்ல, எனு-என் றுள்ள, உண்மை-யதார்த்தத்தை, கையில்-(உள்ளங்) கையில், ஆமலகம்-நெல்லிப் பழம், என-போல, உனக்கு—(பிரத்தி யக்ஷ மாக)உனக்கு, யான்-நான், கழறியும்-(யதார்த்த உபதேச மொழி களால்) கூறியும், தெளியாய்-(நீ) தெளிந்திலாய், (இது என்னை என்று விவேகம் கூறிற்று.) எ-று.

அந்ந மயம்—பிராண மயம், மநோ மயம், விஞ்ஞாந மயம், ஆநந்த மயம் என்பன பஞ்ச கோசங்க ளாம்.

(இ.பு.) உணராது + யான் — உணராதியான், தொழில் + யாமும் — தொழிலியாமும். இ - இரண்டும் - சாரியைகள். யாமும்-உம்-இறந்தது தழீஇயது (அட்ட மங்கல மூர்த்தத்தில் ஏழே யன்றி என, ஏனை ஏழையும் அவாவி) நிற்றலின் என்றே-ஏ-தேற்றம். எனும்-இடைக் குறை. நாடொறும்-தொறும்-காலப் பன்மை குறித்த இடைச் சொல். நெஞ்சே-விளி. என்னே—என்ன என்பதின் விகாரம், கோசங்களும்-உம்-முற்று. எனு-செய்யா வென் வாய்ப்பாட்டு விதி வினை யெச்சம். நினை-இடைக் குறை. ஆக் கொண்டு-ஆ-ஆக என்பதன் கடைக் குறை. கொண்டும்-உம்-உயர்வு சிறப்பு. செய்கேன்-உடன் பாட்டு எதிர் காலத் தெரி நிலை வினை முற்று. கு—சாரியை. சாவனோ-ஓ-வினு. எனல்-எதிர் மறை எதிர் காலத் தெரி நிலை வினை முற்று. என்னல் என்பதன் இடைக் குறை. இலை-இல்லை என்பத னிடைக் குறை. வீடே-ஏ-ஈற் றசை.

(சிந்-ரை) செய்யு நந்தொழி லைந் தொழில் எ-து,—செய்யா நின்ற நமது தொழில்க ளியாவும் சிவனது சிருஷ்டி முதலிய வைந் தொழில்களே யா மென்று விவேகங் கூற, அதற் கியாஞ் செய்யுந் தொழில்கள் அவன் செய்யுந் தொழில்கள் எங்ஙனமா மென்று மநங் கேட்ப,

யாமு மச் சிவனது வடி வென்றே யைய மற் றுணரா தியா னெனுஞ் செருக் கடைந்து நா டொறு நெஞ்சே நைவ தென்னே நீ எ—து,—அதற்குச் சிவனது அஷ்ட மூர்த்தத்தில் யாம் ஒன்றாகலின் யாமும் அச் சிவனது அங்கந் தானே யென்று ஐயந் திரிவுக ளின்றி நிச்சயம் பண்ணிக் கொள்ளாது அச் சிவனை விட வேறி யா னென்று உணரு மயக்கத்தை அடைந்து எப் போதும் நெஞ்சமே நீ மெலிவது என்னே,

பஞ்ச கோசங்களு நா மல வெனு வுண்மை கையி லாமல கம் மென வுனக் கியான் கழறியுந் தெளியாயே எ—து,—

மாயா கா்ரிய மாகிய அந்ந மய முதல் ஆநந்த மயம் ஈருகச் சொல்லப்பட்ட பஞ்ச கோசங்களும் இவற்றைக் கடந்திருந்த அறி வாகிய யாம் அன் றென்று உண்மை யாகிய உபதேச மொழிகளால் உள்ளங் கை நெல்லிப் பழம் போலப் பிரத்தி யக்ஷ மாக உனக்கு யான் தெளியக் கூறியுந் தெளிந்திலாய், இது என்னை யென்று விவேகங் கூறிற்று, எ—று.

உயிர் சிவனது வடிவாகலின் இதனது தொழிலுஞ் சிவனது தொழி லென்பது அறிக. பஞ்ச கோசங்க ளாவன,— அந்ந மய கோசம், பிராண மய கோசம், மநோ மய கோசம், விஞ்ஞாந மய கோசம், ஆநந்த மய கோசம் என்பவையா மெனக் கொள்க. உண்மை யென்பது உண்மை யாகக் கூறிய வுபதேச மொழி கண்மே னின்றது. இதற்கு உதாரணம்: அறிவாநந்த சித்தியார், "அன்னம யக்கொண்டெ டுத்தவு டல்களு மாயிழையும்' பின்னமு டன்வரு பிள்ளையுஞ் சுற்றமும் பேருலகின், மன்னு நரை திரை மூப்பினு நோயினு மாளக்கண்டுந், துன்னும றிவில ரான்மாவி துவென்று சொல்லுவரே." (7–3) எ—ம், "ஊசுமு டலி னு ழல்கின்ற காற்றையு ணர்வென்பரே, யேசுமு றக்கத்தி யங்கியு மிங்கறி வேதுமற்று, வீசும்பி ராணனை யான்மாவ லவென்று வேதஞ்சொல்லும், பேசும னிதர்பொ ருளறி யாமற்பி தற்று வரே." (75) எ—ம், "தனக்கும னதுச வித்ததென் றேசொல் லித் தானிருந்து, முனக்குவி சாரமுண் டாயிற்சொல் லென் றிங்கு வந்துநின்று, மெனக்கிங்க றியவொண் ணுதென்று சொல்கின்ற வேழைகடா, நினைக்கத்த னக்கறி வில்லாம நத்தைநி லையென்பதே". (77) எ—ம், "இணங்குந வகுண மெய்தும்ப் புத்தியை யின்றுபுத்தர், வணங்கும் விஞ்ஞாநம யம்பொரு ளென்றம தியின்மைபோற், பிணங்குநி லைவிட்டுக் கேளாய் ம றையின்று பின்னமறக், குணங்குறி யின்றியி ருக்குமான் மாவென்று கூறிடுமே." (79) எம், "சேருஞ்சு கம்பொரு

ளென்றனை துக்கஞ்செ றியும்பொழு, தாருஞ்சு சதுக்கி யாகியி டுநிலை யன்றிமறை, தேருநி ரதிச யாநந்த மேசிதை வற்ற பொருள், கூறுநி லையைய றியார ழிசுகங் கொள்ளுவதே'' (81) எ-ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. (29)

**30. தெளிவு யிர்க்கரன் விளக்குதன் மயக்கவன் றிரோபவிக் குதறேகம், விளிவை யுற்றல்சங் காரமிங் கிதாகித மேவுத றிதிதோற்ற, முளசி ருட்டியே லம்பைநோ தலினுன்னை யும்பிற ரையுநாடித், தளர்வ தும்மகிழ் வது மடைந் துள்ளமே சம்புவை மறந்தாயே.**

(பத உரை) உயிர்க்கு—உயிர்களுக்கு, தெளிவு—(யா தோர் முன்னிலையால்) தெளிவு (வருமாயினும் அது) அரன்-சிவன், விளக்குதல்-அநுக்கிரகம் பண்ணுதல் ஆம், மயக்கு-(அவைகளுக்கு யா தோர் முன்னிலையால்) மயக்கம்(வருமாயினும்) அது, அவன்-அச் சிவன், திரோபவிக்குதல்-திரோபாவஞ் செய்குதல் ஆம் (திரோபாவம்-மறைப்பு), தேகம்-சரீரம், விளிவை-(யா தோர் முன் னிலையால்) நாசத்தை, உற்றல்-அடைதல், சங்காரம்-(அவனது) சங்காரம் ஆம், இத அகிதம்-சுக, துக்கங்களை, மேவுதல்-பொருந் தல், இங்கு-இவ்விடத்து, திதி-(அவனது) திதிஆம், தோற்றம்-உத் பத்தி (யா தோர் முன்னிலையால் அஃது), உள சிருட்டி-(அவனுக்கு) உரித் தாயுள்ள சிருட்டி ஆம், ஏல்—(இங்ஙனம் கூறிய முறையே, சடசித்துக்கள் எல்லாம் இரு வினைக் கீடாக நடத்தும் அவனது பஞ்ச கிருத்தியத்தின்படியே) நடக்குமானல், அம்பை-(அவன் செய்த பஞ்ச கிருத்தியங்களை நாடாது, எய்தவன் இருக்கப்,) பாணத்தை, நோதலின்-(குறித்து) வருந்துதல் போல், உன்னை யும்-(யான் செய்தேன் என்று) உன்னையும், பிறரையும்—(பிறர் செய்தா ரென்று) அந்நியரையும், நாடி-கருதிக் கொண்டு, தளர் வதும்-(துன்பம் வந்தது என்று) வாட்ட முறலும், மகிழ்வதும்—

சுகம் வந்தது என்று) பூரிப் புறலும், அடைந்து-பொருந்தி, உள்ளமே-நெஞ்சமே, சம்புவை-சிவனது திருவடியை, மறந்தாய்-அயர்ந்தனை (அஃது என்னை என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) உற்றல்-'உறல்' என்பது இன்னோசை குறித்து அங்ஙன் விகார மாயிற்று. இத + அகிதம் = இதாகிதம் வட மொழித் தீர்க்க சந்தி. நோதலின்-இன்-உவம உருபு. உனை-இடைக் குறை. உனையும் பிறரையும் தளர்வதும் மகிழ் வதும்-உம் நான்கும் எண்ணுப் பொருளன. உள்ளமே-விளி. மறந்தாயே-ஏ-ஈற் றசை.

(சித-ரை) தெளி வுயிர்க் கரன் விளக்குதன் மயக் கவன் றிரோபவிக்குதல் எ-து,—உயிர்களுக் கியா தோர் முன்னிலை யால் தெளிவு வருமாயினும் அஃது சிவன் அநுக்கிரகம் பண்ணு தல், அவைகளுக்கு யா தோர் முன்னிலையால் மயக்கம் வரு மாயினும் அஃது அவன் திரோபாவஞ் செய்குதல்,

தேகம் விளிவை யுற்றல் சங்காரம் எ-து,—தேக நாசத் தை யடைதல் யா தோர் முன்னிலையால் வருமாயினும் அஃது அவனது சங்காரம்,

இங் கிதாகித மேவுத றிதி எ-து,—சுக துக்கங்களைப் பொருந்த இவ் விடத்து யா தோர் முன்னிலையால் வருமாயி னும் அஃது அவனது திதி,

தோற்ற முள சிருட்டியேல் எ-து,—உற்பத்தி யா தோர் முன்னிலையால் வருமாயினும் அஃது அவனுக் குள்ள சிருஷ்டி, இங்ஙனங் கூறிய முறையே சட சித்துக்க ளெல் லாம் இரு வினைக் கீடாக நடத்தும் அவனது பஞ்ச கிருத்தி யத்தின்படியே நடக்குமானால்,

அம்பை நோதலி னுன்னையும் பிறரையு நாடித் தளர்வ தும் மகிழ்வது மடைந் துள்ளமே சம்புவை மறந்தாயே எ-று,— அவன் செய்யும் பஞ்ச கிருத்தியங்களை நாடாது எய்தவ னிருக்க அம்பை நோவது போல் யான் செய்தேன் பிறர் செய்தா ரென்று உன்னையும் பிறரையுங் கருதிக் கொண்டு துன்பம் வந்த தென்று வாட்டமுஞ் சுகம் வந்த தென்று பூரிப்பும் அடைந்து நெஞ்சமே சிவனது திரு வடியை மறந்தாய் அஃது என்னை யென்று விவேகங் கூறிற்று, எ-து.

அம்பை நோதலி னெனவே எய்தவ னென்பது வருவிக் கப்பட்டது, அவன் அவள் அது வென்னு மூன்றும் பிறர் என்பதனுள் அடங்கு மாதலிற் பிறர் எனப்பட்டது. கடற் றிரை போற் சுக துக்கம் ஓய் வின்றி வருதலால் அவற்றைச் சம பாவனை பண்ணாது வேறு பிரித்துப் பாவிப்போர்க்கு அவை மய மாதலே யன்றித் திரு வடியை நினைக்கக் கூடாமையிற் சம்புவை மறந்தாயே யென்று கூறப்பட்டது. இப் பஞ்ச கிருத்தியங்களுள் உயிரிடத்து அநுக்கிரகமுந், திரோபாவமும், உடம்பினிடத்துச் சங்காரமுந், திதியுஞ், சிருஷ்டியும், வரு மாறும், அநுக்கிரகத்திலும், இதத் திதியிலுஞ், சிருஷ்டியிலும், இன்பமும், திரோபாவத்திலுஞ், சங்காரத்திலும், அகிதத் திதியி லுந், துன்பமும், வரு மாறும் காண்க. இதற்கு உதாரணம் திரு வாசகம். "நாயிற் கடையா நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய், மாயப் பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி, யாயக் கடவே னானேதா னென்ன தோவிங் கதி காரங், காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண் ணுதலே". (குழைத்த பத்து 8) மற்றும் வருவனவற்றுற் காண்க. இப் பாட்டாற் சிவனது பஞ்ச கிருத்தியத்தை நாடி இரு வினையும் நீங்குதற்கு உபாயங் கூறிய வாறு காண்க. (30)

31. மறைத்த லுந்நினைத் தலுஞ்செயு மாணவ மாயை நின் றவைதம்மைத், துறத்த லேயிராப் பகலகல் வீடே னச் சொல்வரத் துறவெய்தக், குறித்தி டிற்பர பத்திஞா நத்தினுற் கூடுமற் றவைநெஞ்சே, நிறத்த பத்திநஞ் செயலறி ஞமறி நின்றமற் றோன்றுமே.

(பத உரை) *ஆணவம்—ஆணவமும், மாயை-மாயையும், நின்று-(நமது உள்ளே எக் காலமும்) நின்று, மறைத்தலும்-(கேவல மாய்) மறைத்தலையும், நினைத்தலும்-(சகல மாய்) நினை வூட்டுதலையும், செயும்-(முறையே) செய்யாநிற்கும், அவைதம்மை-அவ் விரண்டை யும், துறத்தலே-நீத்தலே, இரா-இரவும், பகல்-பகலும், அகல்-நீங்கிய, வீடு-மோக்ஷம், என-என்று, சொல்வர்-(பெரியோர்கள்) சொல்லு வார்கள்(என்று விவேகம் கூற, அதற்கு, இவ் வாணவமும், மாயை யும் துறத்தற்கு உபாயம் எங்ஙனம் என்று மநம் கேட்ப,) அத் துறவு-(அதற்கு,) அவ் விரண்டன் நீக்கத்தை, எய்த-(நீ) அடைய, குறித்திடில்-கருதினையாயின், பரபத்தி-உயர் பக்தி, ஞாநத்தினுல்-உயர் ஞாநம் ஆகிய இவைகளினுல், கூடும்-(அவற்றின் நீக்கம்) கைகூடும், நெஞ்சமே-மநமே, அவை—அந்தப் பரபத்தி பர ஞாநங் கள் (யாவை எனின்), நம்-(எல்லாம் சிவன் செயல் என நாடி) நமது, செயல்-செய்கை, அறில்-அற்றுப்போமாயின், நிறத்த-(அதுவே) சிறந்து விளங்காநின்ற, பக்தி-(பர)பக்தி ஆம், நாம்-(இப் பர பக்தியினுல் நமது செயல் அற்றோம் என்று கருதும்) போதம், அறில் - அறுமாயின், நின்ற - (அதுவே எஞ்சி) நின்ற, மற்று ஒன்று ஆம்-பிறி தொன் றாகிய பர ஞாந மாம் (என்று விவேகம் கூறிற்று.) எ—று.*

(இ-பு) *நினைத்தல்-தன் வினை. அது மநத்தின் தொழில். அதனை நினைப்பித்தலாய மாயையின் தொழிலாக்கற்கு (ஆணவத் தொழிலாய மறைத்தல் (பிற வினை) போல,) நினைப்பித்தல்*

எனப் பிற வினை யாக மாற்றி அர்த்தங் கொள்க. மறைத்தலும், நினைத்தலும்-உம் இரண்டும் எண்ணுப் பொருளன. ஆணவ மாயை, இராப் பகல், பர பக்தி பர ஞாநம் இவை மூன்றும் உம்மைத் தொகைகள். அவை தம்மை-தம்-சாரியை. துறத்தலே-ஏ-தோற் றம். அகல் வீடு-வினைத் தொகை. என-என்ன என்பதன் விகாரம். மற்று-அசை நிலை. நெஞ்சமே-விளி- மற்று-பிறி தென்னும் பொருட் டாய இடைச் சொல். ஒன்றுமே-ஏ-ஈற் றசை.

(சிறு-ரை) மறைத்தலும் நினைத்தலுஞ் செயு மாணவ மாயை நின் றவை தம்மைத் துறத்தலே யிராப் பக லகல் வீ டெனச் சொல்வர் எ—து,—நம துள்ளே எக் காலமும் நின்று கேவல மாய் மறைத்தலையுஞ் சகல மாய் நினைத்தலையுஞ் செய்யா நிற்கும் அவைகளுக்குக் காரண மாகிய ஆணவமும், மாயையும், அவ் விரண்டையும் நீத்தலே இரவும் பகலும் நீங்கிய வீ டென்று பெரியோர்கள் சொல்லுவார்க ளென்று விவேகங் கூற, அதற்கு இவ் வாணவமும் மாயையுந் துறத்தற்கு உபாயம் எங்ஙன மென்று மநங் கேட்ப,

அத் துற வெய்தக் குறித்திடில் பரபத்தி ஞாநத்தினுற் கூடும் எ—து,—அதற்கு அத் துறவினை நீ அடையக் கருதினை யாயிற் பர பத்தி பர ஞாநத்தினுல் அத் துறவு கைகூடும்,

மற் றவை நெஞ்சே நிறத்த பத்தி நஞ் செய லறி ஞ மறி னின்ற மற் றென்றுமே எ—து,—நெஞ்சமே அந்தப் பர பத்தி பர ஞாநங்கள் யாவை யெனின், சிவன் செயலை நாடி நமது செயல் அறுமாயின், அதுவே விளங்காநின்ற பர பத்தி; இப் பர பத்தியினுல் நமது செய லற்றே மென்று கருதும் போதம் அறுமாயின் மேற் சொல்லப்பட்ட பர ஞாநமா மென்று விவே கங் கூறிற்று, எ—று.

*தற் செயல் அறுதற்கு மேற் பத்தி யில்லாமையாலும், தற் போத மறுதற்கு மேல் ஞாந மில்லாமையாலும், பர பத்தி யென்றும், பர ஞாந மென்றும் கூறப்பட்டன. இதற்கு உதாரணம்: கந்த ரலங்காரம். "அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும விழ்ந்தவன்பாற், குராப்புனை தண்டையந் தாடொழல் வேண்டுங் கொடியவைவர், பராக்கரல் வேண்டும நமும்ப தைப்பறல் வேண்டுமென்று, விராப்பக லற்றவி டத்தேயி ருக்கையெ ளிதல்லவே." (74) எ-ம், திரு வாசகம்: "பத்தி வலையிற் படுவோன் காண்க." (அண்டப் பகுதி 42) எ-ம், திரு வம்மானை. "தற்போத மற்றிடந் தற்பர மம்மானை." எ-ம், மற்றும் வருவனவற்றுற் காண்க. இப் பாட்டால் ஆணவமும், மாயையும் நீங்குதற்கு உபாயங் கூறிய வாறு காண்க.* (31)

**32.** ஒன்று நஞ்செய லில்லைநெஞ் சேயிவ ணோர்
மய லதனாலே, சென்று சென்றுவெம் பவக்கடன் மூழ்
கினஞ் சேறிமய லேதேன்ன, நன்று நீவினை வினையிரு
வினையையு நான்செய்தே னெனுமாந, மென்ற றிந்திட
தோன்றையு மாற்றினை யெனினுனக் கிணையாரே.

(பத உரை) *நெஞ்சே-மநமே, நம்-(உண்மை யாகப் பார்க்கு மிடத்துச் சிவன் செயலே யன்றி) நமது, செயல்-செய்கை, ஒன்றும்-ஒன்றுயினும், இல்லை-இன்று என்று(விவேகம் கூற,அதற்கு, நமக்குச் செயல் இன்று என்பதற்கு ஏது என்னை என்று மநம் கேட்ப, நமக்கு ஆணவ மறைப்பால் சுதந்தர அறிவு இன்மையாலும், கருவிகள் சட மாகையாலும், நம்மையும், கருவி களையும், கூட்டித், தற் சுதந்தர அறிவினை யுடைய சிவன், தனது அருளால் இயக்க, யாம் இயங்குதலின், எமக்குச் சுதந்தரச் செயல் இன்று என்று விவேகம் கூற, அதற்கு*

இங்ஙனம் அச் செயல் அற்று இருப்ப, எழு வகைப் பிற விகளும் எமக்கு வந்தது என்னை என்று மநம் கேட்ப,) இவண்-(அதற்கு) இவ் விடத்து, ஓர்-ஒரு, மயலதனாலே-மயக்கத் தினாலே, சென்று-போய், சென்று-போய், வெம்-கொடிய, பவ-பிறவி(ஆகிய), கடல்-(துக்க) சாகரத்தில், மூழ்கினம்-மூழ்கி, னேம் (யாம் என்று விவேகம் கூற), செறி-(அதற்கு, ஒரு மயக்கத்தாலே பிறவிச் சாகரத்திலே மூழ்கினோம் என்று கூறி னீர். இங்ஙனம்) பொருந்திய, மயல்-அம் மயக்கம்(ஆவது)- எது-யாது, என்ன-என்று(மநம் கேட்ப), நீ-(அதற்கு) நீ, நன்று செவ்வனே, வினவினை-கேட்டனை, இரு வினையையும்-(நன்று தீது ஆகிய) இரு வினைகளையும், நான்-யான், செய்தேன்-ஆற்றினேன் (பிறர் ஆற்றினர்), எனும்-என்று கருதும், மாநம்-(உனது) அபி மாநமே, என்று- (அம் மயக்கம்) என்று, அறிந்திடு-உணர்ந்து கொள் (என்று விவேகம் கூற, அதற்கு அந்த அபிமாநம் தான் யாது என்று மநம் கேட்ப, அதற்கு நீ, பிறர்க்கு நன்று தீது செய்த விடத்தும், பிறர் உனக்கு அவைகளைச் செய்த இடத்தும், நீ செய்த தீதினையும், பிறர் செய்த நன்கினையும், சிவன் செய்வித்தான் என்று கூறி, நீ செய்த நன்கினையும், பிறர் செய்த தீதினையும், நான் செய்தேன், பிறர் செய்தார் என்று அபிமாநித்து, விருப்பு வெறுப்பு அடைந்தனை யாகலின், நீ செய்த தீதும், பிறர் செய்த நன்கும், முன்னர் சிவன் செயல் என்று கூறியதும்- உனது அபிமாநமே யாயிற்று. ஈது-(உனது அபுத்தி பூர்வக மாய் வந்த தீதினையும், புத்தி பூர்வக மாய் வந்த நன்கினை யும், பிறரால் உனக்கு வந்த தீது நன்குகளையும், சிவன் செயலாய் நாடி, நான் பிறர் என்று கருதுகிற அபிமாந மாகிய) இது, ஒன்றினையும்-ஒன்றையும், மாற்றினை-நீக்கினை, எனின்-ஆனால், உனக்கு-உனக்கு, இணை-உவமை, யார்-யாவர் உளர் (ஒருவரு மிலர் என்று விவேகம் கூறிற்று,) எ—று,

(இ-பு.) ஒன்றும்-உம்-முற்று, நெஞ்சமே-விளி. மயலதனாலே-அது பகுதிப் பொருள் விகுதி. அன்-சாரியை- ஏ அசை நிலை. சென்று சென்று-தொழில் பயில்வுப் பொருளில் வந்த அடுக்கு. பவக் கடல்-ஈண்டு பவத்தைக் கட லாக உருவகிக்கின்றார். வினையையும்-உம் முற்று. எனும்-இடைக் குறை. மாநம்-முதற் குறை. ஈது-நீண்ட சுட்டு. ஒன்றையும்-உம் முற்று. எனின்-இடைக் குறை. யாரே-ஏ ஈற் றசை.

(சிறு-ரை) ஒன்று நஞ் செய லில்லை நெஞ்சே எ-து,—நெஞ்சமே உண்மை யாகப் பார்க்குமிடத்துச் சிவன் செயலே யன்றி நமது செய லொன்றாயினும் இன் றென்று விவேகங் கூற, அதற்கு நமக்குச் செய லின்றென்பதற்கு ஏது வென்னை யென்று மநம் கேட்ப, நமக்கு ஆணவ மறைப்பாற் சுதந்தர வறிவு இன்மையாலும், கருவிகள் சட மாகையாலும், நம்மையுங் கருவிகளையுங் கூட்டித் தற்சுதந்தர வறிவினை யுடைய சிவன் தனது அருளால் இயக்க யாம் இயங்குதலின் எமக்குச் செய லின் றென்று விவேகங் கூற, அதற்கு இங்ஙனஞ் செயலற் றிருப்ப எழு வகைப் பிறவிகளும் எமக்கு வந்தது என்னை என்று மநங் கேட்ப.

இவ ணோர் மய லதனாலே சென்று சென்று வெம் பவக் கடன் மூழ்கினம் எ-து,—அதற்கு இவ் விடத்து ஓர் மயக்கத்தினாலே போய்ப் போய்க் கொடிய பிறவி யாகிய துக்க சாகரத்தில் மூழ்கினேம் யா மென்று விவேகங் கூற.

செறி மய லே தென்ன எ-து,—அதற்கு ஓர் மயக்கத்தாலே பிறவிச் சாகரத்தில் மூழ்கினே மென்று கூறினீர். இங்ஙனம் பொருந்திய மயக்க மாவ தியா தென்று மநங் கேட்ப,

நன்று நீ விஞ்வினை யிரு வினையையு நான் செய்தே னெனு மாந மென் றறிந்திடு எ-து,—அதற்கு நீ நன்று விஞ்வினை; நன்று தீ தாகிய விரு வினைகளையும் நான் செய்தேன் பிறர் செய்தா ரென்று கருதும் உன்து அபிமாநமே அம் மயக்க மென்று அறிந்திடுதி யென்று விவேகங் கூற, அதற்கு அந்த அபிமாநந் தான் யா தென்று மநங் கேட்ப, அதற்கு நீ பிறர்க்கு நன்று தீது செய்த விடத்தும், பிற ருனக்கு அவைகளைச் செய்தவிடத்தும், நீ செய்த தீதினையும், பிறர் செய்த நன்கினையுஞ் சிவன் செய்வித்தா னென்று கூறி நீ செய்த நன்கினையும், பிறர் செய்த தீதினையும், நான் செய்தேன் பிறர் செய்தா ரென்று அபிமாநித்து, விருப்பு வெறுப்பு அடைந்தனை யாகலின், நீ செய்த தீதும் பிறர் செய்த நன்கும், முன்னர்ச் சிவன் செய லென்று கூறியதும் உமது அபிமாநமே யாயிற்று,

ஈ தொன்றையு மாற்றினை யெனி னுனக் கிணை யாரே எ-து,—உனது அபுத்தி பூர்வக மாய் வந்த தீதினையும், புத்தி பூர்வக மாய் வந்த நன்கினையும், பிறரால் உனக்கு வந்த நன்கு தீதினையும், சிவன் செய லாய் நாடி, நான் பிறர் என்று கருதுகிற அபிமாந மாகிய இது ஒன்றையும் நீக்கினை யாகுல் உனக்கு உவமை யாவ ரென்று விவேகங் கூறிற்று, எ-று.

நான் செய்தேன் என்பதனுலே பிறர் செய்தா ரென்பது வருவிக்கப்பட்டது. இதற்கு உதாரணம்: மெய்ம்மொழி. "தானலா தொன்று தன்னைத் தானெனக் கருதிக் கொண்டே, யானெலாஞ் செய்தே னென்னு ஞாநமஞ் ஞாந மத்தா, லீனமாம் வினையி னண்டா மிருவினை யாலு டம்பா, மூனமா முடம்பா லூழா மூழினு லாகா தூண்டோ." மற்றும் வருவனவற்றுற் காண்க. இப் பாட்டால் நாம் பிறர் என்று கருதும் அபிமாநம் ஈ தென்று அறிவித்த வாறு காண்க. (32)

[அபுத்தி பூர்வகமாய்ச் செய்த தீவினையும், புத்தி பூர்வகமாய்ச் செய்த நல்வினையும்; பிறர் செய்த நல்வினையும், சிவன் செயலாகக் காண்கின்றேன். பிறர் செய்த தீவினை இங்ஙனம் காணல் கூடாது என்ற மநத்தைப் பார்த்து விவேகம் மேற் கூறுகின்றது]

33. இணையின் ஞாநபூ ரணமுழ துணர்ந்தமைத் திட்டவா றலதிங்கே, யணைவு றுதோரு தீதெமக் கவன்றரி ஞர்தடுப் பவர்நெஞ்சே, பணைகோ டாவர மாநமின் மையி னுருப் பற்றிநின் றிலகோல்லோ, வுணைவு றுதுடற் காவல்கை விடுதியூ ழுள்ளவா விடாதேன்றே.

(பத உரை) இணையில் — ஒப்பற்ற, ஞாந(ம்) — ஞாந சொருபி யாகிய, பூரணன்—எங்கும் நிறைந்த சிவன், முழுதும்— (நாம் செய்த வினைகள்) எல்லாவற்றையும், உணர்ந்து—(ஒருங்கு) அறிந்து, அமைத்து—(அவ் வினைகளுள் இன்ன காலத்தில் இன்ன வினையை அநுபவிக்கப் பண்ணுவது என்று) வகுத்து, இட்ட— தந்த, ஆறு—விதம், அலது—அன்றி, இங்கு — இவ்விடத்து, எமக்கு — (பிறர் ஒருவரால்) நமக்கு, ஒரு—ஓர், தீது — கேடு, அணைவுறாது—வந்து அடையாது (என்று விவேகம் கூற, அதற்கு, சிருட்டி முதலிய செய்யும் பிரமன் முதலிய கடவுளாற் றான் எமக்கு ஒரு தீது உறுதோ என்று மநம் கேட்ப, அச் சிவன் யாவர்க்கும் மிக்கா ணுகலின், அவனை யன்றி இவரால் ஒரு தீது செய்யக் கூடாது. அங்ஙனம் மிக்கா ணுயினும், அவன் அறியாது இவரால் தீது செய்யக் கூடாதோ என்னின், இயற்கை ஞாநத்தை யுடைய ணுகலின், அச் சிவன் அறியாது அது இவராற் செய்யக் கூடாது. அவன் அறி யாது இவராற் செய்யக் கூடாதாயினும், இவர் தீது செய்யுமிடத்து அவன் வந்து தடுப்பானோ என்னின், பரிபூரணன் ஆகலின் அவனை விட இவர் இருத்தற்கும், செய்தற்கும், இடமே யில்லை. ஆனல்,

அச் சிவனையே உபாசனை பண்ணித் தீது உறாது தடுத்துக் கொள்வேன் என்னின், சிருஷ்டி தொடங்கி வீடு அடைவிக்கும் அளவும் வினைகளை எல்லாம் அவனே ஒருங்கு உணர்ந்து அமைத்தானாகலின், அவனை உபாசித்தாலும், அதனைத் தடுத்தல் கூடாது), அவன்—(ஆகலின், இணையின் ஞாந பூரணன் ஆகிய) சிவனே, தரின்—(எம் தீ வினைக்கு ஈடு ஆக எமக்கு ஒரு தீது) தருவான் எனின், ஆர்—(அதனை) யாவர், தடுப்பவர்—நீக்கிக் கொள்வார், நெஞ்சே—(நீ சொல்லுதி) மநமே (என்று விவேகம் கூற, அதற்கு, நீர் கூறியது உண்மை, இங்ஙனம் அறிந்தாலும், தேகத்தோடு ஒற்றுமையாயிருத்தலின், இதன்கண் அபிமாநத்தை விடுத்தல் எங்ஙனம் என்று மநம் கேட்ப.), பணை — கோடுகளை, கொள் — தாங்காநின்ற, த்தாவரம்—(மரமுதலிய) அசர வுயிர்கள், மாநம்—(தம் உடம்புகள் போல்) அபிமாநம், இன்மையின்—இல்லாததனால், உரு(—பழ வினைப்படியே) அவ் வுடம்புகளோடும், பற்றி — கூடி, நின்றில கொல்லோ—நிற்கவில்லையோ (அது போல நீயும்) ஊழ்—பழ வினையானது, உள்ள—(எவ் விதம்) உள்ளதோ, ஆ(று)—அவ் விதம், விடாது—(சுக துக்க மாகிய தன் பயனைத் தாராமல்) நீங்காது, என்று—என்று (அறிந்து), உள்—மநம், நைவுறாது—மெலிவுறாது, உடல்—(உன்) உடம்பினை, காவல்—(பாது) காத்தலை, கைவிடுதி—விட்டொழி (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு.) அமைத்திட்ட - இடு - பகுதிப் பொருள் விகுதி. அலது - இடைக் குறை. இங்கே - ஏ - அசை நிலை. அணைவுறாது, நைவுறாது - உறு - துணை வினை. ஆர் - யாவர் என்பதன் விகாரம். தடுப்பவர் - தெரி நிலை வினையாலணையும் பெயர். நெஞ்சமே - விளி. மானம் - முதற் குறை. இன்மையின் - இன் - ஏதுப் பொருளில் வந்த ஐந்தனுருபு. இல கொல்லோ - கொல் - அசை நிலை. ஓ - விஞ. கை விடுதி - கை - விடு - என்னும் பகுதிக்குத் துணையாக வந்த ஒரு வகை விசேடணம். உள்ள வா - ஆ - ஆறு என்பதன் கடைக் குறை. என்றே - ஏ - ஈற் றசை.

(சிந-ரை) இணையின் ஞாந பூரணன் முழு துணாந் தமைத் திட்ட வா றல திங்கே யணைவுரு தொரு தீ தெமக்கு எ-து,— சமாந மின்மையினையும் இயற்கை ஞாநத்தினையும் உடைய பரி பூரண னாகிய சிவன் நான் செய்த வினைக ளெல்லாவற்றையும் ஒருங் குணர்ந்து அவ் வினைகளுள் இன்ன காலத்தில் இன்ன வினையை அநுபவிக்கப் பண்ணுவ தென்று வகுத்துத் தந்தவா றல்லது இவ் விடத்துப் பிற ரொருவரால் நமக்கு ஓர் தீது வந் தடையா தென்று விவேகங் கூற, அதற்குச் சிருஷ்டி முதலிய செய்யும் பிரமன் முதலிய கடவுளராற் றான் எமக்கு ஓர் தீது உறுதோ வென்று மநங் கேட்ப, அச் சிவ னியாவர்க்கு மிக்கா னாகலின் அவனை யன்றி இவரால் ஒரு தீது செய்யக்கூடாது, அங்ஙனம் மிக்கா னாயினும் அவ னறியாது இவரால் தீது செய்யக் கூடாதோ வென்னின், இயற்கை ஞாநத்தை யுடைய னாகலின், அச் சிவன் அறியாது இவராற் செய்யக் கூடாது; அவ னறியாது இவராற் செய்யக் கூடாதாயினும் இவர் தீது செய்யுமிடத்து அவன் வந்து தடுப் பானோ வென்னிற், பரிபூரண னாகலின் அவனை விட இவ ரிருத் தற்குஞ் செய்தற்கும் இடமே யில்லை, ஆனல் அச் சிவனையே யுபாசனை பண்ணித் தீ தூறு தடுத்துக் கொள்வே னெனின், சிருஷ்டி தொடங்கி வீடு அடைவிக்கு மளவும் வினைகளை யெல்லாம் ஒருங் குணர்ந்து அமைத்த தாகலின், அவனை உபாசித்தாலும் அதனைத் தடுக்கக் கூடாது,

அவன் தரி னார் தடுப்பவர் நெஞ்சே எ-து,— ஆகலின் இணையின் ஞாந பூரண னாகிய சிவனே தீவினைக் கீடாக எமக்கு ஒரு தீது தருவா னெனின், அதனை யாவர் நீக்கிக் கொள்வார் நீ சொல்லுதி நெஞ்சமே யென்று விவேகங் கூற, அதற்கு நீர் கூறி யது உண்மை, இங்ஙனம் அறிந்தாலும் தேகத்தோடு ஒற்றுமையா யிருத்தலின் இதன்கண் அபிமானத்தை விடுத்தல் எங்ஙன மென்று மநங் கேட்ப,

பணைகொ டாவர மான மின்மையி னுருப் பற்றி நின்றில கொல்லோ எ-து,—கோடுகள் தாங்காநின்ற தாவர வுயிர்கள் தமது உடம்புகள் மேல் அபிமாந மின்றி இருக்கவும் பழ வினைப் படியே அவ் வுடம்புகளோடும் கூடி நின்றிலவோ,

உ ணைவுரு துடற் காவல் கைவிடுதி யூழுள்ளவா விடா தென்றே எ-து,—அது போல நீயும் உள்ளம் மெலிவுரு து உள்ள படியே பழ வினை வருத லன்றி விடா தென்று அறிந்து உடம்பினைப் பாதுகாத்தல் கைவிடுவா யென்று விவேகங் கூறிற்று, எ-று.

இணையி லென்பதை யாவர்க்கு மிக்கா னென்று கொள்க. "முழுதுணர்ந் தமைத்திட்டவா" றென்பதற்கு உதாரணம்: சிவ போக சாரம் "அமைத்த வினைக்கீடா வநுதிநமுஞ் செய்வ, திமைப் பொழுதும் வீண்செயலொன் றில்லை - யுமைக்குரியா, னெல்லாம றிந்தேயி யற்றுவதுந் தன்னடிமை, வல்லார்த மக்குணர்த்து வான்." (98) "உடற்காவல் கைவிட்டிருப்பா" யென்பதற்கு உதாரணம்: (சுந்தர மூர்த்தி) தேவாரம். "தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய், வானைக் காவல் கொண்டு நின்று ரறியா நெறியானே, யானைக் காவி லரனே பரனே யண்ணு மலையானே, யூனைக் காவல் கைவிட் டுன்னை யுகப்பா ருணர்வாரே." (ஊர்த் தொகை 7) மற்றும் வருவனவற்றுற் காண்க. (33)

[இன்னும் மநத்தினை உடன் படுத்தித் தேகாபிமாநம் விடல் வேண்டும் என்று மேற் கூறுகின்றது.]

34. என்றும் வீடடைந் தவிறு மாக்கயா னிறப்பை விட் டகலாம, னின்று தான்றலை சாய்க்கவோ நெஞ்சமே நினைத்துணை யாக்கோண்டு, நன்று நீயிதற் கென்செய்கேன் சாவனே நானென லிலையானு, லொன்று செய்மலக் குடிலிதி லவாவைநீக் குமாபதி தரும்வீடே.

(பத உரை) வீடு—மோக்ஷத்தினை, அடைந்தவர்—பெற்றவர், என்றும்—எக் காலமும், இறுமாக்க—(மிக்க மகிழ்வால்) நிமிர்ந்திருக்க, நெஞ்சமே—(யாது ஓர் காரியம் நினைத்தாலும், அதனை எனக்குக் கைவசம் ஆக்குகின்ற) மநமே, நினை—நின்னை, துணை ஆ(க) — உதவியாக, கொண்டும் — பெற்றும், யான் — நான், இறப்பை — (எக் காலமும் இந்த) மரிப்பை, விட்டு — விட்டு, அகலாமல்—நீங்காது, நின்று—நின்று, தலை—சிரசை, சாய்க்கவோ—வளைக்கவோ என்று விவேகம் கூற, அதற்கு, "நின்னைத் துணையாகக் கொண்டும் (யான் தலைசாய்க்கவோ" என்று நியாய நிஷ்டூரம் கூறினீர். உனக்கு, "என்னால் ஆம் காரியம் யாது" என்று உள் வெறுப் போடு மநம் கூற,) நன்று—நல்லது, நீ—நீர், இதற்கு — (இங்ஙனம் சொல்லும்) இதற்கு, என் — என்னை, செய்கேன் — செய்வேன், நான் — யான் (ஞான்), சாவனோ — இறக்கட்டுமா ?, எனல்—என்று (நீ) சொல்லற்க, இலை ஆனால்— (உடம்பின் மேல் அபிமாநம் ஒருங்கே கைவிடு மாற்றல் உனக்கின்றானால், ஒன்று—ஒரு (காரியம்), செய்—செய்குதி (நீ என்று விவேகம் கூற, அதற்கு, அக் காரியம் யாது என்று மநம் கேட்ப), மலம்—(அதற்கு,) மலம் (நிறைந்த), குடில்—குடிசை (ஆகிய) இதில்—இவ் வுடம்பின்கண் (வைத்த), அவாவை—ஆசையை, நீக்கு—(விட்டு) ஒழிப்பாய், உமாபதி—(இது செய்தியேல்) உமைக்குப் பதி யாகிய சிவன், வீடு—(எமக்கு) முக்தியினை, தரும்— (தானே) தருவான் (என்று விவேகம் கூறிற்று.) எ—று.

(இ-பு) என்றும் - உம் - முற்று. நின்று தான் - தான் - அசை நிலை. அடைந்தவர் - தெரி நிலை வினையா லணையும் பெயர். சாய்க்கவோ - ஒ - வினா. நெஞ்சமே - விளி. நினை - இடைக் குறை. ஆக் கொண்டு - ஆ - ஆக என்பதன் கடைக் குறை. கொண்டும் - உம் - உயர்வு சிறப்பு. செய்கேன் - உடன் பாட்டு எதிர் காலத் தெரி நிலை வினை முற்று. கு - சாரியை. சாவனோ - ஒ - வினா. எனல் - எதிர் மறை எதிர் காலத் தெரி நிலை வினை முற்று. என்னல்

என்பதன் இடைக் குறை. இலை - இல்லை என்பத னிடைக் குறை. வீடே - ஏ - ஈற் றசை.

(சிந்-ரை) என்றும் வீ டடைந்தவ ரிறுமாக்க யா னிறப்பை விட்டகலாம னின்று தான் றலைசாய்க்கவோ நெஞ்சமே நினைத் துணையாக் கொண்டும் எ-து,—வீட்டினை அடைந்தவர் எக் கால மும் இறுமாந்துகொண் டிருக்க யான் எக் காலமும் இந்த இறப் பினை விட்டு நீங்காது நின்று தலைவளைக்கவோ, யா தோர் காரியம் நினைத்தாலும் அதனை எனக்குக் கைவச மாக்குகின்ற நெஞ்சமே நின்னைத் துணையாகப் பெற்று மென்று விவேகங் கூற, அதற்கு நின்னைத் துணை யாகக் கொண்டும் யான் றலைசாய்க்கவோ வென்று நியாய நிஷ்டூரங் கூறினீர், உமக்கு என்னா லாங் காரியம் யா தென்று உள் வெறுப்போடு மநங் கூற,

நன்று நீ யிதற் கென் செய்கேன் சாவனோ நா னெனல் எ-து,- நல்லது நீர் இங்ஙனஞ் சொல்லும் இதற்கு என்னை செய்கேன் யான் றான் சாவனோ வென்று நீ சொல்லற்க,

இலையானு லொன்று செய் எ-து,—உடம்பின்மேல் அபிமாநம் ஒருங்கே கைவிடுதல் கூடாதாயினும் ஓர் காரியஞ் செய்குதி நீ யென்று விவேகங் கூற, அதற்கு அக் காரியம் யா தென்று மநங் கேட்ப,

மலக் குடி லிதி லவாவை நீக் குமாபதி தரும் வீடே எ-து,— அதற்கு மல நிறைந்த குடிசை யாகிய இவ் வுடம்பின்கண் வைத்த ஆசையை விட்டு நீங்குதி, இது செய்தியேல் உமைக்குப் பதி யாகிய சிவன் எமக்கு வீட்டினைத் தானே தருவா னென்று விவேகங் கூறிற்று, எ-று.

வீடு ஊர்த்துவ முகமும் பிறப்பு அதோ முகமும் ஆகலின் இறுமாக்க வென்றும், தலைசாய்க்க வென்றும், கூறப்பட்டன. உடம்பின் மேல் அவா நீங்கின் அறிவு திரு வடியை நாடும், அங்ஙனம்

நாடும் போது சிவன் வீடு கொடுத்தல் சித்த மாகலின், உமாபதி தரும் வீ டென்று கூறப்பட்டது "வீ டடைந்தவ ரிறுமாக்க" வென்பதற்கு உதாரணம்: திரு நாவுக் கரையர். "இறுமாந் திருப் பன் கொலோ வீசன் பல்கணத் தெண்ணப்பட்டுச், சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென் றங் கிறுமாந்தி ருப்பன்கொலோ." (அங்க மாலை 11) "குடி லிதி லவாவை நீக்" கென்பதற்கு உதாரணம்: திரு வள்ளுவ நாயனுர். "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க, லுற்றார்க்கு டம்புமி கை." (35–5) மற்றும் வருவனவற்றுற் காண்க. (34)

[தேக போகங்களில் அவா வின்றி யிருத்தற்கு உபாயம் மேற் கூறுகின்றது.]

35. வீடு கூட்டுவான் குறித்ததி னிமித்தமா விமலனீ தலினம்பாற், கூடு மாயையை யெனதியா னெனவெணிக் கோள்வதேன் பயமாசை, நாடு போழ்திவை சுழுத்தியிற் புரந்தவ னேவனவ னநவாதி, யூடு ழூழ்வழி புரப்பனேன் றுள்ளமே யுடல்கைவிட் டிருப்பாயே.

(பத உரை) வீடு—(ஆணவத்தான் மறைபட்டிருந்த எம்மை, இவ் இருளை நீக்கி வீட் டின்பத்தைத் தரல்வேண்டும் என்று யாம் கேளாதிருக்கவும் தனது காருண்யத்தால் எடுத்து) முக்தியினை, கூட்டுவான் — அடைவித்தற் பொருட்டு, குறித்து — (தன் திருவுள்ளத்) தெண்ணி, அதின்—அவ் வீடு அடைதற் குரிய, நிமித் தம் ஆ(க)—ஏதுவாக, விமலன்—நின்மல ஞகிய சிவன், ஈதலின்—(மாயையில் தநு கரண புவந போகங்களைக்) கொடுத்தலின், நம்பால்—(அதனுல்) நம்மிடத்து, கூடும்—(வந்து) பொருந்தும், மாயையை—அம் மாயா காரியங்களை, யான்—(தநு கரணங்களை) யான் (எனவும்), எனது—(புவந போகங்களை) எனது, என—எனவும், எணி—கருத்திக் கொண்டு, பயம்—(இத் தேக போகங்கள்

நீங்கும் என்று) பயமும், ஆசை—(இவை இருக்க வேண்டும் என்று) ஆசையும், கொள்வது — அடைவது, என் — என்னை, நாடு— (உண்மை யாக) விசாரிக்கும், போழ்து—காலையில், இவை—இத் தேக போகங்களை, சுழுத்தியில்—(நீ அபிமானியாதிருக்கவும்) சுழுத் திக்கண், புரந்தவன்—(இவற்றை) பாதுகாத்த விறைவன், எவன்— யாவன், அவன்—அவ் விறைவனே, நனவு—சாக்கிர, ஆதி யூடும்—கனவுக ளுள்ளும், (சுழுத்தியிற் போல் நீ அபிமானியாதிருப்பி னும்) ஊழ் வழி—பழ வினைப் படியே, புரப்பன்–(அவற்றைப்) பாது காப்பான், என்று—என (அறிந்து) உள்ளமே — நெஞ்சமே, உடல்—தேக (பாது காப்பை) கைவிட்டிருப்பாய்—விட்டொழிந் திருத்தி (என்று விவேகம் கூறிற்று.) எ—று.

(இ-பு) அதி னிமித்தம் - ஆறும் வேற்றுமைத் தொகை. இன் - சாரியை. நிமித்த மா - ஆ - 'ஆக' என்பதன் கடைக் குறை. ஈதலின் - இன் - ஏதுப் பொருளில் வந்த ஐந்த னுருபு. என, எணி - இவை இடைக் குறைகள். மாயை - மாயா காரியங்கட் கானமை யின் காரண ஆகு பெயர். என் - 'என்ன' என்பதன் விகாரம். பய மாசை - உம்மைத் தொகை. போழ்து - பொழுது என்பதன் விகாரம். புரந்தவன் - வினையா லணையும் பெயர். நன வாதியூடும் - உம் - இறந்தது தழீஇய வெச்சம். உள்ளமே - விளி. இருப் பாயே - ஈற் றசை.

(சித-ரை) வீடு கூட்டுவான் குறித் ததி னிமித்தமா விமல னீதலி னம்பாற் கூடு மாயையை எ-த,—ஆணவத் தான் மறைபட்டிருந்த எம்மை எமக்கு இவ் விருளை நீக்கி வீட்டின் பத்தைத் தரல்வேண்டு மென் றியாங் கேளாதிருக்கவுந் தனது காருணியத்தால் எடுத்து வீட்டினை அடைவித்தற் பொருட்டுத் திரு வுளத் தடைத்து அவ் வீடு அடைதற்கு ஏது வாக நிருமல னாகிய சிவன் மாயையில் தரு காரண புவந போகங்களைக் கொடுத்தலின் அதனால் நம் மிடத்து வந்து பொருந்து மாயா காரியங்களை,

*என தியா னென வெணிக் கொள்வ தென் பய மாசை எ-து*—தநு கரணங்களை யான் எனவும், புவந போகங்களை எனது எனவும், கருதிக் கொண்டு இத் தேக போகங்கள் நீங்கு மென்று பயமும், இவை யிருக்கவேண்டு மென்று ஆசையும், நீ உட் கொள்வது என்னை,

*நாடு போழ் திவை சுழுத்தியிற் புரந்தவ னெவனவ னனை வாதி யூடு மூழ் வழி புரப்ப னென் றுள்ளமே யுடல் கைவிட்டிருப்பாயே எ-து*,—உண்மையாக விசாரிக்குங் காலையில் இத் தேக போகங்களை நீ அபிமாநியாதிருக்கவுஞ் சுழுத்திக்கண் இவற்றைப் பாதுகாத்த விறைவ னெவன் அவ் விறைவனே யான் எனது என்று உன்னால் அபிமாநிக்கப்பட்ட நனவு கனவுக ளுள்ளும் ஊழ் வினைப்படியே பாதுகாப்ப னென்று அறிந்து நெஞ்சமே உடலைப் பாதுகாத்தல் கைவிட் டிருத்தி யென்று விவேகங் கூறிற்று, எ-று.

மாயை என்பது காரண வாகு பெயர். மநம் அபிமாநியாத சுழுத்தியில் இறைவன் காத்தல் இயல்பாதலினாலும், தநு வாதிகளை மாயையிற் காரியப்படுத்தித் தந்ததனாலும், இவை நான்கும் அவ் விறைவனது உடைமை யென்று அறிக. இதற்கு உதாரணம்: திரு நாவுக் கரையர். "நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன், றென்க டம்பைத்தி ருக்கரக் கோயிலான், றன்க டன்னடி யேனையுந் தாங்குத, லென்க டன்பணி செய்துகி டப்பதே." (கடம்பூர் 9) மற்றும் வருவனவற்றாற் காண்க. (35)

[தேக போகங்களை இறைவன் காத்தல் இயல் பாதலின், யான் அவற்றை அபிமாநியாது இருக்கின்றேன் என்று கூறிய மநத்தைப் பார்த்து, நீ இங்ஙனம் சொல்வது அன்றிச் சொன்ன படி நில்லாய் என்று மேற் கூறுகின்றது.]

36. இருப்பை நாடோறு நெஞ்சமே சுகாசுக மெதுவரு மதுவேயாய்ப், பொருப்பு வில்லிதாள் விருப்பமெவ் வினை

யினைப் புசிக்குஞான் றடைவாயோ, கருப்பை யுற்றுதித் தறற்கும் ழியினழி காயமீ துளபோழ்தே, குருப்பி ரான்றிருக் கழற்குமெய் யன்புநீ கொள்ளறெள் ளிமையாமே.

(பத உரை) *நாள் தோறும்*—*எக் காலமும், நெஞ்சமே—நெஞ்சமே, நீ—நீ, சுக—சுக, அசுகம்—துன்பங்களுள், எது—எவ் (ஒன்று), வரும்—வந்து அடுக்குமோ, அதுவே ஆய்—அவ் வாகாரமே யாகி, இருப்பை— இருக்கின்றாய், எவ் வினையினை—(இத் தேகம் இருக்கும் அளவும் அவ் விரு வினைகளும் வாராத நாள் இன்றாக லின், இவ் வினைகளை அருந்து நாள் இன்றி, இனி) எந்த வினையை, புசிக்கும்—அருந்தும், ஞான்று—நாளில், பொருப்பு—மஹாமேரு கிரியை, வில்லி—வில்லாக வுடைய சிவனது, தாள்—(திரு)வடிக் கண், விருப்பம்—அன்பு, அடைவாயோ—கொள்ளுவாயோ? கரு—(மாதாவினது) கருப்ப, பை—ஆசாயத்தின்கண், உற்று—(வினைக் கீடாய் வந்து) பொருந்தி, உதித்து—(அதன்கட் பத்துத் திங்கள் இருந்து பூமிக்கண்ணே) தோன்றி, அறல்—நீர், குமிழியின்—குமிழி போன்று, அழி—(விரைவில்) நசிக்கும், ஈது—இந்த, காயம்—தேகம், உள—இருக்கும், போழ்தே—போதுதானே, குரு—(மிக விரைந்து நம்) ஆசாரிய னாகிய, பிரான்—இறைவனது, திரு கழற்கு—திரு வடிக்கு, மெய்—உண்மை, அன்பு—பத்தி, கொள்ளல்—(மனதுட்) கொள்ளுதல், தெள்ளிமையாம்—(மயக்கம் அறத்) தெளிந்த தன்மையாம். (என்று விவேகம் கூறிற்று) எ—று.*

(இ-பு) *நா டொறும் - தொறு - காலப் பன்மைப் பொருளில் வந்த இடைச் சொல். உம் - முற்று. நெஞ்சமே - விளி. சுக + அசுகம் = சுகாசுகம் - வட மொழித் தீர்க்க சந்தி. ஞான்று - காலங் காட்டு மிடைச் சொல். அடைவாயோ - ஓ - வினா. குமிழியின் - இன் - உவம வுருபு. ஈது - நீண்ட சுட்டு. போழ்து - பொழுது என்பதன் விகாரம். குருப் பிரான் - வட மொழிச் சந்தியாயினும்*

எதுகை நோக்கிப் பகர வொற்று மிக்கது. தெள்ளிமை - பண்புப் பெயர். ஆமே - ஏ - ஈற் றசை.

(சிறு-ரை) இருப்பை நா டொறு நெஞ்சமே சுகாசுக மெது வரு மதுவேயாய்ப் பொருப்பு வில்லி தாள் விருப்ப மெவ் வினை யினைப் புசிக்கு ஞான் றடைவாயோ எ-து,—எக் காலமும் நெஞ்சமே நீ சுகதுக்கங்களுள் எது வொன்று வந் தடுக்குமோ அது தானே வடிவாகி யிருக்கின்றாய்; இக் தேகம் இருக்கு மளவும் அவ் விரு வினை களும் வாராத நாள் இன்றாதலின் இவ் வினைகளை அருந்து நா ளின்றி இனி எந்த வினையை அருந்து நாளிற் குன்ற வில்லி யாகிய சிவனது திரு வடிக்கண் விருப்பத்தை அடைவாயோ,

கருப்பையுற் றுதித் தறற் குமிழியி னழி காய மீதுள போழ்தே குருப் பிரான் றிருக் கழற்கு மெய் யன்பு நீ கொள்ள றெள்ளிமையாமே எ-து, — மாதாவினது கருப்பாசயத்தின்கண் வினைக் கீடாய் வந்து பொருந்தி அதன்கட் பத்துத் திங்க ளிருந்து பூமிக்கண்ணே தோன்றி நீர்க் குமிழி போன்று விரைவில் அழியும் இந்தக் காயம் இருக்கும் போது தானே மிக விரைந்து நமது ஆசாரிய னாகிய கருத்தனது திரு வடிக்கு மெய்ப் பத்தி மநதுட் கொள்ளுதல் மயக்க மறத் தெளிந்த தன்மையா மென்று விவேகங் கூறிற்று, எ-று.

சமுத்திர ஸ்நாநம் பண்ணத் தொடங்கினேன் அலைகளை நாடாது மூழ்கித் தனது விரத முடித்தல் போலத், திரு வடியை அடையத் தொடங்கினேன் இரு வினைகளை நாடாது அத் திரு வடியை அடைதலையே விரத மாகக் கொள்ளல் வேண்டு மென்றற்கு எவ் வினையைப் புசிக்கும் ஞான் றடைவாயோ வென்றும், குரு பத்தி யுடையோர்க்கு வீடு எளிதிற் கூடுமாகலின் மெய் யன்பு கொள்ள றெள்ளிமை யென்றும் கூறப்பட்டன. இதற்கு உதா ரணம்: பொன் வண்ணத் தந்தாதி. "தொடங்கிய வாழ்க்கையை

வாளாது றப்பர்து றந்தவரோ, யடங்கிய வேட்கைய ரன்பா லிலாறு காற்பறவை, முடங்கிய செஞ்சடை முக்கண ஞர்க்கன்றி யிங்கு மன்றிக், கிடங்கினுட் பட்டக ராவனே யார்பல கேவலரே." (64)
மற்றும் வருவனவற்றுற் காண்க. (36)

37. ஆமை யாருறுப் பைந்தையு மோர்மெயு ளடக் கலிற் புலனேந்துந், தீமை சேர்விட யங்களிற் செலாதமைத் துள்ளமே சிவைபாக, சோம சேகரன் சரணமே சரணேனத் தொழுது நின் றழுதன்னே, ஞம நாவினுற் செபித்திலே யவத் திலே நாளேலாங் கழித்தாயே.

(பத உரை) உள்ளமே—நெஞ்சமே, ஆமை—ஆமையானது, ஆர்—(தனது) அரிய, ஐந்து—(ஐந்து) பஞ்ச, உறுப்பையும்—அவயவங்களேயும், ஓர்—(தீமை வரு மிடத்து தனது) ஒரு, மெய்யுள்—உடம்பின்கண், அடக்கலின்—ஒடுக்கிக் கொள்ளுதல் போல, ஐந்து—பஞ்ச, புலனேயும்—இந்திரியங்களேயும், தீமை—பாவங்களுக்கு, சேர்—(ஏதுவாய்) வருகின்ற, விடயங்களில்—விஷயங்களில், செலாது—போக ஒட்டாது, அமைத்து—(விவேகத்தால்) உள் ளடக்கி, சிவை பாக சோமசேகரன்—கௌரியைப் பாகத்திலே வைத்த சந்திர சூட ஞகிய சிவனது, சரணமே—(திரு) வடிகளே, சரண்—அடைக்கலம், என—என்று, தொழுது — வணங்கி, நின்று—நின்று, அழுது—(அத் திருவடிகளே அன்பால் நினேந்து உருகி) அலறி, அன்னேன்—அவனது, நாமம்—திருப் பெயர் (ஆகிய ஐந்து எழுத்தினேயும்) நாவினுல்—நாக்கினுல், செபித்திலே—(இடைவிடாது) செபித்தா யில்லே, அவத்திலே—(மித்தையாகிய தேக போகங்களேக் கருதி) வீண் தொழிலிலே, நாள்—(வாழ்) நாள், எலாம்—அனேத்தும், கழித்தாய்—(வீ ணுளாகக்) கழித்தனே (இது என்னே என்று விவேகம் கூறிற்று.), எ—று.

(இ-பு) ஆர்-அருமை என்பதன் விகாரம். உறுப் பைந்தையும், புல னேந்தையும்-என்புழி எண்ணின்க ணின்ற உம்மைகள்

உறுப்பு புலன்களோடு பிரித்துக் கூட்டப்பட்டன. உம் - இரண்டும் முற் றும்மைகள். மெயுள், செலாது, என, இலை, எலாம் - இவை இடைக் குறைகள். உள்ளமே - விளி. சரணமே - ஏ - தேற்றம். சேகரன் - தெரி நிலை வினையா லணையும் பெயர். அன்னேன் - குறிப்பு வினையா லணையும் பெயர். அவத்திலே - ஏ - பிரி நிலையும் தேற்றமு மாம். அவம் - என்பது அவத் தொழிலைக் குறித்து நின்றது. கழித்தாயே - ஏ - ஈற் றசை.

(சித-ரை) ஆமை யா ருறுப் பைந்தையு மோர் மெயு ளடக் கலிற் புல னைந்துந் தீமை சேர் விடயங்களிற் செலா தமைத்து எ-து,—ஆமையானது தனது அரிய ஐந்து அங்கத்தினையும் தீமை வருமிடத்துத் தனது ஓ ருடம்பின்கண் அடக்கிக் கொள்ளுதல் போலப் பஞ்சேந்திரியங்களையும் பாவங்களுக்கு ஏதுவாய் வருகின்ற விஷயங்களிற் போக வொட்டாது விவேகத்தால் உள் ளடக்கி,

உள்ளமே சிவை பாக சோம சேகரன் சரணமே சர ணெனத் தொழுது நின்றழு தன்னேனு மை நாவினாற் செபித்திலை யவத்திலே நா ளெலாங் கழித்தாயே எ-து,—நெஞ்சமே கௌரியைப் பாகத் திலே வைத்த சந்திர சூட னாகிய சிவனது திரு வடிகளே அடைக் கல மென வணங்கி நின்று அத் திரு வடிகளை அன்பால் நினைந்து உருகி அழுது அவனது திரு நாம மாகிய ஐந் தெழுத்தினையும் நாவினால் இடை விடாது செபித்தா யில்லை; மித்தையாகிய தேக போகங்களைக் கருதி அவத் தொழிலாலே வாழ் நா ளெல்லாம் வீ ணாளாகக் கழித்தனை இது என்னை யென்று விவேகங் கூறிற்று, எ-று.

அவ மென்பது தொழிலின் மேல் நின்றது. "ஆமை யாரு றுப் பைந்தையு" மென்பதற்கு உதாரணம்: திரு வருட் பயன். "புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவார் போதார், தலநடக்கு

மாமை தக." (94) "நாவிஞற் செபித்திலே" என்பதற்கு உதார ணம்: அருண கிரி யந்தாதி. "பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக்க ரத்தைப், பரப்பரப்ப வெண்ணுத பாவ; நரகப், பிறப்பிற்கு மீடாப்பி றந்தருணை யீசா, விறப்பிற்கு மீடாயி னேன்." (58) மற்றும் வருவனவற்ருற் காண்க. (37)

38 தாயு மாகியேன் றந்தையாய் வந்துதா டருசிவப் பிரகாசன், றூய போன்னருள் வேண்டிலே யீண்டுநின் றுணி விருந் தமையேன்னே, காய மாயமேன் றறிந்துமா தர்கடரு கலவிவேண் டினேயேன்ருற், றீயை நீமிக நேஞ்சமே யிதற் கியான் செய்வதோன் றறியேனே.

(பத உரை) என்—என் னுடைய, தாயும் ஆகி—மாதாவும் ஆகி, தந்தை ஆய்—பிதாவும் ஆகி, வந்து—(எழுந் தருளி) வந்து, தாள்—(திரு) வடிகளை, தரு—(எளிதிலே) தந்த, சிவப் பிரகாசன்—சிவப் பிரகாசன் என்னும் நாமதேயத்தை யுடைய ஆசாரியனது, தூய—நின்மலம் ஆகிய, பொன்—பொன் (போன்ற), அருள்—கிருபையை, வேண்டிலே—விரும்புகின்றிலே, ஈண்டு—இவ் விடத்து, நின்—உனது, துணிவு—கருத்து, இருந்தமை—இருந்த தன்மை, என்னே—யாது கொலோ (யான் அறிகிலேன்), காயம்—தேகம், மாயம் — அநித்தியம், என்று — என, அறிந்தும்—தெரிந்தும், மாதர்கள்—மகளிர்கள், தரு—கொடுக்கின்ற, கலவி—புணர்ச்சியை, வேண்டினே—விருப்பினே, என்ருல்—எனின், நெஞ்சமே—மநமே, நீ—நீ, மிக—மிகவும், தீயை—பாவியாயினே, இதற்கு—(யான் என்ன கூறினும் கேட்டிலே யாகலின்) இதற்கு, யான்—நான், செய்வது—செய்யத் தக்கதாகிய, ஒன்று—ஒரு (உபாயமும்) அறி யேன்—அறிந்திலேன் (என்று விவேகம் கூறிற்று) எ—று.

(இ-பு) தாயும் - உம் - எதிரது தழீஇய வெச்சம். என்னே—ஓ - விஞ. அறிந்தும் - உம் - இறந்தது தழீஇய வெச்சம். உயர்வு

சிறப்பு எனலு மாம். நெஞ்சமே - விளி, அறியேனே - ஏ - ஈற்றசை. தாள் தருதல் - திரு வடி தீக்ஷை.

(சிந-ரை) தாயு மாகி யென் றந்தையாய் வந்து தா டரு சிவப்பிரகாசன் றாய பொன் னருள் வேண்டிலை யீண்டு நின் றுணி விருந்தமை யென்னோ எ-று,—மாதாவு மாகிப் பிதாவு மாகி எழுந்தருளி வந்து திரு வடிகளை எளிதிலே தந்த சிவப்பிரகாச னென்னும் நாமதேயத்தை யுடைய ஆசாரியனது நிர்மலமாகிய பொன் போன்ற கிருபையை விரும்புகின்றிலை; இவ் விடத்து நின் கருத்து இருந்த தன்மை யென்கொலோ யான் அறிகிலேன்,

காய மாய மென் றறிந்து மாதர்க டரு கலவி வேண்டினை யென்றூற் றீயை நீ மிக நெஞ்சமே யிதற் கியான் செய்வ தொன் றறியேனே எ-று,—தேகம் அநித்திய மென்று அறிந்தும் மாதர்களால் உண்டாகிய கூட்டுறவினை விரும்பினை யென்றால் நெஞ்சமே நீ மிகவும் பாவியாயினை; யான் என்ன கூறினுங் கேட்டிலையாகலின் இதற் கியான் செய்வது ஓ ருபாயமும் அறியே னென்று விவேகங் கூறிற்று, எ-று.

தா டருதல் - திரு வடி தீக்ஷை. "தாயுமாகி யென்பதற்கு" உதாரணம்: தத்துவ ராயர். "தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு, மந்தமிலா வின்பநமக் காவானு—மெந்தமுயிர், தானுகு வானுஞ் சரணுகு வானுமருட், கோனுகு வானுங்கு ரு." "செய்வ தொன் றறியேனே" யென்பதற்கு உதாரணம்: திரு வாசகம். "ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப், பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர், சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே, தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே." (ஆத்ம சுத்தி 1) மற்றும் வருவனவற்றூற் காண்க. (38)

39. ஏனை நூல்பல வோதினை யோதவற் றிறையரு ளடையாதார்க், கூன் வெம்பவ மொழிப்பதற் குள்ளமே யுபாயம்வே றிலையானல், ஆனை யீருரி போர்த்தவென் றம்பிரா னருள்விரைந் தடையாதே, தானி நாண்மினார் போகநீ வியந்தது தப்பலாற் சதுரன்றே.

(பத உரை) உள்ளமே—நெஞ்சமே, ஏனை—(ஞான சாஸ்திரங்கள் அன்றி) வேறு, பல—அநேக, நூல்—(சமய) சாத்திரங்களையும், ஓதினை—கற் றுணர்ந்தாய், அவற்று—அந் நூல்களின்கண், இறை—இறைவனது, அருள்—(திரு) அருளை, அடையாதார்க்கு—பெறுதார்க்கு, ஊன—இழிவு (பொருந்திய), வெம்—கொடிய, பவம்—பிறவியை, ஒழிப்பதற்கு—நீக்குதற்கு, ஓது—சொல்லப்படுகின்ற. உபாயம்—உபாயம், வேறு—(திரு வரு ளடைதலைத் தவிர) வேறு (ஒன்றும்), இலை—இல்லை, ஆனல்—ஆனபடியால், ஆனை—யானையினது, ஈர்—குளிர்ச்சி (பொருந்திய), உரி—தோலை, போர்த்த—(போர்வையாகத்) தரித்த, என்—என் னுடைய, தம் பிரான்—தலைவ னுகிய சிவனது, அருள்—கிருபையினை, விரைந்து—சீக்கிரத்தில், அடையாது—(பெறுதற் கேதுவாயவற்றைச் செய்து) பெறுது, இ நாள்—இந் நெடுங் காலமும், மினார்—மின் போலும் (சிறிய) இடையினை யுடைய மகளிரது, போகம்—புணர்ச்சியை, நீ—நீ, வியந்தது—(இன்பம் என்று) அதிசயித்தது, தப்பு—தவறே, அலால்—அன்றி, சதுர்—நன்மை, அன்று—அன்று (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ·பு) அவற்று - இத னீற்றில் ஏழ னுருபு தொக்கது. ஓது - பெய ரெச்சம். இப் பெய ரெச்சத்தை, "அவற்று" என்பதற் கடையாக்குவதைக் காட்டிலும், "உபாயம்" என்பதற் கடையாக்கலே அர்த்தச் சிறப் புடைத்தாம் ஆகலின், அங்ஙன் கொள்க. அடையாதார்-தெரி நிலை வினையா லணையும் பெயர். உள்ளமே - விளி. ஈ ருரி - குளிர்ச்சி பொருந்திய (அதாவது ஈர மாகிய) உரி (தோல்) என்னும்

அர்த்தப்படி, (ஈர + உரி) ஈர என்னும் பெய ரெச்சத்தின் அகர விகுதி தொக்கு ஈர் என நின்றது. அல்லது, ஈர் - பிள, அல்லது, உரி என்னும் அர்த்தப்படி, "ஈருரி" என்பதை வினைத் தொகை யாகக் கொண்டு, உரித்த தோல் எனவும் அர்த்தங் கொள்ள லாம். அடையாதே தான் - ஏ, தான் - இரண்டும் அசை நிலைகள். இ + நாள் = இந் நாள் என நகரம் மிக வேண்டிய விடத்து, மிகாது "இநாள்" என நின்றது இன் னோசை குறித் தென்க. மின்னார் - மின் - ஈண்டு உவம வாகு பெயராய் மின்னற் கொடி போன்ற சிறிய இடையினைக் குறித்து நின்றது. மின்னார் - குறிப்பு வினையா லணையும் பெயர். வியந்தது - ஈண்டு வியந்த தன்மையைக் குறித்துப் பெய ராய் நின்று, "அன்று" என்னும் வினை முற்றுக் கொண்டது. அன்றே - ஏ - ஈற் றசை.

(சிந்-ரை) ஏனை நூல் பல வோதினை எ-து,—ஞாந சாத்தி ரங்க ளன்றிப் பல சமய சாத்திரங்களையும் கற் றுணர்ந்தாய்,

ஓ தவற் றிறை யரு ளடையாதார்க் கூன வெம் பவ மொழிப் பதற் குள்ளமே யுபாயம் வேறிலையானால் எ-து,—நீ கற் றறிந்த அந் நூல்களின் கருத் தெல்லாம் இறைவனது திரு வருளைப் பெறு தார்க்கு இழிவு பொருந்திய கொடிய பிறவியை நீக்குதற்கு உபாயம் வே றொன்றும் இல்லை யென நெஞ்சமே ஓது மானால்,

ஆனை யீருரி போர்த்த வென் றம்பிரா னருள் விரைந் தடை யாதே தா னிநாண் மின்னார் போக நீ வியந்தது தப்பலாற் சது ரன்றே எ-து,—யானையினது குளிர்ச்சி பொருந்திய உரியைப் போர்த்த எனது கருத்த னாகிய சிவனது திரு வருளைச் சீக்கிரத்தில் அடைதற்கு ஏதுவாயவற்றைச் செய்து அடையாது இந் நெடுங் காலமும் மின் போலும் இடையினை யுடையார் போகத்தை நீ இன்ப மென்று அதிசயித்தது தவறே யன்றி நன்மை யன் றென்று விவேகங் கூறிற்று, எ-று.

*இலை யென்பதனோடு ஒ தென்பதனைக் கூட்டி முடிக்க. என வென்பது எஞ்சிநின்றது. தான் என்பது அசை நிலை. இதற்கு உதாரணம்: கந்த ரநுபூதி.* "*ஆதா ரமிலே னருளைப் பெறவே, நீதா னொருசற் றுநினைந் திலையே, வேதா கமஞா நவிநோ தமநோ, தீதா சுரலோ கசிகா மணியே,*" (26) *என்றும், திரு வள்ளுவ நாயனார்:* "*பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா, ரிறைவனடி சேரா தார்.*" (1–10) *என்றும் மற்றும் வருவனவற்றாற் காண்க.* (39)

40. சதுர்ம றைப்பொரு ளாகிய வொருசிவ சங்கரற் றொழுதன்பாய், விதிர்வி திர்த்துமெய் பொடித்திலை நடித்திலை விரைந்துசென் றவனாடும், பொதுவை யுற்றிலை நிற்றிலை மாதர் பாற் போகுத றவிர்ந்தாவா, வெதுப டக்கட வாய்மட நெஞ்சமே யினியுட லகன்றாலே.

(பத உரை) *சதுர்–(இருக்கு முதலிய) நான்கு, மறை–வேதங்களினது, பொருள் ஆகிய–(முடிக்கண் விளங்கும் மெய்ப்) பொருள் ஆகிய, ஒரு–ஒப்பற்ற, சிவ சங்கரன்–சிவ மாகிய சங்கரனது (திருவடியை), தொழுது–வணங்கி, அன்பாய்–(அதற்கு) பக்தி யாய், மெய்–தேகம், விதிர் விதிர்த்து(இலை)–நடு நடுங்கிலை, பொடித்திலை–(உரோமஞ்) சிலிர்ப் புற்றிலை, நடித்திலை–(ஆநந்த) நடநம் புரிந்தா இல்லை, விரைந்து–(அதி) சீக்கிர மாய், சென்று–போய், அவன்–அச் சிவன், ஆடும்–நடநம் புரியாநின்ற, பொதுவை–(கநக) சபையை, உற்றிலை–அடைந்தா யில்லை, மாதர்பால்–மகளிரை விழைந்து அவர் களிடத்து, போகுதல்–செல்லுதலை, தவிர்ந்து–ஒழிந்து, நிற்றிலை–நின்றா யில்லை, ஆ-ஆ–அந்தோ, அந்தோ, மட–அறியாமை கொண்ட, நெஞ்சமே–உள்ளமே, இனி–இப் பொழுது, அல்லது, பின்னால், உடல்–(இத்) தேகம், அகன்றால்–நீங்கினால், எது–என்ன, படக் கடவாய்–(பாடு) படக் கடவையோ (யான் அறிகிலேன் என்று விவேகம் கூறிற்று) எ–று.*

(இ-பு) விதிர் விதிர்த்தலை - இணை பிரியாத் தொடர் மொழி யாகக் கொள்ளல் வேண்டும். என்னை? பிரிப்பின், ''விதிர்'' என்பதற்கு, ''நடு'' எனல் அர்த்த மாகாது. பின்னரோ, 'நடுங்கு' எனல் வேண்டும். அங்ஙன் கொள்ளின், ''விதிர் விதிர்த்து'' என்பதற்கு, ''நடுங்கு நடுங்கி'' என லாம். அங்ஙன் வாராது 'நடு நடுங்கி' எனலே மர பாதலின், அதற் கேற்க,''விதிர் விதிர்த்து''என இணை பிரியாப் பத மாகக் கொள்க. ''விதிர் விதிர்த்து'' என்னும் வினை யெச்சம் ''இலை'' என்னும் வினை முற்றுக் கொண்டது. இலை - இடைக் குறை. மாதர்பால் - பால் - ஏழ னுருபு. தவிர்ந்து - என்னுந் தெரி நிலை வினை யெச்சம், நிற்றிலை என்னும் வினை முற்றுக் கொண்டது- ஆ ஆ - இரக்கக் குறிப்பு. நெஞ்சமே - விளி. அகன்றுலே - ஏ . ஈற் றசை.

(சிந-ரை) சதுர் மறைப் பொரு ளாகிய வொரு சிவ சங்கரற் ருெழு தன்பாய் விதிர் விதிர்த்து மெய் பொடித்திலை நடித்திலை விரைந்து சென் றவ னுடும் பொதுவை யுற்றிலை எ-து,—இருக்கு முதலிய நான்கு வேதங்களினது முடிக்க ணிருக்கு மெய்ப் பொரு ளாகிய சிவ சங்கரனது திரு வடியை வணங்கி அதற்கு அன் பாகித் தேக நடு நடுங்கிலை; உரோமஞ் சிலிர்ப்புற் றிலை; ஆநந்த நடனம் புரிந்தா யில்லை; அதி சீக்கிர மாய்ச் சென்று அவன் நடனம் புரியா நின்ற கநக சபை அடைந்தா யில்லை,

நிற்றிலை மாதர்பாற் போகுத றவிர்ந் தாவா வெதுபடக் கடவாய் மட நெஞ்சமே யினி யுட லகன்றுலே எ-து,—மகளிரை விழைந்து அவர்பாற் செல்லுதலைத் தவிர்ந்து நின்று யில்லை; ஆ வா! நெஞ்சமே இனி இந்தத் தேகம் நீங்கிஞல் என்ன பாடுபடக் கடவையோ? யான் அறிகிலே னென்று விவேகங் கூறிற்று. எ-று.

ஆ வா வென்பது இரக்கக் குறிப்பின்கண் வந்தது. பொதுவை யுற்றிலை யென்பது எல்லா வுயிர்க்கும் பொதுவாய் நடிக்கும் அவனது பஞ்ச கிருத்தியங்களைப் பார்த்திலை யென்றுமாம். இதற்கு

உதாரணம்: திரு வாசகம் "மெய்தா னரும்பிவி திர்விதிர்த்துன் விரையார் கழற்கென், கைதான் றலைவைத்துக் கண்ணீர்த தும்பிவெ தும்பியுள்ளம், பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றிச யசய போற்றியென்னுங், கைதா னெகிழவி டேனுடை யா யென்னைக் கண்டுகொள்ளே." (திருச் சதகம் 1) மற்றும் வருவன வற்றுற் காண்க. (40)

41. ஆல நீழலி லன்றொரு நால்வருக் கருநெறி யுரைத் தானைக், கால காலனைச் சிவப்பிர காசவென் கண்மணி தனையுன்னு, தேல வார்குழ லார்மயல் கொண்டுநீ யிங்குழ லுவதெல்லாம், சால வேபிழை யாகுநெஞ் சேசொனேன் றவறிலை யென்மேலே.

(பத உரை) ஆல—(கல்) ஆல (விருட்ச), நீழலில்—நிழற்கண், அன்று—(எழுந் தருளி யிருந்த) அக் காலத்தில், ஒரு—ஒப்பற்ற, நால்வருக்கு—(சநகர் முதலிய) நான்கு முனிவர்கட்கும், அரும்—(யாவர்க்கும்) அரிய, நெறி—(ஞான) மார்க்கத்தினை, உரைத்தானை—உபதேசித் தருளிய (அநுக்கிரக) கர்த்தனை, கால—(எல்லா உயிர்களையும் நாசம் பண்ணுகின்ற) காலனுக்கு, காலனை—கால னாகி (அவனை நாசம் பண்ணிய நிக்கிரக) கர்த்தனை, சிவப் பிரகாச—(அக் கருத்தன் றானே அருளே திரு மேனியாகக் கொண்டு எழுந்தருளி வந்து) சிவப் பிர காசன் என்னும் (நாமதேயத்தைக் கொண்ட,) என்—என் னுடைய கண்—கண்ணினது, மணிதனை—கரு மணி போன்ற (அருமையுஞ் சிறப்பும் வாய்ந்த) ஆசாரியனை, உன்னாது—(வீட்டு இன்பத்தை அடையும் பொருட்டு, இடையறாது அன்போடு கூடி) நினையாது. ஏல—தகரம் (மயிர்ச் சாந்து) ஊட்டிய, வார்—நீண்ட, குழலார்—அளக பாரத்தினை யுடைய மகளிர் (மேல்), மயல்—மயக்கம், கொண்டு—பூண்டு, நீ—நீ, இங்கு—இப் பிரபஞ்சத்தில், உழலுவது—சுழலுவது, எல்லாம்—அனைத்தும், சால—மிகவும், பிழை யாகும்—குற்ற மாகும், நெஞ்சமே—மனமே, சொனேன்—(யான் நானா உபாயங்களாலும்,

இதனைத் துன்பம் என்று அறிவித்தேன்) அங்ஙன் அறிவித்தும் (அறிந்தா யில்லை யாதலின்), என் மேல்—(உன் மேற் குற்றமே யன்றி) என்னிடம், தவறு—குற்றம், இலை—இன்று (என்று விவேகம் கூறிற்று) எ-று.

(இ-பு) நீழலில் - நீழல் - நிழல் என்பதன் விகாரம். இல் - ஏழ னுருபு. நால்வருக்கு - என்பத னீற்றில் முற் றும்மை தொக்கது. கால காலன் - நான்காம் வேற்றுமைத் தொகை. சிவப் பிரகாச (என் கண்) மணி - பண்புத் தொகை. கண் மணி - ஆறும் வேற் றுமைத் தொகை. ஈண்டு மணி போன்ற ஆசாரியனை மணி யென உபசரித்தார். கண் மணி, 'இது தீது இது நன்று' என்று அறி வித்தல் போலப், பிறப்புத் துன்ப மென்றும், வீடு இன்ப மென்றும், அறிவித்தலின், கண் மணியை ஆசாரியருக்கு உவமை யாக்கினர். மணிதனை - தன் - சாரியை. குழலார் - குறிப்பு வினையா லணையும் பெயர். சாலவே - ஏ - அசை நிலை. சால - மிகுதிப் பொருட் டாய வுரிச் சொல். நெஞ்சே - விளி. சொனேன், இலை - இவை இடைக் குறைகள். மேலே - ஏ - ஈற் றசை.

(சித-உரை) ஆல நீழலி லன் றொரு நால்வருக் கரு நெறி யுரைத்தானை எ-து—, கல்லால நிழற்கண் எழுந்தருளி யிருந்த காலத்தில் ஒப் பற்ற சநகர் முதலிய நான்கு முனிவருக்கு யாவர்க் கும் அரிய ஞான மார்க்கத்தினை உபதேசித் தருளிய அநுக்கிரக கர்த்தனை,

கால காலனை எ-து,—எல்லா வுயிர்களையும் நாசம் பண்ணு கின்ற காலனுக்குக் கால னாகி அவனை நாசம் பண்ணிய நிக்கிரக கர்த்தனை,

சிவப் பிரகாச வென் கண் மணிதனை யுன்னுது எ-து,—அக் கருத்தன் றானே அருளே திரு மேனி யாகக் கொண்டு எழுந்தருளி வந்து சிவப் பிரகாச னென்னும் நாமதேயத்தைக் கொண்ட என்

கண்ணின்கண் மணி யாடு பாவை போன்ற ஆசாரியனை வீட் டின்பத்தை அடையும் பொருட்டு இடையறுது அன்போடுங் கூடி நினையாது,

ஏல வார் குழலார் மயல் கொண்டு நீ யிங் குழலுவ தெல்லாஞ் சாலவே பிழையாகு நெஞ்சே சொனேன் றவறிலை யென் மேலே எ-து,—தகர மூட்டிய நீண்ட அளக பாரத்தினை யுடைய மகளிர் மேல் மயக்கம் பூண்டு நீ இப் பிரபஞ்சத்திற் சுழலுவ தெல்லாம் மிகவுங் குற்ற மாகும் நெஞ்சமே யான் நாநா வுபாயங்களாலும் இதனைத் துன்ப மென்று அறிவித்தும் அறிந்தா யில்லை யாதலின் உன் மேற் குற்றமே யன்றி என் மேற் குற்ற மின் றென்று விவேகங் கூறிறறு, எ-று.

கண் மணி, தீது இது, நன்று இது என்று அறிவித்தல் போலப் பிறப்புத் துன்ப மென்றும், வீடு இன்ப மென்றும், அறிவித்தலிற் கண் மணி யென்று கூறப்பட்டது. இதற்கு உதாரணம்: திருவாசகம். "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட், டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே, சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும், வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே." (திருச் சதகம் 20) என்றும், சிவாநந்த மாலை. "வீடொழியப் பேறில்லை யென்றென்றும் வேதங்க, ளோடியறையும்பொருளை ஞாநகுரு—நீடுமருட், கண்ணாலே சொன்னகருணைப்பி ரான்றனைநா, னெண்ணாதே யுண்டிருப்ப தென்." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க. (41)

42. என்னை கண்டுநீ மாதரார் வடிவமீ திச்சைவைத் துழல்கின்றாய், பொன்னை யுந்துகி லையும்பிரித் திடின்வெறும் புழுமலக் கூடல்லாற், பின்னை யுண்டுகோல் கண்டுநீ மயங்குதல் பிராந்திசங் கரன்பாதம், தன்னை நாடுதி நெஞ்சமே பரசுகோ ததியுறப் பெறலாமே.

(பத உரை) நீ—நீ, என்னை—யாது, கண்டு—(சுத்தம் இருக்கின்றது என்று) குறித்து, மாதரார்—மகளிரின், வடிவ மீது—உடலின்கண், இச்சை—ஆசை, வைத்து—வைத்து, உழல்கின்ருய்—(மயங்கிச்) சுழலாநின்றனை, பொன்னையும்—(செயற்கையால் மினுக்கிய) பொன்னு லாகிய அணியினையும், துகிலையும்—கூறையினையும், பிரித்திடின்—(வேறு) பிரித்து (அதனது இயற்கையைப் பார்க்குமிடத்து), வெறும்—முழு, புழு—கிருமிகளும், மல—(மலம் சலம் குடர் மூளை உதிரம் தசை கோழை முதலிய) மலங்களும் (நிறைந் துள்ள ஓர்), கூடு—கூண்டு, அல்லால்—அல்லது, பின்னை—மேலும், உண்டு கொல்—(அத்ன்கண்ணே யா தாயினும் ஒரு சுத்த வஸ்து) உளதோ, கண்டு—(அதனது இயற்கை வடிவம் அங்ஙனம் இருப்பச் செயற்கை வடிவத்தைப்) பார்த்து, நீ—நீ, மயங்குதல்—மோகம் உறுதல், பிராந்தி—(உனது மநப்) பிரமை யாகும், சங்கரன்—(இனி அதன் மேல் ஆசையை விட்டு நீங்கிச்) சங்கரனது, பாதம் தன்னை—திரு வடியை, நாடுதி—(மறவாது) நினைப்பாய், நெஞ்சமே—மநமே, பர—மே லாகிய, சுக—இன்ப, உத்தி—சாகரத்தை, உற—மிகவும், பெற லாம்—(யாம்) அடைய லாம் (என்று விவேகம் கூறிற்று.) எ—று.

(இ-பு) என்னை - என்ன என்பதன் விகாரம். மாதரார் - ஆர் - அர் விகுதி மேல் வந்த பலர் பால் விகுதி. வடிவ மீது - மீது - ஏழ னுருபு. பொன்னையும், துகிலையும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. பொன் - ஈண்டு, அத னுலாய அணிக்குக் காரண வாகு பெய ராயிற்று. புழு மலம் - உம்மைத் தொகை. பின்னை—பின் என்பதன் விகாரம். உண்டு கொல் - கொல் - வினு. பாதந்தன்னை - தன் - சாரியை. நெஞ்சமே - விளி. சுக + உததி = சுகோததி—வட மொழிக் குண சந்தி. உற - மிகுதிப் பொருளில் வந்த உரிச் சொல். பெறலாமே - ஏ ஈற் றசை.

(சித-ரை) என்னை கண்டு நீ மாதரார் வடிவமீ திச்சை வைத்துழல் கின்றாய் எ-து,—யாது சுத்த மிருக்கிற தென்று குறித்து மகளிர் உடலின்கண் ஆசை வைத்து மயங்கிச் சுழலாகின்றனை,

பொன்னையுந் துகிலையும் பிரித்திடின் வெறும் புழு மலக் கூடல்லாற் பின்னை யுண்டு கொல் கண்டு நீ மயங்குதல் பிராந்தி எ-து,—செயற்கையால் மினுக்கிய பொன்னு லாகிய அணியினையுங் கூறையினையும் வேறு பிரித்து அதனது இயற்கையைப் பார்க்குமிடத்து வெறுங் கிருமிகளும் மலம் சலம் குடர் மூளை உதிரம் தசை கோழை முதலிய மலங்களும் நிறைந் துள்ள ஒ ருடம்பல்லது பின்னை அதன்கண்ணே யாதாயினும் ஒரு சுத்த வஸ்து உளதோ அதனது இயற்கை வடிவம் அங்ஙன மிருப்பச் செயற்கை வடிவத்தைப் பார்தது நீ மயக்க முறுதல் உனது மநப் பிரமையாகும்,

சங்கரன் பாதந்தன்னை நாடுதி நெஞ்சமே பரசுகோத திபுறப் பெறலாமே எ-து;—இனி அதன்மே லாசையை விட்டு நீங்கிச் சங்கரனது திரு வடியை மறவாது நினைப்பாய் நெஞ்சமே மே லாகிய இன்ப சாகரத்தை மிகவும் யாம் அடையலா மென்று விவேகங் கூறிற்று, எ-று.

பொன் என்பது ஆகு பெயர். இதற்கு உதாரணம்: நா லடியார். "குடருங் கொழுவுங் குருதியு மென்புந், தொடருந ரம்பொடு தோலு—மிடையிடையே, வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று, ளெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்." (5—5) மற்றும் வருவன வற்றுற் காண்க. (42)

43. பேறுவ தென்னைகோல் சுக்கிலங் கலித்தலாற் பெருந்தவ வலிகுன்று, முறுவ தவ்வள வோபினை நீவிரும் புடற்குமா னியதுண்டா, லறிவி யாமறி யாமைதோய்ந் துடற் றின வதைச்சுக மேனுநின்றாய், சேறிது நெஞ்சமே நமதுசிற் சுகமினிச் சிவனையா தரிப்பாயே.

(பத உரை) பெறுவது—(மகளிர் கூட்டுறவால்) அடையும் பயன், என்னை—யாது, சுக்கிலம்—இந்திரியம், கலித்தலால்—கழிந்து போதலால், பெரும்—(வீட்டை யடையும் பொருட்டு நீ நெடு நாள் வருந்திச் செய்த) பெரிய, தவ—தபோ, வலி—பலம், குன்றும்—(எல்லாம்) குறையும், உறுவது—(அதனால் உனக்குக் கேடு) வருவது, அவ் வளவோ—அவ் வளவு தானோ, பினை—மேலும், நீ—நீ, விரும்பு—(யான் என்று) விழைந் துள்ள, உடற்கும்—தேகத்திற்கும், ஆனியது—(அடங்கியிருந்த நோய்கள் மேலிடு தலால்) நாசம், உண்டு—உளதாம் (என்று விவேகம் கூற, அதற்கு, யாம் தாம் யாவர் எமது சுக மாவது யாது என்று மநம் கேட்ப,), அறிவு—(இவ் வுடம்பு சட மாகலின், இதன்கண் நின்ற) சைதந் யமே, யாம்—யாம் (என்பதன் சக்கியார்த்தமாம்,) அறியாமை—நீ இதனை அறியாது) அஞ்ஞாநத்தோடும், தோய்ந்து—கூடி, உடல்—உடம்பினது, தினவதை—தினவை, சுகம்—இன்பம், எனா—என்று, நின்றாய்—கருதாநின்றனை (இவை சுகம் அல்ல என்று விவேகம் கூற, மேற் சுக மாவது தான் யாது என்று மநம் கேட்ப,), இனி—இப் போது (இவ் வின்பத்தின் இயற்கை ஈது என்று அறிந்து விடுத்து), சிவனை—(நமது அறிவிற்கு அறிவாய் நின்ற) சிவனது திரு வடியை, ஆதரிப்பாய்—அன்பாய்க் கொள்வாய், நெஞ்சமே—மநமே, நமது—நம் (சொரூப மாகிய) சித்—ஞாந, சுகம்—ஆநந்தத்தை, செறிதும்—(யாம்) பெறு வாம் (என்று விவேகம் கூறிற்று.) எ—று.

(இ-பு) என்னை கொல் - கொல் - அசை நிலை. அவ் வளவோ - ஓ - ஒழி யிசை ("இன்னும் அதிக முண்டு" என்னும் ஒழிந்த சொற்களைத் தரலால்.) உடற்கும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். ஆனியது, தினவது - அது - இரண்டும் பகுதிப் பொருள் விகுதிகள். உண்டால் - ஆல் - அசை நிலை. எனா - செய்யா வென்னும் உடன் பாட்டுத் தெரி நிலை வினை யெச்சம். செறிதும் - தன்மைப் பன்மை எதிர் காலத் தெரி நிலை வினை முற்று. நெஞ்சமே - விளி.

சித் சுகம் - பண்புத் தொகை. (வட மொழிகள்) சிவன் - என்பது ஈண்டு சிவனது திரு வடியைக் குறித்தது. ஆதரிப்பாயே - ஏ - ஈற் றசை.

(சித-ரை) பெறுவ தென்னை கொல் சுக்கிலங் கலித்தலாற் பெருந் தவ வலி குன்றும் எ-து,—மகளிர் கூட்டுறவாற் பயன் அடைவது யாது? இந்திரியம் கழிந்து போதலால் வீட்டை யடையும் பொருட்டு நீ நெடு நாள் வருந்திச் செய்த தபோ பல மெல்லாங் குறையும்,

உறுவ தவ் வளவோ பின்னை நீ விரும் புடற்கு மானிய துண் டால் எ-து,—அதனால் உனக்குக் கேடு வருவது அவ் வளவு தானோ பின்னர் நீ யா னென்று விழைந் துள்ள உடம்பிற்கும் அடங்கி யிருந்த நோய்கண் மேலிட்டு அதனால் நாச முள்ளதா மென்று விவேகங் கூற, அதற்கு யாந் தாம் யாவர் எமது சுக மாவது யா தென்று மநங் கேட்ப,

அறி வியா மறியாமை தோய்ந் துடற் றினவதைச் சுக மெனு நின்றாய் எ-து,—இவ் வுடம்பு சட மாகலின் இதன்கணின்ற சைதந் நியம் யாம்; நீ இதனை அறியாது அஞ்ஞாநத்தோடுங் கூடி உடம்பி னது தினவைச் சுக மென்று கருதாநின்றனை, இவை சுக மல்ல வென்று விவேகங் கூற, மேற் சுக மாவது தான் யா தென்று மநங் கேட்ப,

செறிது நெஞ்சமே நமது சிற் சுக மினிச் சிவனை யாதரிப்பாயே எ-து,—இவ் வின்பத்தி னியற்கை யீ தென்று அறிந்து விடுத்து நமது அறிவிற்கு அறிவாய் நின்ற சிவனது திரு வடியை ஆதரிப் பாய் நெஞ்சமே, நமது ஞாநாநந்தத்தைப் பெறுவா மென்று விவேகங் கூறிற்று, எ-று.

*ஆல் என்பது அசை நிலை. இதற்கு உதாதரணம்: திருநாவுக் கரசர். திருக் கடைக் காப்பு. "அருப்புப் போன்முலையாரல்லல் வாழ்க்கைமேல், விருப்புச் சேர்நிலை விட்டுநல் விட்டமாய்த், திருப்புத் தூரனைச் சிந்தைசெ யச்செயக், கருப்புச் சாற்றினு மண்ணிக்குங் காண்மினே." (அரிசில் கரை புத்தூர் 5) மற்றும் வருவனவற்றாற் காண்க. தாயு மாகி யென்னும் பாட்டுமுத லிவ் வாறு பாட்டாலும் பொருந்தலை விழைத லாகா தென்று மறுத்த வாறு காண்க்.* (43)

44. ஆத ரித்தனை குளகிரு தாதிய வடிசிலைக் கூழ் காடி, ஏது பெற்றிடி னும்புசித் தாற்பசி யேகலுஞ் சமித்தற் றுற், பேத மற்றெலா மலமதா தலுஞ்சரி யென்றிடிற் பினை நெஞ்சே, நீத ரித்திலா தவைவிழைந் துழல்வதென் னிமலனை நினையாதே.

(பத உரை) *நெஞ்சே—நெஞ்சமே, கிருத—நெய், குள—சர்க்கரை, ஆதிய—(பாயச) முதலிய, அடிசிலை—(அறு சுவையோடு கூடிய) உணவை, ஆதரித்தனை—(நீ) விரும்பினை (இதனால் என்ன பயனை அடைதி), காடி—புளித்த கஞ்சி, கூழ்—புற்கை (முதல்), ஏது—யாது, பெற்றிடினும்—கிடைக்கினும், புசித்தால்—அருந்தினால், பசி—பசி, ஏகலும்—போதலும், சமித்து—(அவை) சீரணித்து, அற்றால்—அடங்கினால், பேதம்—(நாநா) வேறுபாடு, எலாம்—அனைத்தும், அற்று—நீங்கி, மலமது—(துர்க்கந்த) மலம், ஆதலும்—ஆகுதலும், சரி—சமம், என்றிடின்—என்றால், பினை—(இங்ஙனம் அறிந்து) பின்னரும், நீ—நீ, தரித்திலாது—தங்கி நில்லாது, அவை—அச் சுவை அடிசில்களை, விழைந்து—விரும்பி, உழல்வது—சுழலுவது, என்—என்னை, நிமலனை—நிர்மல னாகிய (சிவனை), நினையாது—(இடைவிடாது) கருதாது (என்று விவேகம் கூறிற்று), எ-று.*

பயஸ்—பால், அதன் விகாசம் பாயசம் ஆம். அதாவது பால் பிரதாந மாக, அரிசி. முந்திரிப் பருப்பு-சருக்கரை. குங்குமப் பூ-ஏலக் காய்-பாசிப் பருப்பு-திராக்ஷைப் பழம், சாரப்பருப்பு, சுக்கு, தேங்காய் என்னும் (10) இவை முதலியவற்ருேடு கூட்டிச் செய்வது பாயச மாம், அதாவது—பாலின் விகாரம் பாயச மாம். 'சரி' என்பது இரண்டும் சமம் என்னும் பொரு ளுடையது. விசேடம் இன்று என்பதை அறிவித்தது. நெய் - வெல்லம் - பாயசம் - முதலிய வற்ருேடு கூடிய, அறு சுவை - நால் வகை உண்டி, என்பது தோன்ற, "ஆதரித்தனை குள கிரு தாதிய வடிசிலை" என்ருர்.

(இ-பு) பெற்றிடினும் - உம் - இழிவு சிறப்பு. ஏகலும், ஆதலும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. மலமது - அது - பகுதிப் பொருள் விகுதி. நெஞ்சமே - விளி. பினை - பின் என்பதன் விகாரம். என் - என்ன என்பதன் விகாரம். நினையாதே - ஏ - ஈற் றசை.

(சிந-ரை) ஆதரித்தனை குள கிரு தாதிய வடிசிலை எ-து,— கிருத குள பாயச முதலிய அறு சுவை யடிசில்களையும் நீ விரும்பினை, இதனுல் என்ன பயனை அடைதி,

கூழ் காடி யேது பெற்றிடினும் புசித்தாற் பசி யேகலுஞ் சமித்தற்ருற் பேத மற்றெலா மலம தாதலுஞ் சரி யென்றிடின் எ-து,—சோறு காடி புற்கை முதலிய யாது வந்த தாயினும் அருந்திறற் பசி போதலும் அவை சீரணித் தடங்கினுல் நாநா வேறுபாடெல்லாம் அற்றுத் துர்க்கந்த மல மாதலுஞ் சரி யென்ருல்,

பினை நெஞ்சே நீ தரித்திலா தவை விழைந் துழல்வ தென் னிமலனை நினையாதே எ-து, இங்ஙனம் அறிந்து பின்னரும் நெஞ்சமே நீ தரித்து நில்லாது அச் சுவை யடிசில்களை விரும்பிச்

சுழலுவ தென்னை நிர்மல ஞகிய சிவனை இடைவிடாது கருத லின்றி யென்று, விவேகங் கூறிற்று, எ-று.

மலமதாதலு மென்பதில் அது வென்பது பகுதிப் பொருள் விகுதி. சரி யென்பது விசேட மின் றென்ப தறிவித்தது, இதற்கு உதாரணம்: சிவாநந்த மாலை. "நல்ல வறுசுவையு நாக்கினுனி மாத்திரமே, யெல்லை விருவிரலே யல்லதில்லை மெல்ல, விருவிரலைத் தான்கடக்க மாட்டாத நெஞ்சே, பொரு கடலைத் தான்கடப்பாய் போய்." மற்றும் வருவனவற்ருற் காண்க. இதனுள் அருந்தலுட் சுவை விழைத லாகா தென்று மறுத்த வாறு காண்க. (44)

**45.** நினைப்பி னுங்குறி காட்டிடுங் கோசநா விவற் றுணே ரிழையாரை, யினிப்பை நல்குமுக் கனிமுத லிய வுண வினையெனி னிவைபோலு, முனைப்பல் வாதைசெய் பகைபிறி திலையுணர்ந் துள்ளமே யொழித்தாயேற், பினைப்ப ராபரன் றிருவடி நீழல்யாம் பெறற்கிடை யூறின்றே.

(பத உரை) இவற்றுள்—(இது வரை கூறிவந்த பெண்டிர், பிள்ளை, பொருள், இடம், உடம்பு, மாதர், அடிசில் ஆதிய விஷயங் களாகிய) இவ் எல்லாவற்றுள்ளும்: (நல் இலக்கண முடைய), நேர்-இழையாரை—மகளிரையும், இனிப்பை—சுவையினை, நல்கும்—தருகின்ற, முக் கனி—முப் பழம், முதலிய—ஆதிய, உணவினை—புசிப்பினையும், நினைப்பினும் — (மநத்தால்) நினைப்பினும், கோசம்—ஆண் குறியும், நா—நாவும், குறி—(முறையே இலேபந மும், நீர் ஊறலு மாகிய) அடையாளங்களை, காட்டிடும்—காட்டும், எனின்—ஆனல், இவை—இவற்றை, போலும்—ஒக்க, உனை—உனக்கு, பல்—பல, வாதை—(பிறவித்) துன்பங்களை, செய்—தருகின்ற, பகை—சத்துரு, பிறிது—வேறு, இலை—(ஒன்று)

இல்லையாகலின், உணர்ந்து—(இப் பொருந்தல், அருந்தல்களைச் சத்துரு என்று) அறிந்து, உள்ளமே—நெஞ்சமே, ஒழித்தாயேல்—விடுத்தனையானால். பினை—பின்னர், பராபரன் — (யாவருக்கும் மேலாகிய) பரம சிவனது, திரு அடி—சீர் பாத மாகிய, நீழல்—நிழலை, யாம்—நாம், பெறற்கு—அடைதற்கு, இடையூறு—விக்கிநம், இன்று—(வேறு) இன்று (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

'நினைப்பினும்' என அந்தக் கரணத்தைக் கூறினமையின், ஞானேந்திரிய பஞ்சகத் தொழில் ஆகிய, கேட்பினும், பரிசிப்பினும், பார்க்கினும், சுவைப்பினும், முகரினும் என ஐந்தையும் வருவித்துக் கொள்க.

அருந்தல் பொருந்தல் விஷயங்களை சத்துரு என்று கூறப்பட்டன. முக் கனி - மாம் பழம் - பலாப் பழம் - வாழைப் பழமாம்.

(இ-பு) நினைப்பினும் - உம் - எதிரது தழீஇய எச்சம். (கேட்பினும் என்ப தாதியை அபேட்சித்தலின்) காட்டிடும் - இடு - பகுதிப் பொருள் விகுதி. கோச நா - உம்மைத் தொகை. இழையார் - குறிப்பு வினையா லணையும் பெயர். போலும் - போல் என்னும் உவம வுரு பாகிய இடைச் சொல் லடியாகப் பிறந்த குறிப்பு வினையெச்சம். உள்ளமே - விளி. பினை - பின் என்பதன் விகாரம். பர + அபரன் = பராபரன் - வட மொழித் தீர்க்க சந்தி. நீழல் - நிழலின் முத னீண்டது. இன்றே - ஏ - ஈற் றசை.

(சித-ரை) நினைப்பினுங் குறி காட்டிடுங் கோச நா விவற்றுணே ரிழையாரை யினிப்பை நல்கு முக் கனி முதலிய வுணவினை யெனின் எ-து,—விஷயங்க ளாகிய வெல்லாவற்றுள்ளும் மகளிரையும் சுவையினைத் தருகின்ற முப் பழ முதலிய புசிப்பினையும் மநத்தால் நினைப்பினும், ஆண் குறியும் நாவும் இலேபநமும் நீரூறலும் ஆகிய அடையாளங்களைக் காட்டுமானால்,

*இவை போலு முனைப் பல் வாதை செய் பகை பிறி திலை யுணர்ந் துள்ளமே யொழித்தாயேல் எ-து;—இவற்றைப் போலும் உனக்குப் பல பிறவித் துன்பங்களைத் தருகின்ற சத்துரு வேறென் றில்லையாகலின் இப் பொருந்தல் அருந்தல்களைச் சத்துரு வென்று அறிந்து நெஞ்சமே விடுத்தனையானல்,*

*பினைப் பராபரன் றிரு வடி நீழ லியாம் பெறற் கிடையூ றின்றே எ-து,—பின்னர் யாவருக்கும் மே லாகிய பரமசிவனது திரு வடி யாகிய நிழலை யாம் அடைதற்கு விக்கினம் வே றின் றென்று விவேகங் கூறிற்று, எ-று.*

*நினைப்பினு மெனவே கேட்பினும் பரிசிப்பினும் பார்க்கினும் என்று இந்திரியங்களுக்குங் கொள்க. அருந்தல் பொருந்தல்களில் மந முதலிய ஆறு இந்திரியங்களும் பிரவிருத்தியாகலின் திரு வடியை அடைதற்கு இவை நிவிருத்தியாகல் வேண்டுமாகலின், பகை பிறி திலை யென்று கூறப்பட்டது. இதற்கு உதாரணம்: சிவாநந்த மாலை. "ஊனு முறையுநமன் தூதுவர்கா ணுள்ளமே, வாணுதலார் நேரே மறலிகாண்—பேணியிவ, ருற்றூர்போல் வந் திடுவர் வந்தாலு மோட்டியார, னற்றும மைப்பதமே நாடு" மற்றும் வருவன வற்றுற் காண்க.* (45)

46. இன்று சூழ்தரு வநிதைய ராதிபல் போகமு மித்தேகத், தோன்று நோயெனிற் றேடமாய் நீங்குமாங் குயிர் பெய ரினுநீற்றை, நன்றெ ஞவணிந் துறவின ரிறைபெயர் நவிலுவ ரேனினெஞ்சே, பொன்று நாட்டுணை யாகநீ ருதிய போற்றவை போற்றேலே.

(பத உரை) *இத் தேகத்து—இந்தக் காயத்திற்கு, நோய்—(ஒரு) வியாதி, ஒன்றும் எனின்—வந்து பொருந்துமாயின், சூழ் தரு—(இதனுல் அநுபவித்தற்கு) கருதி வைத்துள்ள, வநிதையர்—*

மனைவியர், ஆதி—முதலிய, பல்—அநேக, போகமும்—போகங்களும், இன்று—(இத் தேக மிருக்கும்) இக் காலத்துத் தானே, தோடம் ஆய்—(புசித்தற்கு உதவாத அந்நிய) குற்ற முடையனவாய், நீங்கும்—போகு மாகலின், உயிர்—(இவ் வுடம்பினை விட்டு) உயிர், பெயரினும்—நீங்கிய காலத்தும், உறவினர்—சுற்றத்தாரா யுள்ளார், நீற்றை—(திரு வெண்) ணீற்றை, நன்று—(அவ் வுயிர்க்கு) நல்லது, என—என்று கருதி, அணிந்து—(அவ் வுடலில்) தரித்து, இறை—சிவனது, பெயர்—(திரு) நாமம் (ஆகிய பஞ்சாக்ஷரத்தையும்), நவிலுவர்—உபதேசிப்பார்கள், எனின்—ஆனால், நெஞ்சே—(இனி) மநமே, பொன்றும்—(உயிர்) நீங்கும், நாள்—காலத்து, துணையாக(லின்)—உதவி யாகலின், நீறு—அத் (திரு வெண்) ணீறு, ஆதிய—முதலிய (எண் வகையினையும்) போற்று—(அவ் வுயிர் நீங்கா முன்னரே) பேணிக் கொள்ளுதி, அவை—(மனைவி முதலிய எண் வகைப் பொருளும் இருக்கும் போதும் புசித்தற்கு ஆகாத அந்ய மாகலின் நீ) அவைகளை, போற்றேல்—பேணாது ஒழிதி (என்று விவேகம் கூறிற்று) எ-று.

(இ-பு) சூழ்தரு - தரு - துணை வினை. பல் போகமும் - உம் - முற்று. ஆங்கு - அசை நிலை. பெயரினும் - உம் - இழிவு சிறப்பு. என - செய்யா வென்னும் வாய்பாட்டு உடன்பாட்டுத் தெரி நிலை வினை யெச்சம். நெஞ்சமே - விளி. துணை யாக - ஆக - ஆகலின் என்பத னீறு குறைந்த நிலை. போற்றேலே - ஏ - ஈற் றசை.

(சித-ரை) இன்று சூழ் தரு வநிதைய ராதி பல் போகமுமித் தேகத் தொன்று ரோ யெனிற் றோட மாய் நீங்கும் எ-து,— இந்தக் காயத்திற்கு ஒரு வியாதி வந்து பொருந்துமாயின் இதனால் அநுபவித்தற்குக் கருத்தில் வைத்த மனைவி யாதிய பல போகங்களும் இக் காலத்துத் தானே புசித்தற்கு அந்நிய மாய்ப் போகு மாகலின்,

ஆங் குயிர் பெயரினு நீற்றை நன் றெனு வணிந் துறவின ரிறை பெயர் நவிலுவ ரெனின் எ-து,—இவ் வுடம்பினை விட்டு உயிர் நீங்கிய காலத்தும் சுற்றத்தாரா யுள்ளார் திரு வெண் ணீற்றை அவ் வுயிர்க்கு நன் றென்று கருதித் தரித்து நீங்குந் தருணத்திற் சிவனது திரு நாம மாகிய பஞ்சாக்ஷரத்தையும் உபதேசிப்பார் களானால்,

நெஞ்சே பொன்று நாட் டுணை யாக நீ ருதிய போற் றவை போற்றேலே எ-து,—இனி நெஞ்சமே உயிர் நீங்குங் காலத்துத் துணை யாகலின் அத் திரு வெண் ணீறு முதலிய எண் வகையினை யும் அது நீங்கா முன்னரே பேணிக் கொள்ளுதி, மனைவி முதலிய எண் வகைப் பொருள்களும் இருக்கும் போதும் புசித்தற்கு அந்நிய மாகலின் நீ அவைகளைப் பேணு தொழிதி யென்று விவேகங் கூறிற்று, எ-று.

உயிர் பெயரினு மென்ற இழிவு சிறப் பும்மையால், அது பெயரா முன்னரே அணிவது உயிர்க்கு மிகவும் பய னென்பதா யிற்று. வநிதைய ராதி யெனவே, வநிதை பஞ்சணை சௌக்கிய போசநம் கந்தம் வஸ்திரம் ஆபரணம் தைலம் தாம்பூலம் ஆக எண் வகையு மென அறிந்து கொள்க. நீருதி யெனவே, விபூதி ருத்தி ராக்ஷம் பஞ்சாக்ஷரம் தீர்த்தம் பிரசாதம் குரு லிங்கம் சங்கமம் என வறிக. இதற்கு உதாரணம் சித்தாந்த சிகாமணியுட் காண்க. "பெண்ணுடை யாபரணம் பெய்தைலம் தாம்பூலம், உண்ணலணை சந்தநத்தோ டோரெட்டும்—விண்ணவர்க்காய், ஆகாத நஞ்சை யுண்ட வண்ணலடி யார்தமக்கிங், காது சொன்னே னறி." "தீர்த்தம் பிரசாதந் திருநீறஞ் சக்கரமுஞ், சாற்றுமிறை கட்பிறந்த தாழ்வடமும்—போற்றுங் குருலிங்க சங்கமமுங் கொள்குறிக ளெட்டுங், கருவகலக் கட்டுரைத்தோங் காண்." தவத்தோர்க்கு அவ் வெண் வகையும் நீங்கி இவ் வெண் வகையும் அங்கீகரிக்க வேண்டு மென்பது இத னுட் காண்க. (46)

47. போற்றி நீறணிந் துருத்திர சாதநம் பூண்டிடைந் தெழுத்துள்ளே, சாற்று நீகுரு வாதிமூ வுருவையுந் தாழ்ந் திறைஞ் சிவைசெய்தால், மாற்ற லாம்பிறப் பிறப்பினை நெஞ் சமே மன்றுளா டியதாளுந், தோற்று முள்ளொளிக் குள் ளொளி யாயதைத் தொழுதுவாழ் தலுமாமே.

(பத உரை) *போற்றி*—(மெய்ப் பொரு ளாகப்) பேணி, *நீறு*—விபூதியை, *அணிந்து*—(நிறையப்) புனைந்து, *உருத்திர சாதநம்*—உருத்திராக்ஷங்களை, *பூண்டிடு*—(சிரசாதி ஸ்தாநங்களில்) தரி, *ஐந்து-எழுத்து*—பஞ்சாக்ஷரத்தை, *உள்ளே*—மாநதம் ஆய், *சாற்று*—உச்சரி, *குரு*—குரு, *ஆதி*—முதலா யுள்ள (லிங்க சங்கமம் ஆகிய), *மூ*—மூன்று, *உருவையும்*—வடிவையும், *தாழ்ந்து*—தாழ்ந்து, *இறைஞ்சு*—வணங்கு, *இவை*—(இங் ஙனம்) இவற்றை (நா டோறும்), *நீ*—நீ, *செய்தால்* (மறவாது) செய்தியானல், *நெஞ்சமே*—மநமே, *பிறப்பு*—சென்மத்தினையும், *இறப்பினை*—மரணத்தினையும், *மாற்ற லாம்*—நிவர்த்திக்கலாம், *மன்றுள்*—(அஃது அன்றிக் கநக) சபைகண், *ஆடிய*—நடிக்கின்ற, *தாளும்*—(சிவனது திரு) அடியும், *உள் ஒளிக்கு*—(உயிர் ஆகிய) அந்தர் ஜோதிக்கும், *உள்-ஒளி ஆய்*—அந்தர் ஜோதியாய், *தோன்றும்*—விளங்கும், *அதை*—அத் திரு அடியை, *தொழுது*—வணங்கி, *வாழ்தலும்*—(அவ் விடத்து எக் காலமும்) அழிவு இன்றி இருத்தலும், *ஆம்*—கூடும் (எமக்கு என்று விவேகம் கூறிற்று) எ-று.

(இ-பு) *பூண்டிடு* - இடு - பகுதிப் பொருள் விகுதி. *உள்ளே* - ஏ - அசை நிலை. *உருவையும்* - முற்று. *நெஞ்சமே* - விளி. *தாளும்*, *வாழ்தலும்* - உம் - இரண்டும் இறந்தது தழீஇயன. *ஆமே* - ஏ - ஈற் றசை.

(சித-ரை) *போற்றி நீ றணிந் துருத்திர சாதநம் பூண்டி டைந்தெழுத் துள்ளே சாற்று நீ குரு வாதி மூ வுருவையுந் தாழ்ந்*

திறைஞ் சிவை செய்தால் எ-து,—மெய்ப் பொரு ளாகப் பேணி விபூதியை நிறையப் புனைந்து உத்திராக்ஷங்களைச் சிரசாதி ஸ்தா நங்களில் தரித்துப் பஞ்சாக்ஷரத்தை மாநதமா புச்சரி; குரு லிங்க சங்கம மாகிய மூன்று வடிவையும் தாழ்ந்து வணங்கு; இங்ஙனம் இவற்றை நா டோறும் நீ மறவாது செய்தியானல்,

மாற்ற லாம் பிறப் பிறப்பினை நெஞ்சமே எ-து,—நெஞ்சமே பிறப்பினையும் இறப்பினையும் மாற்றிக் கொள்ள லாம்,

மன்று ளாடிய தாளுந் தோற்று முள் ளொளிக் குள் ளொளியா யதைத் தொழுது வாழ்தலு மாமே எ-து,—அம் தன்றிக் கநக சபைக்கண் நடிக்கின்ற சிவனது திரு வடியும் உயி ராகிய உள் ளொளிக்குள் உள் ளொளியாய்த் தோன்றும், அத் திரு வடியைத் தொழுது அவ் விடத்து எக் காலமும் அழி வின்றி வாழவுங் கூடும் எமக் கென்று விவேகங் கூறிற்று, எ-று.

உயிர்களினது மும் மலங்களும் நீங்கும் பொருட்டுச் சிவன் தனது அருளால் குரு லிங்க சங்கம மாய் வடிவு கொள்ளுதலின் மூ வுருவைபும் தாழ்ந்து இறைஞ் சென்று கூறப்பட்டது. தாழ்ந் திறைஞ்சுதல் மநத்தி லன்பும் வாக்கில் இன் சொல்லு மாகக் காயத் தால் வணங்குதல். வீ டடைவோர்க்குச் சிவ முன் னுக அருளே நா வாகப் பஞ்சாக்ஷரத்தைச் செபியாமற் செபிக்க வேண்டு மாகலின் ஐந் தெழுத் துள்ளே சாற் றென்று கூறப்பட்டது. இங்ஙம் பஞ்சா க்ஷரம் உச்சரித்தால் சகல கேவலம் அறு மாகலிற் பிறப் பிறப்பினை மாற்றலா மென்றும், சகல கேவலங்கள் அறவே புடம் போட்ட பொன் போல உயிர் ஒளிவிடு மாகலின் உயிரை யுள் ளொளி யென் றும், இவ் வுயிர்க்கும் உள் ளொளி யாய்த் திரு வருள் தோன் றலின் மன்று ளாடிய தாளும் உள் ளொளிக் குள் ளொளியாய்த் தோன்று மென்றுங் கூறப்பட்டன. அதைத் தொழுத லாவது தற் போதஞ் சீவியாது நிற்றல். அங்ஙனம் நிற்கவே, பே ரின்பந் தோன்று மாக லின் வாழ்தலுமா மென்று கூறப்பட்டது. (47)

48. வாழ லாமரன் புகழின மலர்கவி மாலைசெய் தவன்றளில், வீழு மாறுபோன் னிதழிசேர் தோழ்களின் மீதணிந் தினிநெஞ்சே, தாழு வாயரி தேடுபோற் சரணமே சரணமேன் றிதுவன்றிப், பாழி லேகருங் காக்கைபோற் கதறி நாள் பலகழித் தொழியேலே.

(பத உரை) நெஞ்சே—மநமே! இனி—இப் பொழுது, வாழலாம்—(அத் திரு வடியை அடைந்து) வாழ லாம், அரன்—சிவனது, புகழ்—கீர்த்தி, இனம்—வரிசைகள் (ஆகிய), மலர்—பூக்களாலே, கவி—பா (ஆகிய), மாலை—மாலை தொடையல்களை, செய்து—தொடுத்து, அவன்—அச் சிவனது, தாளில்—(திரு) வடி மீதில், வீழும்—(போய்ப்) பொருந்தும், ஆறு—விதம், பொன்—பொன் (போன்ற), இதளி—கொன்றை (மாலை), சேர்—பொருந்திய, தோழ்களின் மீது—புயங்களின் மேலே, அணிந்து—தரித்து, தாழுவாய்—வணங்குவாய், அரி—அரியாலும், தேடு—தேடப்பட்ட, பொன்—பொன் (போன்ற), சரணமே—திரு வடியே, சரணம்—புகல், என்று—என, இது—இங்ஙனம் செய்வது, அன்றி—அன்றி, பாழிலே—பாழிலே, கரும்—கரிய, காக்கை—காக்கை போல்—ஒப்ப, கதறி—(உலக நூல்களைக் கற்றுக்) கத்தி, பல—அநேக நாள்—காலத்தை, கழித்து—(வீணிலே) போக்கி, ஒழியேல்—நாசம் ஆகாதே (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) தோழ்களின் மீது - இன் - சாரியை. மீது - ஏழனுருபு. நெஞ்சே - விளி. சரணமே - ஏ - தேற்றம். என்று - என்னும் வினை யெச்சம் தாழுவாய் என்னும் முன்னிலை வினை முற்றுக் கொண்டது. பாழிலே - ஏ - அசை நிலை. போல் - உவம வுருபு. ஒழியேலே - ஏ - ஈற் றசை.

(சித-ரை) வாழலா மரன் புக ழினமலர் கவி மாலை செய் தவன் றளில் வீழு மாறு பொன் னிதழி சேர் தோள்களின்மீ

*தனிற் றினி நெஞ்சே தாழுவா யரி தேடு பொற் சரணமே சரண மென்று எ-து,—நெஞ்சமே அத் திருவடியை அடைந்து வாழலாம்; சிவனது புக ழின மாகிய மலர்களாலே பா வாகிய மாலைகளை வனைந்து திரு வடிமீதிற் பொருந்து மாறு பொன் போன்ற கொன்றை மாலை பொருந்திய புயங்களின் மீது தரித்து வணங்கு வாய் அரியாலுந் தேடப்பட்ட பொன் போன்ற திரு வடியே புக லென்று,*

*இது வன்றிப் பாழிலே கருக் காக்கை போற் கதறி நாள் பல கழித் தொழியேலே எ-து,—இங்ஙனஞ் செய்வ தன்றிப் பாழிலே கருங் காக்கை போல் உலக நூல்களைக் கற்றுக் கதறிப் பல நாள் களை வீணிலே கழித்து நாச மாகாதே யென்று விவேகங் கூறிற்று, எ-று.*

*புகழ் பல வாகலிற் புக ழின மென்றும், அதனைப் பாவிற் சேர்த்துக் கூறுதலின் மல ரென்றுங் கூறப்பட்டது. துஷ்ட நிக் கிரகம் பண்ணுகின்ற புயத்தையும், சிஷ்ட பரிபாலனம் பண்ணுகின்ற பாதத்தையும் புகழ்தலின், தாளின் வீழு மாறு பொன் னிதழி சேர் தோள்களின்மீ தணிந் தென்று கூறப்பட்டது. மல சங்காரம் பண்ணுகின்ற வெற்றியையும், இன்பத்தைக் கொடுக்கின்ற கிருபை யையு மென்று மாம். பொன் னிதழி சேர் தோள்களின்மீது அணிந்து என்பதற்கு உதாரணம்: கந்த ரநுபூதி. "இல்லே யெனுமா யையிலிட் டனைநீ, பொல்லே னறியா மைபொறுத் திலையே, மல்லே புரிபன் னிருவா குவிலென், சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே." (29) மற்றும் வருவனவற்றுற் காண்க.* (48)

49. ஒழித்தி டும்பவப் பகைவிரைந் துள்ளமே
யோதுமு துணர்வோர்முற், பழிச்சு பாடலே யரற்கவை விடக்
கிளம் பாவைய ருரைபோலுங், கழித்தி டேலுப சாரமென்
றிதனைநீ கட்டுரை யெனக்கோள்வாய், விழித்து மாரனை
யெரித்ததே வருள்பெறும் விருப்பினர் விருப்பீதே.

(பத உரை) பவ—பிறவி(க்குக் காரண மான இரு வினைக ளாகிய) பகை—பகை, விரைந்து—(அதி) சீக்கிர மாக, ஒழித்திடும்—அழிந்துபோம், மூது—(மூவர், மாணிக்க வாசகர் முதலிய) பெரிய (முதிர்ந்த) உணர்வோர்—அறிவினை யுடையோர், முன்—முன்னுளிலே, பழிச்சு—(பரனைக் குறித்து) தோத்தரித்த, பாடலை—பாக்களை, உள்ளமே—நெஞ்சமே, ஓது—(நீ) பாராயணஞ் செய் (நியமமாகப் படி), அவை—அத் தோத்திரங்கள், அரற்கு—சிவனுக்கு, விடர்க்கு—காமுகர்க்கு, இளம்—இளமைத் தன்மையினை யுடைய, பாவையர்—பதுமை யொத்த பெண்களின், உரை—(கொஞ்சிக் கூறும்) வசநம், போலும்—போன்று சுவை தரும், இதனை—இங்ஙனம் (கூறிய) மொழியை, உபசாரம்—முகமன் வார்த்தை, என்று—எனக் கருதி, நீ—நீ, கழித்திடேல்—விடாதே, கட்டு—உறுதி, உரை—மொழி, என—என்று, கொள்வாய்—(அறிந்து) கொள்வாய், விழித்து—(நெற்றிக் கண்) திறந்து, மாரனை—மன்மதனை, எரித்த—தகித்த, தே—கடவுளது, அருள்—(திரு) அருளை, பெறும்—அடையும், விருப்பினர்—இச்சையினை யுடைய (மெய் யடிய)ராது, விருப்பு—விருப்பமும், ஈதே—அங்ஙன் கட்டுரையாகக் கொண்டு அத் தோத்திரங்களைப் பாராயணஞ் செய்யு மிச்சை யாகிய இதுவே (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) ஒழிந்திடும் - என்னுந் தன் வினை ஒழித்திடும் என எதுகை நோக்கிப் பிறவினை யாயிற்று. பவம் - ஈண்டு, ஆகு பெயராய் அதன் காரண மாகிய இரு வினைகளைக் குறித்தது. உள்ளமே - விளி. உணர்வோர் - தெரி நிலை வினையா லணையும் பெயர். பாடலை - என்பது ஓது என்னும் தெரி நிலை வினை முற்றுக் கொண்டது. ஈதே - ஏ - தேற்றம். ஈது - நீண்ட சுட்டு.

(சித-ரை) ஒழித்திடும் பவப் பகை விரைந் துள்ளமே யோது மூ துணர்வோர் முற் பழிச்சு பாடலை எ-து,—பிறவி யாகிய பகை அதிக சீக்கிர மாக வொழிந்துபோம், மூவர் மாணிக்க வாசகர் முத

லிய பே ரறிவினை யுடையோர் முன் னாளிலே தோத்திரம் பண்ணிய பாடலை நெஞ்சமே நீ தோத்திரம் பண்ணுதி,

அறற் சுவை விடர்க் கிளம் பாவைய ருரை போலும் எ-து,—காமுகர்க்கு இளமைத் தன்மையினை யுடைய பாவை போல்வார் கொஞ்சிக் கூறும் வசநம் போல அத் தோத்திரங்கள் சிவனுக்குப் பிரீதியா யிருக்கும்,

கழித்திடே லுபசார மென் றிதனை நீ கட்டுரை யெனக் கொள்வாய் எ-து,—இங்ஙனம் கூறிய மொழியை உபசார மொழி யென்று கருதி நீ விடாதே உறுதி மொழி யென்று அறிந்து கொள்வாய்,

விழித்து மாரனை யெரித்த தே வருள் பெறும் விருப்பினர் விருப் பீதே எ-து—நெற்றிக் கண் விழித்து மன்மதனை யெரித்த கடவுளது திரு வருளைப் பெறும் விருப்பத்தினை யுடைய மெய் யடியாரது விருப்பமும் இத் தோத்திரங்களே யென்று விவேகங் கூறிற்று, எ-று.

ஒழிந்திடு மென்பது ஒழித்திடு மென்று வந்தது. பவத்திற்குக் காரண மாகிய இரு வினைகளையும் பவ மென்று காரணத்தைக் காரிய மாக வுபசரித்துக் கூறினர். இதற்கு உதாரணம்: திருவள்ளுவ நாயனர். "இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு." (1–5) மற்றும் வருவன வற்றுற் காண்க. (49)

50. விருப்ப மாயிது கேட்டிநன் னெஞ்சமே விமலனுக் காளல்லார், பொருப்பை நேர்தநஞ் சோரியினு மவர்கணோர் புன்னுனித் துணையன்புந், திருப்பி டேலரன் றேழும்பர்தந் தொழும்பனுய்த் திரிந்தவர் பணிசெய்தீண், டிருப்பை யேன் மிக நல்லையிச் சொல்லைநம் பில்லையேற் பொல்லாயே.

(பத உரை) நல்—நல்ல, நெஞ்சமே—மநமே! இது—இந்த வார்த்தையை, விருப்பம் ஆய்—சந்தோஷ மாக, கேட்டி—கேட்பா யாக, விமலனுக்கு—நிர்மல னாகிய சிவனுக்கு, ஆள்—அடிமை, அல் லார்—அல்லாதவர், பொருப்பை—(பொன் மேரு) மலையை, நேர்—போலும், தநம்—பொன், சொரியினும்—குவித்துக் கொடுப்பினும், அவர்கண்—அவர்களிடத்து, ஓர்—ஒரு, புல்—புல்லினது, நுனி—நுனி (கூறிய விளை), துணை உம்—அளவாயினும், அன்பு—பிரியம், திருப் பிடேல்—வைத்திடாதே, அரன்—சிவனது, தொழும்பர்—அடியா ருக்கு, தொழும்பன் ஆய்—அடியான் ஆகி, திரிந்து—(பின்) சென்று, அவர்—அவருடைய, பணி—(ஏவலாதி) கைங்கிரியங்களை, செய்து—ஆற்றி, ஈண்டு—இவ் விடத்து, இருப்பையேல்—இருப்பாயாகில், மிக—(எமக்கு) மிகவும், நல்லை—நன்மையினையுடைய (நீ), இச் சொல்லை—(யான் இங் ஙனம் கூறிய) சொற்களை, நம்பு—(உண்மை யாக) விசுவசி, இல்லையேல்—(இவைகளை நம்பாது) ஒழிதியேல், பொல்லாய்—(எனக்கு நீ) பொல்லாதவன் (என்று விவேகம் கூறிற்று.) எ-று.

(இ-பு) கேட்டி - முன்னிலை யேவல் வினை முற்று. கேள் + த் + இ = கேட்டி. கேள் - பகுதி. த் - எழுத்துப் பேறு. இ - விகுதி. நெஞ்சமே - விளி. அல்லார்—குறிப்பு வினையா லணை யும் பெயர். சொரியினும் - உம் - உயர்வு சிறப்பு. அன்பும் - உம் - முற்று. திருப்பிடேல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. தொழும் பர் (தம்) - தெரி நிலை வினையா லணையும் பெயர். தம் - சாரியை. ஈண்டு - நீண்ட சுட்டு. நல்லை - முன்னிலைக் குறிப்பு வினை முற்று. பொல்லாயே - ஏ - ஈற் றசை.

(சிந்-ரை) விருப்பமா யிது கேட்டி நன் னெஞ்சமே எ-து,—நல்ல நெஞ்சமே இந்த வார்த்தையைச் சந்தோஷ மாகக் கேட் பாயாக;

விமலனுக் காளல்லார் பொருப்பை நேர் தனஞ் சொரியினு மவர்க ணோர் புன் னுனித் துணை யன்புந் திருப்பிடேல் எ-து,—

நிர்மல ளுகிய சிவனுக்கு அடிமை யல்லாதவர் பொன் மேருவைப் போலுந் தநங்களைச் சொரிந்தா ராயினும் அவர்களிடத்துப் புல்வி னது நுனி மாத்திரமாயினும் அன்பு வைத்திடேல்,

அரன் றெழும்பர் தந் தொழும்பளுய்த் திரிந் தவர் பணி செய் தீண் டிருப்பையேன் மிக நல்லை எ-து.—சிவனது அடியா ருக்கு அடியா ளுகித் திரிந்து அவரது பணிவிடைகளைச் செய்து இவ் விடத்து இருப்பாயாகில் எமக்கு மிகவு நன்மையினை யுடையை நீ,

இச் சொல்லை நம் பில்லையேற் பொல்லாயே, எ-து,—யான் இங்ஙனங் கூறிய சொற்களை உண்மை யாக நம்பு; இவைகளை நம்பாது ஒழிதியேல் எனக்கு நீ பொல்லா யென்று விவேகங் கூறிற்று, எ-று.

இதற்கு உதாரணம்: திருநாவுக் கரையர். "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து தரணியொடு வானளத் தருவ ரேனு, மங்குவா ரவர் செல்வ மதிப்பே மல்லே மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகி, லங்க மெலாங் குறைந்தழுகு தொழுநோ யோரா யாவுரித்துத் தின்றுழ லும் புலைய ரேனுங், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகி லவர் கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே." (தாண்டகம் 10) மற்றும் வருவனவற்றுற் காண்க. (50)

## வைராக்கிய சதகத்தின் முற்பாதி யாகிய

### சாத்திர முற்றிற்று.

---

மநம் தானு மன்று தன் வயமு மன்று என்று அறிந்து அதனை விடுத்துத், தன்னையும் அதயுனைம் கூட்டவும் பிரிக்கவும் வல்ல சிவத்தை நோக்கி மேல் விவேகம் கூறுகின்றது.

---

உ

சிவமயம்

# பக்தி (வைராக்கிய) சதகத்

## தோத்திரமும்,

# தோத்திரப் பிரகாசம்

## என்னும் உரையும்.

உ

சிவமயம்.

# பக்தி (வைராக்கிய) சதகத் தோத்திரமும், தோத்திரப் பிரகாச உரையும்.

## முக வுரை.

மோக்ஷம் அடைதற் குரிய புண்ணிய பூமி யாகிய இப் பரத கண்டத்தில், சோழ வள நாட்டில், பட்டீச்சுரம் என்னும் ஊரில், சமாதி யுற்றிலங்கும் துறை யூர்ச் சிவப் பிரகாச சுவாமிகள் என்னும் வீர சைவப் பெரியார் மரபில் வந்து, காஞ்சி நதியை யுடைய மேலைச் சிதம்பரம் என்னும் பேரூரின்கண் சுமார் முந் நூறு வருடங் கட்கு முன் சமாதி யுற்று விளங்கும் சாந்த லிங்க ஸ்வாமிகள், ஜீவ காருண்யம் ஈசுவர பக்தி பாச வைராக்கியம் பிரக்ஷ்ம ஞானம் ஆகிய நான்கும் உலகத்தில் மந்தர்களுக்குந் தெள்ளிதின் விளங்கும்படி யாக, அறு சீர்க் கழி நெடி லடி யாசிரிய விருத்தம் 22 உள்ள தாய்க் **"கொலை மறுத்தல்"** என்னும் ஒரு நூலும், அறு சீர்க் கழி நெடி லடி யாசிரிய விருத்தம் 100 உள்ள தாய் **"பக்தி சதகம்"** என ஒரு நூலும், எழு சீர்க் கழி நெடி லடி யாசிரிய விருத்தம் 100 உள்ள தாய் **"வைராக்கிய தீபம்"** என ஒரு நூலும், 100 உந்தீ பறத்பிதற் பா உள்ள தாய் **"அவிரோத வுந்தியார்"** என ஒரு நூலும், முறையே இயற்றினர். அந் நூல்களின்கண், இக் "கொலை மறுத்தல்", "இந் நூற்குப் பெயர் வயிராக தீபம் என்று உரைத்திடப் படும்", "அவி ரோத வுந்தி யென்று இந் நூல் நாமம் ஆம்" என்று மூன்று நூலிற் கும் பெயர் தம் வாக்கால் கூறியிருப்பது போன்று, இந் நூற்குப் "பக்தி சதகம்", "வைராக்கிய சதகம்" என்று தம் வாக்கினல் கூருமையின், வழங்கி வரும் முறைப்படி "பக்தி சதகம்" என்னும் பெயரே பொருத்தம் உடையதாம்.

சாந்த லிங்க ஸ்வாமிகளின் மாணுக்கர் விருத்தாசலத்திற் சமாதி யுற்றிலங்கும் குமார தேவ சுவாமிகள், அவர் மாணுக்கர், திருப் போரூரின்கண் சமாதி யுற்றிலங்கும் சிதம்பர சுவாமிகள். இவர்கள் கொலை மறுத்தல் முதலிய நான்கு நூற்கும் பிரமாணத்தோடு விரிவுரை யியற்றி யிருக்கின்றுர்கள். அவ் வுரையின்கண்ணும் "வைராக்கிய சதகம்" என இந் நூற்குப் பெயர் என யாண்டும் வரையப்பட வில்லை.

"பக்தி சதகம்" என்னும் நூலின் முதற் பாதி ஐம்பது செய்யுளும் சாத்திர ரூப மாக இருத்தலின் அவற்றிகு உரை இயற்றிப், பிற் பாதி ஐம்பது செய்யுளும் நடேசப் பெருமானிடம் தோத்திர ரூப பக்தி யாக இருத்தலின் அவற்றிற்கு உரை இயற்ருது விடுத்தனர். தோத்திர ரூப ஐம்பது செய்யுளுக்கும் உரை யிருக்கின் படிப்போர்க்குப் பொருள் எளிதில் விளங்கும் எனக் கருதித் **தோத்திரப் பிரகாசம்** எனப் பெயர் ஈந்து, ஓருரை எழுதி கி. பி. 1925வது வருஷத்தில் முற்றுவித்தனம்.

**காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள்,**
**திருப் பூ வணம்.**

உ சிவமயம்.

# பக்தி (வைராக்கிய) சதகத் தோத்திரம்

## பாயிரம்

1. கருணைநன் கியைந்து வைகைநற் கரையிற் களிக்குநங் கயமுக விறையைத், தெருளணி யீசற் கீந்ததே வென்னுஞ் சிவகுரு வாறுமா முகனை, மருளினைப் போக்கும் பூவண விறைவைய மாது மின் னனையநா யகியைக், கருணைநல் வீர சேகர விறையைக் கவினுறக் கருத்தினில் வைப்பாம்.

2. உருவம தின்றி யொளிர்ந்திடு முகந்த தேசிக னெண்டனிப் பதத்தைச், சருவமா யிலகு முக்திரா மேசன் சரண்டனை யருணநல் லசலக், குருவடி தன்னைச் சிதம்பர ஞாந குருவினல் லடியினை யன்பர்க், கருளுறும் வீர சேகர ஞாந வாரிய னடியினைத் தொழுவாம்.

3. பத்தியி னேடு மூத்தியை யீயப் பாருளோ ரியாவரும் பரவ, வெத்திசை யோருஞ் சுத்தமெய்த் தவனென் றீணயடி தனை மிகப் பொருந்தச், சித்தமார் தலமாஞ் சிதம்பர வாசஞ் செய்யரு ணசல குருவாம், உத்தம னடியை வழுத்தியே வாக்கா லுளத்திரு னினைந்துபோற் றுதுமே.

4. பாரமாம் பவத்தைப் பறித்திடக் கருணை பாலிக்கும் பான் மையாய் வந்து, நாரந்தான் சிறிது மின்றியே யுடலை நானெனும் புன்மதி யெனையே, தாரமோ டணிமை யின்றியுன் னுருவாஞ் சொப்பிர காசமென் றருள்செய், வீரசே கரஞா நதேசிக னடியை விருப்புடன் மநத்தினிற் கொள்வாம்.

5. பாத்திர ரானோர் பரனிடம் பத்தி பண்ணியே பரகதி யடை யச், சாத்திர மோடு தோத்திர மாகச் சதகமொன் றியற்றினர் சிறக்க, எத்தருஞ் சாந்த லிங்கதே சிகர்செய் எழிலிற்பா வைம்பதும் விளங்கத், தோத்திரப் பிரகா சம்மெனு முறையைச் சொற்சுவை பொருந்தவே சொற்றேன்.

---

## இந் நூலுக்கு அவதாரிகை

“மநம் தானும் அன்று, தன் வயமுழ் அன்று” என்று அறிந்து, அதனை விடுத்துத், தன்னையும், அதனையும், கூட்டவும், பிரிக்கவும், வல்ல, சிவத்தை நோக்கி, மேல் விவேகம் கூறுகின்றது' (என்பது சிதம்பர சுவாமிகள் வாக் காம்)

உ சிவமயம்.

# பக்தி (வைராக்கிய) சதகத் தோத்திரமும், தோத்திரப் பிரகாச உரையும்.

பொல்லாதவே னெஞ்சமோ ரைந்துபு லன்கடம்பா
லல்லாதாரை மாத்திரை யுந்நின்ன டிக்கணன்பாய்
நில்லாதிதற் கென்னைசெய் கேனிதை நின்றிடேன்றே
சொல்லாய்திருத் தில்லையுண் மேவிய சோதிநீயே. (1)

(இதன் பொருள்) *திரு—அழகிய, தில்லையுள்—தில்லை வனத்தின்கண், மேவிய—பொருந்திய, சோதி—பிரகாச ஸ்வரூபரே, என்—எனது, பொல்லாத,—தீய, நெஞ்சம்—மனம், ஓர்—(இழிவிற்) சிறந்த, ஐந்து புலன்கள் தம்பால்—பஞ்சேந்திரிய விஷயங்களிடத்தில், அல்லாது—(செல்லுகின்றதே) அன்றி, நின்—தேவரீரது, அடிக்கண்—திரு வடித் தாமரையினிடத்து, அன்பாய்—பக்தியோடு, அரை மாத்திரையும்—அரை க்ஷண மாயினும், நில்லாது—நிற்க வில்லை, இதற்கு—இந்த மனதை (நின் திரு வடிக்கண்) நிறுத்துவதற்கு, என்னை—யாது உபாயம், செய்கேன்—செய்வேன், (வேறு உபாயம் எதுவும் அறிந்திலேன் ஆகலின்) நீயே—தேவரீரே, இதை—இந்த மனதை, நின்றிடு—(திரு வடிக் கண்) நிலைத்து இருப்பா யாக, என்று—என, சொல்லாய்—கூறி யருள்வீ ராக. எ-று.*

(இலக்கணக் குறிப்பு) *புலன்க டம்பால் - தம் - சாரியை புலன்கள் - இந்திரியங்களின் உணர்ச்சி, அவற்றின் விடயங்களைக் குறித்தமையின் ஆகு பெயர். நில்லாது - குறிப்பு. வினை முற்று. மாத்திரையும் - உம் - முற்று. என்னை - என்ன என்பதன் விகாரம். உபாயம் - அவாய் நிலையால் வருவிக்கப் பெற்றது. செய்கேன். உடன்பாட்டுத் தெரி நிலை வினை முற்று. கு - சாரியை (வேறு-*

உபாயம் எதுவும் அறிந்திலேன் ஆகலின்) என்பது இசை எச்சம். என்றே - ஏ - அசை நிலை. சோதி - அண்மை விளி. நீயே - ஏ - தேற்றமும், பிரிநிலையு மாம். நெஞ்சமே - எழுவாய், நில்லாது - பய னிலை. என்னை - செயப்படு பொருள். நீ - எழுவாய். சொல் லாய் - பயனிலை. (1)

நீயேயருள் செய்யினல் லாதுபோய் நெஞ்சவஞ்சத்
தீயேனுனை வந்தடை தற்கொரு செய்கை காணேன்
பேயேனுமு னைத்தொட ரும்படி பேசுதில்லைத்
தூயோயொரு பாயம்வி டாதினிச் சூழ்ந்துநின்றே. (2)

(இ-ள்) தில்லை—தில்லை (வநத்தின்கண் எழுந்தருளிய) தூயோய்—பரிசுத்த மானவரே, நீயே—தேவரீரே, அருள் செய் யின்—(வலிய வந்து) அநுக்கிரகம் செய்தால், அல்லாது—அன்றி, பொய்—வாய்மை இன்றிய, வஞ்ச—வஞ்சத் தன்மை வாய்ந்த, நெஞ்ச—மநத்தினை உடைய, தீயேன்—கொடியேன், உனை— தேவரீரை, வந்து—அணுகி, அடைவதற்கு—(ஒரு—எவ் விதமான, செய்கை—(உபாயச்) செயலும், காணேன்—அறியேன், (ஆகலின்), பேயேனும்—பேய்த் தன்மையோடு கூடிய யானும், உனை—தேவ ரீரை, தொடரும்படி—வந்து அடையும்படி யாக, இனி—பின் னும் (முன் போல), விடாது—கைவிடாது, சூழ்ந்து—அடுத்து, நின்று—இருந்து, ஒரு—ஓர், உபாயம்—உபாயத்தினை, பேசு— (அடியேற்கு) உபதேசித் தருள்க. எ-று.

(இ-பு) நீயே - ஏ - தேற்றமும், பிரி நிலையு மாம். தீயேன் பேயேன் - இரண்டும் குறிப்பு வினையா லணையும் பெயர். பேயே னும் - உம் - இழிவு சிறப்பும், இறந்தது தழீஇ இயது மாம். தூயோய் - அண்மை விளி. இனி - எதிர் காலங் குறிக்கும் ஓர் இடைச்சொல். "நின்று" - என்னும் வினை யெச்சம், பேசு - என்னும் வினை முற்றுக் கொண்டது. தீயேன் எழுவாய். காணேன் - பய னிலை. செய்கை - செயப்படு பொருள். நீ - எழுவாய். பேசு - பய னிலை. உபாயம் - செயப்படு பொருள். (2)

நின்றாய்திருத் தில்லையு ளாயென்ற னெஞ்சினுள்ளே
யென்றாலுமே னக்கதி தூரம தாயிருந்தா
யொன்றாலுமு னைத்தொடர் கிற்குமு பாயங்காணேன்
மின்றாழ்சடை யாய்தமி யேற்குவி ளங்கிடாயே. (3)

(இ-ள்) *திரு—அழகிய, தில்லை உளாய்—தில்லை வனத்தின் கண் எழுந்தருளி யிருக்கும் இறைவனே, மின்—மின்னல் (போன்ற) தாழ்—நீண்டு தொங்கிய, சடையாய்—சடையினை யுடைய கடவுளே, என்—அடியேனது, நெஞ்சினுள்ளே—மனத்தின் கண்ணே, நின்றாய்—(அந்தரியாமி யாய் எழுந்தருளி) இருக்கின்றீர், என்றாலும்—ஆயினும், எனக்கு—அடியேனுக்கு, அதிதூரமது ஆய்—மிகவும் சேய்மையதாய், இருந்தாய்—இருக்கின்றீர், உனை—தேவரீரை, தொடர்கிற்கும்—அடையும்படியான, உபாயம்—உபாயத்தை, ஒன்றாலும்—ஒரு விதத்தினாலும், காணேன்—(யான்) உணர்ந்திலேன் (ஆகவின்), தமியேற்கு—அடியேனுக்கு, விளங்கிடாய்—பிரத்தியக்ஷ மாய் வந்தருள்வீ ராக. எ-று*

(இ-பு) *உளாய், உடையாய் - குறிப்பு வினையா லணையும் அண்மை விளிப் பெயர்கள். என் றன் - தன் - சாரியை. நெஞ்சினுள்ளே - இன் - சாரியை. உள் - ஏழ னுருபு. ஏ - அசை நிலை. என்றாலும் - உம் - உயர்வு சிறப்பு. ஒன்றாலும் - உம் - முற்று. விளங்கிடாயே - ஏ - ஈற் றசை. இடு - பகுதிப் பொருள் விகுதி. நீ - தோன்றா எழுவாய். இருந்தாய் - பய னிலை. நான் - தோன்றா எழுவாய். காணேன் - பய னிலை. உபாயம் - செயப்படு பொருள். நீ - தோன்றா எழுவாய். விளங்கிடாய் - பய னிலை.* (3)

விளங்கும்மெழிற் பேதையர் காதல்வி டாதயானக்
களங்கம்மறு வோர்தொழ நின்கழல் காணுமாறென்
றுளங்கும்மொளித் தூமதி சூடிய தோன்றலேயென்
னுளங்கொண்டிடு நீயினிக் கோயில தாவுவந்தே. (4)

(இ-ள்) துளங்கும்—விளங்காநின்ற, ஒளி—பிரகாசத்தினை உடைய, அா—பரிசுத்தமான, மதி—(மூன்றாம்) பிறையை, சூடிய—அணிந்தருளிய, தோன்றலே—பெருமையிற் சிறந்த பரசிவமே, விளங்கும்—(ஆடை ஆபரணாதிகளோடு கூடி) விளங்கா நின்ற, எழில்—அழகினை யுடைய, பேதையர்—பெண்க ளிடத்து, காதல்—(வைக்கும்) விருப்பத்தினை, விடாத—விட்டு நீங்காத, யான்—அடியேன், அக் களங்கம்—(பெண்களிடத்து விருப்பம் வைப்ப தாகிய) அந்தத் தோஷம், அறுவோர்—நீங்கி யுள்ள பெரியோர்கள், தொழும்—வணங்குகின்ற, நின்—தேவரீரது, கழல்—திரு வடித் தாமரையை, காணும்—தெரிசிக்கும், ஆறு—வழி, என்—எப்படி ஆம் (ஆகாது ஆதலினால்), இனி—இக் காலந் தொட்டு, நீ—தேவரீர், உவந்து—பிரியத்தோடு, என்—அடியேனது, உளம்—மநதை, கோயில தா(க)—ஆலய மாக, கொண்டிடு—கொண்டருள்வீ ராக. எ-று.

(இ-பு) அறுவோர் - தெரி நிலை வினையா லணையும் பெயர். என் - 'என்ன' என்னும் வினா வினைக் குறிப்பு முற்றின் விகாரம். தோன்றலே - விளிப் பெயர். கொண்டிடு - இடு - பகுதிப் பொருள் விகுதி. கோயிலதா - 'ஆ' - ஈறு குறைந்த, 'ஆக' என்னும் வினை யெச்சம். அது - பகுதிப் பொருள் விகுதி. உவந்தே - ஏ - ஈற் றசை. காணு மாறு - எழுவாய். என் - பய னிலை. நீ - எழுவாய். கொண்டிடு - பய னிலை. உளம் - செயப்படு பொருள். (4)

வந்தித்திடு வார்பவ நோய்க்கும ருந்தனையைச்
சந்தித்திடு வான்மறித் தான்மநந் தப்பியப்பா
லிந்தப்புவி யுங்கட லுங்கடந் தேகுமென்று
லெந்தப்படி யுய்வதி யான்றில்லை யெம்பிரானே. (5)

(இ-ள்) தில்லை—தில்லை (வநத்தின்கண் எழுந்தருளியிருக் கும்), எம்—எம்முடைய, பிரானே—தந்தையே, வந்தித்திடுவார்—

நமஸ்கரிப்பவர்களது, பவ நோய்க்கு—பவ வியாதிக்கு, மருந்தனேயை—ஔஷதம் போன் றுள்ள தேவரீரை, சந்தித்திடுவான்—கூடும் பொருட்டு, மறித்தால்—(மநதைத்) திருப்பினல், மநம்—(அந்த) மநம், தப்பி—(எனது மறியலை) விட்டு வ்லகி, இந்தப் புவியும்—இந்தப் பூமியினையும், கடலும்—கடலினையும், கடந்து—தாண்டி, அப்பால்—அவற்றிற்கு மேலும், ஏகும்—செல்லும், என்றால்—ஆயின், யான்—அடியேன், உய்வது—(தேவரீரது திருவடியை அது கொண்டு அடைந்து) பிழைப்பது, எந்தப்படி—எங்ஙனம், (பிழைக்க முடியாது என்றபடி). எ-று.

(இ-பு) வந்தித்திடுவார் - தெரி நிலை வினையா லணையும் பெயர். இடு - பகுதிப் பொருள் விகுதி. அனேய் - முன் னிலைக் குறிப்பு வினையா லணையும் பெயர். சந்தித்திடுவான் - இடு - பகுதிப் பொருள் விகுதி. அப்பால் - செய்மையிடத்தினைக் குறிக்கும் ஒ ரிடைச் சொல். இதன் இறுதியில் இறந்தது தழீஇய எச்ச உம்மை தொக்கது. புவியும், கடலும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. பிரானே - விளி. உய்வது - எழுவாய். எந்தப்படி - பய னிலை. (5)

பிரானேதிருத் தில்லையு ளாயன்றிப் பேதையேன்மு
ஞேரானேறிவர்ந் தம்பிகை யோடேளி தோடிவந்தாய்
வரானேவின மெம்மிறை யென்றனை நாடிவாடி
யிராநாயடி யேற்கெதிர் தோன்றிலை யின்றிதென்னே. (6)

(இ-ள்) பிரானே—தலைவனே, திரு—அழகிய, தில்லை உளாய்—தில்லை வநத்தின்கண் எழுந்தருளி யுள்ளவரே, அன்று—முன் ஒரு காலத்தில், இப் பேதையேன்—இந்தப் பேதை யாகிய அடியேனது, முன்—எதிரில், ஒரு—ஓர், ஆன் ஏறு—ரிஷப வாகநத்தின்மீது, இவர்ந்து—எழுந்தருளி, அம்பிகையோடு—தேவியோடு, எளிது—சுலப மாக, ஓடிவந்தாய்—சீக்கிரம் வந்து தெரிசநம் தந்தருளினீர், இனம்—இன்னும் (ஒரு முறை), எம்—எம் முடைய, இறை—கடவுள்,

வாரானோ—வந்து தெரிசநம் தந்தருளமாட்டாரோ, என்று—எனக் கருதி, உனை—தேவரீரை, நாடி—தியாநித்து, வாடி—வாட்ட முற்று, இரா—இருந்து வருந்துகின்ற, நாய்—நாயினும் (கீழ்ப்பட்ட), அடியேற்கு—அடியேனுக்கு, இன்று—இப் பொழுது, எதிர்—எதிரில், தோன்றிலை—எழுந்தருளி வருகின்றீர் இல்லை, இது—இத்தன்மை, என்—என்ன (என்று யான் அறிகிலேன்), எ-று.

(இ-பு) பிரானே, தில்லை புளாய் - இரண்டும் விளிகள். அன்று - இறந்த காலங் குறிக்கும் ஓ ரிடைச் சொல். பேதையேன் - குறிப்பு வினையா லணையும் தன்மை ஒருமைப் பெயர். முன் - எதிரிடத்தைக் குறிக்கும் ஓர் இடைச் சொல். வாரானோ - ஓ - வினு. இனம் - எதிர் காலங் குறிக்கும் ஓர் இடைச் சொல். இரா - 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினை எச்சம், 'வருந்துகின்ற' என்னும் பெய ரெச்சங் கொண்டது. 'வருந்துகின்ற' - என்பது இசை எச்சத்தாற் பெறப்பட்டது. இன்று - நிகழ் காலங் குறிக்கும் ஓ ரிடைச் சொல். என்னே - ஏ - ஈற் றசை. என் - என்ன என்பதன் விகாரம். நீ - தோன்று எழுவாய். வந்தாய் - பய னிலை. நீ - தோன்று எழுவாய். தோன்றிலை - பய னிலை. இது - தோன்று எழுவாய். என் - பய னிலை. (6)

என்னுயக னேயிமை யோர்தொழு மீசனேசெம்
பொன்னார்திரு வம்பலத் தாடிய பூதநாதா
வுன்னாரு ளாலினி வீட்டிடை யுய்த்தியின்றேற்
பின்னாருயக் கோள்ளவ லாரேன்பி ழைகடீர்த்தே. (7)

(இ-ள்) என்—அடியேனுடைய, நாயகனே—எஜமாநனே, இமையோர்—தேவர்கள், தொழும்—வணங்குகின்ற, ஈசனே—பரசிவனே, செம்—சிறந்த, திரு—அழகு, ஆர்—பொருந்திய, பொன் அம்பலத்து—கநக சபையின்கண், ஆடிய—(ஆநந்தத் தாண்டவம்) செய்த, பூத—பூதங்களுக்கு எல்லாம், நாதா—இறைவனே, இனி—

இனி மேல், உன்—தேவரீரது, ஆர்—நிறைந்த, அருளால்—கிருபை யினால், வீட்டிடை—மோக்ஷத்தின்கண், உய்த்தி—(அடியேனை) அடை விப்பீராக, இன்றேல்—(அங்ஙனம் செய்வது) இல்லை யாயின், பின்— பின்னர், என்—என் னுடைய, பிழைகள்—குற்றங்களை, தீர்த்து— கடிந்து, உய—மோக்ஷத்தினை அடையும்படி யாக, கொள்ள—(அடிமை யாக்கிக்) கொள்ள, வலார்—வல்லவர், ஆர்—யார் (இருக்கின்றார்கள்; ஒருவரும் இலர் என்பது கருத் தாம்), எ-று.

(இ-பு) நாயகனே, ஈசனே, பூத நாதா - இம் மூன்றும் விளி கள். வீட்டிடை - 'இடை' - ஏழ னுருபு. பின் - எதிர் காலத்தைக் குறிக்கும் ஓ ரிடைச் சொல். ஆர் - 'யார்' என்பதன் விகாரம். உய 'உய்ய' என்பதன் விகாரம். தீர்த்தே - ஏ - ஈற் றசை. :நீ - தோன்றா எழுவாய். உய்த்தி - பய னிலை. ஆர் - எழுவாய். வலார் - பய னிலை. (7)

தீராதவோ ரைம்புலச் சேட்டையுந் தீர்ந்துபோய்வெங்
கூரார்மழு வாளிநின் பாதங்கு ழைந்துபோற்றி
நீராயுரு கித்தொழு துன்னெதிர் நிற்கும்வண்ண
மோர்நாளுள தோதமி யேற்குமு ரைத்திடாயே. (8)

(இ-ள்) வெம்—கொடிய, கூர்—கூர்மை, ஆர்—பொருந்திய, மழு வாளி—பிரகாசம் பொருந்திய மழு ஆயுதத்தை யுடையவரே, தீராத—நீங்காத, ஓர்—ஒப்பற்ற, ஐ புலன்—பஞ்சேந்திரியங்களின், சேட்டையும்—செயல்களும், தீர்ந்து போய்—விட்டு நீங்கி, நின்— தேவரீரது, பாதம்—திரு வடித் தாமரைகளை, குழைந்து—(மனம்) இளகி, நீர் ஆய்—ஜலம் என்று சொல்லும்படியாய், உருகி—கசிந்து, தொழுது—வணங்கி, போற்றி—துதித்து, உன்—தேவரீரது, எதிர்—சந்நிதியில், நிற்கும் வண்ணம்—நிற்கும்படி யாக, தமியேற் கும்—அடியேனுக்கும், ஓர்—ஒரு, நாள்—தினம், உளதோ—

இருக்கிறதா, உரைத்திடாய்—(அங்ஙனம் இருக்குமாயின் அதனை அடியேனுக்கு) கூறி யருள்வீராக. எ-று.

(இ-பு) மழு வாளி - விளி. 'தொழுது' - என்னும் வினை யெச்சம், 'போற்றி' - என்னும் வினை யெச்சங் கொண்டது. நீர் ஆய் ஆய் - 'ஆக' என்னும் உவம உருபின் ஈற்றுத் திரிபினது, உளதோ - ஓ - வினா. தமியேற்கும் - உம் - இழிவு சிறப்பும், இறந்தது தழீஇயது மாம். உரைத்திடாயே - ஏ - ஈற் றசை. ஓர் நாள் - எழுவாய். உளதோ - பய னிலை. நீ - தோன்று எழுவாய். உரைத்திடாய் - பய னிலை. அதனை - செயப்படு பொருள். (அவாய் நிலையால் பெறப் பட்டது. (8)

உரையேனனி வாய்திறந் துன்புகழ் தன்னைநாளும்
விரையார்மல ரிட்டருச் சிக்கவி ருப்புமில்லேன்
கரையேனுள நின்னினைந் தெத்திறத் தாற்கடப்பேன்
றிரையார்வினை யார்பிற விக்கடற் றில்லையானே. (9)

(இ-ள்) தில்லையானே—தில்லைப் பதியின்கண் எழுந்தருளி யிருக்கும் இறைவரே, உன்—தேவரீரது, புகழ்தன்னை—கீர்த்தியினை, நாளும்—பிரதி தினமும், நனி—(நன்றாக) மிகுதி யாக, வாய்—வாயினை, திறந்து—விண்டு, உரையேன்—(பிறர் கேட்கும் படி) கூறிலேன், விரை—வாசனை, ஆர்—பொருந்திய, மலர்—புஷ்பங்களை, இட்டு—(தேவரீரது திரு வடியில்) வைத்து, அருச்சிக்க—பூசிக்க, விருப்பும்—விருப்பமும், இல்லேன்—இல்லாதவனா யிருக்கின்றேன், நின்—தேவரீரை, நினைந்து—கருதி, உளம்—மநம், கரையேன்—கரைகின்றிலேன் (இத் தகையேன்), வினை—கருமங்களினால், ஆர்—(வந்து) பொருந்திய, திரை—(இன்ப துன்ப மாய) அலைகளை, ஆர்—உடைய, பிறவிக் கடல்—ஜென்ம சமுத்திரத்தினை, எத் திறத்தால்—எந்தத் தன்மையினால், கடப்பேன்—தாண்டுவேன், (தாண்ட முடியாது என்பது கருத் தாம்.) எ-று.

(இ-பு) தில்லையானே - விளி. நனி - உரிச் சொல். புகழ் தன்னை - தன் - சாரியை. நாளும் - உம் - முற்று. விருப்பும் - உம் - இறந்தது தழீஇயது. திரை - ஈண்டு இன்ப துன்ப மாம் திரைகள் என்க. வினையார் - மூன்ரும் வேற்றுமைத் தொகை. கடற் தில்லை யானே - இரண்டாம் வேற்றுமைத் தொகை, தழாத் தொடர். யான் - தோன்ரு எழுவாய். உரையேன் - பய னிலை. புகழ் - செயப் படு பொருள். யான் - தோன்ரு ஒழுவாய். இல்லேன் - பய னிலை. விருப்பு - செயப்படு பொருள். யான் - தோன்ரு எழுவாய். உளம் கரையேன் - பய னிலை. (9)

ஆனேறிவர்ந் தென்னெதி ரேவிரைந் தன்றுவந்தோய்க்
கேனோவெறுப் பிப்பொழு தோர்சற்றி ரங்குகில்லாய்
நானோவறி வேனுன்பெ ருமையை நம்பனேநீ
தானேபொருத் தாளுகண் டாயென்ற வறேலாமே. (10)

(இ-ள்) நம்பனே—கடவுளே, அன்று—முன் ஒரு காலத் தில், ஆன் எறு—ரிஷப வாகனத்தில், இவர்ந்து—ஏறி, என்—அடியே னது, எதிரே—எதிரில், விரைந்து—சீக்கிரத்தில், வந்தோய்க்கு—(எழுந்தருளி) வந்த தேவரீருக்கு, இப்.பொழுது—இக் கால், வெறுப்பு—துவேஷம், ஏனோ—என்ன குற்றத்தினுலோ அறியேன், (ஆதலினுல்), ஓர் சற்று—ஒரு சிறிது, இரங்குகில்லாய்—இரக்கம் வைத்தருள்வீ ராக, உன்—தேவரீரது, பெருமையை—மகிமையை, நானோ—(அறிவிலி யாய) யானோ, அறிவேன்—உணரவல்லேன் (உணரமாட்டேன்; ஆதலால்), நீ தானே—தேவரீரே, என்—அடி யேனுடைய, தவறு—குற்றங்கள், எலாம்—யாவற்றையும், பொறுத்து—க்ஷமித்து, ஆளு—(வலிய வந்து அடியேனை) ஆட் கொள்வீ ராக. எ-று.

(இ-பு) வந்தோய் - முன் னிலை வினையா லணையும் பெயர். ஏனோ - ஓ - வினு. இரங்குகில்லாய் - கில் - ஆற்றல் இடை நிலை.

நானே - ஓ - எதிர்மறைப் பொருளது. நம்பனே - விளி. நீ தானே - தான் - அசை நிலை. ஏ - பிரி நிலையும், தேற்றமுமாம். கண்டாய் - முன் னிலை யசை. ஏ - ஈற் றசை. வெறுப்பு - எழுவாய். ஏனே - பய னிலை. நீ - தோன்ரு எழுவாய். இரங்குகில்லாய் - பய னிலை, நான் - எழுவாய். அறிவேன் - பய னிலை. பெருமை - செயப்படு பொருள். நீ - எழுவாய். ஆளு - பய னிலை. அடியேனை - செயப்படு பொருள். (இசை யெச்சத்தாற் பெறப்பட்டது.) (10)

எல்லாமறி வோயறிந் தேவகுத் திட்டவாறே
யல்லாற்றமி யேனும்பு ரிவதோன் றில்லையானற்
போல்லாமைசெய் வித்தவ னீபொறுப் பானுநீகல்
வில்லாயிளைத் தேனைப்ப வத்தினி விட்டிடேலே. (11)

(இ-ள்) எல்லாம்—யாவற்றையும், அறிவோய்—உணர்ந்துள சர்வஞ்ஞரே, கல்—மஹா மேரு கிரியினை, வில்லாய்—வில் லாக உடையவரே, அறிந்தே—(தேவரீர் சிருட்டியின் ஆதியிலே சீவர் களின் கர்மம் அனைத்தையும்) உணர்ந்து, வகுத்திட்ட—நியமித் துள்ள, ஆறே—மார்க்கத்தின் பிரகாரம் (நடந்து வருவதே), அல்லால்—அன்றி, தமியேனும்—அடியேன், புரிவது—(சுதந்திர மாகச்) செய்வது, ஒன்று—எதுவும், இல்லை—இன்று, ஆனல்—(என்று சாத்திரங்) கூறு மானல், பொல்லாமை—குற்றத்தினை, செய்வித்தவன்—செய்வித்தவரும், நீ—தேவரீரே (ஆதலால்), பொறுப்பானும்—(அதனை) க்ஷமிப்பவரும், நீ—தேவரீரே, இனி—இப் பொழுது, இளைத்தேனை—(சம்சாரத்திற் கிடந்து) வருந்திய என்னை, பவத்து—ஜநந (மரண)த்தின்கண், விட்டிடேல்—விடா தருள்வீ ராக. எறு.

(இ-பு) அறிவோய், வில்லாய் - விளிப் பெயர்கள். அறிந்தே - ஏ - அசை நிலை. வகுத்திட்ட ஆறே - இடு - பகுதிப் பொருள்

விகுதி. ஏ-பிரி நிலையும், தேற்றமுமாம். தமியேனும் - உம் - அசை நிலை. செய்வித்தவன், பொறுப்பான், இளைத்தேன் - இவை வினையா லணையும் பெயர்கள். பொறுப்பானும் - உம் இறந்தது தழீஇய எச்சம். விட்டிடேல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஏல் - எதிர் மறை வியங்கோள் விகுதி. ஏ - ஈற் றசை. செய்வித்தவன் - எழுவாய். நீ - பய னிலை. பொறுப்பான் - எழுவாய். நீ - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். விட்டிடேல் - பய னிலை. இளைத்தேன் - செயப்படு பொருள். (11)

ஏலக்குழ லாரநு ராகம தென்னுமாயா
சாலக்குணைந் தேற்குன தின்னரு டந்துகாப்பாய்
நீலக்கள மாலய னேடுமுன் னேடிவாடு
மூலக்கந லேகந லேந்துகைம் முக்கணனே. (12)

(இ-ள்) நீல களா—நீல கண்டத்தினை யுடையவரே, மால்—மகா விஷ்ணுவும், அயன்—பிர்ம தேவனும், முற்—பூர்வத்தில், நேடி—(முறையே வராஹ அன்ன ரூபமாய்க் கீழும் மேலும்) தேடி, வாடும்—(ஸ்வரூபத்தினை அறிய முடியாது) வாட்ட முற் றிருக்கும் படி செய்த, மூல கநலே—சர்வ காரணாக்நி சொரூபரே, கநல்—அக்நி (வடிவ மழுவை), ஏந்து—தாங்குகின்ற, கை—அஸ்தத்தினையும், முக் கணனே—திரி நேத்ரங்களையு முடையவரே, ஏலம்—வாசனை யோடு கூடிய சாந்து அணிந்த, குழலார்—கூந்தலை யுடைய பெண்கள், அநுராகமது—சிற் றின்ப விருப்பம், என்னும்—என்று சொல்லப் படும், மாயா—மாயை யாகிய, சாலக்குள்—வலைக்குள் (கிடந்து), ணைந்தேற்கு—நைவுற்றிருக்கின்ற அடியேனுக்கு, உனது—தேவரீரது, இன்—இனிய, அருள்—கிருபையினை, தந்து—ஈய்ந்து, காப்பாய்—(அடியேனை) ரக்ஷித் தருள்வீராக.

(இ-பு) நீல களா, மூலக் கநலே, முக் கணனே - இவை மூன்றும் விளிகள். குழலார், நைந்தேன், முக் கணன் - இவை வினையா லணையும் பெயர்கள். அநுராகமது - அது - பகுதிப்

பொருள் விகுதி. மாயா - வட மொழி. சாலக்குள் - 'சாலத்துக்குள்' என்பதன் அத்துச் சாரியை குறைந்த நிலை. கை முக் கணன் - இரண்ட னுருபும் எண் ணும்மையும் தொக்க தொகை. நீ-தோன்றா எழுவாய், காப்பாய் - பய னிலை. அடியேனை - செயப்படு பொருள். (இசை எச்சத்தாற் பெறப்பட்டது). (12)

**கண்ணார்நுத லோய்கடை யேனையு மொன்றதாயே**
**யெண்ணவரு ளன்றுசு ரந்துளைக் கின்றிலாதேன்**
**விண்ணோரிறை யோய்க்குமுண் டோசொல்வே றுப்பிரேடு**
**தண்ணார்விருப் புங்கரிப் போர்வைய சாற்றிடாயே. (13)**

(இ-ள்) கண் ஆர் நுதலோய்—நெற்றிக் கண்ணையுடையோய், கரி போர்வைய—யானைத் தோலைப் போர்வை யாக வுடையவரே, அன்று—முன் ஒரு காலத்தில், கடையேனையும்—தாழ்வோடு கூடிய என்னையும், ஒன்றது ஆய்—ஒரு பொருளாக, எண்ண—கருதி, அருள்—கிருபையினை, சுரந்துளக்கு—பாலித்தோய்க்கு, இன்று—இப் பொழுது, இலாது—(அவ் வருள் சுரத்தல்) இலாமை, என்—யாது காரணத்தாலோ, விண்ணோர் இறையோய்க்கும்—தேவ தேவ ணாகிய உமக்கும், சொல்—கூறுநின்ற, வெறுப்பிரேடு—அப்பிரியமும், தண்—குளிர்ச்சி, ஆர்—பொருந்திய, விருப்பும்—பிரியமும், உண்டோ—உளவோ, சாற்றிடாய்—(அங்ஙனம் இருந்தால் அதனைத்) திரு வாய் மலர்ந் தருள்வீராக. (எ-று)

(இ-பு) நுதலோய், போர்வைய - இவை விளிகள். கடையேனையும் - உம் - இழிவு சிறப்பு. ஒன்றதாயே - ஆகு பெயராய் ஒன்றென்னும் எண்ணிக்கை யுடைய பொருளைக் குறித்தது. அது - பகுதிப் பொருள் விகுதி. ஏ - அசை நிலை. எண்ண - 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டுத் தெரி நிலை வினை யெச்சம், 'சுரந்துளை' என்னும் முன் னிலை வினையா லணையும் பெயரின் பகுதி கொண்டு முடிந்தது. இலாது - 'இல்லாதது' என்பதன் இடைக் குறை. ஈண்டு இதனை இல்லாமை, அல்லது, இல்லாதிருத்தல்

ஆகிய பண்புப் பெயர், அல்லது, தொழிற் பெய ராகக்கொள்க. என் - 'என்ன' என்னும் வினு வினைக் குறிப்பின் விகாரம். இறையோய்க்கும் - உம் - உயர்வு சிறப் பும்மை. உண்டோ - ஓ - வினு. வெறுப்பினேடு - ஒடு - எண்ணுப் பொருட் டாய ஒ ரிடைச் சொல். விருப்பும் - உம் - எண்ணுப் பொருளது. சாற்றிடாயே - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஏ ஈற் றசை. இலா(த)து - எழுவாய். என் - பய னிலை. நீ - தோன்று எழுவாய். சாற்றிடாய் - பய னிலை. அதனை . செயப்படு பொருள். (இடைப் பிற வரல்). (13)

சாற்றாய்திருத் தில்லையுள் ளாய்சிவ சங்கராவெண்
ணீற்றாய்கடை யேனுயு மாறென்ற னெஞ்சுளஞ்சிப்
போற்றாதிருந் தேன்வருந் தாமலென் புத்திதன்னைத்
தேற்றாயொரு நீயினி யன்பினைச் செய்யுமாறே. (14)

(இ-ள்) திரு—அழகிய, தில்லை உள்ளாய்—தில்லை வநத்தின் கண் எழுந்தருளி யுள்ளவரே, சிவ—மங்கள சொரூபரே, சங்கரா—சுகஞ் செய்பவரே, வெண்—வெண்மை யான, நீற்றாய்—விபூதி யணிந்துள்ளவரே, ஒரு—ஒப்பற்ற, நீ—நீர், கடையேன்—தாழ்வுடையேன், உயும்—(மோக்ஷத்தினை அடைந்து) பிழைக்கும்படி யான, ஆறு—வழியை, சாற்றாய்—உபதேசித்தருள்வீராக, என்—அடியேனது, நெஞ்சுள்—மநத்தின்கண் (ஏதோ பிரமாதத்தினல் தேவரீரை நினைந்து), போற்றாதிருந்தேன்—தோத்திரம் செய்யா திருந்தேன், அஞ்சி—(அக் குற்றத்திற்குப்) பயந்து, வருந்தாமல்—வருத்த மடையாமல், இனி—இப் பொழுது, அன்பினை—(தேவரீரிடத்துப்) பக்தியினை, செய்யும் ஆறு—பண்ணும்படி, என் புத்திதன்னை—அடியேன் அறிவினை, தேற்றாய்—தெளிவிப்பீராக. எ-று.

(இ-பு) உள்ளாய், சிவ, சங்கரா, வெண் ணீற்றாய் - இவை விளிகள். கடையேன் - குறிப்பு வினையா லணையும் பெயர். உயும் - 'உய்யும்' என்பதன் இடைக் குறை. என் றன், புத்தி தன்னை -

*தன் - இரண்டும் சாரியைகள். செய்யும் ஆறே - ஏ - ஈற் றசை. நீ - எழுவாய். சாற்றாய் - பய னிலை. உய்யும் ஆறு - செயப்படு பொருள். யான் - தோன்றா எழுவாய். இருந்தேன் - பய னிலை. நீ - எழுவாய். தேற்றாய் - பய னிலை. புத்தி - செயப்படு பொருள்.* (14)

மாறாயவோ ரைந்துபு லன்வலி மாய்த்துநெஞ்சை
நீறார்திரு மேனிய வுன்கணி றுத்தமாட்டே
னேறாதப வக்கட லேறவு மெண்ணிநைந்தேன்
கூறாயென தெண்ணமெவ் வண்ணங்கை கூடுமன்றே. (15)

(இ-ள்) *நீறு—விபூதி, ஆர்—பொருந்திய, திரு மேனிய— திவ்ய மங்கள மூர்த்தத்தை யுடையவரே, மாறு ஆய—பகை ஆகிய, ஓர்—ஒப்பற்ற, ஐந்து புலன்—பஞ்சேந்திரியங்களினது, வலி—சாமர்த் தியத்தினை, மாய்த்து—கெடுத்து, நெஞ்சை—மனத்தினை, உன்கண்— தேவரீரிடத்தில், நிறுத்தமாட்டேன்—நிற்கச் செய்ய ஆற்ற லில்லேன், ஏறாத—ஏறமுடியாத, பவ கடல்—ஜெந்ம சமுத்திரத் தின் (கரையை), ஏறவும்—அடையவும், எண்ணி—கருதி, நைந் தேன்—வாடினேன், எனது—அடியேனது, எண்ணம்—கருத்து, எவ் வண்ணம்—எப்படி, கை கூடும்—சித்திக்கும், கூறாய்—(நீர் இதனைக்) கூறியருள்வீராக. எ-று.*

(இ-பு) *மேனிய - விளி. அன்று - ஏ - இரண்டும் அசை நிலை கள். நான் - தோன்றா எழுவாய். நிறுத்தமாட்டேன் - பய னிலை. நெஞ்சு - செயப்படு பொருள். நான் - தோன்றா எழுவாய். நைந் தேன் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். கூறாய் - பய னிலை. இதனை - செயப்படு பொருள். (இடைப் பிற வரல்)* (15)

அன்றேதமி யேற்கெளி மாநுட ஞகிநீவந்
துன்றாள்கள ளித்தனை பெற்றுமோன் றம்பெறாி

னின்றேனல தைம்புல னென்வச நின்றதில்லை
யின்றேதவற் றைக்கொலு பாயமொன் றீசவெற்கே. (16)

(இ-ள்) ஈச—பரமேசனே, அன்றே—முற் காலத்திலே, தமியேற்கு—அடியேனுக்கு, எளி—தாழ்ந்த, மாநுடன் ஆகி—மனிதனாய், நீ—தேவரீர், வந்து—(எழுந்தருளி) வந்து உன்—தேவரீரின், தாள்கள்—திரு வடிகளை, அளித்தனை—கொடுத்தருளினீர். பெற்றும்—(தேவரீரது திரு வடியை) அடைந்தும், ஒன்றும்—ஒரு பிரயோஜநமும், பெறாரின்—அடையாதவரைப் போல, நின்றேன்—இருக்கின்றேனே, அலது—அன்றி, ஐ புலன்—பஞ்சேந்திரியங்களும், என்—அடியேனது, வசம்—வசத்தில், நின்றது இல்லை—(இது வரை ஒரு போதும்) நிற்க வில்லை, அவற்றை—(அதனால்) அவற்றினை, கொல்—நாசம் செய்யும்படி யான, உபாயம்—உபாயம், ஒன்று—ஒன்றினை, எற்கு—அடியேனுக்கு, இன்று—இப் பொழுது, ஓது—கூறியருள்வீராக. எ-று.

(இ-பு) அன்றே - ஏ - அசை நிலை. எளி - 'எளிய' என்னும் பெய ரெச்சம் ஈறு குறைந்து நின்றது. பெற்றும் - உம் - இழிவு சிறப்பு. பெறாரின் - இன் - உவம வுருபு. ஈச - விளி. எற்கே. ஏ - ஈற் றசை. நின்றதில்லை - எதிர் மறைத் தெரி நிலை வினை நீ - தோன்றா எழுவாய். அளித்தனை - பய னிலை. தாள் கள் - செயப் படு பொருள். ஐம் புலன் - எழுவாய். நின்ற தில்லை - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். ஓது - பய னிலை. (உபாயம்) ஒன்று. செயப்படு பொருள். (16)

எற்கோவுன தன்புமு நத்திலை யென்றனெஞ்சங்
கற்கேநிக ராயதிக் கல்லைநீ கல்லைவில்லா
முற்கால்வளைத் தாங்குவ ளைத்தன்பின் மூழ்குவிப்பாய்
சிற்கோலசி தம்பர நாயக தேவதேவே. (17)

(இ-ள்) சித் கோல—சிற் சொரூபரே, சிதம்பர நாயக—சிதம்பர (ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும்) தலைவரே, தேவ

தேவே—தேவர்கட்குந் தேவரே, எற்கோ—எனக்கோ, உனது—உன்னிடத்து, அன்பு—பக்தி, மநத்து—மநத்தின்கண், இலை—இல்லை, என்—அடியேனது, நெஞ்சம்—மநம், கற்கே நிகர் ஆயது—கல்லுக்குச் சமாந மாய் இருக்கின்றது, முற் கால்—முன்(ஒரு) காலத்தில், நீ—தேவரீர், கல்லை—(மகா மேரு) கிரியை, வில்லா(க)—தநுவாக, வளைத்த ஆங்கு—வளைத்தது போல, இக் கல்லை—இந்தக் கல் லாகிய மநதை, வளைத்து—வளையும்படி செய்து, அன்பில்—பக்தியினிடத்து, மூழ்குவிப்பாய்—மூழ்கும்படி செய்வீராக. எ-று.

(இ-பு) என் + கு + ஓ = 'எற்கோ' எனப் புணர்ந்தமை காண்க. இலை - 'இல்லை' என்பதன் இடைக் குறை. என் றன் - தன் - சாரியை, கற்கே - ஏ - அசை நிலை. கல் - மநம் கல் லாக உருவகிக்கப்பட்டது. கால் - காலம் என்பதன் கடைக் குறை. வளைத் தாங்கு - ஆங்கு - உவம வுருபு. சிற் கோல, நாயக, தேவே - இவை மூன்றும் விளிகள். அன்பு . எழுவாய். இலை - பய நிலை. நெஞ் சம் - எழுவாய். நிகராயது - பய னிலை. நீ - எழுவாய். மூழ்குவிப்பாய் - பய னிலை. கல்லை - செயப்படு பொருள். (17)

தேவேயுனை யன்பினிற் பூசைசெய் தேனுமல்லே
னாவான்மிகப் பாடிநின் றாடிந யக்குகில்லே
னோவாதுழ றீமநத் தோடிவ ணுற்றுளேன்மற்
றுவாவினி யேன்வரு மேன்பத றிந்திலேனே. (18)

(இ-ள்) தேவே—(தேவ தேவ னாகிய) கடவுளே, உனை—தேவரீரை, அன்பினின்—பக்தியினால், பூசை செய்தேனும்—பூசித்தவனும், அல்லேன்—அல்லன், நின்று—(தேவரீரது சந்நதியில்) நின்று, நாவால்—நாக்கினால், மிக—நன்றாக, பாடி—துதித்து, ஆடி—(ஆநந்தத்) தாண்டவம் செய்து, நயக்குகில்லேன்—விரும்பிப் பிரார்த்தித்திலேன், இவண்—இவ் விடத்து, ஓவாது—இடையறாது, உழல்—(விஷயங்களில்) சுழன்று திரிகின்ற, தீ—கெட்ட, மநத்தோடு—

உள்ளத்தோடு, உற்றுளேன்—பொருந்தியிருக்கிறேன், ஆ ஆ—அந்தோ அந்தோ, இனி—மேல், என்—யாது (தீங்கு), வரும்—நேரும், என்பது—என்பதை, அறிந்திலேன்—(யான்) உணர வில்லை, எ-று.

(இ-பு) தேவே - விளி. செய்தேனும் - உம் - எதிரது தழீஇய எச்சம். நயக்குகில்லேன் - கில் - ஆற்றல் இடை நிலை. மற்று - அசை நிலை. ஆ - ஆ - அதிசய இரக்கக் குறி. என்பது - குறிப்பு வினையா லணையும் பெயர். இலேனே - ஏ - ஈற் றசை. யான் - தோன்றா எழுவாய். அல்லேன் - பய னிலை. யான் - தோன்றா எழுவாய். நயக்குகில்லேன் - பய னிலை. தேவரீரை - செயப்படு பொருள் (வருவிக்கப்பட்டது). யான் - தோன்றா எழுவாய். உளேன் - பய னிலை. யான - தோன்றா எழுவாய். அறிந்திலேன் - பய னிலை. என்பது - செயப்படு பொருள். (18)

அறியாமையிற் கீழவர் பல்பிழை யாற்றினுலுங்
குறியாதருள் செய்வது மேலவர் கோள்கையன்றோ
மறியார்கரத் தோய்சிறி யேன்வினை மாற்றியாளப்
பொறியேலுனக் கேன்முக மன்சொலப் பொய்யனேனே. (19)

(இ-ள்) மறி—மானை, ஆர்—பொருந்திய, கரத்தோய்—கையினையுடையோய், அறியாமையில்—அஞ்ஞானத்தினுல், கீழவர்—தாழ்ந்தோர், பல்---பல, பிழை—தவறுதல்களை, ஆற்றினுலும்—செய்தாலும், குறியாது—(அதனைப்) பொருட்படுத்தாது, அருள் செய்வது—அநுக்கிரகம் செய்வது, மேலவர்—உயர்ந்தோர்களது, கொள்கை—கோட்பாடு, அன்றோ—அல்லவா, பொய்யனேன்—(அதனுல்) பொய் கூறும் யான், உனக்கு—தேவரீருக்கு, என்—என்ன, முகமன்—உபசார வார்த்தை, சொல—சொல்ல வேண்டும் (ஏதுவும் வேண்டாம் என்றபடி), சிறியேன்—(ஆதலால்) அடியேனது, வினை—கர்மங்களை, மாற்றி—நிவிர்த்தித்து, ஆள—தடுத்

தாட் கொள்ளுதற்கு, பொறியேல்—(திரு உள்ளத்தில்) குறிக் கொள்வீ ராக. எ-று.

(இ-பு) அறியாமையில் - இல் - ஏதுப் பொருளில் வந்த ஐந்த னுருபு. கீழவர், மேலவர், சிறியேன், பொய்யனேன் - இவை குறிப்பு வினையா லணையும் பெயர்கள். ஆற்றினலும் - உம் - இழிவு சிறப்பு. செய்வது - தொழிற் பெயர். அன்றோ - ஓ - வினு. கரத் தோய் - விளி. பொறியேல் - ஏல் - ஈண்டு அசை நிலை. சொல - 'சொல்ல' என்பதன் இடைக் குறை சொல் என்னும் செய வென் வாய்பாட்டு வினை யெச்சம், இசை யெச்சத்தாற் பெற்ற "வேண்டும்" என்னும் வினை முற்றுக் கொண்டது. பொய்யனேனே - ஏ - ஈற் றசை. செய்வது - எழுவாய். அன்றோ - பய னிலை. நீ - தோன்ற எழுவாய். பொறியேல் - பய னிலை. முகமன் - எழுவாய். வேண் டும் - பய னிலை. (இசை யெச்சத்தாற் பெறப்பட்டது). (19)

பொய்யற்றவர் வந்தடை யும்பரி பூரணவிம்
மெய்யற்றவெற் குநின லானிலை வேறுமுண்டோ
தையற்கிட மேயிட மாவரு டாணுவேயேன்
மையற்றவிர்ப் பானுன்க டாக்ஷம்வ ழங்கிடாயே. (20)

(இ-ள்) பொய் அற்றவர்—மித்தையாப் பிரபஞ்சப் பற்று அற்றவர், வந்து—(விசாரித்து) வந்து, அடையும்—பெறும்படியான, பரிபூரண — அகண்ட சொரூபரே, தையற்கு — அம்மைக்கு, இடமே—வாம பாகமே, இடமா(க)—ஸ்தான மாக, அருள்—அநுக் கிரகம் செய்த, தாணுவே—நிலைபேறுடையவரே, இ—இந்த, மெய் அற்ற—உண்மை யொழிந்த, எற்கு—அடியேனுக்கு, நின்— தேவரீரின் (அருள்), அலால்—அன்றி, வேறும்—மற்றும், நிலை— ஆதாரம், உண்டோ—இருக்கின்றதா (இல்லை என்றபடி), என்— அடியேனது. மையல்—மயக்கத்தினை, தவிர்ப்பான்—நிவிர்த்தித்தற் பொருட்டு, உன்—தேவரீரது, கடாக்ஷம்—(கிருபா) வீக்ஷண்ய லேசத்தினை, வழங்கிடாய்—கொடுப்பீராக. (எ-று)

(இ-பு) அற்றவர் - வினையா லணையும் பெயர். பரிபூரணு, தாணுவே - இவை இரண்டும் விளிகள். நின் - என்புழி, 'அருள்' என்பதை இசை எச்சத்தாற் கொள்க. அலால் - 'அல்லால்' என்ப தன் இடைக் குறை. வேறும் - உம் - இறந்தது தழீஇய எச்சம். உண்டோ - ஓ - எதிர் மறை. இடமே - ஏ - பிரி நிலையும், தேற்றமு மாம். இடமா - ஆ - 'ஆக' என்பதன் கடைக் குறை. மையல் + தவிர்ப்பாய் - 'மையறவிர்ப்பாய்' என நிற்க வேண்டியது, 'மையற் றவிர்ப்பாய்; என, எதுகைச் சந்தங் குறித்து, லகரம் கெடாது திரிந்து நின்றது. வழங்கிடாயே - ஏ - ஈற் றசை. இடு - பகுதிப் பொருள் விகுதி. நில - எழுவாய். உண்டோ - பய னிலை. நீ - தோன்ரு எழுவாய். வழங்கிடாய் - பய னிலை. (20)

வழங்கேற்கிவ ணேதுசெய் தாலேது வாகுமேன்றேன்
றெழுங்கற்பனே யாவுமி றந்துணர் வேகமேயா
யோழுங்கிற்புல ஞதியு பாதியோ ழித்தோருன்னேச்
செழுங்கைக்கனி யோத்துண ரும்படி தில்லேயானே. (21)

(இ-ள்) தில்லையானே — தில்லைப் பதியின்கண் எழுந்தருளி யிருக்கும் ஸ்வாமி, ஒழுங்கின்—(சாஸ்திரத்திற் கூறிய) கிரம மாக, புலன் ஆதி—(பகிர்) இந்திரிய உணர்வு முதலிய, உபாதி—தடை களை, ஒழித்து—நிவிர்த்தித்து, இவண்—இவ் விடத்து, ஏது— யாது, செய்தால்—செய்யின், ஏது—யாது, ஆகும்—ஆம், என்று என்று—என என, எழும்—உண்டாகின்ற, கற்பனை யாவும்— கற்பனைக ளனைத்தும், இறந்து—நசித்து, உணர்வு—(அந்தக் கரண) விருத்தி, ஏகம் ஆய்—ஏகாக் கிரமாய், ஒரு—ஒப் பற்ற, உன்னை— தேவரீரை, செழும்—செழுமை யான, கை—கையின்கண் உள்ள, கனி—(நெல்லிப்) பழத்தினை, ஒத்து—போன்று, உணரும்படி— (பிரத்தியக்ஷ மாக) அறியும் ஆறு, ஏற்கு—அடியேனுக்கு, வழங்கு— அருள்வீராக. எ-று.

(இ-பு) ஏது, எது - இவை வினாப் பெயர்கள். என் றென்று - மிகுதி குறித்து அடுக்கி வந்தவை. யாவும் - உம் - முற்று. ஏகமே - ஏ - அசை நிலை. ஒழுங்கில் - இல் - ஏதுப் பொருளில் வந்த ஐந்த னுருபு. தில்லையானே—விளி. பிரதிபந்த மற்ற பிரத்தியக்ஷத்திற் குச், செழுங் கைக் கனி உவமானம். நீ - தோன்று எழுவாய். வழங்கு - பய னிலை. (உணரும்)படி - செயப்படு பொருள். (21)

தில்லைப்பதி மேயசி வப்பிர காசனேயோ
தொல்லைப்பிற வாநெறி மேவிய தோன்றலேயோ
வல்லற்பிற விக்கிளைத் தேன்றனை யஞ்சலென்றோர்
சொல்லைப்பக ராய்விடை மீதினந் தோன்றிநின்றே. (22)

(இ-ள்) தில் லைப்பதி—தில்லை நகரின்கண், மேய—பொருந்தி யிருக்கும், சிவப் பிரகாசனே—சிவப் பிரகாசன் என்னும் பெயரோடு கூடிய பரசிவனே, தொல்லை—அநாதியாகவே, பிறவா—ஜநந (மரண)ம் அற்ற, நெறி—மார்க்கத்தினை, மேவிய—பொருந்திய, தோன்றலே—பெருமையிற் சிறந்தவனே, இனம்—இன்னும், விடை மீது—ரிஷப வாகநத்தின் மீது, தோன்றி நின்று—எழுந் தருளி வந்து, அல்லல்—துன்ப ரூபமா யுள்ள, பிறவிக்கு—ஜநந (மரண)த்திற்கு, இளைத்தேன்றனை—(அஞ்சி) மெலிந்திருக்கும் தமியேனைப்(பார்த்து), அஞ்சல்—பயப்படற்க, என்று—என, ஓர்—ஒரு, சொல்லை—வார்த்தையினை, பகராய்—கூறியருள்வீராக. எ-று.

(இ-பு) மேய - 'மேவிய' என்பதன் இடைக் குறை. சிவப் பிரகாசனே(யோ), தோன்றலே(யோ) - இவை விளிகள். ஓ - இரண் டும் அசை நிலைகள். இளைத்தேன்றனை - தன் - சாரியை. குறிப்பு வினையா லணையும் பெயர். இனம் - இன்னம்' என்னும் எதிர் காலங் குறிக்கும் இடைச் சொல்லின் இடைக் குறை. நின்றே - ஏ - ஈற் றசை. நீ - தோன்று எழுவாய். பகராய் - பய னிலை. சொல் - செயப்படு பொருள். (22)

தோன்றாத்துணை யேபுணை யேபவத் தொல்கடற்கென்
போன்றார்க்குமி ரங்கும ருட்பெரும் போதமேயிங்
கீன்றார்மனை யாதிய மோகமே லாம்விடுத்துட்
சான்றாமுனை யேவினை யேனினிச் சாரவெண்ணே. (23)

(இ-ள்) தோன்றா துணையே—மறைந்திருக்கும் (அந்தரங்க) சகாயரே, தொல்—அநாதி யாய் உள்ள, பவ கடற்கு—ஜந்ம சமுத்திரத்திற்கு, புணையே—மரக்கல மானவரே, என் போன்றார்க்கும்—என்னைப் போன்ற பாவிகளுக்கும், இரங்கும்--கருணை புரியும், பெரும் அருள் போதமே—பெரிய ஜீவகாருண்ய ஞாந சொரூபரே, இங்கு—இவ் விடத்து, வினையேன்—பாவி யாகிய யான், இனி—மேல், ஈன்றார்—மாதா பிதா, மனை—பெண் சாதி, ஆதிய—முதலிய வற்றிலுள்ள, மோகம்—ஆசைகள், எலாம்—யாவற்றையும், விடுத்து—விட்டு, உள்—இருதயத்தின்கண், சான்று ஆம்—சாக்ஷி யாக விளங்கிக்கொண்டிருக்கும், உனையே—தேவரீரையே, சார—அடையும்படி யாக, எண்ணு—கருதி யருள்வீ ராக. எ-று.

(இ-பு) துணையே, புணையே, போதமே-இவை விளிகள். புணை-உருவகம். இங்கு-இடங் குறித்து வந்த இடைச்சொல். போன்றார்க்கும்-உம்-இழிவு சிறப்பு. போன்றார், ஈன்றார், வினையேன்-இவை வினையா லணையும் பெயர்கள். உனையே-ஏ-பிரிநிலையும், தேற்றமு மாம். எண்ணே-ஏ-ஈற் றசை. நீ-தோன்றா எழுவாய். எண்ணு-பய னிலை. (23)

சார்ந்தாய்குரு வாதிய வாய்விடை தன்னில்வந்தாய்
கூர்ந்தாயரு ளிற்பிற வாநெறி கூட்டுவித்தா
யோர்ந்தேன்குறை யின்றெனி னுங்குறை யுண்டுகண்டாய்
பேர்ந்தோடுமே னெஞ்சுளுன் னன்புபி றக்குமட்டே. (24)

(இ-ள்) குரு ஆதிய ஆய்—குரு லிங்க சங்கம மாக, சார்ந்தாய்—(தேவரீர் இவண்) பொருந்தி யிருந்தீர், விடைதன்னில்—ரிஷப வாகநத்தில், வந்தாய்—(எழுந்தருளி) வந்தீர், அருள்—(அடியேன்பால்) கிருபை, கூர்ந்தாய்—மிகுந்தருளினீர், பிறவா—ஜநந மரணம் அற்ற, நெறி—மார்க்கத்தினை, கூட்டுவித்தாய்-அடைவித்தீர், ஓர்ந்தேன்—(இவற்றினை எல்லாம் அடியேன்) உணர்ந்தேன், குறை—(அதனால்) ஒரு குறையும், இன்று—இல்லை, எனினும்—ஆயினும், பேர்ந்து ஓடும்—(திரு வடிக்கண்) நில்லாது (விஷயங் களிடத்துச்) செல்லுகின்ற, என்—எனது, நெஞ்சுள்—மநத்தின்கண், உன்—தேவரீரிடத்து, அன்பு—பக்தி, பிறக்கும் மட்டும்—உண்டாகும் வரை, குறை—(அந்தக்) குறை, உண்டு—இருக்கின்றது. எ-று.

(இ-பு) விடைதன்னில் - தன் - சாரியை. 'ஆய்' - என்னும் வினை யெச்சம், 'சார்ந்தாய்' - என்னும் வினை முற்றுக் கொண்டது. அருளின் - இன் - சாரியை. இன் றெனினும் - உம் - எதிரது தழீஇ யது. கண்டாய் - முன் னிலை யசை. உன் னன்பு - ஏழாம் வேற்றுமைத் தொகை மட்டு(ம்) - கால எல்லையைக் குறிக்கும் ஓ ரிடைச் சொல். இத னீற்றில் முற்றும்மை தொக்கது. மட்டே - ஏ - ஈற்றசை. நீ - தோன்றா எழுவாய். சார்ந்தாய் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். வந்தாய் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். கூர்ந்தாய் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். கூட்டுவித்தாய் - பய னிலை. பிறவா நெறி - செயப்படு பொருள். அடியேன் - தோன்றா எழுவாய். ஓர்ந்தேன் - பய னிலை. இவற்றினை - செயப் படு பொருள். குறை - எழுவாய். உண்டு - பய னிலை. (24)

பிறவாநெறி யாகிய தோர்திருப் பேரையாவெம்
முறவேயற வேதவிர்ந் தென்மந மோடிவாடிப்
புறவாதனை பற்றிவ ளர்ந்திடு புன்மையாலின்
றிறவேயத னைப்புரி வானுளத் தெண்ணுவாயே. (25)

(இ-ள்) பிறவா—ஜநந (மரணம்) அற்ற, நெறி ஆகியது—மார்க்கம் ஆகியதனை, ஓர்—ஒப்பற்ற, திரு பேரையா—அழகிய பேரை ஊரின்கண் எழுந்தருளியிருக்கிற ஸ்வாமி, எம்—எமது, உறவே—பந்துவே, என்—அடியேனது, மநம்—உள்ளம், அறவே—அத்தியந்தம், தவிர்ந்து—(விட்டு) நீங்கி, ஓடி—(விஷயங்களிற்) சென்று, வாடி—வாட்டத்தினை அடைந்து, புற வாதனை—பாகிய வாசனையை, பற்றி—பொருந்தி, வளர்ந்திடு—விருத்தி அடைகின்ற, புன்மையால்—இழிந்த தன்மையினால், இன்று—(அடியேற்குப் பிறவா நெறி) இல்லை, அதனை—(ஆகையால்) அந்த மநத்தினை, இறவே—நாசம் அடையும்படியே, புரிவான்—செய்யும் பொருட்டு, உளத்து—மநத்தின்கண், எண்ணுவாய்—(தேவரீர்) நினைத்தருள்வீராக. எ-று.

(இ-பு) ஆகியது - வினையாலணையும் பெயர். ஆகிய தோர் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. உறவே, பேரையா - இவை விளிகள். தஞ்சாவூர் - தஞ்சை என்றாற் போல, பேரூர் - 'பேரை' என மரீஇயிற்று. அறவே - ஏ - தேற்றம். இன்று - என்புழி, ''அடியேற்குப் பிறவா நெறி'' என்பது, இசையெச்சத்தாற் பெறப்பட்டது. இறவே - ஏ - தேற்றம், எண்ணுவாயே - ஏ - அசை நிலை. பிறவா நெறி - தோன்றா எழுவாய். இன்று - பய னிலை. தேவரீர் - தோன்றா எழுவாய். எண்ணுவாய் - பய னிலை. மநத்தினை - செயப்படு பொருள். (25)

எண்ணும்வடி வேதினி நீபுனைந் தெய்தினலுந்
திண்ணம்மென வாவக லாவச்சி தம்பரத்தே
நண்ணும்முன துண்மையைக் காணந யந்துளேனென்
னுண்ணின்றதைக் காட்டுதற் கீசசற் றுன்னுவாயே. (26)

(இ-ள்) ஈச—பரசிவனே, அச் சிதம்பரத்தே—அந்தச் சிதம்பரத்தின்கண், நண்ணும்—பொருந்தாநின்ற, உனது—தேவரீரது,

உண்மையை—எதார்த்த சொரூபத்தினை, காண—தெரிசிக்க, நயந்துளேன்—விரும்பியிருக்கின்றேன், இனி—மேல், நீ—தேவரீர், எண்ணும்—(அவ் வுண்மைச் சொரூபத்திற்குப் பிரதமமாகக்) கருதத் தகுந்த, ஏது—எந்த, வடிவு—மூர்த்தங்களை, புனைந்து—பொருந்தி, எய்தினும்—வரினும், என்—எனது, அவா—(அவ் வுண்மைச் சொரூபத்தி லுள்ள) ஆசையானது, அகலா(து)—நீங்காது, திண்ணம்—(இது) நிச்சய மாம் (ஆகலின்), என்—அடியேனது, உள்—இருதயத்தின்கண், நின்று—இருந்து, அதை—அந்த (தேவரீரது எதார்த்த) சொரூபத்தை, காட்டுதற்கு—தெரிசிப்பித்தற்கு, சற்று—கொஞ்சம், உன்னுவாய்—நினைத்தருள்வீ ராக. எ-று.

(இ-பு) எய்தினும்-உம்-இறந்தது தழீஇயது. அகலா-'அகலாது' என்பதன் துவ் விகுதி குறைந்து நின்றது. சிதம் பரத்தே-ஏ-அசை நிலை. ஈச-விளிப் பெயர். சற்று - சிறு பகுதியினைக் காட்டும் ஓ ரிடைச் சொல். உன்னுவாயே-ஏ-ஈற் றசை. அடியேன் - தோன்றா எழுவாய். நயந்துளேன் - பய னிலை. உண்மை - செயப்படு பொருள். அவா - எழுவாய். அகலாது - பய னிலை. இது - தோன்றா எழுவாய். திண்ணம் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். உன்னுவாய் - பய னிலை. மேற் கூறிய விடயம் - செயப்படு பொருள். (அவாய் நிலையால் வருவிக்கப் பட்டது. (26)

உன்னும்முணர் வுக்குணர் வாயெனக் குண்மைதந்தாய்
மன்னுஞ்சுரு திப்பொரு ளாய்வழி காட்டிநின்றாய்
பின்னுங்குரு வாயடைந் துன்னருள் பேணவைத்தா
யென்னென்றுரைப் பேனின்க ருணையி ருந்தவாறே. (27)

(இ-ள்) உன்னும்—கருதத் தகுந்த, உணர்வுக்கு—(அந்தக் கரண விருத்தி ரூப) ஞானத்திற்கு, உணர்வு ஆய்—சாட்சி ரூப மாய் இருந்து, எனக்கு—அடியேனுக்கு, உண்மை—யதார்த்த சொரூபத்

தினை, தந்தாய்—(தேவரீர்) கொடுத்தருளினீர், மன்னும்—நிலை பெற்ற, சுருதி பொருள் ஆய்—வேதார்த்தமாய் (இருந்து), வழி—(மூத்தி) மார்க்கத்தினை, காட்டி நின்றாய்—அறிவித்தருளினீர், பின்னும்—பின்னரும், குரு ஆய்—குரு ரூப மாக எழுந்தருளி வந்து, அடைந்து—(அடியேன் உம்மைச் சரணுகதி யாக) அடைந்து, உன்—தேவரீரது, அருள்—கிருபையினை, பேணி—விரும்பும்படியாக, வைத்தாய்—செய்தருளினீர். நின்—தேவரீரது, கருணை—கிருபை, இருந்த—(அடியேன்மீது) இருந்த, ஆறு—தன்மையை, என்—எப்படி, என்று—என, உரைப்பேன்—கூறுவேன் (கூற முடியாது என்பது கருத் தாம்.) எ-று.

(இ-பு) என் னென்று - என் - 'என்ன' என்பதன் ஈறு தொக்கு நின்றது. இருந்த வாறே - ஏ - ஈற் றசை. நீ - தோன்ரு எழுவாய். தந்தாய் - பய னிலை. உண்மை - செயப்படு பொருள். நீ - தோன்ரு எழுவாய். நின்றாய் - பய னிலை. நீ - தோன்ரு எழுவாய். வைத்தாய் - பய னிலை. அருள் - செயப்படு பொருள். யான் - தோன்ரு எழுவாய். உரைப்பேன் - பய னிலை. (இருந்த) ஆறு - செயப்படு பொருள். (27)

இருந்தோருமி டத்துணர் வில்லைமா யைக்கிதன்பாற்
பொருந்தாவிடத் தில்லையு யிர்க்கொரு போதமேனுந்
திருந்தாவிவை கொண்டிறை யைந்தொழில் செய்தியென்றே
வருந்தாவருண் முன்னிலை தன்னைம தித்தியானே. (28

(இ-ள்) இருந்து—(ஏகாந்த ஸ்தானத்தில்) இருந்து, ஒரும் இடத்து—விசாரிக்கும் காலத்து, மாயைக்கு—மாயைக்கு, உணர்வு—ஞானம், இல்லை—இல்லையாம், இதன் பால்—இந்த மாயையினிடத்து, பொருந்தா விடத்து—சேரா திருக்கின், உயிர்க்கு—சிவனுக்கு, ஒரு போத மேனும்—ஒரு வித ஞானமாயினும், இல்லை—(உண்டாவது) இல்லையாம், திருந்தா—நேர்மை யற்ற, இவை—இவ் விரண்டினையும்,

கொண்டு—(ஏது வாகக்) கொண்டு, இறை—பரமேசுவர ராகிய நீர், ஐந் தொழில்—பஞ்ச கிர்த்தியங்கள், செய்தி—செய்கின்றீர், என்று—எனக் கருதி, முன்னிலை தன்னை—(துக்கத்திற்கு) முன்னிலையாயுள்ள சீவர்களை, யான்—அடியேன், மதித்து—(அறியாமையால்) துக்க காரணர் என குறித்து, வருந்தா—துன்புறாத விதம், அருள்—அநுக்கிரகம் செய்வீ ராக. எ-று.

(இ-பு) பொருந்தா, திருந்தா - இவை ஈறு கெட்ட எதிர் மறைப் பெய ரெச்சங்கள். இதன்பால் - பால் - ஏழ னுருபு. ஒரு போத மேனும் - உம் - முற்று. இறை - அண்மை விளி. செய்தி முன் னிலை வினை முற்று. என்றே - ஏ - அசை நிலை. வருந்தா ஈறு கெட்ட எதிர் மறைப் பெய ரெச்சம், இசை யெச்சத்தாற் பெற்ற, "விதம்" என்னும் பெயர் கொண்டது. யானே - ஏ - ஈற்றசை. உணர்வு - எழுவாய். இல்லை - பய னிலை. போதம் - எழுவாய். இல்லை - பயனிலை. நீ - தோன்றா எழுவாய். அருள் - பய னிலை. விதம் - செயப்படு பொருள். (இசை யெச்சம்.) (28)

மதித்தேன்பரு வத்தள விற்குரு வாதியாகி
யுதித்துள்ளறி வோங்கும்வ கைக்குபா யஞ்செய்தோயை
யெதிர்த்திங்ஙனஞ் சற்குரு சற்குரு வென்றுநைந்துந்
துதித்துந்திரி யாவேனக் கின்னரு டந்துதோன்றே. (29)

(இ-ள்) என் பருவத்து அளவில்—அடியேனது பக்குவத்துக்குத் தக்க வாறு, மதித்து—(அநுக்கிரகிக்கக்) கருதி, குரு ஆதி ஆகி—குரு லிங்க சங்கம ரூபம் ஆகி, உதித்து—தோன்றி, உள்—(அடியேன்) மநத்தின்கண், அறிவு—ஞாந மானது, ஓங்கும் வகை—விருத்தி ஆகும் நிமித்தம், உபாயம் செய்தோயை—சூழ்ச்சி செய்த தேவரீரை, எதிர்த்து — சந்தித்து, இங் ஙனம்—இவ் வாறு, சற் குரு—நல் லாசிரியர். சற் குரு—நல் லாசிரியர், என்று—எனக் கூறி, நைந்தும்—(மநம்) தளர்ந்தும், துதித்தும்—(வாக்கினால்) துதித்தும்,

திரியா—திரியாத, எனக்கு — அடியேனுக்கு; இன் — (உமது) இனிய, அருள்—அருளினை, தந்து—கொடுத்து, தோன்று— (தேவரீர்) வெளிப்படுவீ ராக, எ-று.

(இ-பு) வகைக்கு - கு - சாரியை. செய்தோய் - முன்னிலைத் தெரி நிலை வினையா லணையும் பெயர். நைந்தும், துதித்தும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. திரியா - ஈறு கெட்ட எதிர் மறைப் பெய ரெச்சம். தோன்றே - ஏ - ஈற் றசை. நீ - தோன்று எழுவாய். தோன்று - பய னிலை. (29)

தோன்றுமன்மு னிந்தொரு தாய்வயிற் றோன்றுபால
ரீன்றுடனைத் தம்மின்வே றுக்கொடி கழ்ந்தவாபோற்
பூன்றுவொரு நீயரு ளாற்புனை மேனியெல்லாம்
யான்றுன்பல தெய்வமெ னக்கொடி கழ்ந்தவாறே. (30)

(இ-ள்) ஒரு—ஒரே, தாய் வயின் — மாதாவினிடத்து, தோன்று—ஜநித்த, பாலர்—(அநேகம்) குழந்தைகள்; தோன்று மல்—(நாம் எல்லோரும் ஒரே மாதாவினிடத்துச் செநித்திருக்கின் றோம் என) விளங்கிக்கொள்ளாமல், ஈன்றாள் தனை—(தம்) தாயை, தம்மின்—தம்மைப் பார்க்கிலும், வேறு(க)—அந்நிய மாக, கொடு—கொண்டு, முனிந்து—கோபித்து, இகழ்ந்த—நிந்தித்த, ஆ(று)— தன்மை, போல்—போல, பூன்று—பரிபூரண மாய் உள்ள, ஒரு— ஒப்பற்ற, நீ—தேவரீர், அருளால்—கிருபையினல், புனை—பொருந் திய, மேனி—மூர்த்தங்கள், எல்லாம்—யாவற்றையும், யான்—அடி யேன், பல—(தேவரீருக்குப் புறம் பான) அநேக, தெய்வம்— தேவதைக ளாம், என—என்று, கொடு—(கருதிக்) கொண்டு, இகழ்ந்த—நிந்தித்த, ஆறு—தன்மை யாம். எ-று.

(இ-பு) ஈன்று டனை - தன் - சாரியை. வேறு - 'வேறாக' என் பதன் கடைக் குறை. கொடு - 'கொண்டு' என்பதன் இடைக் குறை. இகழ்ந்த வா - ஆ - 'ஆறு' என்பதன் கடைக் குறை.

பூன்றம் + ஆ = பூன்று - ஆ - 'ஆக' என்பதன் கடைக் குறை. பூன்றம் - அம் - ஈறு கெட்டு நின்று புணர்ந்தது. யான் றூன் - தான் - அசை நிலை. ஆறே - ஏ - ஈற் றசை. (இகழ்ந்த) ஆறு - எழுவாய். ஆம் - பய னிலை. (இசை யெச்சத்தால் வருவிக்கப்பட்டது.) இதில் உவமை யணி யுள்ளது. (30)

இகழும்பொரு ளொன்றிலை மண்முத லெட்டுமெந்தாய்
நிகழுன்வடி வேயெனத் தேர்ந்துள நெக்குநின்றாள்
புகழும்படி யேயினி யீசவென் புத்திதன்னைத்
திகழும்படி செய்திதி ரோபவஞ் செய்திடேலே. (31)

(இ-ள்) எந்தாய்—எமது தந்தை யாகிய ஸ்வாமி, ஈச—ஈசனே, இகழும்—நிந்திக்கத் தக்க, பொருள்—வஸ்துக்கள், ஒன்று—ஒன்றும், இலை—இல்லை யாம். மண் முதல்—பிருதிவி ஆதி யாக வுள்ள (அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், சீவன் ஆகிய), எட்டும்—அஷ்ட மங்கல மூர்த்தங்களும், நிகழ்—விளங்காநின்ற, உன்—தேவரீரின், வடிவே—சொரூபங்களே, என—என்று, தேர்ந்து—தெளிந்து, உளம்—மநம், நெக்கு—நெகிழ்ந்து, நின்—தேவரீரது, தாள்—திரு வடித் தாமரைகளை, புகழும்படியே — தோத்திரம் செய்யும்படி யாக, இனி — இப்பொழுது, என்—அடியேனது, புத்தி தன்னை—புத்தியினை, திகழும் படிசெய்தி—விளக்குவீ ராக, திரோபவம்—மறைப்பினை, செய்திடேல்—செய்யா திருப்பீ ராக. எ-று.

(இ-பு) இலை - 'இல்லை' என்பதன் கடைக் குறை. எந்தாய், ஈச - இவை விளிகள். எட்டும் - உம் - முற் றும்மை. வடிவே - ஏ - தேற்றம். உளம் - 'உள்ளம்' என்பதன் இடைக் குறை. படியே - ஏ - அசை நிலை. புத்தி தன்னை - தன் - சாரியை. செய்திடேலே - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஏ - ஈற் றசை. ஒன்று - எழுவாய். இலை - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். செய்தி - பய னிலை.

புத்தி - செயப்படு பொருள். நீ - தோன்ரு எழுவாய். செய்தி டேல் - பய னிலே. திரோபவம் - செயப்படு பொருள். (31)

செய்யாய்கரி யான்ருெழும் வெள்ளிளஞ் சேவையூர்வோய்
வையார்மழு வோய்திரு வுள்ளமிவ் வஞ்சனேனு
மையாவிழி பெய்வுற நீர்பெரி தன்பிேைடு
கையாற்ருெழு தேத்திநின் கூத்திஜனக் காணுமாறே. (32)

(இ-ள்) கரியான் – மகா விஷ்ணு, தொழும் – வணங்கும்படி யான, வெள் – வெண்மை யான, இளம் – யௌவநத்தினை யுடைய சேவை – ரிஷபத்தினை, ஊர்வோய் – ஏறிச் செலுத்தும் ஸ்வாமி, வை – கூர்மை, ஆர் – பொருந்திய, மழுவோய் – மழு ஆயுதத்தினை யுடைய சுவாமி, ஐயா – பிதாவே, இவ் வஞ்சனேனும் – இந்த வஞ்சகத் தன்மையினை யுடையேனும், பெரிது – மிகவும், அன்பினோடு – பக்தியோடு, விழி – நேத்திரத்தினின்றும், நீர் – ஜலம், பெய் வுற – சொரிய கையால் – அஸ்தத்தினால், தொழுது – நமஸ்கரித்து, (ஏத்தி – வாக்கினால்) துதித்து, நின் – தேவரீரது, கூத்தினை – (ஆநந்தத்) தாண்டவத்தினை, காணும் ஆறு – (கண்ணால்) தெரிசிக்கும்படி, திரு உள்ளம் செய்யாய் – சங்கற்பஞ் செய்தருள்வீ ராக. எ-று.

(இ-பு) செய்யாய் - உடன்பாட்டு முன் னிலை வினை முற்று. கரியான் - குறிப்பு வினையா லணையும் பெயர். 'தொழும்' - என்னும் பெய ரெச்சம், 'ஊர்வோய்' என்னும் முன் னிலை வினையா லணையும் பெய ராகிய விளிப் பெயர் கொண்டது. ஊர்வோய், மழுவோய், ஐயா - இவை விளிப் பெயர்கள். 'திரு வுள்ளம்' என்பது 'செய்யாய்' என்னும் வினை முற்றுக் கொண்டது. வஞ்சனே(னும்) - குறிப்பு வினையா லணையும் பெயர். உம் - இறந்தது தழீஇ யது அல்லது, இழிவு சிறப்பு. பெய் வுற - உறு - துணை வினை. 'பெரிது' என்னும் குறிப்பு வினை முற்று, வினை யெச்ச மாய்த், 'தொழு

தேத்தி' என்னும் வினை யெச்சங் கொண்டது. காணு மாறே - ஏ - ஈற் றசை. நீ - தோன்றா எழுவாய். செய்யாய் - பய னிலை. திரு வுள்ளம் - செயப்படு பொருள். (32)

காணாதப வக்கட லின்கரை காணவெற்குக்
கோணாகணி மார்பமெய் யன்புகொ டுத்தியென்றே
நாணாதிசைத் தேன்றிருக் காளத்தி நாதவுன்றாட்
பேணாதவ லக்கடன் மூழ்கிய பேதையேனே. (33)

(இ-ள்) கோள்—விஷம் பொருந்திய, நாகம்—சர்ப்பத்தினை, அணி—(ஆபரண மாகப்) பூண்டிருக்கும், மார்ப—மார்பினை யுடைய ஸ்வாமி, திருக் காளத்தி நாத—ஸ்ரீ காள ஹஸ்தியில் எழுந்தருளி யிருக்கும் ஸ்வாமி, உன்—தேவரீரது, தாள்—திரு வடிகளை, பேணாது—போற்றாது, அவல—துக்க ரூப மான, கடல்—(சமுசார) சமுத்திரத்தில், மூழ்கிய—முழுகிக் கிடக்கின்ற, பேதையேன்—(அறிவிலி யாகிய) எளியேன், காணாத—(ஒருவராலும் எல்லை) அறிய முடியாத, பவ—ஜநந (மரண), கடலின்—சமுத்திரத்தின், கரை—தீரத்தினை, காண—அறியும்படி யாக, எற்கு — அடியேனுக்கு, மெய்—உண்மை யான, அன்பு—பக்தியினை, கொடுத்தி—(தேவரீர்) கொடுத்தருள்வீராக, என்று—என, நாணாது—வெட்கம் இன்றி, இசைத்தேன்—(பலர் அறியக்) கூறினேன். எ-று.

(இ-பு) நாகு அணி - என்புழி, 'நாகம்' என்பது அம் ஈறு குறைந்து நின்று புணர்ந்தது. மார்ப, நாத - இவை விளிகள். என்றே - ஏ - அசை நிலை. பேதையே(னே) - குறிப்பு வினையா லணையும் பெயர். ஏ - ஈற் றசை. பேதையேன் - எழுவாய். இசைத் தேன் - பய னிலை. இவ் வாக்கியம், அல்லது, விஷயம் - செயப்படு பொருள் (அவாய் நிலையாற் பெறப்பட்டது). (33)

பேதைக்கோ ருபாகம ளித்திடு பேரையாவெங்
கோதைக்குநின் றேளுறு கோதைகோ டென்றுநின்பா

லோதற்கென் னுளத்தைவி டுத்தன னோடிமாதர்
காதற்களை யுண்டமை யாலுனைக் கண்டதின்றே. (34)

(இ-ள்) பேதைக்கு—அம்பாளுக்கு, ஒரு பாகம்—பாதி சரீரத்தை, அளித்திடு—கொடுத்தருளிய, பேரையா—பேரை ஊரின் கண் எழுந்தருளி யிருக்கின்ற சுவாமி, எம் — எம்முடைய, கோதைக்கு—பெண்ணுக்கு, நின்—தேவரீரது, தோள்—தோளின் கண், உறு—பொருந்தி யிருக்கும், கோதை—புஷ்ப மாலையினை, கொடு—கொடுத்தருள்வீ ராக, என்று—என, நின்பால்—தேவரீரிடத்தில், ஓதற்கு — சொல்லுதற்கு, என் — அடியேனது, உளத்தை—மநத்தினை, விடுத்தனன்—(தூதாக) அநுப்பியிருந்தேன், ஓடி—(அந்த மநம்) வேக மாகச் சென்று, மாதர்—பெண்களது, காதல்—ஆசை யாகிய, களை—கள்ளை, உண்டமையால்—(பூரண மாகக்) குடித்தபடியால், உனை—தேவரீரை, கண்டது—தெரிசிக்க, இன்று—இல்லை. எ-று.

இது, நாயகன் அநுக்கிரகத்தினைப் பெற, மநத்தினைத் தூதாக அநுப்ப, அம் மநம் இடையில் மாதர் ஆசையால் இடையூறு அடைந்ததனை, நாயகி நாயகனிடம் விண்ணப்பித்தல்.

(இ-பு) பேரையா - விளி. அளித்திடு - இடு - பகுதிப் பொருள் விகுதி. நின் பால் - பால் - ஏழ னுருபு. உளம் - 'உள்ளம்' என்பதன் இடைக் குறை, களை - 'கள்ளை' என்பதன் இடைக் குறை. உனை - 'உன்னை' என்பதன் இடைக் குறை. 'கண்டது' - என்னுந் தெரி நிலை வினை முற்று, வினை யெச்ச மாயிற்று. இன்றே - ஏ - ஈற் றசை. யான் - தோன்றா எழுவாய். விடுத்தனன் - பயனிலை. உளம் - செயப்படு பொருள். அம் மநம் - தோன்றா எழுவாய். கண்ட தின்று - பய னிலை. உனை - செயப்படு பொருள். (34)

கண்டேன் களி கூர்ந்துசி வப்பிர காசநாமங்
கொண்டோங்குரு வோடிவ ணுற்றெனை யாண்டகோவே
பண்டேயொரு நீவகுத் திட்டப டிக்கியானுன்
றொண்டாகிவந் தின்றுனைப் பாடத்தொ டங்கினேனே. (35)

(இ-ள்) சிவப்பிரகாச — சிவப்பிரகாசன் (என்னும்), நாமம்— பெயரினை, கொண்டு—(தரித்துக்) கொண்டு, ஓங்கு—பெருமை பொருந்திய, உருவோடு—வடிவத்தோடு, இவண்—இவ் விடத்து, உற்று—எழுந்தருளி வந்து, எனை — அடியேனை, ஆண்ட — ஆட் கொண்ட, கோவே—தலைவனே, களி—சந்தோஷம், கூர்ந்து— மிகுந்து, கண்டேன்—தேவரீரைத் தரிசித்தேன், ஒரு—ஒப்பற்ற, நீ—தேவரீர், பண்டே—பூர்வமே, வகுத்திட்ட படிக்கு—நியமித்த பிரகாரம், யான்—தமியேன், உன்—தேவரீரது, தொண்டு— தொண்டன், ஆகி—ஆய், வந்து—வந்து, இன்று—இப் பொழுது, உனை—தேவரீரை, பாட—(நாவால்) துதித்தற்கு, தொடங்கி னேன்—ஆரம்பித்திருக்கின்றேன். எ-று.

(இ-பு) எனை - 'என்னை' என்பதன் இடைக் குறை. கோவே - விளி. பண்டே - ஏ - அசை நிலை. வகுத்திட்ட - இடு - பகுதிப் பொருள் விகுதி. உனை - 'உன்னை' என்பதன் இடைக் குறை. தொடங்கினேனே - ஏ - ஈற் றசை. யான் - தோன்று எழுவாய். கண்டேன் - பய னிலை. உனை - செயப்படு பொருள் (வருவிக்கப் பட்டது). யான் - எழுவாய். பாடத் தொடங்கினேன் - பய னிலை. உனை - செயப்படு பொருள். (35)

தோடக்காயெனைச் சூழ்ந்துள வைம்புலத் தோற்றமெல்லாங்
கேடக்கூறுதி நீயொரு சூழ்ச்சிகி ளக்கிலாயே
லடக்காவவை யென்றன கத்துள டங்குகாறுங்
கடக்கேன்பவ வேலையெவ் வண்ணமுக் கண்ணினனே. (36)

(இ-ள்) முக் கண்ணிணுனே—திரி நேத்திரங்களை யுடைய ஸ்வாமி, தொடக்காய்—பந்த மாக, எனை—அடியேனை, சூழ்ந்து—அடுத்து, உள—இருக்கும், ஐ புலத் தோற்றம்—பஞ்ச இந்திரியப் பிரதீதி, எல்லாம்—யாவும், கெட—நாச மாகும்படி யாக, நீ—தேவரீர், ஒரு—ஒரு, சூழ்ச்சி—உபாயம், கூறுதி—கூறியருள்வீ ராக (அங்ஙன் ஓர் உபாயம்), கிளக்கிலாயேல்—கூறு திருப்பீராகில், அடக்கா அவை—அடக்கப்படாத அப் பஞ்சேந்திரியங்களும், என்—அடியேனது, அகத்துள்—மநத்தின்கண், அடங்கு காறும்—அடங்குகிற பரியந்தமும், எவ் வண்ணம்—எங்ஙனம், பவ வேலை—ஜநந (மரண) சமுத்திரத்தினை, கடக்கேன்—தாண்டுவேன், (கடக்க முடியாது என்றபடி) எ-று.

(இ-பு) எனை - என்னை என்பதன் இடைக் குறை. கூறுதி - ஏவல் வினை முற்று. கிளக்கிலாயேல் - கு - ஆ - சாரியைகள். இல் - எதிர் மறை இடை நிலை. ஏல் - முன் னிலை வினை யெச்ச விகுதி. அடக்கா - ஈறு கெட்ட எதிர் மறைப் பெய ரெச்சம். என் றன் - தன் - சாரியை. கடக்கேன் - உடன்பாட்டுத் தன்மை ஒருமைத் தெரி நிலை வினை முற்று. கு - சாரியை. முக் கண்ணிணுனே - ஏ - விளி. நீ - எழுவாய். கூறுதி - பய னிலை. சூழ்ச்சி - செயப்படு பொருள். யான் - தோன்ரு எழுவாய். கடக்கேன் - பய னிலை. பவ வேலை - செயப்படு பொருள். (36)

கண்ணுன்மத னைப்பொடி யாம்வகை கண்டவெண்டோ
ளண்ணுவுயிர் யாவும ளித்திடு மப்பனேயோ
தண்ணுர்பொழிற் றில்லையு ளாயெனக் கீதுதாராய்
மண்ணுதிய வாசைக ளற்றனை வாழ்த்துமாறே. (37)

(இ-ள்) கண்ணல்—(நெற்றிக்) கண்ணினுல். மதனை—மந்மதனை, பொடி ஆம் வகை—பஸ்பம் ஆகும் படி யாக, கண்ட—பார்த்த எண் தோள்—அஷ்ட புஜங்களை யுடைய, அண்ணு—பரசிவமே, உயிர் யாவும்—சகல ஜீவர்களையும், அளித்திடும்—ரக்ஷிக்கின்ற, அப்பனே—

பிதாவே, தண்—குளிர்ச்சி, ஆர்—பொருந்திய, பொழில்—சோலைகள் (சூழ்ந்த), தில்லை உளாய்—சிதம்பர க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளிய ஸ்வாமி, எனக்கு—அடியேனுக்கு, மண்—பூமி, ஆதிய—முதலாகச் சொல்லப்படுகின்ற பெண் பொன் என்பவற்றிலுள்ள, ஆசைகள்—விருப்பங்கள் (முற்றும்), அற்று—(அறவே) நீங்கி, உனை—தேவரீரை, வாழ்த்தும் ஆறு—துதிக்கும் படியாகிய, ஈது—இவ் வரத்தினை, தாராய்—தந்தருள்வீராக. எ-று.

(இ-பு) அண்ணா, அப்பனே, (தில்லை) உளாய் - இவை விளிகள். யாவும் - உம் - முற்று. அப்பனேயோ - ஓ - அசை நிலை. ஈது - சுட்டுப் —பெயர் நீண்டது. உனை - 'உன்னை' என்பதன் இடைக் குறை. ஆறே - ஏ - ஈற் றசை. நீ - தோன்றா எழுவாய். தாராய் - பய னிலை. ஈது - செயப்படு பொருள். (37)

வாழ்த்தேனுனை நாடோறும் வாழ்த்தவல் லோர்கடாளிற்
றாழ்த்தேன்றலை யாங்கவ ரேவற லைக்கோள்கில்லேன்
வீழ்த்தேனெடுங் காலம வத்திலோண் மேருவில்லோய்
பாழ்த்தேன்கிளி போற்பல நூல்கள்ப டித்துமியானே. (38)

(இ-ள்) ஒண்—பிரகாசம் பொருந்திய, மேரு—(மகா) மேரு கிரியை, வில்லோய்—தநுவாக வுடைய ஸ்வாமி, உனை—தேவரீரை, நாள் தொறும்—பிரதி திநமும், வாழ்த்தேன்—(வாயார) தோத்திரம் செய்திலேன், வாழ்த்த—தோத்திரம் செய்ய, வல்லோர்கள்—சாமர்த்தியம் உள்ள பெரியோர்களின், தாளில்—திருவடிகளில், தலை—சிரசை, தாழ்த்தேன்—தாழ்த்தி வணங்கிலேன், அவர்—அப் பெரியாருடைய, ஏவல்—பணிகளை, தலைக் கொள்கில்லேன்—ஏற்றுச் செய்திலேன், நெடுங் காலம்—நீண்ட காலத்தினை, அவத்தில்—(அங்ஙனம் செய்யாது) வீணாக, வீழ்த்தேன்—கழித்தேன், கிளி போல்—கிளியைப் போல, யான்—அடியேன், பல நூல்கள் படித்தும்—பல சாஸ்திரங்களைப் படித்தும், பாழ்த்தேன்—(அவற்றின் அர்த்தங் கொண்டு ஒழுகாமல்) பாழாய்ப் போனேன். எ-று.

(இ-பு) வாழ்த்தேன், தாழ்த்தேன் - எதிர் மறைத் தன்மை ஒருமைத் தெரி நிலை வினை முற்று. இவற்றில் - ஆ - எதிர் மறை இடை நிலை தொக்கது. உனை - 'உன்னை' என்பதன் இடைக் குறை. நாடொறும் - தொறு - காலப் பன்மைப் பொருளில் வந்த இடைச் சொல். உம் - முற்று. வல்லோர்கள் - குறிப்பு வினையா லணையும் பெயர். ஆங்கு - அசை நிலை. தலைக் கொள்கில்லேன் - கு - சாரியை. இல் - எதிர் மறை இடை நிலை. வீழ்த்தேன், பாழ்த்தேன் - இவை இன் சாரியை தொக்க உடன்பாட்டுத் தன்மை யொருமை வினை முற்றுக்கள். மேரு வில்லோய் - விளி. கிளி போல் படித்து - வினை யுவமம். படித்தும் - உம் - இழிவு சிறப்பு. யானே - ஏ - ஈற்றசை. யான் - எழுவாய். வாழ்த்தேன் - பய னிலை. உனை - செயப்படு பொருள் யான் - எழுவாய். தாழ்த்தேன் - பய னிலை. தலை - செயப்படு பொருள். யான் - எழுவாய். தலைக் கொள்கில்லேன் - பய னிலை. ஏவல் - செயப்படு பொருள். யான் - எழுவாய். வீழ்த்தேன் - பய னிலை. காலம் - செயப்படு பொருள். யான் - எழுவாய். பாழ்த்தேன் - பய னிலை. (38)

யானுருடற் கின்பதுன் பங்களை யெண்ணவெண்ணித்
தானேசிறு பாலரி னேன்மநஞ் சஞ்சலிக்கு
மீனுயினன் பாலல தேன்கண்வி டுத்திகொல்லோ
வானேறுடை யாய்திதி யாமதி காரநீயே. (39)

(இ-ள்) ஆன் ஏறு உடையாய்—இடப வாகந முடைய ஸ்வாமி, நீ—தேவரீர், திதி ஆம்—ரக்ஷிப்பு ஆகிய, அதிகாரம்—அதிகாரத்தினை, மீன் ஆயினன் பால்—மத்சாவதாரத்தினை எடுத்த மகா விஷ்ணுவினிடத்து, அலது—(கொடுத்திருக்கின்றீரே) அன்றி, என்கண்—என்னிடத்து, விடுத்தி கொல்லோ—விட்டுக் கொடுத்திருக்கின்றீரா (இல்லை என்றபடி. ஆதலால்), உடற்கு—சரீரத்திற் குள்ள, இன்ப துன்பங்களை—சுக துக்க நியதிகளைக் குறித்து, எண்ண—தீர்மானித்தற்கு, யான் ஆர்—அடியேன் எப்படிச் சக்தன்

ஆவேன் (ஆகமாட்டேன் என்றபடி. ஆனால் அறியாமையினால்), எண்ணி—(அங்ஙனம் இருந்தும் சரீரத்தினது சுக துக்கங்களை முறையே பெறவும், நீக்கவும்) கருதி, சிறு பாலரின்—சிறிய குழந்தைகளைப் போல, என்—அடியேனது, மநம்—உள்ளம், சஞ்சலிக்கும்—சஞ்சலத்தினை அடைகின்றது. (எனவே, "அறியாமையினாலாம் அச் சஞ்சலத்தை நீக்கியருள்க" என்பது இசையெச்சம்) எ-று.

(இ-பு) ஆர் - 'யார்' என்னும் வினா வினைக் குறிப்பு முற்றின் திரிவு. எண்ணித் தானே - தான் - அசை நிலை. ஏ - பிரி நிலையும் தேற்றமு மாம். பாலரின் - இன் - ஒப்புப் பொருளில் வந்த ஐந்தனுருபு. மீனாயினன் பால் - பால் - ஏழ னுருபு. அலது - 'அல்லது' என்பதன் இடைக் குறை. கொல்லோ - கொல் - அசை நிலை. ஓ - வினாவும், எதிர் மறையு மாம். ஆ னே றுடையாய் - விளி. நீயே - ஏ - ஈற் றசை. யான் - எழுவாய். யார் - பய னிலை. மநம் - எழுவாய். சஞ்சலிக்கும் - பய னிலை. நீ - எழுவாய். விடுத்தி கொல்லோ - பய னிலை. அதிகாரம் - செயப்படு பொருள். (39)

காரார்மிடற் றுயளி சூழ்தரு பொற்கடுக்கைத்
தாரார்புய னேசிவ காமச வுந்தரிக்கோர்
சீரார்மண வாளவென் றன்குல தெய்வமேநீ
பாராய்கடைக் கண்ணென தெண்ணம்ப லிக்கவின்றே. (40)

(இ-ள்) கார்—நீலம், ஆர்—பொருந்திய, மிடற்றாய்—கண்டத்தினை யுடைய சுவாமி, அளி—வண்டுகள், சூழ் தரு—மொய்த்துக் கொண்டிருக்கின்ற, பொன்—பொன் போன்ற நிறத்தினை யுடைய, கடுக்கை—கொன்றை(ப் புஷ்பத்தினால் செய்யப்பட்ட), தார்—மாலை, ஆர்—பொருந்தி யிருக்கின்ற, புயனே—புஜத்தினை யுடையவரே, சிவ காம சவுந்தரிக்கு—சிவ காம சவுந்தரி என்னுந் திரு நாமத்தினை யுடைய அம்பாளுக்கு, ஓர்—ஒப் பற்ற, சீர்—

சிறப்பு, ஆர்—பொருந்திய, மணவாள—கணவனே, என்—அடியேனது, குல தெய்வமே—குல தேவதையே, நீ—தேவரீர், இன்று—இப் பொழுது, எனது—அடியேனது, எண்ணம்—கருத்து, பலிக்க—முற்றுப் பெரும்படி யாக, கடைக் கண் பாராய்—கடாக்ஷ வீக்ஷண்யத்தினைச் செய்வீ ராக. எ-று.

(இ-பு) மிடற்றாய், புயனே, மணவாள, தெய்வமே - இவை விளிகள். சூழ் தரு - தரு - துணை வினை. பொற் கடுக்கை - உவமைத் தொகை. என் றன் - தன் - சாரியை. இன்றே - ஏ - பிரி நிலையும், தேற்றமு மாம். நீ - எழுவாய். பாராய் - பய னிலை. அடியேனை - செயப்படு பொருள் (அவாய் நிலையால் வருவிக்கப்பட்டது). சிவ காம சவுந்தரி - 'சிவனுக்கு விருப்பினை யுண்டுபண்ணும் அழகினை யுடையவள்' என்னும் பொருளை, அவயவ ஆற்றலால் உணர்த் தலின், காரணப் பெயர். (40)

இன்றென்னைசெய் கேனென நாடியி ருந்ததீயேற்
கொன்றெய்தினெவ் வண்ணம றும்மதை யோதுவேனே
வன்றன்னமு மேனமு மோர்வரு மையநின்று
ளோன்றன்பர்கு ழாத்துற வீதரு ளாயுவந்தே (41)

(இ-ள்) அன்று—முற் காலத்து, அன்னமும்—அந்த ரூப மாய்ப் பிரம்மாவும், ஏனமும்—வராக ரூப மாய் விஷ்ணுவும், ஓர்வு அரும்—(முறையே மேலும், கீழும், தேடி) அறிதற் கரிய, ஐய—பிதாவே, இன்று—இப் பொழுது, என்னை—(என் பந்தம் குறித்து) என்ன, செய்கேன்—செய்வேன், எவ் வண்ணம்—எப்படி, அறும்—(பந்தம்) நாசத்தை அடையும், என—என்று, நாடி—கருதிக் கொண்டு, இருந்த—இருந் துள்ள, தீயேற்கு—பாவி யாகிய எனக்கு, ஒன்று—ஒரு உபாயம் (புலப்பட்டது), எய்தின்—(அது தேவரீர் கிருபையால்) கிடைக்கும் ஆயின், அதை—அந்த உபாயத்தினை, ஓதுவேன்—விண்ணப்பிப்பேன், நின்—தேவரீரது, தாள்—திரு

வடித் தாமரையை, ஒன்று—பொருந்தி யுள்ள, அன்பர்—சாதுக் களது, குழாத்து—சங்கத்தின்கண், உற—(அடியேன்) சேர்ந்திருக் கும்படி யாக, ஈது—இஃது ஒன்றை மாத்திரம், உவந்து—சந்தோ ஷித்து, அருளாய்—அநுக்கிரகம் செய்வீ ராக. எ-று.

(இ-பு) என்னை - 'என்ன' என்பதன் விகாரம். செய்கேன் - உடன்பாட்டுத் தெரிநிலை வினை முற்று. எய்தின் - செயின்' என் னும் வாய்பாட்டு வினை யெச்சம், 'ஒதுவேன்' என்னும் வினை முற்றுக் கொண்டது. ஓதுவேனோ - ஓ - அசை நிலை. அன்னமும் - ஏனமும் - உம் - இரண்டும் எண்ணுப் பொருளன. ஈண்டு அன்ன மும், ஏனமும், அவ் வடிவங்களைக் கொண்ட பிரமாவையும், விஷ்ணுவையும், முறையே குறித் துள்ளன. ஐய - விளி. ஈது - சுட்டுப் பெயர் நீண்டது. அருளாய் - உடன்பாட்டு ஏவல் வினை முற்று. உவந்தே - ஏ - ஈற் றசை. 'புலப்பட்டது' - இது இசை யெச்சத்தாற் பெறப்பட்டது. எய்தின் - என்புழி, "அது தேவரீர் கிருபையால்" என்பது, இடைப் பிற வரல். யான் - தோன்றா எழுவாய். ஓதுவேன் - பய னிலை. அதை - செயப்படு பொருள். நீ - தோன்றா எழுவாய். அருளுவாய் - பய னிலை. ஈது - செயப்படு பொருள். (41)

உவந்தாயென தைம்புல னும்மிரிந் தோடவோர்நா
டவந்தான்சிறி தும்மிலி பால்விடை தன்னின்மின்னோ
டிவர்ந்தேவர நாளும்வி ளங்கிலை யென்னைகோல்லோ
வவந்தான்மிகு பாவியுன் லீலைய றிந்திலேனே. (42)

(இ-ள்) எனது—அடியேனின், ஐ புலனும்—பஞ்சேந்திரிய உணர்ச்சிகளும், இரிந்து ஓட—நாசம் அடையும்படி யாக, ஓர் நாள்—(முன்) ஒரு காலத்தில், தவம்—தவம், சிறிதும்—கொஞ்சமும், இலி பால்—இல்லாத என்னிடத்து, விடைதன்னில்—ரிஷப வாகநத்தின்மீது, மின்னோடு—அம்பிகையோடு, இவர்ந்தே—ஏறி,

வர—வருதற்கு, உவந்தாய்—சந்தோஷம் உற்றிருந்தீர், நாளும்—(அதன் பின்) இந் நாள் வரையும், விளங்கிலே—(அடியேன்பால் நீர்) எழுந்தருளி வரவே இல்லை, என்னை கொல்லோ—யாது காரணமோ, அவம்—கெட்ட தொழில், மிகு—அதிகரித்திருக்கின்ற, பாவி—தீயேன், உன்—தேவரீரது, லீலை—விளையாட்டினை, அறிந்திலேன்—உணர்ந்திலேன். எ-று.

(இ-பு) எனது - பன்மையில் ஒருமை யுருபு மயங்கிற்று. ஐம்புலனும், சிறிதும், நாளும் - உம் - மூன்றும் முற்றும்மைகள். தவந் தான், அவந் தான் - தான் - இரண்டும் அசை நிலைகள். இலி (பால்) - குறிப்பு வினையா லணையும் பெயர். பால் - ஏழ னுருபு. விடைதன்னில் - தன் - சாரியை. மின் - உவமை யாகு பெயர். இவர்ந்தே - ஏ - அசை நிலை. என்னை கொல்லோ - கொல் - ஓ - இரண்டும் அசை நிலைகள். வர - என்னும் வினை யெச்சம், உவந் தாய் - என்னும் வினை முற்றுக் கொண்டது. பாவி - குறிப்பு வினையா லணையும் பெயர். அறிந்திலேனே - ஏ ஈற் றசை. நீ - தோன்றா எழுவாய். உவந்தாய் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். விளங் கிலே - பய னிலை. காரணம் - தோன்றா எழுவாய். என்னை - பய னிலை. பாவி - எழுவாய். அறிந்திலேன் - பய னிலை. லீலை - செயப்படு பொருள். (42)

அறியாமையிற் கட்டுண லுற்றதென் றுண்மையத்தைப்
பிறியாதுவி டேனென லெந்தைபி ரானுனுண்மை
குறியீதிரு வர்க்குமேன் றுலெனைக் கோபியேலே
செறிவாய்மல மேயிறை யோடிகல் செய்ததன்றே. (43)

(இ-ள்) எந்தை பிரான்—எமது தந்தை யாகிய தலைவரே, அறியாமையின்—அறியாமையினால், என்—எனது, ஆண்மை—ஆற்றல், கட்டுணல்—கட்டுப்படுதலை, உற்றது—பொருந்தியது, உன்—தேவரீரது, ஆண்மை—வல்லமை, அத்தை—அந்த எனது ஆற்றலை,

பிறியாது விடேன்—(அஞ்ஞானத்தினின்றும்) நீக்காமல் விடமாட்டேன் (பிரிப்பேன் என்றபடி), எனல்—என்ப தாம், இருவர்க்கும்—(அறியாமை ஈவசுரர் ஆம் உம்) இருவருக்கும், ஈது—இது, குறி—எண்ணம், என்றால்—என்று கூறின், எனை—அடியேனை, கோபியேல்—(அங்ஙன பந்த முறலாமா என்று) கோபியாதிருப்பீ ராக இறையோடு—சர்வ சக்தி வாய்ந்த கடவுளாகிய தேவரீரோ செறிவு ஆய்—மிகுதி யாய், மலமே—(அந்த) அஞ்ஞானமே, இ செய்தது—விரோதித்தது (அற்ப சக்தி யுடைய அடியேன் அத எம் மாத்திரம். ஆகலின், அடியேன் அதனை எதிர்க்க முடியா குறித்துக் கோபியேல் என்பது தாற்பரியம்.) எ-று.

(இ-பு) அறியாமையின் - இன் - சாரியை. இறுதியில் மூன் வேற்றுமை தொக்கது. கட்டுணல் - 'கட்டுண்ணல்' என்ப இடைக் குறை. இது செயப்பாட்டு வினைப் பகுதி யடியாகப் பிற தொழிற் பெயர். அத்தை - இடையில் வல் லொற்றுச் செய் விகாரத்தால் மிக்கது. எனல் - என்னும் சொல் லெச்சம், எ சொல்வது எனச் 'சொல்' என்னும் தன் னெச்சங் கொண்ட எந்தை - எம் தந்தை என்பதன் மரூஉ. என்றால் - 'செயின்' என் வாய்ப்பாட்டு வினை யெச்சம். இச் சொல் லெச்சம், 'கூறின்' னும் தன் னெச்சங் கொண்டது. கோபியேலே - எதிர் மறைத் நிலை வினை முற்று. ஏ - அசை நிலை. செறிவாய் - என்னுங் கு வினை யெச்சம், 'செய்தது' என்னும் முற்றுக் கொண்டது. மல ஏ - தேற்றம். செய்த தன்றே - அன்று ஏ - இரண்டும் அசை நில அஞ்ஞான மாகிய அஃறிணை, உயர் திணை யாகிய ஈசனோடு சே எண்ணப்படுங்கால், சிறப்பினால் "இருவர்" என உயர் திணை வைத் தெண்ணப்பட்டது. ஆண்மை - எழுவாய். உற்றது னிலை. கட்டுணல் - செயப்படு பொருள். ஆண்மை - எழுவாய். விடே னெனல் - பய னிலை. நீ - தோன்றா எழுவாய். கோபியேல் - பய னிலை. எனை - செயப்படு பொருள். மலம் - எழுவாய். செய்தது - பய னிலை. இகல் - செயப்படு பொருள். (43)

செய்விப்பன்வி னைத்தொகை வெம்பவஞ் சேர்ப்பனுன்னை
யுய்விப்பனே லச்சிவ ஞண்மையு மோர்வனேன்றே
ரைவர்க்கெதி ரேயெனை நோக்கிய றைந்ததையா
மைவெற்பன வாணவ நீயதை மாற்றிடாயே. (44)

(இ-ள்) ஐயா—சுவாமி, வினைத் தொகை—கருமத் தொகுதிகளை, செய்விப்பன்—(உன்னைக் கொண்டு) இயற்றுவிப்பேன், வெம்—கொடிதாய் உள்ள, பவம்—சம்சாரத்தினை, சேர்ப்பன்—(உனக்கு) அடைவிப்பேன், உன்னை—(ஜீவனாகிய) உன்னை, உய்விப்பனேல்—(கருமங்களினின்றும், சமுசாரத்தினின்றும்) விடுவிப்பனேல், அச் சிவன்—அந்தப் பரமசிவத்தினது, ஆண்மையும்—சாமர்த்தியத்தினையும், ஓர்வன்—(ஒரு கை) பார்ப்பேன், என்று—என், மை—நீல, வெற்பு—மலை, அன—போன்ற, ஆணவம்—அஞ்ஞானம், ஓர்—ஒப்பற்ற, ஐவர்க்கு—பஞ்சேந்திரியங்களுக்கு, எதிரே—முன்னிலையில், எனை—என்னை, நோக்கி—பார்த்து, அறைந்தது—(சபதம் செய்து) கூறினது, நீ—(அதனால்) தேவரீர், அதை—அந்த அஞ்ஞானத்தை, மாற்றிடாய்—நிவிர்த்திப்பீராக. எ-று.

(இ-பு) எதிரே-ஏ-தேற்றம், அல்லது, அசை. ஐயா-விளி. அன-'அன்ன' என்னும் உவம உருபின் இடைக் குறை. மாற்றிடாயே-ஏ-ஈற்றசை. ஆணவம்-எழுவாய். அறைந்தது-பயனிலை. (மேற் கூறிய செய்திகள்)-செயப்படு பொருள். நீ-எழுவாய். மாற்றிடாய்-பயனிலை. அதை-செயப்படு பொருள். (44)

மாற்றுயெனக் காணவ மாயையில் வந்துவந்தே
தோற்றுவுள கேவல மாதிய சுத்தமொன்றா
டேற்றுயவ ணேற்றியி ரண்டறுத் தெங்குமாகிக்
கூற்றுவிகோள் பதத்தேன் ஞவியுங் கொள்ளுவாயே. (45)

(இ-ள்) ஆணவ மாயையில்—மூல மலம் ஆகிய அஞ்ஞானத் தினால், வந்து வந்து—அடிக் கடி வந்து, எனக்கு—அடியேனுக்கு, தோற்று உள—தோற்றிக் கொண்டிருக்கும், கேவலம் ஆதிய—சாக் கிரம் சொப்பனம் என்னும் சகலாவஸ்தையையும், சுழுத்தி என்னும் கேவல அவஸ்தையையும், மாற்றாய்—நிவிர்த்திப்பீ ராக, சுத்தம் ஒன்று ஊடு—(சகல கேவல மாகிய அசுத்தங்கள் நீங்கிய) சுத்தா வஸ்தை யாகிய ஒன்றினிடத்து, ஏற்றாய்—(அடியேனை) ஏற்றுவீ ராக, அவண்—அவ்விடத்து, ஏற்றி—ஏறும்படி செய்து, இரண்டு— துவைதப் பிரதீதியை, அறுத்து—நிவிர்த்தித்து, எங்கும் ஆகி—சர்வ கதம் ஆய், கூற்று—எமனது, ஆவி—பிராணனை, கொள்—கொண்ட, பதத்து—(தேவரீரது) திரு வடியில், என்—அடியேனது, ஆவியும்— பிராணனையும், கொள்ளுவாய்—கொள்ளுவீ ராக. எ-று.

(இ-பு) ஆணவ மாயை - பண்புத் தொகை. மாயையில் - இல் - ஏதுப் பொருளில் வந்த ஐந்த னுருபு. வந்து வந்தே - மிகுதிப் பொருளில் வந்த அடுக்குத் தொடர். ஏ - அசை நிலை. தோற்று - 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டுத் தெரி நிலை வினை யெச்சம். ஆதிய - குறிப்பு வினையா லணைந்த அஃறிணைப் பன் மைப் பெயர். ஒன்றாடு - ஊடு - ஏழ னுருபு. ஏற்றாய் - உடன் பாட்டுத் தெரிநிலை ஏவல் வினை முற்று. எங்கும் - உம் - முற்று. கொள் பதம் - வினைத் தொகை. ஆவியும் - உம் - இறந்தது தழீ இய எச்சம். கொள்ளுவாயே - ஏ - ஈற் றசை. நீ - தோன்றா எழுவாய். மாற்றாய் - பய னிலை. கேவல மாதிய - செயப்படு பொருள். நீ - தோன்றா எழுவாய். ஏற்றாய் - பய னிலை. என்னை - செயப்படு பொருள். நீ - தோன்றா எழுவாய். கொள்ளுவாய் - பய னிலை. ஆவி - செயப்படு பொருள். (45)

கொள்ளேனெனி னுமெழுத் தைந்துமுட் கோதியாதுந்
தள்ளேனெனி னுமுனைச் சார்தவஞ் சார்ந்திலாரை

விள்ளேனெனி னுமெனை நீகைவி டேல்விடேல்கா
ணள்ளாறுடை யாயவி நாசிந யந்துளானே. (46)

(இ-ள்) நள் ஆறு உடையாய்—திரு நள் ளாற்றினை யுடைய சுவாமி, அவிநாசி—அவிநாசி (க்ஷேத்திரத்தை), நயந்து உளானே—விரும்பி வாச ஸ்தல மாகக் கொண்டவரே, எழுத்து ஐந்தும்—பஞ்சாக்ஷரங்களையும், கொள்ளேன்—(அடியேன் பேணிக்) கொள்ளமாட்டேன், எனினும்—ஆயினும், உள்—மநத்தின்கண் (உள்ள), கோது—குற்றங்கள், யாதும்—யாவற்றையும், தள்ளேன்—நீக்கேன், எனினும்—ஆயினும், உனை—தேவரீரை, சார்—அடையத் தகுந்த, தவம்—தவத்தினை, சார்ந்திலாரை—பொருந்தாத பாவிகளை, விள்ளேன்—விட்டு நீங்கேன், எனினும்—ஆயினும், எனை—அடியேனை, நீ—தேவரீர், கை விடேல்—விட்டுவிடாதீர், விடேல்—விட்டு விடாதீர். எ-று.

(இ-பு) எனினும், எனினும், எனினும் - உம் - மூன்றும் எண்ணின்கண் வந்த இழிவு சிறப்பு. சார் தவம் - வினைத் தொகை. ஐந்தும், யாதும் - உம் - இரண்டும் முற்றும்மைகள். சார்ந்திலார் - தெரி நிலை வினையா லணையும் பெயர். கொள்ளேன், தள்ளேன், விள்ளேன் - இவை எதிர் மறைத் தெரி நிலை வினை முற்று. இவற்றினிடையே - ஆ - எதிர் மறை யிடை நிலை தொக்கது. கை விடேல் - கை - ஒரு வகை உபசர்க்கம் போன்ற அடைச் சொல். விடேல் விடேல் - வலியுறுத்தும் பொருளில் வந்த அடுக்குத் தொடர். இவை எதிர் மறை எல் விகுதி பெற்ற ஏவல் வினை முற்றுக்கள். காண் - முன் னிலை அசை. உடையாய், நயந்துளானே - இவை விளிகள். நீ - தோன்றா எழுவாய். கைவிடேல் - பய னிலை. எனை - செயப்படு பொருள். (46)

நயவாதுதில் லாபுரி யோயுனே நாடிநாளும்
வியவாதுட லோடுற வென்றும்வி டாதேன்னுள்ளங்
கயவாதுறு போகமே லாமிவை கண்டுவீடும்
பயவாதிதேன் றேபயந் தேன்மிகப் பாவியேனே. (47)

(இ-ள்) *தில்லா புரியோய்—தில்லைப் பதியினை இருப்பிட மாக வுடைய சுவாமி, என்—அடியேனது, உள்ளம்—மநம், உனை—தேவரீரை, நாளும்—பிரதி திநமும், நாடி—தியானித்து, நய வாது—(அடைய) விரும்பாது, வியவாது—துதிக்காது, உட லோடு—சரீரத்தோடு (உள்ள), உறவு—சம்பந்தத்தை, என்றும்—எப் பொழுதும், விடாது—விட்டு நீங்காது, உறு—பொருந்துகின்ற, போகம்—போகங்கள், எலாம்—யாவற்றையும், கயவாது—வெறுக் காது, இவை—(மநத்தின்) இச் செயல்களை, கண்டு—பார்த்து, வீடும்—மோக்ஷத்தினையும், இது—இந்த மநம், பயவாது—கொடுக்க மாட்டாது. என்று—எனக் கருதி, பாவியேன்—தீயேன், மிகப் பயந்தேன்—அதிக மாகப் பயந்திருக்கின்றேன். எ-று.*

(இ-பு) *புரியோய் - விளி. தில்லா - 'தில்லை' என்பதன் மரூஉ. நாளும், என்றும் - உம் இரண்டும் முற் றும்மைகள். உறு போகம் - வினைத் தொகை. வீடும் - உம் - இறந்தது தழீஇயது. என்றே - ஏ - அசை நிலை. பாவியே(னே) - குறிப்பு வினையா லணை யும் பெயர். ஏ - ஈற் றசை. உள்ளம் - எழுவாய். நயவாது - பய னிலை. உனை - செயப்படு பொருள். உள்ளம் - எழுவாய். வியவாது - பய னிலை. உனை - செயப்படு பொருள். உள்ளம் - எழுவாய். விடாது - பய னிலை. உறவு - செயப்படு பொருள். உள்ளம் - எழுவாய். கயவாது - பய னிலை. போக மெலாம் - செயப்படு பொருள். பாவி யேன் - எழுவாய், பயந்தேன் - பய னிலை.* (47)

பாவாற்பெரி யோர்புகழ் சிற்றம்ப லத்துளோயை
நாவாற்சிறி யேன்றுதி செய்யுமிந் நன்கில் சொல்லு

மோவாதிரை யோருழை தாவிய வுன்சேவிக்கே
மேவாதல வென்றுது ணிந்துவி ளம்பினேனே. (48)

(இ-ள்) பாவால்—(சிறந்த) செய்யுளினல், பெரியோர்—மகான்கள், புகழ்—தோத்திரம் செய்கின்ற, சித் அம்பலத்து உளோயை—சிதம்பரத்தின்கண் எழுந்தருளி யிருக்கும் தேவரீரை, நாவால்—நாக்கினல், சிறியேன்—அல்பஞ குகிய யான், துதி—தோத்திரம், செய்யும்—செய்கின்ற, இந் நன்கில்—இந்த நன்மை இல்லாத, சொல்லும்—வார்த்தையும், ஓவாது—இடையருது, இரை—சப்தஞ் செய்துகொண்டிருக்கிற, ஓர்—ஒப் பற்ற, உழை—மான், தாவிய—பாயப் பெற்ற, உன்—தேவரீரது, செவிக்கு—காதுக்கு, மேவாது அல—பொருந்தாதது அன்று (பொருந்தும் என்றபடி), என்று—என, துணிந்து—நிச்சயித்து, விளம்பினேன்—கூறினேன். எ-று.

(இ-பு) பெரியோர், (சிற்றம்பலத்)துளோய், சிறியேன் - இவை குறிப்பு வினையா லணையும் பெயர்கள். சித் + அம்பலம் = 'சிற் றம்பலம்' எனத் தகர வொற்று, றகர வொற்றாய் நின்று புணர்ந்தது. இல் - 'இல்லாத' என்னும் குறிப்பு வினைப் பெய ரெச்சத்தின் விகாரம். சொல்லும் - உம் - இறந்தது தழீ இயது. இரை யுழை - வினைத் தொகை. செவிக்கே - ஏ - அசை நிலை. மேவாதது + அல = மேவாதல என, 'மேவாதது' என்னும் தெரி நிலை வினையா லணையும் பெயர் துவ் விகுதி கெட்டு நின்று புணர்ந் தது. அல - என்பதன் இடைக் குறை, ஈண்டு 'அன்று' என்று நிற்க வேண்டிய விடத்து, 'அல' என வந்தமை, ஒருமையிற் பன்மை மயக்கம். விளம்பினேனே - ஏ - ஈற் றசை. சிறியேன் - எழுவாய். விளம்பினேன் - பய னிலை. சொல் - செயப்படு பொருள். (48)

விளம்பற் கருஞ் சோதியென் கோவிடை யோனென்கோவென்
னுளம்புக்கசி வப்பிர காசனேன் கோவென்னங்கைத்
தளம்பற்றிய சாந்தனேன் கோநின்ற னதுநாமம்
வளம்பெற்றதி ருக்கயி லாயசொல் வாயெனக்கே. (49)

(இ-ள்) வளம்—(சகல) வளங்களும், பெற்ற—பொருந்தி யிருக்கின்ற, திருக் கயிலாய—அழகிய கைலாயத்தின்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமி, நின் தனது—தேவரீரது, நாமம்—பெயரை, விளம்பற்கு—சொல்லற்கு, அரும்—அருமை யான, சோதி—பிரகாச சொரூபர், என்கோ—என்று கூறவா, விடையோன்—ரிஷப வாகநாரூடர், என்கோ—என்று கூறவா, என்—அடியேனது, உளம்—மநத்தின்கண், புக்க—புகுந்திருக்கும், சிவப்பிரகாசன்—சிவப் பிரகாச சுவாமிகள், என்கோ—என்று கூறவா, என்—எனது, அம்—அழகிய, கைத் தளம்—உள்ளங் கையில், பற்றிய—பொருந்தி யிருக்கும், சாந்தன்—சாந்த லிங்கன், என் கோ—என்று கூறவா, எனக்கு—அடியேனுக்கு, சொல்வாய்—(எங்ஙன் விளம்புவ தெனக்) கூறியருள்வீ ராக. எ-று.

(இ-பு) என்க + ஒ = என்கோ. நிலை மொழி யீறு அகரம் கெட்டுப் புணர்ந்தது. என்கோ, என்கோ, என்கோ, என்கோ - ஒ - நான்கும் வினை. விடையோன் - குறிப்பு வினையா லணையும் பெயர். நின் றனது - தன் - சாரியை. திருக் கைலாய - விளி. எனக்கே - ஏ - ஈற் றசை. நீ - தோன்றா எழுவாய். சொல் லாய் - பய னிலை. நாமம் - செயப்படு பொருள். (49)

எனக்கீந்தினி யாண்டிடல் வேண்டுமேம் மீசனேமற்
றுனக்கேசர ணஞ்சர ணம்புல ரேடுமேன்றன்
மநக்கோதனைத் தும்மிறந் தோங்கறி வாகியாங்கே
பினைக்காண்பவன் காட்சியு மற்றவ பேதவாழ்வே. (50)

பக்தி (வைராக்கிய) சதகம் முற்றுப் பெற்றது.

(இ-ள்) எம்—எம் முடைய, ஈசனே—இறைவனே, உனக்கே—தேவரீருக்கே, சரணம்—அடைக்கலம், சரணம்—அடைக்கலம், புலனோடும்—இந்திரிய உணர்வோடும், என—எனது, மந—மநத்தின்கண் உள்ள, கோது—குற்றங்கள், அனைத்தும்—யாவும், இறந்து—நசித்து, ஓங்கு—பூரண, அறிவு ஆகி—ஞாந சொரூபம் ஆய், பினை—பின்னர், காண்பவன்—திருஷ்டாவும், காட்சியும்—திருக்கும் (திருசியமும் ஆய திரிபுடித் தோற்றம்), அற்ற—நீங்கிய, அபேத வாழ்வு—அத்வைத சாம்ராஜ்யத்தை, இனி—மேல், எனக்கு—அடியேனுக்கு, ஈந்து—நல்கி, ஆண்டிடல் வேண்டும்—காப்பாற்றியருளல் வேண்டும். எ-று.

(இ-பு) ஆண்டிடல் - இடு - பகுதிப் பொருள் விகுதி. ஈசனே - விளிப் பெயர். உனக்கே - ஏ - பிரி நிலை, தேற்றமு மாம். சரணம் சரணம் - உறுதிப் பொருளில் வந்த அடுக்குத் தொடர். புலனோடும் - உம் - எதிரது தழீஇயது. என் றன் - தன் - சாரியை, அனைத்தும் - உம் - முற்று. ஓங் கறிவு - வினைத் தொகை. ஆங்கு - ஏ - இரண்டும் அசை நிலைகள். பினை - 'பின்னை' என்பதன் இடைக் குறை, அது பிற் காலம் குறிக்கும் ஓர் இடைச் சொல். காட்சியும் - உம் - எதிரது தழீஇய எச்சம். இறந்தது தழீஇயது மாகும். வாழ்வே - ஏ - பிரி நிலையும் தேற்றமு மாம். யான் - தோன்றா எழுவாய். சரணம் - பய னிலை. ஆண்டிடல் - எழுவாய். வேண்டும் - பய னிலை. (50)

## பக்தி (வைராக்கிய) சதகத்தில் உள்ள தோத்திரத்தின், தோத்திரப் பிரகாசம் என்னும் உரை

முற்றுப் பெற்றது.

# வைராக்ய சதகப் பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | குறை | குரை | 20 | 22 | நெஞ்சமெ | நெஞ்சமே |
| 2 | 22 | தோற்றமுமாம் | தேற்றமுமாம் | | 24 | நனைநாகப் | தனைநாகப் |
| 5 | 14 | னுகத்தொளையி | னுகத்துளையி | 21 | 19 | நாகம் | ,, |
| 6 | 12 | ஆசாரியாருக்கு | ஆசாரியருக்கு | 23 | 8 | மநத்தினை | மநத்தினைப் |
| | 20 | நெச்சமே | நெஞ்சமே | | 9 | புகழ்விழையுந் | புகழ்விழைந் |
| | 24 | விவேகப் | விவேகம் | 24 | 10 | புகழ் | ,, |
| | 25 | தோற்முமாம் | தேற்றமுமாம் | | 14 | தெரிநினை | தெரிநிலை |
| 7 | 7 | இரண்டு | இரண்டும் | | 20 | நீ நான் | நீ தான் |
| 11 | 5 | சதலை | சவலை | | 23 | தெர்கிலா | தேர்கிலா |
| 12 | 12 | இழிவினாலை | இழிவினால் | 27 | 9 | திருஅடி - | திருஅடி - திருஅடி, |
| | 15 | பகைவர் | பகைவர் எனவும் | | 22 | தோற்றமுமாம் | தேற்றமுமாம் |
| | 23 | விற்று | முற்று | 28 | 23 | யன்று | என்று |
| 14 | 5 | யற்றுவதானால் | யற்றுவதனால் | 30 | 4 | இல்லாக | இல்லாத |
| 15 | 17 | விடுத்துளேன் | விடுத்துளோர் | 32 | 26 | எழு | ஏழு |
| | 29 | செல்வமே | செல்வமோ | 33 | 7 | இன்னுக் | இன்னுங் |
| 17 | 19 | இதர | இரத | 34 | 3 | உராக்கிரியால் | உதராக்கிரியால் |
| 18 | 4 | கூறினார் | கூறினீர் | 37 | 6 | னண்ணற | னண்ணற் |
| | 6 | எஞ்சரு | எஞ்சுரு | | 21 | செய்த்தாய் | செய்தாய் |
| | 22 | எஞ்சுராத | எஞ்சுருத | | 23 | மன்றி நடுவ | மன்றி இவற்றின் நடுவ |
| 19 | 3 | டழிபர் | டழிபவர் | 39 | 10 | கூறனீர் | கூறினீர் |
| | 16 | வளாயினுங் | வளவாயினுங் | | 26 | எச்சம் | எச்சம் |
| 20 | 16 | யான்சு | யானசு | | 28 | உனனிற் | உன்னிற் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 42. | 15 | வேதமுங் | வேதமும் |
| 44 | 13 | எலலாம் | எல்லாம் |
| | 16 | கூறினுர் | கூறினீர் |
| 45 | 18 | அறியோணு | அறியொணு |
| 47 | 11 | மேலுமிங் | மேலுவிவ் |
| | 21 | ஏன்று | என்று |
| 48 | 17 | உருவாயி | உருவமாயி |
| 55 | 5 | நிகழ | நிகழ் |
| 58 | 1 | றிவிர | றிரவி |
| | 2 | பகலுனும் | பகலினும் |
| | | வீடே | விடே |
| 61. | 1 | (73–1) | (37–1) |
| 62 | 23 | புஷ்புக்களாற் | புஷ்பங்களாற் |
| 67 | 22 | உன்னு | உன்னுது |
| 68 | 5 | மார்க்கதிற் | மார்க்கத்திற் |
| 69 | 6 | நிற்றதகு | நிற்றற்கு |
| | 19 | இவா | இலா |
| 70 | 5 | நெஞ்சமே | நெஞ்சே |
| | 18 | துய | துய |
| 71 | 26 | ஓகெ்கும் | ஒடுக்கும் |
| 72 | 12 | அகற்றுதலே | அகற்றுதலே என்பதற்கு பிரமாணம் |
| | 13 | தோடவிறை | கோடவிறை |
| | 14 | சொல்லுவாரோ, | சொல்லுவரோ |
| 73 | 25 | முதவிய | முதலிய |
| 74 | 14 | நாதத்துவ | நாததத்துவ |
| 76 | 2 | கரூதி | கருதி |
| | 9 | ஏம்மிடத்துள்ள | எம்மிடத்துள்ள |
| | 11 | அடைந்து | அடைந்தது |
| | 24 | நீற்பாய் | நிற்பாய் |
| 77 | 3 | அடைந்து | அடைந்தது |
| 79 | 6 | கூடி | கூட்டி |
| 80 | 6 | எனன | என்ன |
| | 26 | விளயா | விளையா |
| | 27 | உள்ளமெ | உள்ளமே |
| 82 | 10 | தென்ன | தென்று |
| 83 | 5 | தா - | தாமே |
| | | சிவமே | சிவ |
| 83 | 22 | இலேயேல் | இல்லேயேல் |
| 85 | 22 | பிணிக்கிதஞ் | பிணக்கிதஞ் |
| 89 | 16 | அடைதல், | அடைதல், நேருமாயினும் அது பொருந்துதல், |
| | 18 | பொருந்துதல் இங்கு | (யாதோர் நிமித்தத்தால் வருமாயினும் அது) இங்கு, |
| | 19 | முன்னிலேயால் அஃது) | முன்னிலேயால் வருமாயினும் அஃது) |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 89 | 23 | செய்த | செய்யும் |
| 91 | 8 | எ-து | எ-று |
| | 14 | கூடமையிற் | கூடாமையிற் |
| 92 | 9 | அவை தம்மை அவ் | அவை தம்மை - அவை கட்டுக்காரணமாய் அவ் |
| 93 | 4 | தோற் | தேற் |
| | 6 | நெஞ்சமே | நெஞ்சே |
| 98 | 6 | ரணமுழு | ரணன்முழு |
| | 16 | ஆறு | ஆறு |
| 99 | 13 | போல் | மேல் |
| | 24 | நெஞ்சமே | நெஞ்சே |
| 105 | 23 | விருனே | விருளே |
| 107 | 13 | ஆசாயத்தின்கண் | ஆசயத்தின்கண் |
| 120 | 16 | உத்தி | உததி |
| 125 | 12 | நெஞ்சமே | நெஞ்சே |
| 129 | 20 | நெஞ்சமே | நெஞ்சே |
| 131 | 16 | சபைகண் | சபைக்கண் |
| 132 | 16 | வுருவைபும் | வுருவையும் |
| | 20 | இங்ஙம் | இங்ஙனம் |
| 133 | 2 | தோழ்களின் | தோள்களின் |
| | 13 | தோழ்களின் | தோள்களின் |
| | 21 | தோழ்களின் | தோள்களின் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 134 | 8 | கருக் | கருங் |
| | 14 | துஷட | துஷ்ட |
| | 25 | விடக் | விடர்க் |
| 137 | 7 | (கூறிய வினை) | (கூரிய முனை) |
| 140 | 7 | யடைய | யுடைய |
| | 10 | பிரக்ஷம | பிரஹ்ம |
| | 16 | பரத்பிதற் | பறத்தற் |
| 141 | 6 | என | என்று |
| 143 | 4 | லல்லாதாரை | லல்லாதரை |
| | 15 | செயகேள் | செய்கேன் |
| 144 | 3 | நெஞ்சமே | நெஞ்சம் |
| 144 | 4 | பயனிலை | பயனிலை நான் - தோன்று எழுவாய், செய்கேன் - பயனிலை. |
| | 15 | அணுகி, | அணுகி, அடைதற்கு - (சாணுகதியாக). |
| | | (ஒரு | ஒரு |
| 147 | 13 | செய்மையிடத் தினைக் | சேய்மையிடத்தினைக் |
| 148 | 1 | தந்தருளமாட் டாரோ | தந்தருளமாட்டாரா |
| 151 | 4 | கடற் | கடல் |

உ சிவமயம்.

# இராம நாத புரம் ஜில்லா, திருப் பூ வணம் வேதாந்த மடம்,
# ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள் இயற்றியன — பதிப்பித்தன.

1. வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு. ரூ. 2—8
2. விசார சாகரம் வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு. 2—4
3. வியாச தாத்பர்ய நிர்ணயம். வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—8
4. வேதாந்த சித்தாந்த முக்தாவலி. வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—8
5. நைஷ்க் கர்ம்ய சித்தி வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—8
6. வேதாந்த பரிபாஷை. வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—7
7. ஸ்வாராஜ்ய சித்தி. வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—4
8. வேதாந்த சஞ்ஞா. வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—2
9. ஹரிமீடே - ஹரி தத்வ முக்தாவலி. வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0–12
10. மண்டல பிராஹ்மண உபநிஷத்-ராஜ யோக பாஷ்யம். வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு 0—4
11. ஈசாவாஸ்ய உபநிஷத்-சங்கர பாஷ்யம். வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—4
12. கதா சரித் சாகரம். வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு கதை. 2—4
13. மூர்க்க சதகம் - சம்ஸ்கிருதம் பத வுரை. நிர்க்குண அஷ்டோத்ர சத நாமாவளி சம்ஸ்கிருதம் } 0—8
14. பகவற் கீதை 15-வது அத்தியாயம். சம்ஸ்கிருதம், தமிழ்க் கவி உரை. தமிழ் }
15. வட நாட்டில், ஹரித் துவாரக் கும்ப மேளாவும், தென் னாட்டில் சாதுக்கள் மேளாவும். வசநம். 0—2
16. அத்வைதிகட்கும், அதிட்டாநத்தி விருப்பவர்கட்கும் ஓர் அறிக்கை. வசநம். 0—2
17. சாது சங்க நிறுவல் விழாக் கூட்ட வைபவம். வசநம். 0—2
18. மடங்களின் உற்பத்தியும், தற் போது உள்ள நிலைமையும். வசநம். 0—2
19. திருக் களர் வீர சேகர ஞாந தேசிகர் சரிதம். வசநம். 1—0
20. தாந்திரீக த்வைத சைவ கண்டநம். வசநம். (சூட்டுக்கோல்-கட்டாரி-புச்சம்). 1—0
21. பக்தி (வைராக்ய) சதகத் தோத்திரம் - தோத்திரப் பிரகாசம் என்னும் பத உரை. 0—3
22. கீதா சாரத் தாலாட்டு - லகு சந்திரிகை உரை. 2—0. 23. பஞ்ச தசி கவி (800) 0–10
24. மகா ராஜத் துறவு - மகப் பிரசாதிநி உரை 2—0. 25. வாசிட்டம். (கவி 2055) 2—4

26. பக்தி(வைராக்ய)சதகம்-பத வுரை-பொழிப் புரை. 1—8. 27. சீடாசாரம்-பால போதினி உரை. 0—8
28. வைராக்ய தீபம்-பத உரை, பொழிப் புரை. 0—8
29. விவேக சூடாமணி (கவி 670) அஞ்ஞ வதைப் பரணி கவி (800) 1—0
30. ஸ்தோத்திர ரச மஞ்சரி கவி 160) 0—4
31. கீதாத் திரயம் கவி (பகவற் கீதை ஈசுவர கீதை பிரம்ம கீதை) 1—4
32. கைவல்ய நவநீதம் கவி (288) 0—9. 33. வேதாந்த சாஸ்திர ரத்நாவலி (9 சேர்ந்தது) 3—0
34. நாநா ஜீவ வாதக் கட்டளை - சத்யார்த்தப் பிரகாசிகை உரை. 2—0

## அச் சாக வேண்டியன.

1. யுக்திப் பிரகாசம். வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு.
2. பேத திக்காரம் - சத் கிரியை உரை. வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
3. பிரபோத சுதாக..ம் - பத வுரை. வேதாந்தம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
4. விவேக சூடாமணி - பத வுரை. வேதாந்தம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
5. சித்தாந்த லே...ங்கிரகம், வசநம். (56 மத விசாரம்) சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
6. தர்க்க சங்கிரகம் - தீபிகை உரை. (தர்க்கம்) சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
7. சப்.. பதார்த்தி - வசநம். (தர்க்கம்) சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
8. கா..த சித்தாந்த சந்திரிகை. வசநம். (தர்க்கம்) சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
9. கணேச கவசம் - பத வு..ர. சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 10. கணேச் கவசம் தமிழ்க் கவி உரை.
11. சசி ..ந்த போதம் - பத..த்த பாஸ்கரன் உரை. 12. வேதாந்த சூடாமணி - சந்தோஷ தாயினி உரை.
13. சங்கர விஜய விலாசம். வசநம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.
14. கைவல்ய நவநீதம் - அருணசல ஞாந தேசிகர், பத சார உரை. 15. சமாதி விதி வசநம்.
16. வீர சேகர ஞாந தேசிக சரிதம், கவி 1500. 17. சந்யாச விதி வசநம்.
18. சிவ சங்கராவதாரம். சுலோகம் உரை. 19. காசிகாநந்த விஜயம் வசநம்.
20. கீதா சாரத் தாலாட்டு, குறிப்பு உரை. (பாக்கட் சைஸ்) 21. பட்டிநத்தார் பாடல் உரை.
22. ஸ்திரீ புருஷ ஜநந மரண ரஹஸ்யம், வசநம். 23. மகாத்ம சரிதாமிருதம். வசநம்.
24. நாநா ஜீவ தாதக் கட்டளையின் சாரமும், சக்தி விவேசநமும். வசநம்.
25. சுவாநுபவத் திரு வாக்கு கவி. பாக்கட் சைஸ்.